அரிச்சந்திரபுராணம் நூலாசிரியர்

சரித்திரம்.



பூவுலகின்கண் பொலிவுற்றோங்கி யிராநின்ற நெல்லூர் என்னும் நல்லூரிலே வீரன் என்னும் ஆசுகவிராஜர் ஒருவர் வதிந்திருந்தனர். இப்புலவர்பெருமான் - வடமொழியில் அரிச்சந்திர சரிதையைக் கூறும் பாடல்களையும், தென்மொழியில் வெண்பாவாற் சமைந்துள்ள பாடல்களையும், பரிசோதித்து, வழிநூலாக இவ்வரிச்சந்திர புராணத்தை 1200 சில்லரை விருத்தப்பாக்களா லியற்றிக் கலியுகத்தில் நிகழாநின்ற சாலிவாகன சகாப்தம் (1446) - ஆம் ஆண்டிலே அதாவது (378) வருடத்திற்கு முன்னர் முற்றுப்பெறமுடித்து திருப்புல்லாணித் திருமால் சந்நிதியிலே சக்கரதீர்த்தக்கரையின்கண்ணுள்ள மண்டபத்திலே அரங்கேற்றுதல் செய்தனர். இந்நூலின் காப்புச்செய்யுட்களால் இவர் சைவ மதத்தினரென விளங்குகின்றது. இந்நூல்-நாட்டுச்சிறப்பு நகரச்சிறப்பு நீங்கலாக, விவாககாண்டமுதல் உத்தரகாண்டமீறாக (10) காண்டத்தது: காப்பிய இலக்கணங்களுள் "கூறியவுறுப்பிற் சில குறைந்தியலினும் வேறுபாடின்றென விளம்பினர் புலவர்" என்பவாகலின் இந்நூல் பெருங்காப்பியத்தின்பாற் பட்டதே என அறிக.

அரிச்சந்திரபுராணம்.

அரிச்சந்திரன்-அயோத்திநகரச்சக்கரவர்த்தி; (ஹரிச் சந்திரன் எனப்பிரிக்கின் சொல்லின்படி) ஹரித்-திசை, சந்திரன்-விளங்குபவன், எனவே திசையெல்லாம் கீர்த்திவிளங்கப்பெற்றவன் என்பது பொருள். அரிச்சந்திரன்-வடமொழி, பொருட்பெயர். ஹரி-என்பது அரிஎனத்திரிந்தது. புராணம்-பழமையாகிய கதை. வடமொழி, பண்பாகுபெயர். அரிச்சந்திரபுராணம்-ஆறும் வேற்றுமைஉருபும்பயனும் உடன்தொக்க தொகைநிலைத் தொடர் அரிச்சந்திரனது ஒழுக்கத்தைக் கூறும்புராணமென விரியும். தேவர்தோத்திரம் என்பது தேவரால் செய்யப்பட்ட தோத்திரமெனவும், தேவர்மேல்செய்யப்பட்டதோத்திரமெனவும்பொருள்படுதலால் இவ்விரண்டனுள் பின்னதுபோல, அரிச்சந்திரன்மேல் செய்யப்பட்ட நூல் என்னும் பொருளில்வந்தது இஃது முதனூலால் பெயர்பெற்றது. அரிச்சந்திரன் + புராணம். "பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் &" என்னும் (ந-சூ 159) விதியில "சிலவிகாரமாமுயர்திணை" என்பதனால், நிலைமொழியீற்று னகரங்கெட்டு, அரிச்சந்திரபுராணமெனப்புணர்ந்தது.

புராணம் என்பது:—சர்க்கம், மநுவந்தரம், பிரதிசர்க்கம், வமிசம், வமிசாநுசரிதம் என ஐவகை இலக்கணங்களையுடையது. சர்க்கம்-உலகத்தோற்றம் ஒடுக்கம், மநுவந்தரம் - * வேறுமநு, பிரதிசர்க்கம்-முனிவர் ஆற்றல், வமிசம்-அரசர்மரபு, வமிசாநுசரிதம்-அவர்தம்சரிதம்.

'தோற்றமுலகமீண்டொடுக்க நகடீர மநுவந்தரமுனிவர்
ஆற்றலரசர்மரபவர்தஞ் சரிதமென்னு மோரைந்தும்
சாற்றுபுராண விலக்கணமென் றறிஞருரைப்பர்" (என்பதுங்காண்க).

(இதிகாசமாவது-வேதவிதிகளை உணர்த்தும் பொருட்டுக் கூறப்படும் பழங்கதை. பாரதமும் இராமாயணமும் இதிகாசமெனப்படும்.

---

* ஒரு மநுவின்காலம் (71) மஹாயுகங்கொண்டது: ஒரு மஹாயுகமாவது-கிரேதாயுகமுதலிய நான்குயுகங்கொண்டது.

அரிச்சந்திரபுராணம்.

பாயிரம்.

பாயிரமாவது:— முகவுரை என்பதாம்: அஃதாவது— ஒருநூலின் முகப்பில் அந்நூலின் சம்பந்தமாகச் சொல்லப்பட்ட விஷயம் (preface introduction).

ஆக்கியோன்பெயர் முதலியன:— ஆக்கியோன் என்பது செய்தவன். அதாவது நூலைச்செய்தவன், நூலாசிரியன், கிரந்தகர்த்தா (author) என்பதாம். ஆக்கியோன் பெயர்முதலியன என்பது வருமாறு:— நூலாசிரியன், நூல்வந்தவழி, நூலின்பெயர், அந்நூலில் கூறப்படும் பொருள், அந்நூல்கேட்டோரால் உண்டாகும் பயன், நூல் உண்டாகிய காலம், நூல் அரங்கேறிய அவைக்களம், நூல் உண்டாதற்குக் காரணம். இவற்றின் அமைதியை 1-வது, 2-வது செய்யுட்களில் காண்பாம்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம் - ஆசிரிய விருத்தமாவது - கழிநெடிலடி நான்காய்த் தம்மில் அளவொத்து முடிவது. கழிநெடிலடியாவது - ஐந்தளை முதலாக எழுதளைவரையிலும் இவற்றின் மிகுந்தும் வருகின்ற அடியாம். நான்குதளையால் வருவது நெடிலடி: அதற்கு அதிகமாக வருவதெல்லாம் கழி நெடிலடி என்பதறிக. எண்சீரான் வருவதும் சிறப்புடையதெனவறிக.

1. **(இதன்பொருள்)** தண் - குளிர்ந்துள்ள, கவிகை - வெள்ளைக்குடையையுடைய, குரிசில் - மகாராஜனாகிய, அரிச்சந்திரன்தன் - அரிச்சந்திரனுடைய, சரிதமதை - சரித்திரத்தை, ஏரணியோர் - உலகத்தார், விருப்பம் - சந்தோஷத்தை, எய்த - அடையுமவிதமாக, வனை - அழகிய, கவிஞர் - வித்துவான்கள், வகைவகையே - சொல்லுங்கிரமப்படியே, வகுத்துரைத்த - சொல்லிப்பாடிய, வடமொழியும் - வடமொழியிலுள்ள பாடல்களையும்; தென்மொழியின் - தென்மொழியிலே, வழு - யாதொருதோஷமும், இலாத - உண்டாகாத, வெண் - வெண்பாவாலான, கவியும் - பாடல்களையும், கண்டு - பரிசோதித்து, மாதர் - பெண்கள், ஆடல்அரங்கின் - ஆடுகின்ற இடத்துண்டான, விதம் - மத்தளத்துவனியை, கேட்டு - செவியுற்று, மழையெனவே - (அந்தத் துவனியை) மேகத்துவனியென்றே, வெருண்டு - பயந்து, சோலைக்கண் - சோலைகளிலே, கவிகள் - குரங்குகள், குதி - குதித்து, பாயும் - ஓடுவதான நெல்லூர் - நெல்லூரிலே யிருக்கிற, வீரகவிராஜனே - வீரகவிராஜன் என்பவனே, விருத்தக்கவி - (இப்படி) விருத்தக்கவியாக, செய்தான் - பாடினான், ஈற்றேகாரம் அசைநிலை.

வீரகவிராஜன் - எழுவாய்: செய்தான் - பயனிலை; சரிதம் - செயப்படு பொருள்.

The story of king Harichandra, who possesses a cool white umbrella, was set in verse on the basis of the texts as written in Sanskrit and Tamil, by various poets, after a due critical study of these, by Veeran, prince of poets, and native of Nullore, where monkeys that mistake the sound of drums, where damsels dance, for thunderclaps, startle. and affrighted, jump to and fro in the groves.

(கருத்து) நெல்லூர் வீரகவிராஜர் வடமொழி அரிச்சந்திர சரித்திரப் பாடல்களையும் தமிழ் அரிச்சந்திரவெண்பாவையும் முதனூலாகக்கொண்டு தமிழில் விருத்தப்பாவால் அரிச்சந்திரபுராணத்தைப் பாடினார் என்பதாம்.

அரசர்கள் பிடிக்கும் சந்திரவட்டக்குடையானது குடிகளைத் துன்பமாகிய சூரியவெப்பத்தினின்றும் காப்பதாக பாவனை: அப்படிப்பட்ட குடையைத் தூண் என விசேஷித்தமையால் அரிச்சந்திரனுடைய பரிபாலனத்தின் சிறப்பைக் கூறியதாயிற்று. **கவிகை** - தொழிற்பெயர்: (கவி + கை) கவி - பகுதி, கை - தொழிற்பெயர் விகுதி; தொழிலாகுபெயராய் பொருளை உணர்த்தியது. கவிதலை உடையது எனக்கொண்டு தொழிலடியாகப்பிறந்தபெயர் எனினுமாம். இங்ஙனங் கொள்ளுங்கால் (கவி + கு + ஐ) கவி - பகுதி, கு - சாரியை, ஐ-வினைமுதற் பொருண்மை உணர்த்தும் விகுதி எனக்கொள்க. **சரிதமதை** - (சரிதம் - அதை) சரிதமாகிய அதை எனக்கொள்ளின் இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்க. **சரிதம்** சர்-என்னும் வடமொழிவினைப் பகுதியிற்பிறந்தது; (சர் - நடத்தல்). **தாரணி**-தரணி என்னும் வடமொழிச் சிதைவு. வெண்கவியென்பதில் கவி என்பது வடமொழித்தற்சமம்: "கவிசன் குதிபாயும்" என்றவிடத்தில் கவியென்பது கபிஎன்னும் வடமொழியின் திரிவு. **எய்த** - எய்- பகுதி, த் - சாரியை, அ-வினையெச்சவிகுதி: இச்செயவெனெச்சம் காரியப்பொருளதாகலின் எதிர்காலத்தது: இவ்வெச்சம் செய்தான் என்னும் வேறு வினைமுதல் வினையைக்கொண்டது; அல்லது உரைத்த என்னும் பெயரெச்சத்தின் பகுதியைக்கொண்டதெனினுமாம். "தாரணியோர் விருப்பமெய்த" என்றதனால் இப்புராணத்தில் பதத்தழகும் *ரவரஸாலங்காரமும் அமைந்திருக்கின்றன என்பதாயிற்று. "வண்கவிஞர்" கவிஞர்க்கு வண்மையாவது தளராத கவிசாதுரியம். **கவிஞர்** - (கவி + ஞ் + அர்) ஞ் - பெயரிடைநிலை. **வகைவகையே** - வ பிரிநிலைப்பொருளையும் தேற்றப்பொருளையும் ஒருங்கேபயந்தது. **வடமொழி** - இந்தியாவின் வடக்கிலே குடியேறிய ஆரியர்களுடைய மொழி; ஸம்ஸ்கிருதம். **தென்மொழி** ஆரியர்களுக்கு முன்னமே இந்தியாவின் தெற்கிலே குடியேறியிருந்த திராவிடர்களில் ஒருபான்மையினராகிய தமிழருடைய மொழி; தமிழ். மொழி-மொழியப்படுவது என்னும் பொருளில் மொழி - பகுதி, இ செயப்படுபொருண்மை விகுதி புணர்ந்துகெட்டது; இது தொழிலடியாகப்பிறந்த பெயர்ப்பகுபதம். "வழுவிலாத" என்றமையால் அரிச்சந்திரவெண்பாவில் "குன்றக்கூறல் மிகைபடக்கூறல்" முதலான பத்துக்குற்றங்களும் பிறகுற்றங்களும் இல்லையென்றதாம். (இலாத-எதிர்மறைக்குறிப்புப் பெயரெச்சம்: (இல் + ஆ + த் + அ) இல் - பகுதி, ஆ - சாரியை, த் - எழுத்துப்பேறு, அ - எச்சவிகுதி. கவியை வெண்என விசேடித்தது வெண்பாவைக் குறிப்பதற்கென்க. பாக்களில் தூய்மையுடையதும் சிறப்புடையதும் வெண்பாவென்பது யாப்பிலக்கணத்தானறிக. **மாதர்** - அழகு - பண்புப்பெயர்; அவ்வாகுபெயராகப் பெண்களையுணர்த்தியது: இங்ஙனங்கொள்ளாது விருப்பமுடையார் எனப்பொருள் கொண்டு பண்படியாகப்பிறந்த பலர்பாற்பெயர் என்னினுமாம் (மாதர் - விருப்பம்) "விதங்கேட்டு மழையெனவே வெருண்டு" என்றது மயக்கவணியாம். **தண்டு** - வடமொழி தமிழர்க்குப்பயன்படாமையும், அரிச்சந்திரவெண்பா சுருக்கநூலாக இருப்பதுங் கண்டென்க. கண்டு - காண் - பகுதி, ட் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்சவிகுதி, **வெருண்டு**-வெருள் - பகுதி, பகுதியீற்று ளகரம் டகரமானது சந்தி, அதுணகரமானது மெலித்தல், ட் - இடைநிலை, உ - எச்சவிகுதி. "சோலைக் கண்கவிகள்" என்பதற்குச் சோலைகளிற் கண்களை யுடைய குரங்குகள் என்றும் பொருள் கூறலாகும்; சோலைகளின் கவிகளினுட்டம் அழகுசெய்தன்ன **குதிபாயும்** - வரிப்புலி பாய்ந்து என்பதில் வரிக்குதல் வியங்கோள் முச்சவிகுதி கெட்டு வரி என நின்றாற்போல குதிக்கு என்பது விகுதிகெட்டு குதி என பகுதியளவாய் நின்றதென்க கவிராசர் - ர் - பலர்பால். "அடக்கிய நெல்லூர்" என்றதனால் நெல்லூரானது பாககளாகிய [illegible]

பத்திலுடையதாய் அதிகருளிர்ச்சிபொருந்திக் குடிவாழ்க்கைக்கு இன்பப் தருவதாயிருக்கும் என்றவாறும். காவியங்களை விருத்தத்தாற்பாடுவது கடைச்சங்கத்தின் பிற்காலத்தில் பெருவழக்காதலின் இவ்வாசிரியரும் அவ்வழக்கினையுட்கொண்டு வெண்கவியை விருத்தக்கவிசெய்தார்போலும்: அல்லது அரிச்சந்திரசரிதம் வெண்பாவால் வழங்கலாயிருக்க இவர் மீண்டும் பாடநிய்த்தமில்லை, ஆயினும் அப்புண்ணியகதையைப் பாடவேண்டி ஒருவிகற்பந்தோன்றுதற்பொருட்டு விருத்தக்கவிசெய்தார்போலும். கவிராஜன் - prince of poets.

2. (இ-ள்) விதியின்-ஈசுவரச் செயலினாலே, அரசு-தனது அரசாட்சியை, இழந்த - விட்டுப்போன, அரிச்சந்திரன் தன் - அரிச்சந்திரமகாராஜனுடைய, வியன்-பெரிய, கதை ஆம்-கதை ஆகிய, வெண்-வெண்பாவாலான, கவியை - பாடல்களை, விருத்தம் ஆக்கி - விருத்தப் பாடல்களாகச்செய்து, அதி விதம் ஆம் - பல விதங்களும் தோன்றுகின்ற, கலியுகத்தில் - கலியுகத்திலே, வரு - நிகழ்வதான, சகாத்தம் - சாலிவாகன சகாப்தம், ஆயிரத்து நானூற்று நாற்பாத்தாறில் - ஆயிரத்து நானூற்று நாற்பத்தாறும் வருஷத்திலே, சதுர்மறை - நான்கு வேதங்களும், தேர் - ஆராய்ந்து சொல்லுகின்ற, புல்லாணி - திருப்புல்லாணி என்னும் திருப்பதியி லெழுந்தருளியிருக்கும், திருமால்முன்னே - ஸ்ரீமகாவிஷ்ணுவின் சந்நிதியிலே, சக்கர தீர்த்தக்கரைமேல் - சக்கரதீர்த்தக் கரைமேலிருக்கின்ற, மண்டபத்துள் - மண்டபத்திலிருந்து, கதி - நல்லகதியை, தரு - தருவதான, சீர் - சிறப்பையுடைய, நெல்லூர் - நெல்லூரிலே, வாழ் - வாழ்கின்ற, வீரன் - வீரனென்னும், ஆசுகவிராசன் - ஆசுகவிராஜன், கவி - அந்த விருத்தப்பாடலான அரிச்சந்திரபுராணத்தை, அரங்கம் ஏற்றினன் - அரங்கேற்றுதல் செய்தான். ஏ - அசை நிலை. வீரனாசுகவிராஜன் - எ-ய்: ஏற்றினன் - ப-லை.

The verses sung by the extempore poet Veeran, living in the far-famed and holy site of Nullore, about Harichandra, who by the inexorable decree of fate, lost his kingdom, were approved of and passed in the year 1446 of the era of Salivahana of this degenerate Kaliyuga, in an assembly of learned pandits that met before the holy shrine of Vishnu, in the hall to the west of the sacred tank in Pullani.

(க-து) நெல்லூர் வீரனாசுகவிராஜர் அரிச்சந்திரவெண்பாவை விருத்தப்பாவால் பாடிமுடித்துக் கலியுகத்தின்மேல் நிகழாநின்ற சாலிவாகனசகாப்தம் ஆயிரத்து நானூற்று நாற்பத்தாறும் வருஷத்திலே திருப்புல்லாணித் திருப்பதியிலே திருமாலின் சந்நிதியிலே சக்கரதீர்த்தக்கரையின்மேலுள்ள மண்டபத்திலே அரங்கேற்றுதல் செய்தனர் என்பதாம்.

“சதிர்மறைதேர்” என்றும் பாடம்: (சதிர்=நன்றாக) எதுகை ஒவ்வுதலால் சதிர் என்றபாடமே சிறப்புடையது. சதுர்மறை யென்பது - இருக்கு, ஜெஜுர், சாமம், அதர்வணம் என்பதாம். திருப்புல்லாணி - பாண்டி நாட்டுத் திருப்பதிகளில் ஒன்று. மால் - ஆசை, அன்பு: அடியாரிடத்து அன்புள்ளவன் (காரணவாகுபெயர்): ஆஸ்ரிதவத்சலன். முன் - ஈண்டு இடத்தையுணர்த்திற்று. ஆசுகவிராஜன் என்பது ஆசுகவியில் வல்லவன் என்பதாம், ஆசுகவியாவது:—

“எழுத்துச் சொற்பொரு ளணியாப் பிழையின்
விழுத்தக வொருவன் விளம்பிய வுள்ளுறை
யப்பொழு துரைப்ப தாசுகவியே”

என்கிறபடியே, இவ்வெழுத்தாலாகிலும் இச்சொல்லாலாகிலும் இப்பொருளாலாகிலும் இவ்வணியாலாகிலும் இப்பாட்டாலாகிலும் இன்ன எழுத்து முதலாக இன்ன சொல்கடைசியாகப் பாடுவாய் என்று ஒருபுலவன் சொல்ல அப்பொழுதே அவன் கருத்துக்கு ஒப்பப்பாடுவதாம்.

அரங்கேற்றுதலாவது - கற்றவர்சபையிலே ஒருபுலவன் தான் செய்த நூலை எறச்செய்தல். அதுகாலையில் வித்துவான்கள் செய்கின்ற ஆக்ஷேபனைக்கெல்லாம் சமாதானஞ் சொல்லிமுடிந்தபிறகே அந்நூலை எற்பித்தபடியாம்.

"விதியின் அரசிழந்த" - அரசிழப்பதற்குக் காரணமாவன கொடுங்கோன்மை - வஞ்ச அமைச்சு - அரண்வலியின்மை - நடுநிலையின்மை என்பனவும் பிறவுமாம். அரிச்சந்திரன் செங்கோல் செய்பவனாய் - சத்தியகீர்த்தி முதலிய அமைச்சு அமைந்தவனாய்-அயோத்தியை ஆள்பவனாய் - சத்தியசந்தனாய் இராநிற்றலின் அவன் அரசை மதியினாலிழக்கக் காரணமில்லையாதலின் விதியின் அரசிழந்ததாகக் கூறினார்.

அரிச்சந்திரசரித்திரமானது "சீதைபிறக்க இலங்கை அழிய" என்றது போல இலகுவில் சுருக்கிக் கூறுதலாகாதது: விசுவாமித்திர முனிவர் செய்த சூழ்ச்சிகள் பறபலவற்றையும் ஈடுகொடுத்துத்தாங்கிய கதையாதலால்வியன் கதையென்றார். உலகின்கண் சத்தியமுதலிய நற்குணங்களை விளக்கியசிறந்ததோர் கதையாகலின் 'வியன்கதை' என்றாரெனினுமாம். கதா - என்னும் வடமொழி தமிழில் கதைஎன வந்தது. (காதா - என்னும்வடமொழிகாதைஎனத் தமிழில் வழங்குவதுங்காண்க.)

"அதிவிதமாம் கலியுகம்"—முன்னைமூன்றுயுகங்களிலும்சத்தியமேசிறப்பாக நடந்துவந்தது; கலியுகத்தில் அசத்தியத்தின் கூறுபாடுகள் பலதுறைப் பட்டனவாய் நடப்பன என்பது புராணநூலுடையார் கொள்கையாதலின் கலியுகத்தை 'அதிவிதமாம்' என்றடைகொடுத்துக்கூறினார். அதிவிதம் - பண்புத்தொகை நிலைத்தொடர்: அதிகமாகிய விதம்எனவிரியும்: சத்தியத்தை அதிக்கிரமிக்கின்றவிதமாம்கலியுகம் எனக்கொள்வதுமாம். பிரம்மதேவனைநோக்கிக் கலியுகதேவதையானது கூறியதாகக்கூறும்.—

"மன்றநீத்திரைசெய்வோருங் கலகத்துமனமிக்கோருங்
கன்றனூற்றயலான்பன்னி கதிர்முலை யவாவுவோரும்;
பாதிரவியங்கொள்வோருந் துரோகமேபயிலுவோரும்
விரவியவஞ்சமாதி மித்திரபேதமீறு
வுரவிலித்தொழில்செய்வோரு முறவெனக்காவர்கண்டாய்
மரபிளுச்சிரமமெல்லாம் வஞ்சமாயுறுமென்றனில்."

என்பது முதலியவற்றைக் காண்க.

ஆம்-செய்யும் என்னும் வாய்பாட்டுப்பெயரெச்சமாகிய ஆகும் என்பது ஈற்றுயிர்மெய் கு கெட்டு ஆம் எனநின்றது. ஆக்கி - இறந்தகாலவினையெச்சம்: (ஆ+க்+கு+இ) முறையே பகுதி, சந்தி, சாரியை, வினையெச்சவிகுதி: இவ்விகுதியே காலங்காட்டியது. வரு-தேர் - தரு - வாழ்: இவை - வினைத்தொகைவினைகள். நான்கு+பத்து-நாற்பது; நான்காகியபத்து எனவிரித்துப் பண்புத்தொகையாகவும், நான்கானுறழ்ந்த (பெருக்கிய) பத்து எனக்கொண்டு மூன்றாம்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகையாகவும்கொள்ளலாம். நாற்பத்தாறு-(நாற்பது+ஆறு)உம்மைத்தொகை. மறை-முதனிலைத்தொழிலாகுபெயராய்மறைவாகிய பொருளை உணர்த்தியது. i. e. உள்ளுறையான பொருள் என்பதாம்: மறு-பகுதியாகக்கொண்டுதொலாம்வருணைத்தார்முதலாயி

ஞர்க்குமருக்கப்பட்டதுளனைத் தொழிலடியாகப்பிறந்தபெயராகக் கொள்வாரு முளர். எற்றினன் - இறந்தகாலப்பிறவினைமுற்று. (தன்வினை-ஏறினன்.)

வடமொழியில் வியாசபாரதமும் தென்மொழியில்அரிச்சந்திரவெண்பா வும் முதனூல்களாவதைப் பின்வரும் கதைவரலாற்றானுமறிக.

கதைவரலாறு.

திங்கள் வழியுதித்த பாண்டவர்தஞ் சீர்நாடு
மங்கிழந்து சூதிலடவிநண்ணித்—தங்கவலைட்
காலற் கடந்ததவ வன்னிவரக் கண்டவனைக்
காலிறைஞ்சி நின்றார் கனிந்து

நின்றானுண் முன்னவனை நீத்தவன்வாழ்த் தாநோக்கிக்
குன்றாதி வெந்துயராற் கோமானே—யன்றாழி
னின்னினுந்தன் புற்றா னிருபனரிச் சந்திரனென்
றன்னவற்கிக் காதைவிள்வா னைந்து. (அரிச்சந்திரவெண்பா).

பாண்டவர்கள் தங்கள் செல்வத்தையும் தேசத்தையும் சூதாடித்தோற்ற பிறகு காமியவன மடைந்திருக்கையில் அவ்வனத்திலே மகாதவச்சிரேட்டரா கிய பிருகதசுவமுனிவர் வருவதைக்கண்டனர். கண்டமாத்திரத்திலே அந்த முனிவரைத் திருவடிதொழுது நின்றனர். முனிவரும் அவர்கள் முகம்வாடி யிருப்பதைக்கண்டு மூத்தவனாகிற தருமராஜனை யழைத்து வாழ்த்தி "வாராய்! தருமநந்தனா! துன்பத்தால் வாட்டமுற்றிருக்கிறாய். மனதைத் தேற்றிக்கொண்டு வாட்டம்நீங்குவாய். விதியாரைவிட்டது. முன்னே அரிச்சந்திரமகாரா ஜன் என்பவன் உன்னைப்பார்க்கிலும் அதிகதுன்பமடைந்திருந்தான். ஊழின் கழிவிலே மறுபடியும் இன்பமடைந்தனன். இப்படி நடப்பது சகஜந்தானே. அந்தமன்னவனுடைய சரித்திரத்தைச் சொல்கின்றேன் கேள்" என்று சொல்லத்தொடங்கினர் —

(மூலபாடவசனம் பார்க்க.)

விவாககாண்டம்.

அரிச்சந்திரன்சந்திரமதியைவிவாகம் (கலியாணம்)செய்துகொண்டசரித்திரத்தைச்சொல்லும் காண்டம்; ஆகவே இத்தொடர் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைநிலைத் தொடராய் அமைந்தவாறு காண்க.விவாகம்-வடமொழிப்பெயர்:வி-mutually வஹ-to take. காண்டம்-வடமொழிப்பெயர்: நூற்பகுப்பு என்பதுபொருள்.விவாககாண்டம்—"இடையுரிவடசொலின் &c" என்பதனால் வலியியல்பாயிற்று (ந-சூ-239).

கலிவிருத்தம் - நாற்சீரடி நான்கினைக் கொண்டு வருவது.—

3. (இ-ள்) மந்தரம்-மந்தரமலைக்கு, அனைய-ஒப்பான, தோள்-தோள்களை உடைய,வள்ளல்-பிரபுவான அரிச்சந்திரனுடைய,பேர்,பேறை,சொல-சொன்னமாத்திரத்திலே, அ-அந்த, சந்திரமதி - சந்திரமதியானவள், சுந்தரம் - அழகான, தோகைமார்-பெண்களுடைய, தோளை - தோள்களை, தாழ்த்தி - தாழச்செய்து, அரிச்சந்திரன்தனை -அரிச்சந்திரமகாராஜனை, கந்தரம்-தன்கழுத்தை, நீட்டி-நீட்டிப்பார்த்து, உள்கருத்து - அவன் உள்ளக்கருத்தையும்,நோக்கினள்-ஆராய்ந்தனள்.

When the name of Harichandra, whose shoulders were as huge and broad as mount Mandhara, was mentioned to Chandramathi, she pressed on the shoulders of her mates, and eagerly craned forward to get a glimpse of Harichandra's features, and read the inner workings of his heart.

(கு-து) அரிச்சந்திர மகாராஜனுடைய பெயரைச் சொன்னமாத்திரத்தில் சந்திரமதியானவள் தோழிமாருடைய தோள்களைத்தாழ்த்தித் தன்கழுத்தைநீட்டி அரிச்சந்திரன் முகத்தைப்பார்த்து அவனுடைய உள்ளக்கருத்தையும் ஆராய்ந்தனள் என்பதாம்.

"அரிச்சந்திரன்றனை...நோக்கினாள்" என்பதமையுமோ இவள் கற்புடைய பெண்: பின்னும் பற்பல அரசர் நிறைந்த சபையிலேநிற்பள் என்று ஆக்ஷேபித்தால்; சுயம்வரநாளிற்குமுன்னாள் அரசர்களெல்லாரும் மதியனைக்காண வந்தபோது அவர்களில் அரிச்சந்திரன் அழகைக்கண்டு புகழ்ந்துரைத்ததோழியின் வார்த்தையைக்கேட்டது முதல் அவனையேநினைவாய்ச் சோகித்திருந்தசந்திரமதியானவள் இப்பொழுது அவன்பெயரைக்கேட்டமாத்திரத்தில் தன்னையுமறந்து இங்ஙனஞ் செய்தாளென்க.

"கோசலநாட்டார்மதிக்குங் கோனென்று கூறலுமே
ஆசையுடன் அன்னான் அலர்முகத்தைக்—காசிழைகள்
பூட்டுகளநீட்டிப்புரிகுழலாள் நோக்கினளால்
மாட்டிணங்கிமார்புயத்தைத் தாழ்த்து" (அரிச்சந்திரவெண்பா).

மந்தரம் - Mount *mandra*; used by the Suras and Asuras in the sea of milk after the deluge.

வள்ளல்-வரையாது கொடுப்போன். வள்ளல்களைத் தலைவள்ளல்-இடைவள்ளல்-கடைவள்ளல் எனப்பிரித்திருக்கிறார்கள். தலைவள்ளல் - வரைவின்றி யாவர்க்கும் கொடுப்பவன்: இடைவள்ளல் - இரப்போர்க்குக் கொடுப்பவன்; கடைவள்ளல் - புகழ்வோர்க்குக் கொடுப்பவன். அரிச்சந்திரனை இடைவள்ளல்களில் சேர்த்திருக்கின்றனர்.

தலையெழுவள்ளலாவார்:—"சகரன்-காரி - நளன் - துந்துமாரி- நிருதி-செம்பியன்-விராடன்றலைவள்ளல்." இடையெழுவள்ளலாவார்:—அந்திமான்-சிசுபாலன் - அக்குரன் - வக்கிரன், சந்திமான் - கன்னன் - சந்தன் இடைவள்ளல்." கடையெழுவள்ளலாவார்:— பாரி-எழினி-நள்ளி - ஆய்-மலையன், ஒரி-பேகன் இவர்கடைவள்ளல்" என்பதனாலுமறிக.

தோகைமார்-தோகை என்பது மயிலுக்கும் மயிலின் வாலுக்கும்பெயர் இது உவமையாகுபெயராய் (மயில்போன்றசாயலையுடையவர்களென்று) பெண்களைஉணர்த்தும். **சந்திரமதி**-மதி-understanding: one "whose understanding is as brilliant as the moon. *மதி* is derived from *மத்* - to think; and it means understanding; intellect" அனைய-உவமஉருபிடைச்சொல்லடியாகப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம்: சொல - இச்செயவெனெச்சம் காரணப்பொருளது. **கந்தரம்** - வடமொழி: கம் - தலை, தரம்-தாங்குவது; தலையைத்தாங்குவது.

4. (இ-ள்) அம்-அழகிய, கை-கையிலே, வேல்-வேலையுடைய, மன்னனும்-அரிச்சந்திரமகாராஜனும், ஆசை-(தனக்கு) ஆசை, மீக்கொள-மேன்மேலாக, மஙகைதன் - சந்திரமதியினுடைய, பங்கயம் - தாமரைமலர்போலும், வதனம் முகத்தை, நோக்கினன் - பார்த்தான். (பார்க்கும்போது), செய்-சிவந்த

கயல் - கயல்போலும், கண்ணினள் - கண்களையுடைய சந்திரமதி திரு - அழகிய, கழுத்தினில் - கழுத்திலே, மங்கலநாண் - திருமங்கலிய திரம் (i - e. தாலிக்கயிறு), உறீஇ - பொருந்தி, வயங்க - விளங்க, னன் - (அதையுங்) கண்டான்.

Harichandra who wields a bright javelin, reciprocated darting love glances on the sweet moon-like face of Chandrama when he espied the tali round the graceful neck of Chandrama whose eyes may be compared to kayal fish.

(க-து) தன்னைப்பார்த்த சந்திரமதியின் முகத்தை அரிச்சந்திர ஆசை மிகுதியுடனே பார்த்தான்: அவளுடைய கழுத்திலேதாலிக்கயிறு வதையுங் கண்டான் என்பதாம்.

வேல் - வேலின்முள்ளைப் போலிருத்தலால் உவமையாகுபெயராய் தத்தின் பெயரமைந்தது. அரிச்சந்திரன் சந்திரமதியின்மீதுமீளாதகாதல் ண்டிருப்பவனும் மகாபராக்கிரமசாலியா யிருப்பவனுதலின் ஏனைய அரசர் போருக்கழைப்பினும் அவர்களைத் தன்வேலாயுதத்தால்வென்றுசந்திரமதி மணஞ்செய்யவல்லவன் என்பது தோன்ற "அங்கைவேல் மன்னன்" என் மன்னன் - மிகுதிப்பொருளைத்தந்துநின்ற மன் என்னும் இடைச்சொல் யாகப்பிறந்தபெயர்; மக்கள் யாவரினும் மிக்கவன் என்பதாம். பெருமை உடையவன் என்பதுமாம்: (மன் - பெருமை). (ஆசைமீக்கொள ...நோ னன்"-தான் விரும்பிய பெண்ணானவள் விருப்பத்துடன் தன்னை நோ னால் ஆசை அதிகரித்து நோக்கெதிர்நோக்காக நோக்குவது இயற்கை

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனுமில."

என்பனபோன்றவற்றால் இவ்விடத்தின்பாவனைகளைச் சூக்குமமாக உ த்துணர்ந்து கொள்க.

மங்கை - பதின் மூன்று வயது பெண். பெண்பாற்குரியபருவமாவ பேதை - பெதும்பை - மங்கை - மடந்தை - அரிவை - தெரிவை - பேரி பெண்: முறையே இவற்றின் வருஷமாவன,—7, 11, 13, 19, 25, 31, 40

"பேதையேபெதும்பை மங்கைபெருகிய மடந்தையோடு
தீதிலாவரிவைமற்றைத் தெரிவைபேரிளம் பெண்ணென்ப
வேதமில்பருவமாண்டேழெய்து பன்னொன்றுபன்மூன்
றேறுபத்தொன்பானையைந் தடன்முப்பத் தொன்றெண்ணைந்தே."

பங்கயம்—பங்கம் சேறு: ஜ(ய)ம்-பிறப்பது: சேற்றில் பிறப்பது. சே றிற்பிறப்பன அநேகமுண்டென்றாலும் தாமரைக்கு அது சிறப்பாகப் பெய யிற்று. வதனம்-வடமொழி. கயற்கண் - கயலின் பிரகாசமான வெண்ணி மும் பிறழ்ச்சியும் கண்ணின் வெண்மணியின் பிரகாசத்திற்கும் பிறழ்ச்சிக்கு உவமானமாதலால் கண்ணுக்குக் கயல் உவமையாதலறிக. செங்கயல் என சிறப்பித்தமையால் செவ்வரிபரந்துள்ளமையறிக. செம்மையாகிய கயல்என கூறினுமமையும். மங்கலம் - here மங்கலியம்—தாலி. உறீஇ - சொல் சை யளபெடை.

"அண்ணலரிச்சந்திரனும் ஆவலொடு தன்னோக்கும்
பெண்ணரசிவாண் முகத்தைப்பெட்புடனே—கண்ணுற்றான்
மங்கலநாண் மங்கையவள் வண்பணில நேர்மிடற்றில்
தொங்கி இலங்கக்கண்டான் சூழ்ந்து" (அ.வெ).

5. (இ-ள்) கன்னி என்று - (இவள்) கலியாணமாகாதபெண்ணென்று, எண்ணினம்-நினைத்திருந்தோம்; கன்னிஅல்லள்-இவள்கன்னியாகின்றாளில்லை; முன்னரே - முன்னேதானே, மங்கலம் பூண்ட - தாலிகட்டின, மொய் - நெருங்கின, குழல் - கூந்தலையுடைய பெண்ணாய் இருக்கிறாள்; இன்னமும் - இன்னும், ஒருவருக்கு - ஒருபுருஷனுக்கு, எய்துமோ - பாத்தியப்படத்தகுமோ, எனா-என்று, மன்னவன்-அரிச்சந்திரன், மாதுலற்கு - மாமனான சந்திரதயராஜனைப்பார்த்து, உரை - சிலசொற்களை, வழங்கினான்-சொன்னான்.

Harichandra exclaimed, "I took her for a maiden; but she does not appear as such, for she wears the tali; can she become the partner in life to another"? With these cogitations, he addressed some words to his uncle Madhidhayan,

(க-து) இவளைக்கன்னிகை யென்று நினைத்தோம்: இவள்கன்னிகை யல்லள்: முன்னரே தாலிகட்டியிருக்கின்றனள்: இவள் இன்னும் ஒருவருக்கு மனைவியாகத்தகுமோ என்றெண்ணி அரிச்சந்திரன் மாமனாகிய மதிதயனைப் பார்த்துச் சிலசொற்களைச் சொன்னான் என்பதாம்.

மொய்குழல்-வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. மொய் - வண்டுகள் மொய்க்கின்ற எனினுமாம். கன்னி - கந்ய என்னும் வடமொழி - கலியாணமாகாதபெண். என்று-இறந்தகாலவினையெச்சம்: (என்+ற்+உ) மாதுலன் - மாதுல என்னும் வடமொழி. மாதுலற்கு - ஒருமை: மாதுலர்க்கு-பன்மை. "திருந்திழைதனையுனக்கே (அரிச்சந்திரனுக்கே) திருமணமுடிக்கத்தாதை பொருந்தினன" முன்னரே ஆகலின் மாதுலன் ஆனமையறிக. அலள்-அன்மை என்னும் பண்படியாகப் பிறந்த எதிர்மறைப்பெண்பால் குறிப்பு வினைமுற்று. முன்னர் - பண்புப்பெயர்; நர் - பண்புப்பெயர் விகுதி. அம் - விகுதி பெறின் முன்னம் எனவும், பு - விகுதிபெறின் முன்பு எனவும் வரும். இன்னமும் - உம் - இறந்தது தழீஇய எச்சப்பொருளது. ஒருவர் - ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவான பெயர்: ஈண்டு ஆண்பாற்பெயர்: "ஒருவரென்ப துயரிரு பாற்றாய்" என்னும் விதியானறிக: (ந-சூ-289). எய்துமோ - ஓ-எதிர்மறைப்பொருளது. எனா - செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகாலவினையெச்சம்: என் - பகுதி, ஆ - வினையெச்ச விகுதி; இவ்விகுதியே காலங்காட்டியது, உரை - சொல், தேய், அர்த்தம். உறை - வசித்தல், காரம், படைக்கூடு, பண்டம் பெய்யுறை.

"என்னே இம் மேதினிக்கண் இப்புதுமை யானவகை
முன்னே மணம்பூண்ட மொய்குழலாள்—பின்னேயோர்
ஆடவனைச் சூட்டுங்கொல் ஆய்மலர்த்தார் என்றுன்னிப்
பாடவனைப் பெற்றோனைப் பார்த்து" (அ-வெ).

6. (இ-ள்) முன் - முன்னே, பொருந்து - ஒருவன் தாலிகட்டக்கொண்டு, மங்கலம் - அந்தத்தாலியைத்தானே, பூண்ட - இன்னமும் கட்டிக்கொண்டிருக்கிற, பேதையை - பெண்ணை, மறுத்து - அதைநீக்கி, இரண்டாவது மணம் - இரண்டாவது கலியாணம், முடிப்பரோ - ஒருவர் செய்துகொள்வார்களோ? சிறுத்தவர் - சிறிய ஜாதியார், செய் - இப்படிச்செய்து கொள்ளுகிற, தொழில் - செய்கை உண்டு; (இச்செய்கையை), திரை - கடல்சூழ்ந்த, வரைப்பினில் - பூமண்டலத்திலே, நீர் - நீங்களும், நிறுத்தினீர் - செய்வதாகச்சுயம்வரம் நாட்டினீர்கள், எனா - என்று, நெடிது - (விவகாரங்களை) அதிகமாக, கூறினான் - சொன்னான்.

Harichandra then discussed at length, as to the propriety of having proclaimed a Swayamvara, for the second marriage of a lady, and remarked, "Who would think of marrying again a lady, that has been already taken as wife, an act that can find favour only among the lower classes?"

(க-து) முன்னமே ஒருவன் சட்டியதாலியை அணிந்திருக்கும் பெண்ணை அத்தாலியை நீக்கி எவராகிலும் இரண்டாவது கலியாணஞ் செய்து கொள்வார்களோ? இது சிறியஜாதி செய்கையல்லவா: நீங்கள் இப்படி இரண்டாவது கலியாணஞ் செய்யச் சுயம்வரம்நாட்டினீர்கள். இதென்ன காரியமென்பதாகப் பலவிதமான விவகாரங்களைப் பேசினான் என்பதாம்.

இரண்டாவதுமணம் - இதற்கு வடமொழி புநர்விவாகம் என்பதாம். முன் - காலப்பொருளை உணர்த்தி நின்றது. பேதை - 7 - வயதுடைய பெண்ணாயினும் பொதுவகையால் ஈண்டுப் பெண்ணையுணர்த்தியது. சிறுத்தவர். பல்லோர் படர்க்கை இறந்தகால வினையாலணையும் பெயர்: சிறுமை - பகுதி, மைகெட்டதும் தகரத்தோற்றமும்சந்தி, த் - இறந்தகால இடைநிலை, அ - சாரியை, வ் - சந்தி, அர் - விகுதி. செய்தொழில் - வினைத்தொகை வினை.

"கன்னபுரிமன்னவனே கல்யாணமான வொரு
கன்னிதனைமீட்டுமணம் காண்குவரோ—என்னை இவட்
சின்னவர்போல் செய்தனைநீ என்றான் அயோத்தியர்தம்
கன்னவில்தோள்கோமான் கவன்று" (அ-வெ.)

7. (இ-ள்) வள்ளல் - பிரபுவான அரிச்சந்திரன், ஈது - இந்தப்பிரகாரமான வார்த்தையை, உரைத்தலும் - சொன்ன அளவிலே, மதிதயன் - சந்திரதயராஜன், தனது - தனது, உள்ளம்விட்டு - மனத்தில்நின்றும், ஓங்கிய - பொங்கிய, உவகை - சந்தோஷமாகிய, பெரு - பெரிய, வெள்ளம் - வெள்ளத்தை, உள் - உள்ளே, அடக்கியே - அடக்கிக்கொண்டு, வேந்தர்காள் - அரசர்களே! இவன் - இந்த அரசன், கட்டுரைத்தது - சொன்னது, கள்ளமோ - வஞ்சனையோ, (அல்லது) மெய்ம்மையோ - உண்மைதானோ? அம்-ஏ-அசை.

When Harichandra delivered himself of these words, Madhidhayan made an effort to restrain his ecstacic delight, and exclaimed, "Oh kings, is he sincere in his words, or is he only playing on our credulity?"

(க-து) அரிச்சந்திரன் பேசின விவகாரத்தைக்கேட்டவுடனே மதிதயமன்னன் தன சந்தோஷப்பெருக்கை உள்ளடக்கிக்கொண்டு சபையைப் பார்த்து "ஓ அரசர்களே! இவன் சொன்னது வஞ்சனைவார்த்தையோ மெய்தானோ?" என்றுகேட்டுப் பின்னுஞ்சொல்வான் என்பதாம்.

மதிதயன் - மதி - புத்தி, தயா - கிருபை: புத்தியுங்கிருபையுமுடையவன். இவன் சந்திரனுடைய பேரன்: காரணப்பெயர். உவகைப் பெருவெள்ளமானது தன்னெண்ணத்தின் படியே தன் பெண்ணினுக்குப் புருஷன் ஏற்பட்டதனால் உண்டாகியதென்க. அதனை உள்ளடக்கினதற்குக் காரணம் தேவரகசியத்தைப் பலரும் நன்றாக அறிய விளங்குதற் பொருட்டாம். ஈது - என்னும் சுட்டுப்பெயர், மேல் 6 - வது செய்யுளில் கூறியதைச் சுட்டி நின்றது. ஓங்கிய - ஓங்கு - பகுதி, உகரக்கேடுசந்தி, இன் - இறந்தகால இடைநிலை, னகரங்கெட்டது கடைக்குறை விகாரம், யகரத்தோற்றம் சந்தி, அ - பெயரெச்சவிகுதி. அடக்கி - பிறவினைவினையெச்சம் (அடங்கி - தன்வினை). வேந்தர்காள் - விளிவேற்றுமை. (வேந்தர்கள் - முதல்வேற்றுமை.)

மற்றதனைக்கேட்ட மதிதயன்தான் பேருவகை
உற்றனன்காட்டானதனை உள்ளடக்கி—கொற்றவர்காள்
கோசலர்கோன்கூறியசொல் கோளாமோ மெய்யாமோ
பேசுகநீர் என்றான் பிரித்து'' (அ-வெ).

8. (இ-ள்) தையலாள் - இந்தப்பெண்ணினுடைய, கழுத்தினில் - கழுத்திலே, தாலி உண்டெனில் - தாலியிருக்குமானால், நீர்-நீங்களே, கையினால்-உங்கள் கையினாலே, கண்ணுற - கண்ணில் பொருந்தும்படியாக, காட்டும் - காட்டுங்கள், என - என்றுசொல்ல; அரசர் - (அதுகேட்ட) அரசர்கள், செய்ய - சிவந்த, கை - தங்கள்கைகளை, அறைந்து - தட்டி, அணி-அழகிய, மூக்கில் - மூக்கிலே, சேர்த்தி - விரலைவைத்து, இ - இந்த, ஐயனும் - மகாப்பிரபுவான அரிச்சந்திரனும், பொய்யன் - பொய்யனாயிருக்கிறான், என்று கூறினார் - என்று சொன்னார்கள்.

"If this lady does wear the tali, you can well, verify it yourselves, you have eyes." The kings assembled, in as much as they could see no tali, were taken a-back to find even the noble and high-souled Harichandra speak an untruth.

(கு-ரை) "அப்படி இந்தப் பெண்ணினுடைய கழுத்திலே தாலியிருப்பது மெய்யானால் அதை நீங்களே கண்ணுக்குத்தெரியும்படி கையால் காட்டுங்கள் பார்க்கலாம்" என்றான். அப்போது அரசர்கள் தாலி தெரியாமையால் கைகொட்டி மூக்கின்மேல் விரல்வைத்து அட! இந்த மகாப்பிரபுவும் பொய்யனாயிருக்கிறான் என்றதிசயித்தார்கள் என்பதாம்.

தையலாள் - தையல் - அழகு; அழகுடையவள். செய்ய-குறிப்புப்பெயரெச்சம்: செம்மை - பகுதி, 'ஈறுபோதல்' என்பதனாலே - மை - கெட்டு, செம்-எனநின்று, 'முன்னின்ற மெய்திரிதல்' என்பதனால் மகரம் யகரமாய், யகரச்சந்தியும் அதன்மீது அகர எச்சவிகுதியும் பெற்றுவந்தது. சேர்த்தி - (சேர்+த்+து+இ) து-சாரியை, இ - இறந்தகாலவினையெச்சவிகுதி. இ+ஐயன்-இவ்வையன் "எகரவினா முச்சுட்டின்முன்னர், &c" என்னும் விதியான் வருமொழிமுதல் உயிர்வந்தமையின் வகரம்தோன்றிற்று. ஐயனும் - உம்-உயர்வு சிறப்புப்பொருளது. ஐயன் - ஐ - அரசன் - ஆசான்: சிறந்தவன். பொய்யன் - பொய்சொல்லும் தன்மையையுடையான்.

9. (இ-ள்) அப்போது, திண் திறலீர் - மிகுந்த சாமர்த்தியமுடைய அரசர்களே! எம் - எம்முடைய, மடந்தை - பெண்ணின் (கழுத்திலேயுள்ள), மங்கலம் - தாலியை, மண்டலவேந்தன் - இந்தப்பூமண்டலத்தை ஆள்கின்ற அரிச்சந்திரமகாராஜன், கண்டதும் - கண்டதற்கும், நீங்கள்தாம் - நீங்களெல்லாரும், காண்டிலாததும் - காணாதிருக்கிறதற்கும், ஒரு தேவராசியம் - தேவரகசியமொன்று, உண்டென - உண்டென்று, மதிதயன் - சந்திரதயராஜன், உரைப்பதாயினன் - சொல்வானாயினன்.

"Oh, valiant kings," said Madhidhayan, "There is a divine mystery that underlies this strange phenomenon; why Harichandra the ruler of the world-wide empire sees the tali, while it is invisible to you all."

(கு-ரை) அதன்மேல், மதிதயன் "எங்கள் பெண்ணின் தாலியை இராஜாதிராஜனாகிய அரிச்சந்திரன் கண்டதற்கும் நீங்கள் காணாததற்கும் காரணம் ஒரு தேவரகசியம் உண்டு" என்று அந்த இரகசியத்தை சொல்வானாயினன் என்பதாம்.

மண்டலம் - மண்+தலம்=பூமியாகிய இடம் i. e. பூமி எனவுமாம். மண்டலம literally=வட்டம், கண்டதும் & கண்டிலாததும் - நான்காம் வேற்றுமை. **தேவாரசியம்** - தேவரஹஸ்யம். திண் - திறல்-இவ்விரண்டும் சாமர்த்தியத்தை உணர்த்திநின்றமையின் அதிகசாமர்த்தியம் என்க. மனைவியர் முதலாய உரியபந்துக்களையுங் கூட்டி **எம்** என்றான்.

"மற்றடங்தோள் சந்த்ரதயன் மன்னவரை நோக்கியிந்த
வெற்றிவடி வேல்கரத்து வேந்தன்யாய்—பெற்றகொடி
மங்கலநாண் கண்டதும்நீர் மற்றதுசாறுதைதவு
மங்கருமோர் மர்தணமாமன்" (அ-வெ).

10. (இ-ள்) அண்டர்நாயகன் - தெய்வநாயகனான பரமசிவன், வரம்-வரத்தை, அளித்த - (எனக்குக்) கொடுத்த, நாளையில் - காலத்திலே, வண்டு - வண்டுகள், அணி - மொய்க்கின்ற, குழலியோடு - கூந்தலையுடைய இந்தச் சந்திரமதியுடனேகூட, உதித்த - பிறந்த, மங்கலம் - திருமங்கலியத்தை, கண்டவர் - கண்டவனே, இவட்கு - இவளுக்கு, பதி - நாயகன் : என்ற - என்று சொன்ன, கட்டுரை - உறுதிவார்த்தை, உண்டு - உண்டு. அஃதன்றி - அதையல்லாமல், வேறு - வேறேயுமொன்று, உண்டு - உளது ; கேட்டிர் - அதைக் கேளுங்கள்:—ஆல் - அசை.

When the great Siva pronounced his blessing on me, he declared that he who should descry the tali that Chandramathi, with locks of swarming beetles, wears ever since her birth, would be her lord and master.

(க-து) "சிவபெருமான் எனக்கு வரங்கொடுத்தகாலத்தில், சந்திரமதியுடனே பிறந்த தாலி எவனுக்குக் கட்புலனாகுமோ அவனே இவளுக்குப் பர்த்தாவாகக்கடவன் என்றருளிச்செய்தார். அதுவல்லாமல் வேறொரு விசேஷமுமுண்டு, கேளுங்கள்" என்று சொன்னான் மதிதயன் என்பதாம்.

அண்டர்-அண்டம் - ஆகாயம்: ஆகாயவாசிகள், தேவர். **நாயகன்**-நாயகம் - தலைமை : தலைவன். **வரம்** - sans வர. **நாளை** - ஐ - சாரியை. குழலி - குழல்-பகுதி, இ-பெண்பால் விகுதி. குழலியோடு மூன்றனுருபு உடனிகழ்ச்சிப்பொருளது. **உண்டு** - குறிப்புவினைமுற்று. **அன்றி** - எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம். **கேட்டிர்** - முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்று; (கேள்+து+இர்) து - சாரியை, ளகரமும் சாரியை தகரமும் டகரமாகத் திரிந்தமை சந்தி.

"கங்கைபிறை வேணிபுனை சத்தன்வரந்தருநாள்
மங்கையொடுதோன்றிட்ட மங்கலநாண்—அங்கணிறைல்
கண்டவனேகாரிகைக்குக் காதலனும் என்றமொழி
யுண்டதாஅன்றின்ன மிங்கொன் றுண்டு" (அ-வெ).

11. (இ-ள்) மஞ்சனம் - (கங்காஜல) அபிஷேகத்தைக்கொண்ட, சடையினான் - சடையினையுடைய பரமசிவனானவர், வரத்தில் - கொடுத்தவரத்தினாலே, வந்தநாள் - (இவள்) பிறந்தநாள் (முதலாக), (இவள்தாலியை நாங்கள்), கஞ்சனம் - கண்ணாடியின், நீழலில் - நிழலிலே, காண்பதன்றி - பார்த்திருக்கிறதே யல்லது, அஞ்சனம் - மையிட்ட, கண்ணிக்கும் - கண்களையுடைய இந்தச் சந்திரமதிக்கும், அம் கைக்கு - அழகிதான அவள் கைக்கும் தொடுவதற்கு, எய்திடாது - அகப்படாது. எஞ்சல் இல் - குறைவில்லாமல், யாவரும் - (எங்கள் வீட்டிலுள்ள) எல்லாரும், யானும் - நானும், கண்டிலேம், (நாளதுவரையில்) பார்த்ததில்லை

In accordance with the blessing of Siva, who wears the Ganges on his head, her tali, since she was born, could be seen only in the reflected image of her person in a mirror; which strange to say she could not feel herself on her person with her hands,. nor could others including myself see it.

(க-து) "சிவபெருமானுடைய வரத்தினால் பிறந்தநாள் முதலாக இவள் தானும் தன்மட்டில் அந்தத் தாலியைக் கண்ணாடி நிழலில் காண்பதல்லாமல்-அது அவளுக்கும் கைக்ககப்படுவதில்லை. அதனை எங்கள் வீட்டிலுள்ள எவருங் கண்டதில்லை. நானும் அதைப்பார்த்ததில்லை" என்று சொல்லி முடித்தான் மதிதயமன்னன் என்பதாம்.

மஞ்சனம் - sans மஞ்ஜன. கஞ்சனை - sans கஞ்ஜன. அஞ்சனம் - sans அஞ்ஜன. சடை - sans ஜட. எஞ்சல் - தொழிற்பெயர். இல் - ஈறுகெட்ட எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம். யாவரும்-உம் முற்றும்மையாதலால், யா-எஞ்சாப்பொருளது, யாவரும்+யானும் "மம்முன்பயவ மயங்குமென்ப" (ந-சூ-115) என்பதனாலும் "வேற்றுமை மப்போய் வலிமெலியுறழ்வும், அவ்வழி யுயிரிடைவரி னியல்பும்முள" (ந-சூ 220) என்பதனாலும், யாவரும் யானும் என்று இயல்பாகப் புணரும். யாவருமியானும் என இகரக்குறுக்கந் தோன்றுதற்குத் தொல்காப்பிய முதலானவற்றில் இலக்கணம் காணப்பெறாமையால் இதனைப் புதியன புகுதலாகக் கொண்டு "தன்னொழிமெய்ம்முன் யவ்வரின் இகரந்துன்னுமென்று துணிநருமுளரே" என்னும் விதியால் அமைத்துக்கொள்க (ந-சூ 206). கண்டிலேம்-இறந்தகால எதிர்மறை உளப்பாட்டுத் தன்மைப் பன்மைவினைமுற்று. (காண்+ட்+இல்+ஏம்) காண்-பகுதி, பகுதி ஆகாரம் அகரமானது குறுக்கல், ட்-இறந்தகால இடைநிலை; இல்-எதிர்மறை இடைநிலை, ஏம்-தன்மைப்பன்மைவிகுதி.

"கேட்டிராதவேந்தீர் கிளக்குவல்யான் சிறப்பரனார்
நீட்டுவாக்குற்றநிலை நேருருவம்—காட்டியதில்
காண்பதன்றி நங்கைக்கும் கைக்கெய்தாயாவரும்
காண்கிலமால் என்றிசைத்தான் காண்" (அ-வெ).

12. (இ-ள்) என்றலும் - என்று சொல்லும்போது, வல்லி - சந்திரமதியானவள், முன் எண்ணிய-தான் முன்னே நினைத்த, நாமம் ஒன்று அல்லது-(அரிச்சந்திரனுடைய) பெயர் ஒன்றையல்லது வேறே யாதொருபெயரையும், உள் உற - தன் மனதில் பொருந்த, உன்னலள் ஆகி - நினையாதவளாய், இது சென்று-இந்த மாலைபோய், அவன் மார்பு - அரிச்சந்திரமகாராஜனுடைய மார்பிலே, சேர்க எனா - விழக்கடவதென்று, உன்னா-நினைத்து, மன்றல்-மணம் பொருந்திய, மாலையை - பூமாலையை, வானில் - ஆகாயத்திலே, எறிந்தனள்-எறிந்தனள். அம் - அசை.

Scarcely had Madhidhayan finished unravelling the mystery, when Chandramathi, whose heart was so completely conquered by Harichandra, that she could not think of anything else, flung the Swayamvara garland high up in the air saying "Thou wilt fall round Harichandra's neck."

(க-து) என்றிக்கணமாக மதிதயன் சொல்லிமுடித்தவளவிலே, அரிச்சந்திரமகாராஜனையே யன்றி வேறொன்றையும் மனத்திற்கொள்ள நினையா

ளாய் நின்ற சந்திரமதியானவள் "இந்தமாலை அரிச்சந்திரன் கழுத்திலே போய் விழக்கடவது" என்று நினைத்து சுயம்வரமாலையை அந்தரத்தில் விட்டெறிந்தனள் என்பதாம்.

வல்லி - வல்லிக்கொடி : அதுபோன்ற நுண்மையுடையபெண். முன் எண்ணிய... உன்னலளாகி' - சுயம்வரத்திற்கு முன்னுளில் முதலாக அரிச்சந்திரன் என்னும் பெயரை ஸ்மரித்துக்கொண்டிருந்தவளுக்கு இடையில்நிகழ்ந்த விவாதம் இடையூறாக இருந்தது. அதனையும் நினையாமலிருந்தவள் அது முடிந்த குறிப்பையறிந்து இனித் தன் மாலையை இடுவதற்குத் தடையில்லையாவதைக்கொண்டு அதனை இடுகின்ற முறைமையையும் சிந்திக்க அவகாசமில்லாத அவசரமுடையளாய் அதனை அவன் மார்பிற்சேர்கவென்று வானிலெறிந்தாள் என்க. மன்றலமாலை-மன்றல்-கலியாணம் : கலியாணத்துக்குரிய சுயம்வரமாலை என்பதுமாம். "மன்றலர்மாலை" என்றும் பாடம் : மன்றம்+அலர் - வாசனை வீசுகின்ற - மணம் விரிகின்ற என்பது பொருள். மாலை-சாயரக்ஷை என்னும் பொருளில் தமிழ்மொழியாம் : மால் - மயக்கம், அதுவேளையில் பொருள்களைத் துணியக்கூடாமல் இதுவோ அதுவோ என மயங்கக்காரணமிருத்தலின் அப்பெயர் பிறந்தது என்ப. அல்லது-எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம் : து-எச்சவிகுதி. ஆகி-இறந்தகாலவினையெச்சம்: (ஆ+கு+இ) கு - சாரியை, இ - எச்சவிகுதி : இவ்விகுதியே காலங்காட்டியது. சேர்க+என-சேர்கென : அகரந்தொகுத்தல். சேர்க - வியங்கோள் வினைமுற்று. உன்னு-செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம் : ஆ-எச்சத்தையும் காலத்தையும் காட்டியது.

"அந்நிலையில் சந்த்ரமதி உண்ணலரிச் சந்திரனை
உன்னிஉளத் தொண்மாலை வானெறிந்தாள்—அன்னதுபோய்
வன்சரயு நாடன்வரைப் புயத்தில் துன்னியதைத்
தெண்கருவியார்த்த எழுந்து" (அ-வெ).

13. (இ-ள்) வஞ்சி - சந்திரமதியானவள், வழங்கிய - எறிந்த, மாலை - மாலையை, அணிந்தோன் - அணிந்துகொண்ட அரிச்சந்திரமகாராஜனுடைய, முகம் - முகமானது, செம்சுடரின் - சிவந்த சூரியனைப்போல், நின்று - நிலைகொண்டு, ஒளிசெய்ய - விளங்க, வெம் சுடர்முன் - (அப்படிப்பட்ட) வெப்பத்தையுடைய சூரியனுக்கு முன்னே, சசியாம் என - சந்திரன்போலே, மிக்கோர்-(அங்கு) மிகுந்துள்ள அரசர்களுடைய, கஞ்சம்-தாமரைமலர்போன்ற, முகங்கள்-முகங்கள், கரிந்தன-வாடி ஒளிமழுங்கின. அன்று-ஏ-அசை.

When the garland settled round Harichandra's chest, his face grew radiant with joy, like the effulgent-crimson sun, while the faces of the other kings drooped, faded and were completely eclipsed, like unto the moon in sun light.

(கு-து) சந்திரமதி எறிந்த மாலையை அணிந்துகொண்ட அரிச்சந்திரன் முகமானது சூரியனைப்போல் விளங்காநிற்க, மற்றமன்னர்களுடைய முகங்களானவை சூரியனைக்கண்ட சந்திரனைப்போலக் கரிந்தன என்பதாம்.

வஞ்சி - ஓர்கொடி : அதுபோன்றவள். சசி-literally the hare-spotted. கஞ்சம் - கம் - தண்ணீர், ஜம் - உற்பவிப்பது : தண்ணீரில் உற்பவிப்பது : தலைமைபற்றித் தாமரைக்காயது; இது மலர்க்குப்பொருளாகுபெயர்; முதலாகுபெயரெனினுமாம். அணிந்தோன் - ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாயது; "பெயர்வினையிடத்து ன ள ர ய வீற்றயல் ஆ'ஓ வாகலும் செய்யுளுளுரித்தே"

என்னும் விதிகாண்க (ந-சூ-353). மிக்கோர்-பல்லோர் படர்க்கை இறந்தகால வினையாலணையும்பெயர்: மிகு-பகுதி, பகுதிஒற்று இரட்டிக்காலங்காட்டியது.

14. (இ-ள்) (அப்போது): வேலை - கடலோசையானது, அடங்க-அடங்கும் விதமாக, மாதர்கள் - பெண்களெல்லாரும், ஆர்த்தனர் - ஆரவாரித்தார்கள்; வானவர் - தேவர்களும், ஆர்த்தார் - ஆரவாரித்தார்கள்; கீதர்கள்-கீதங்கள் பாடுகின்றவர்களும், ஆர்த்தனர் - ஆரவாரித்தார்கள்; கேளிரும் - (சந்திரமதியின்) உறவினரெல்லாரும், ஆர்த்தார் - ஆரவாரித்தார்கள்; சூதர்கள்-பாடுவோர்களும், ஆர்த்தனர் - ஆரவாரித்தார்கள்; துறவரும் - துறவினராகிய முனிவர்களும், ஆர்த்தார் - ஆரவாரித்தார்கள்; வேதர்கள் - வேதப்பிராமணர்களும், ஆர்த்தனர் - ஆரவாரித்தார்கள்.

When the damsels of the city, the celestial gods, flute-players, the relatives of Chadramathi, songsters, sages, and Brahmins versed in Vedic lore, all resounded in loud reverberations as to drown the noisy uproar of the billowy seas.

(க-து) அப்போது, சமுத்திரகோஷமு மடங்கும் விதமாக மாதர்களும் வானவர்களும் கீதர்களும் கேளிர்களும் சூதர்களும் உறவினர்களும் வேதப்பிராமணர்களும் சந்தோஷ மிகுதியால் ஆரவாரஞ் செய்தார்கள் என்பதாம்.

மாதர்-மாது-விருப்பம்: விருப்பத்தைத்தருகின்றவர்கள். கீதம் - இசைப்பாட்டு. சூதர் - பாணர் - புகழ்பாடுவோர்: flute-players, Encomiasts, துறவர்-துறத்தல்-நீத்தல், ஆசாபாசங்களை நீக்கிவிட்டவர்கள்; சந்நியாசிகள், முனிவர்கள். ஆர்த்தனர் - ஆர்த்தார் என்னுஞ் சொற்கள் பன்முறை வருதலின் இச்செய்யுள் சொற்பின் வருநிலையணியாம்.

15. (இ-ள்) நல் - நல்ல, இயல்நூல் - இலக்கணநூல்களை, அறி - உணர்ந்த, நாவலர் - வித்துவான்கள், பாட - பாடவும்; பல்-பல, இயமும்-வாத்தியங்களும், பல-பலவகைப்பட்ட, பாடலும் - பாடல்களும், ஆர்ப்ப - முழங்கவும்; அல்லி - அகவிதழ்களையுடைய, மலர்-புஷ்பங்களும், தொடை-பூங்கொத்துகளும் அமைந்த, மாலை-மாலையை, அணிந்து - சூடிக்கொண்டு, வல்லியும் - சந்திரமதியும், மன்னனும்-அரிச்சந்திரனும், மாளிகை-படுக்கை வீட்டுக்குள்ளே, புக்கார் - போனார்கள். ஏ - அசை.

Harichandra, and Chandramathi wearing a garland of broad petalled flowers, then entered the bed-chamber, while learned pundits chanted hymns, and notes of various kinds of musical instruments and vocal songs celebrated the occasion.

(க-து) பின்பு நல்ல நாவலர்கள் மன்றல்வாழ்த்தவும் கீதவாத்தியங்கள்முழங்கவும் பத்னியும் பர்த்தாவும் பள்ளியறையில் புகுந்தனர்கள் என்பதாம்.

நாவலர் - நாவின் வன்மை உடையவர்கள், i. e. கல்வியில் வல்லவர்கள். யாதொருவழுவுமின்றிப் பாடினார் என்பதைக் குறிப்பித்தற்கு "நல்லியல்நூலறிநாவலர்" என்றார். அறி - இறந்தகாலத்தில் வந்த வினைத்தொகைவினை. பாடுதலும் ஆர்த்தலும் மாளிகைப்புகுதலும் ஏககாலத்தில்நிகழ்ந்தமையின் பாட-ஆர்ப்ப-என்னும் செயவெனெச்சங்கள் நிகழ்காலத்தன. ஆர்ப்ப - ஆர்-பகுதி, ப்-சந்தி, ப் - விரித்தல் விகாரம், அ-எச்சவிகுதி. பல்லியம் - தோற்கருவி துளைக்கருவி முதலிய கொட்டு கருவியும் வாதுகருவியுமாம். அல்லி - opposite

புல்லி. (புல்லி - புறவிதழ்). மலர்-தொழிலடியாகப்பிறந்த பெயர்ப்பகுபதம்: மலர் - பகுதி, இ - வினைமுதற்பொருண்மை உணர்த்தும் விகுதி புணர்ந்துகெட்டது. தோடை-தொடுக்கப்படுவதென்னும் பொருளில் தொடு - பகுதி, ஐ-செயப்படுபொருண்மை உணர்த்தும் விகுதி, வல்லியும் மன்னனும் புக்கார் என்ற குறிப்பினால் மாளிகை என்பது பள்ளியறையைக்குறிப்பதறிக, மாளிகை - sans மாலிகா = palace.

(மூலபாடவசனம்பார்க்க.)

இந்திரகாண்டம்.

இந்திரன் சந்நிதியிலே நடந்த சரித்திரத்தைச் சொல்லுங்காண்டம். இந்திரன்-தேவராஜன், சொல்லின்படி பரமைசுவரியமுடையவன்: (இதி-பரமைசுவரியம்).

கலிநிலைத்துறை - ஐஞ்சீரடி நான்காய்த்தம்முள் அளவொத்து வருவது.

16. (இ-ள்) பாருக்கு - பூலோகத்திலே, ஒருவன்-ஒருவரும் நிகரில்லாதவன்; பரதாரம்-(பின்னும்)அந்நியர்மனைவிகளுக்கு,சகோதரன்-சகோதரனானவன்; வெம் - வெவ்விதான, போருக்கு - சண்டையில், ஒருவன்- நிகரில்லாதவன்; புகழுக்கும் - கீர்த்திக்கும், மறைப்பொருட்கும் - வேதார்த்தவுணர்வினுக்கும், நேருக்கும் - நேர்மைக்கும், வீடாம் - இருப்பிடமானவன்; மனுநூல் - மனுதர்மசாஸ்திரத்தின், நெறிக்கும் - மார்க்கத்துக்கும், பொறைக்கும் - பொறுமைக்கும், ஆருக்கும் - எப்படிப்பட்டவர்களினும், மிக்கான் - சிறந்தவன்; (அவன்யாரெனில்), அரிச்சந்திரன் ஆகும் - அரிச்சந்திரமகாராஜனென்பவனும், என்றான் - என்று (வசிஷ்டமுனிவர்) சொன்னார்.

The sage Vasishta declared "Harichandra incomparably towers above the rest of mankind in the world; he is regarded by the wives of other men as their brother, he is a hero of matchless valour in battles; he is the living embodiment of fame, Vedic knowledge and rectitude; he excels all men in his rigid adherence to the shastras of Manu, and in the possession of a spirit of patience and self-possession.

(க-து) பூலோகத்திலே சமானஸ்கந்தனாய், பரதாரசகோதரனாய், யுத்தஞ்செய்வதில் நிகரில்லாதவனாய், கீர்த்தி - வேதார்த்த வுணர்ச்சி - நேர்மை என்பவைகளுக்கு வாசஸ்தானமாய், மனுதர்ம சாஸ்திரத்தின் வழியிலே நடப்பதிலும்பொறுமையிலும்எப்படிப்பட்டவர்களுக்கும்மிகுந்தவனாய் இருப்பவன் அரிச்சந்திர மகாராஜனென்பவனொருவன் உளன் என்று சொன்னார் வசிஷ்டமுனிவர் என்பதாம்.

பார் - பருமையுடையது எனக் காரணங் கற்பிக்கின்றனர். ஒருவன் - யாதொருஇனத்திலும் சேர்வதின்றிஏகமாயிருக்கின்ற பொருளுக்குஉவமானங் கூறமுடியாது: அதுபோலச்சகலசுகுணங்களின் நிறைவால் தனித்து உவமை கூற இடமில்லாதவனை ஒருவன் என்றுரைப்பது நம்மில் கவிகளின் வழக்காயிராநின்றது. பரதாரசகோதரன்- பர-அன்னிய, தாரம் - மனைவி,சகோதரன்-(சக - கூட, உதரன்-ஒரு வயிற்றில் பிறந்தவன்) உடன் பிறந்தவன்: அந்நியருடைய மனைவிமார்களை உடன் பிறப்பாகின்றமுறை கொண்டாடுகின்றவன். மறை - மறைவான i. e. ரகசியமான பொருளையுடையது: வேதம் - விப்பிரர்களுக்கன்றி மற்றவர்கட்கு ஓதவும் கேட்கவும் ஆகாதெனமறுக்கப்பட்டது

எனக்காரணங்கற்பிப்பதுமுண்டு. "நெருக்கும் விடா" எனப்பாடங்கூறி "அந்த வேதார்த்தப்படியே, நடக்கிறதைப்புக்கும் விடாமல்" என்று பொருளுரைப்பதுமாம். மனுநூல் என்பது மனுஸ்மிருதி. அதன் நெறி-அதில் சொல்லப்பட்ட விதிவிலக்குகளாகியவழி. ஆர் - யார் என்பதன் மரூஉ. இங்ஙனே யாடு- யானை- யாறு என்பன முறையே ஆடு - ஆனை - ஆறு என மருவிவரும்.

17. (இ-ள்) அன்னான் - அவ்வசிஷ்டமுனிவர், அது-அவ்வார்த்தையை, கூறிட-சொன்னமாத்திரத்தில்; முன் நாள்-முன்னாளில், மைந்தரை-தம் புத்திரரை, அட்டதாலும்-(அவ்வசிஷ்டர் கொன்றதினாலும்; அமர்-(அவ்வசிஷ்டரோடு) தாம் பொருத போரை, ஒரு தண்டின் - ஒருதண்டினாலே, வென்று - (அவ்வசிஷ்டர்) வென்று, முடித்ததாலும் - தன்னை முனிவனாகச் செய்துகொண்டதினாலும்; தன்னால்-(விசுவாமித்திரர்) தன்னாலும், உணராத - தெரிந்துகொள்ளக் கூடாத, சலத்தினன் - கோபத்தை யுடையவராய், அழன்று - கொதிப்புக்கொண்டு, கொன் ஆர் - பெருமைபொருந்திய, தவத்து - தபசினால், ஓங்கிய-உயர்ந்த, கௌசிகன்-கௌசிகரானவிசுவாமித்திரமுனிவர், கூறலுற்றான்-சொல்லத்தொடங்கினார். தான் - அசை.

Visvamitra, great in the performance of mighty penances, on hearing such high compliments paid by Vasishta, boiled with indignation and waxed wroth, especially at Vasishta was the cause of the death of his sons, and exhibited his powers of a muni by vanquishing him in a battle

(க-து) அரிச்சந்திரனை வசிஷ்டர் புகழ்ந்து பேசினதைக்கேட்ட உடனே தவசிரேஷ்டராகிய விசுவாமித்திரமகாமுனிவர்முன்னாளில் தம்புதல்வர்களை அவ்வசிஷ்டர் கொன்றதினாலும்; அவரோடு தாம் பொருதபோரை ஒரு தண்டத்தினாலே அவ்வசிஷ்டர் வென்று தான் தன்னை முனிவனாகச்செய்து கொண்டதினாலும்; தம்மாலுந்தெரிந்து கொள்ளக்கூடாத கோபங்கொண்டவராய்க் கூறத்தொடங்கினார் என்பதாம்.

மைந்தர் - மைந்து - வலி, பெற்றோர்க்கு வலிமை தரவல்லவர். பெற்றோர்க்கு வலிமையாவதெங்ஙனமென்றால் அவர்க்குப்பகை பிணி மூப்புக்களான் வருந்துன்பங்களைப் போக்குவதும்; இன்னும் மதசித்தாந்தத்தின்படி சிராத்த முதலிய கருமங்களால் சுவர்க்கம்புக ஏதுவாதலுமாம். அது-இச்சுட்டுப்பெயர் மேலைய செய்யுளிற் கூறியதைச்சுட்டிநின்றது. கௌசிகன்-குசிகன் புத்திரன் கௌசிகன்: தத்திதாந்தநாமபதம்.

மைந்தரையட்டதும,

அமர்வென்று ஒரு தண்டின்முடித்ததும்.—

கௌசிகராகிய விசுவாமித்திரர் வேந்தராய் அரசியற்றாத்தும் நாளிலே ஓர்நாள் தம்பரிவாரங்களோடு வேட்டையாடுதற்பொருட்டுக் காட்டிற்கேகி வேட்டையாடி நாட்டிற்குத்திரும்புவார் வசிட்டமாமுனிவர் வதிதருமிடத்து வந்தனர். வந்தாரனைவர்க்கும் அவ்வசிட்டர் காமதேனுவைக்கொண்டு அறுசுவை யுண்டி யளித்து உபசரித்தாராக, அங்ஙனமளித்த விருந்தினையுண்ட விசுவாமித்திரர் அம்முனிவரை நோக்கி 'மாதவ! மேதகு பொருள்களெல்லாம் வேந்தர்க்குரிய வாதலால் இத்தேனு உமக்குத் தக்கதன்று எனக்கருள்வீர்' என்ன; அம்முனிவர் 'யானோ இச்சுரபியைக்கொடுக்கவியல்கிலேன்: அது வருவதாகிற் கொண்டகல்க' என்றனர்.

பின்னர் விசுவாமித்திரர் அச்சுரபியைப் பாசத்தாற்பிணித்தேகுழி அது அப்பிணிப்பை யொரீஇ வசிட்டமாமுனிவரைநோக்கி 'எம்பெருமானேவேந்தற்கென்னை யளித்திரோ' என்ன, அவர் 'அதுசெய்திலேன்' என்றார். பின்னர் அச்சுரபி பெருஞ்சினங்கொண்டு 'நானே இவ்வேந்தன் சேனைகளை யெல்லாம் அதம்பண்ணுகிறேன் பார்' என்று உடம்பின்மயிர் சிலிர்த்தது. சிலிர்க்கவே அதினின்றும் பப்பரர் முதலிய பல்லாயிரமிலேச்சர்கள் கைப்படையோடு தோன்றி வேந்தன் சேனைகளையெல்லாம் அழித்தனர். அதனைக் கண்ணுற்றிருந்த விசுவாமித்திரருடைய புதல்வர் 'இஃது இப்பசுவின வன்மையன்று; வசிட்டனுடைய வஞ்சமே; அம்முனிவன் சிரத்தை இனனே கொய்குவம்' என்று முனிவரருகே சென்றனர். அதுபோது அம்மகாமுனிவர் தீயெழ நோக்கிய மாத்திரத்திலே அம்மைந்தர்கள் நூற்றுவருமமாண்டனர்.

இங்ஙனமாகத்தம்மைந்தர்கள் மாளவே விசுவாமித்திரர்மிகவும்வெகுண்டு தம் வில்லைவளைத்து அவ்வசிட்டமுனிவர்மீது சரவருஷம் பொழிந்தனர். அம்முனிவரர் தமது கைத்தண்டத்தை 'நீ எதிராநிற்க' என்றேவினர். அத்தண்டமோ விசுவாமித்திரரால் விடப்பட்ட தெய்வப்படைமுதலிய வெல்லாம் விழுங்கிவிட்டது. அதுகண்ட விசுவாமித்திரர் 'முனிவர்களுடைய வல்லமையே சிறப்புடையது; உலகமுழுதுமகாக்கும் வலமையும் ஓர் வலலமையா'என்று தம்முள்ளத் தெண்ணினராயத தமரசாட்சியை வெறுத்து அரியதோர் தவம் புரிந்து பிரமரிஷியாயினா எனபது புராணவரலாறு.

18. (இ-ள்) வெய்யன்-பொல்லாதவனும, பதகன்-பாதகனும், பரதார விருப்பன் - பரதார இச்சையுள்ளவனும,வீணன்-பயன்படாதவனும், பொய்யன்-பொய்யனும், இறையும்-மனவொடுக்கமும், பொறையும-பொறுமையும், சிறிதும் - கொஞ்சமேனும், இல - இல்லாத, புல்லன - அற்பனும், கையன்-வஞ்சகனும், கபடன் - கபடனும் ஆன, கயவன்தன்னை - ஒரு புத்தியீனனை, நல்லன் என்று - மிகநலலவனென்று, இ - இந்த, ஐயன் - அரசனுடைய,திருமுன-சம்முகத்தில், உரைத்தாய் - சொன்னீரோ: இது என ஆக - இதனால் யாது பயனைககருதி, எனறுன - என்று கேட்டார்.

"Oh Vasishta" exclaimed Visvamitra "you have the hardihood to praise in presence of the great and illustrious India, the might and strength of character of a worthless man, who is notoriously known as wicked and unscrupulous, immoral and vain, untruthful and self-sufficient, peevish and mean, treacherous and deceitful."

(க-து) பொல்லாதவனாய், பாதகனாய், பரதார இச்சையுடையவனாய், வீணனாய், பொய்யனாய, மனவொடுக்கமும் பொறுமையுங் கொஞ்சமேனுமில்லாத அற்பனாய், வஞ்சகனாய்,கபடனாய் இருக்கும ஒரு புத்தியீனனை இந்தத் தேவேந்திரமகாராஜனுடைய சம்முகத்தகமேமிகவல்லவனென்றுசொன்னீரோ! ஓ வசிட்டமுனிவரே! இப்படிச்சொன்னதனால் என்னபயன கிடைக்குமென்று நினைத்திருக்கிறீர் என்று கேட்டார் விசுவாமித்திரா என்பதாம்.

வெய்யன் - வெம்மையென்னும் பணபடியாகப்பிறந்த பெயர், பதகன்-பாதகன் என்பது குறுக்கல் பெற்றது, புல்லன் - புனமைபகுதி. கை - வஞ்சகம்; கையன்-வஞ்சகமுடையவன. என் - வினைப்பெயர்.

> "அனனதவன கூறலுமே அன்றுமனக் கௌசிகன்தான்
> கொனனும் வசிட்டாவிக சோபதிமுன்—எங்கும்
> புலலனைப் பொயயுரைக்கும் பூரியனைப் பாதகனை
> நலலா னெனநவின்ற தெங்" (அ - வெ).

19. (இ-ள்) (அதுகேட்ட வசிட்டமுனிவர்), தீ-தீயனவான, வெம்-வெவ்விய, தொழில் - செய்கைகள் ஒன்றும், இன்றி - இல்லாமல், ஒப்பற்ற - (நற்செய்கைகளாலே) நிகரில்லாத, செவ்வி - செம்மைக்குணத்தையுடைய, மெய்யோனை - மெய்யனான அரிச்சந்திரனைக்குறித்து, (உம்முடைய), காய் - கோபிக்கின்ற, வெம்- வெவ்விய, திறல் - பலத்தைக்கொண்டு, இவை - இப்படிப்பட்ட வார்த்தைகளை, கூறிய - சொன்ன, கௌசிகா - கௌசிக முனிவரே! நின்வாய் - (இப்படிச்சொல்லுகின்ற) உம்முடையவாயும், வெந்திலை - வேவாதிருக்கிறீர்: நின்மனம் - உம்முடைய மனமும், வெந்திலை - வேவாதிருக்கிறீர்: வம்பு- (இப்படி) வீணனவார்த்தைகளை, சொன்ன - சொன்ன, நீ - நீரும், வெந்திலை - வேவாதிருக்கிறீர். (வேகச்செய்யாதிருக்கிறதினாலே), தெய்வமும் - தெய்வமும், நின்வயின் - உம்முடனே கூடிக்கொண்டு, பொய்த்தது - பொய்யாயிருக்கின்றது, என்றான் - என்று சொன்னார்.

Vasishta who heard such blasphemous language used by Visvamitra, exclaimed "Oh,, Kousika you have in the heat of excited temper uttered such insolent and insulting words about Harichandra, whose life is pure and unblemished, whose mind is full of amiable traits. Your tongue has not been burnt for having uttered such flagitious words, your body has not been reduced to ashes for such base and vile calumny Nor has your mind been pricked with feelings of remorse for having admitted such impious thought; alas, is it come to this; is there no god to send, just retribution to a wicked mortal "

(கு-து) (இப்படிக்கென்று சொன்ன விசுவாமித்திரரைப்பார்த்து) வசிஷ்டர் "ஓ கௌசிகமுனிவரே! துர்க்கிருத்தியங்களில்லாமல் நிரந்தரமான சகுணங்கள்பொருந்திய அரிச்சந்திரனை நீர் உம்முடைய கோபபலத்தினாலேஇப்படிக் கெல்லாம்நிந்தனை செய்தீரே. அவைகளை எடுத்துச்சொன்ன உம்முடையவாயும் வேவவில்லையே: சொல்ல நினைத்த உம்முடையமனமும் வேவவில்லையே: இப்படிப்பட்ட வம்புவார்த்தைகளைப்பேசிய நீரும் வேவவில்லையே. ஐயோ உம்முடைய விஷயத்திலே தெய்வமும்பொய்யாகிவிட்டதே" என்று சொன்னார் என்பதாம்.

தெய்வம் நின்வயிற் பொய்யாதாயின் நீ இன்னே சாம்பராவாய் என்றுபொருள் என்க. காய் - வினைத்தொகை வினை. இவை - மேற்கூறிய வெய்யசொற்களை. வெந்திலை - இறந்தகாலத்தில் வந்த எதிர்மறை முன்னிலை ஒருமை வினைமுற்று (வே + த் + த் + இல் + ஐ முறையே பகுதி, சந்தி, இறந்தகால இடைநிலை, எதிர்மறை இடைநிலை, முன்னிலை ஒருமை விகுதி எனக. நீ என்னும் முன்னிலை ஒருமைப்பெயர் உருபேற்றமையின் நின் எனத்திரிந்தது. சொன்ன - சொல் - பகுதி, னகரம் இறந்தகாலஇடைநிலை. வயின் - ஏழனுருபு. என்றான் - சொல்லெச்சம்: என்று சொன்னான் என்பது பொருளாதலின்.

"என்றான் மறைவசிட்ட னீள்முறு செய்கைகுணம்
துன்றாத தூயோனைச் சாலஇகழ்ந்—தின்றும்
கோசிகவாய் வெந்திலையே கோன்புகல்நீ வெந்திலையே
யேசிதெய்வம பொய்த்ததன்பா லென்று" (அ - வெ).

20. (இ-ள்) தெய்வந்தனை - (அப்படித்)தெய்வத்தை, நொந்து - நொந்துகொண்டு, வசிட்டன் - வசிஷ்டமுனிவர், இச்செய்தி - இவ்விதங்களை, செப்ப - சொல்லவே; கொடுந்தொழில் - கொடுஞ்செய்கையே, கைவந்த - கைகூடி,

லான, கௌசிகன் - விசுவாமித்திரர், கன்றிநோக்கி - கோபித்துப்பார்த்து, பொய்வந்த - பொய்வார்த்தைகளைச்சொன்ன, நின்-உம்முடைய,வாய்-வாயானது, புழுவாகுதலன்றி-புழுத்துச்சிந்துமேயல்லது, பொய்யா - பொய்சொல்லாமல், மெய்வந்த-மெய்யேபேசுவதான, என்-என்னுடைய, வாய் - வாயும், மனம் - மனமும, வேவல - வேவமாட்டா, என்று சொன்னான்-என்றுசொன்னார்.

When Vasishta was expressing his want of confidence in the impartial administration of justice by the Almighty, Visvamitra who was hardened in the perpetration of wicked and cruel deeds, grew indignant, and said "Oh Vasishta you have uttered a base lie, and your mouth will become a bed of worms; my tongue and my mind shall not be affected, in as much as I have spoken the truth and nothing but the truth."

(க-து) இங்ஙனமாகத் தெய்வத்தை நொந்துகொண்டு வசிஷ்டர் இந்தச்செய்தியைச்சொன்னவளவிலே கொடுமையில் தானே கைதேர்ந்த விசுவாமித்திரர் கோபித்துப்பார்த்து "வசிஷ்டரே! பொய்பேசிய உம்முடைய வாய் புழுப் புழுப்பதல்லாமல் மெயபேசிய என்வாயும் என்மனமும்வேவமாட்டா" என்று சொன்னார் என்பதாம்.

பொய்யா - ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். கைவந்த - தெரிநிலை பெயரெச்சம் (கைவா - பகுதி.) வே - முதனிலைத் தொழிற்பெயர். அல - எதிர்மறைப்பலவின்படர்க்கைக் குறிப்புவினைமுற்று. வசிட்டன்-வசிஷ்டன்-ஞானமுடையவன்.

> "செப்பிடவம் மாற்றம் செவிசுடலும் கௌசிகன்தான்
> தப்பியம்புன் வாயே தவப்புழுக்கும்—எப்பொழுதும்
> மெய்கழறென் வாய்மனமும் வேவலகாண் எனறறைந்தான்
> வெய்தழல்போல் சேந்து விழி" (அ - வெ.)
>
> (மூலபாடவசனம் பார்க்க.)

சூழ்வினைக்காண்டம்.

விசுவாமித்திரமுனிவர் அரிச்சந்திரன் விஷயத்திற்செய்த சூழ்ச்சியையுணர்த்தும் காண்டம். சூழ்வினை-சூழ்ச்சி - ஆலோசனை-உபாயம்: Schewing ஒருசொல்லாகக்கொள்க.

21. (இ-ள்) வள்ளல் என்று-நீர் கொடுக்கும் பிரபு என்றெண்ணி,அடைந்தோம் - உம்மிடம் வந்தோம்: உன்பால்-உம்மிடம், வந்து-வந்து, இரந்தோர்க்கு - யாசகஞ்செய்தவர்களுக்கு, ஒன்று - யாதொருபொருளையும், ஈயா-கொடாத,கள்ளன் என்று-வஞ்சகனென்று, அறிந்தால் - நாங்கள் முன்னமே தெரிந்திருந்தால், இங்கு இங்கே, வருகிலம் - வரமாட்டோம், என்றார் - என்று சொன்னார்கள்.(அதைக்கேட்டு, வேந்தன-அரசனையன், வினைவது தன்னை - இனிநடக்கப்போகிறதை, ஓரான-தெரியாதவனாகி, உள்ளமும-மனமும், கண்ணும்-கண்களும், செந்தீ சிவந்தநெருப்பு, உருத்து - கொதித்து, எழ - தோன்ற, சினந்து-கோபங்கொண்டு, தள்ளும்என்று-இவ்விருவரையும் தள்ளிவிடுங்கள் என்று. அருளிச்செய்தான் - உத்தரவுசெய்தான். கண்டாய் முன்னிலையசை.

Two damsels who approached the king for relief, said, "Oh King, we sought you for help, as we were told, you were free and unstinted in your charities ; but had we known beforehand that you were a miser at heart, we would not have given ourselves this trouble." The king's anger was roused to the highest pitch, his eyes flashed fire, and unmindful of the future consequences, ordered them to be summarily ejected.

(க-து) ஈசமாதர்கள் அரசனைப்பார்த்து "ஐயா! உம்மைத்தியாகி என்றெண்ணி உம்மிடம் வந்தோம். யாசகர்க்குக் கொடாதவஞ்சகனென்று தெரிந்திருந்தால் உம்மிடம் வந்திருக்கமாட்டோம" என்று சொன்னார்கள். அதைக் கேட்ட அரசன் இனிமேல நடக்கப்போகிறதை அறியாதவனாய் அவர்களை வெளியில பிடித்துத்தள்ளும்படி உத்தரவு செய்தான் என்பதாம்.

ஒன்று வரையறைப் பண்பாகுபெயராய்ப் பொருளின்மேல்நின்றது. இதன் ஈற்றில் இழிவு சிறப்பும்மை தொகுததல். ஈயா-ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். ஈறுகெடாதாயின ஈயாத எனவரும். வருகலம்-எதிர்மறைத்தன்மைப் பன்மை வினைமுற்று. (வா+ரு+கு+அல்+அம்) முறையே பகுதி, விரித்தல், சாரியை, எதிர்மறைஇடைநிலை, தன்மைப்பன்மைவிகுதி எனவும், பகுதிகுறுக்கல் ெற்றதெனவுங் கூறுக. விளைவது-எதிர்கால ஒன்றன்படர்க்கைவினையாலணையும் பெயர். ஓரான்- இவ்வெதிர்மறை வினைமுற்று வினையெச்சப் பொருள் பயந்துநின்றது. "வினைமுறறே வினையெச்சமாகலும் &" என்னும் விதிகாண்க. (ந - சூ - 351.)

"வள்ளலென யாமடைந்தேம் வந்திரப்போர்க் கொன்றீயாக்
கள்ளனெனக்கண்டால் வருகலமென் —றள்ளிலைவேல்
கணணார் புகன்றார் கதமடைந்து தள்ளுமென்றான
மன்னனும் வேந்தன் மனதது" (அ - வெ.)

22. (இ-ள்) பார்த்திபன்-அரசன், உரைப்ப-அப்படி உத்தரவு செய்ய, கேட்டு - அதைக்கேட்டவுடனே, பப்பரர் - பப்பர் எனனப்பட்ட வீரர்கள், நெருங்கி - நெருங்கிவந்து, சீறி - கோபித்து, திகிரள் - நெருப்புப்பொறிகள், செஙகண் - சிவந்தகண்களில் நின்றும், சிந்த சிந்த, தூக்குவான் - (அவவிருவரையும்) தள்ளிவிடுவதற்கு, செல்ல - வருகிறதைக்கணட வளவிலே, (அவ்விருவரும்), ஏங்கி - ஏக்கமுற்று, காத்திரம் - உடம்பெல்லாம், நடுங்க - நடுங்கவும், கையும - கைகளும், கால்களும் - கால்களும், நடுங்க-நடுங்கவும, மார்பில்- மார்பிலே, சேர்த்திய - அணைத்திருந்த, யாழும - வீணையினையும், போகட்டு- அங்கேதானே கிடக்கவிட்டு, திசை மயங்கி-திக்குத தெரியாமல், இரிந்தனர்- ஓடிப்போனார்கள்.

When the waiting men rushed forth with fiery eyes to carry out the orders of the king, the women were frightened out of their wits, and with trembling hands and legs, rushed, they knew not where, dropping the guitars that rested on their bosoms.

(கு-து) ஈசமாதர்களைப் பிடித்துத்தள்ளும்படி அரசன்செய்த உத்தரவைக்கேட்ட பப்பரர்கள்கோபாக்கிராந்தர்களாய் அவர்களைப்பிடித்துதள்ளும்படி சென்றவளவிலே, அந்தமாதர்களிருவரும் ஏக்கங்கொண்டு உடலும் கைகால்களும் நடுநடுங்க மார்பில் சார்த்தியிருந்த யாழையும் கீழ்போகவிட்டுத் திசை தெரியாமல் ஓடிப்போய் விட்டார்கள் என்பதாம.

பார்த்திபன் - பூமிக்குரியவன் : அரசன். (பார்த்திபம்-ப்ருதிவி சம்பந்த முடையது - பூமி) : **பப்பரர்** - பப்பரதேசத்தார். **நூக்குவான்** - செய்வான் என்னுமவாய்பாட்டு வினையெச்சம்: வான்-எச்சவிகுதி செல்ல-இச்செயவெனெச்சம் காரணப்பொருளது. **சேர்ந்திய**-இறந்தகாலப்பெயரெச்சம: (சேர் + த் + து + இன் + ய் + அ) எனப்பிரிக்க. **போகட்டு** - போகவிட்டு.

"சேகயமன் ஞர்தம்மைக் கிங்கரர்தன் காறுமலும்
தேககடுங்கியவா செங்கையின்யாழ் - போகவிட்டு
நண்ணரிய காட்டோடி நனகுதிர முட்கீறும்
புண்ணெழுக நெஞ்சழிந்து போந்து" (அ - வெ).

23. (இ-ள்) ஆறுகொண்டு - வழிநோக்கி, ஓடார் - செல்லாதவர்களாய், செல்லா-ஒருவரும்போகாத, அடவியில்-காட்டுவழியில், சென்று - போய், மேனி - உடம்பெல்லாம், மாறுகொண்டு - முட்களகிழிந்தது, உதிரம்-இரத்தம். சிந்த - ஒழுகவும் ; மஞ்சினை - மேகத்தை, பழித்த-பழிப்பதான, கூந்தல் - தலைமயிரை, தூறு-மரத்தூறுகளும் செடித்தூறுகளும், கொண்டு ஈர்க்க - பற்றியிழுக்கவும், சேர்த்த - உடுத்தின, துகில்-வஸ்திரமும், கிழிந்து அகல - கிழிந்துபோகவும்; சாபம் - சாபாநுக்கிரகமாகிய, வீறுகொண்டு - பெருமையைக் கொண்டு, எவிவிட்ட - தங்களையனுப்பிவிட்ட, முனிவன்முன் - விசுவாமித்திரமுனிவரெதிரிலே, வந்து வீழ்ந்தார் - வந்து விழுந்தார்கள்.

The women ran astray into a forest, their bodies bleeding profusely as they had to cross through thickets of brambles and prickly plants, their dark dishevelled tresses were caught in the maze of branches and twigs, their attire was torn to pieces, and in that plight threw themselves prostrate at Visvamitra's feet.

(க-து) அந்த ஸ்திரீகள் போகவேண்டிய வழியைவிட்டுக் காட்டுவழியிலே விழுந்தோடி மேனியெல்லாம் முட்களால் கிழிபட்டு இரத்தஞ் சிந்தவும், தலைமயிரைமரத்தூறுகளும் செடித்தூறுகளும் பற்றியிழுக்கவும், கட்டியிருந்த வஸ்திரமும் கிழிந்துபோகவும் வந்து விசுவாமித்திர முனிவரெதிரிலே விழுந்தார்கள் என்பதாம்.

உதிரம் - blood - உதரம் - belly மஞ்சினைப்பழித்த கூந்தல் என்பது கூந்தலானது கருமை நிறத்தால் மேகத்தினு மிகவிருப்பது என்பது. **தூறு** - கூட்டம் - சிலும்பல். சாபம் - தட்டுதல். முனிவன் - இதனை வடமொழி முநி என்பதன் திரிசயமென்பர் சிலர். முனிதல்-வெறுத்தல்: ஆசாபாசங்களை வெறுத்தவர் எனக்காரணங்காட்டி இதனைத் தமிழ்மொழி என்பர் சிலர். நெடிற்றொடாக குற்றுகரமொழிகளாகிய ஆறு முதலிய எதுகை நான்கனுள் முதலனும் இறுதியனும் 'நெடிலோடுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் &' (ந - சூ-183) எனனும் விதியில் 'மிகவேற்றுமை இரட்டும்' என்பதனுல் சிறுபான்மை வேற்றுமையில் டகர றகரவொற்று இரட்டாமையும்; இடைநின்றமற்றைய இரண்டும் அல்வழியாகலின பெரும்பான்மை இரட்டாமையும் அறிக. ஆறு - வீறு-எனபன இரண்டாம் வேற்றுமைப்பெயராகலின் இயல்பின விகாரமும் விகாரத்தியல்பும் &" என்னும் விதியான் விகாரத்தியல்பும்; ஏனை யிரண்டும "வன்றொடரல்லனமுன்மிகா வல்வழி" (ந - சூ - 181) என்னும் விதியான் அல்வழியில் இயல்புமாயின வென்க.

24. (இ-ள்) மண்டலந்தனில்-பூமியிலே. இழுப்புண்ட-இழுபடுகிற, செந்துகிலகளும் சிவந்த வஸ்திரங்களையும்; மாறடித்த-முட்களாலேகாயமான

புண்டனிவ் – புண்ணனிலேநின்று, பொழி - சிந்துகின்ற, பசும்குருதியும்-பச்சை இரத்தத்தையும்; துவர் - சிவப்பான, இதழ் - உதடுகள், பொருமலும் - வீங்கியிருத்தலையும்; தான் - தாமே, கண்டனன் - தம்முடைய கண்களாலே கண்டனர் (அப்படிக்கண்டவளவிலே), கௌசிகன - விசுவாமித்திரர், கடையுகம் - யுகமுடிவிலே தோன்றுகின்ற, கனலென - நெருப்பைப்போல, கடிய - கடுமையான, கோபம் - கோபத்தை, கொண்டனன் - கொண்டவராய், வந்தவாறு - நீங்கள் இப்படி வந்ததற்குக் காரணம், ஏது என- என்னவென்றுகேட்க, கோதைமார் - அந்தப்பெண்கள், கூறலுற்றார் - சொல்லத் தொடங்கினார்கள்.

Visvamitra, when he saw the women with their crimson dress trailing behind them, with fresh blood gushing out of the wounded body, with swollen lips, his face and eyes emitted red-hot flames such as would appear on the destruction of the world. He asked the damsels what had reduced them to that unseemly plight.

(க-து) தரையிலே இழுபடுகின்ற வஸ்திரமும் முட்களால் காயப்பட்ட புண்களிலிருந்து ஒழுகும் பச்சை இரத்தமும் உதடுகள் பொருமுதலான கோலத்துடனே வந்தபெண்களைப்பார்த்த விசுவாமித்திரர் ஊழித் தீயைப்போலக் கோபங்கொண்டவராய் "நீங்கள் இந்தக்கோலமாய் வரக்காரணமென்ன" என்றுகேட்க அந்தப்பெண்கள் சொல்லத்தொடங்கினர் என்பதாம்.

மண்டலம் = மண் + தலம் = மண்ணாகியஇடம் = தரை "மாரடித்த புண்" என்றும்பாடம்; மாரபிலேகாயமான புண் என்பது பொருளாம். மாறுமிலாறு - வளார். பசுங்குருதி - அப்பொழுது ஒழுகுகின்ற ரத்தம். துவர் - பவளம்; துவரிதழ் - பவளம்போன்ற இதழ் என்பதுமாம். கடிய - பண்படியாகப் பிறந்தகுறிப்புப் பெயரெச்சம்: கடுமை - பகுதி, "ஈறுபோதல்" என்பதனல் மைகெட்டு, "இடையுகரம் இய்யாதல்" என்பதனுல உகரம் இகரமாகத்திரிந்து, "இ ஈ ஐ வழியவ்வும்" என்பதனல் யகரஉடம்படுமெய்பெற்று அதனமீது பெயரெச்ச அகரவிகுதி ஏறிக கடியஎனநின்றது. கொண்டனன் - முற்றெச்சம். கோதைமார் - மார் - பலர்பாலவிகுதி.

25. (இ-ள்) ஐய - ஐயனே ! கேள்-கேளும், நின் -உம்முடைய, அருட்படியினுல் - உத்தரவின்படியே, அரசன்மாட்டு - அரசனிடம், அணுகி - கிட்டி, நின்று - நின்றுகொண்டு, பைய - மெதுவாக, ஏழ் இசைகளும்-ஏழ்விதமான இசைகளையும, பாடி - பாடி, நீ - தேவரீர், சொன்ன - கேட்கச்சொன்ன, அப்பரிசு - அந்தபபிரகாரமே, உரைத்தேம் - கேட்டோம். (அதற்கு), கையன் - அந்த வஞ்சகன், எங்களை-எங்களை,உமர் என-உம்மடியாரென்று,அடித்து-அடித்து, செய்த-அவன் பண்ணின, அ-அந்த, கண்டனத்தால-கண்டனைக்கு, உய்டைம் போதுமோ - தப்பிப்பிழைக்கவுங் கூடுமோ ? உரையும் உண்டோ - சொல்லத்தான் சொல்லுண்டா ? எமக்கு - எங்களுக்கு, உயிரும் உண்டோ - உயிர்தான் உண்டா ?

The damsels said "Reverend Sir, in accordance with your direction, we sought the presence of the king, sung in soft, melodious airs the seven sounds of the diatonic scale, and asked for reward, just as we were instructed by you. When lo, he flared up, and it would be impossible to escape the punishment he purled on us ; words cannot adequately express its horror ; no, our life has been taken out of us

(க-து) ஐயனேகேளும்! உங்களுடைய அருளப் பாட்டின்படியே அந்த அரசனிடஞ் சென்றடைந்து எழிசைகளையும் பாடி நீர் கேட்கச்சொன்ன பிரகாரமே வெகுமதிகேட்டோம். அதற்கு அந்த வஞ்சகன் எங்களை அடித்துச்செய்த கண்டனைக்குத் தப்பிப்பிழைக்கவும் கூடுமோ? அதைவாய்திறந்து சொல்லலாமென்றால் அதற்கேற்ற சொல்தானுண்டா? ஐயோ எங்களுக்கு உயிர்தானுண்டோ? என்று அந்தப்பெண்கள் சொல்லினர் என்பதாம்.

ஏழிசை - எழ்சுரம் - seven sounds of the diatonic scale, c e ச, ரி, க, ம, ப, த, நி. குரல்-துத்தம் - கைக்கிளை - உழை - இளி - விளரி - தாரம்: எனக்கூறலுமாம். பரிசு-வெகுமதிஎனவும் பொருளபடுதலால், "நீர் சொன்னவப்பரிசுரைத்தேம்" என்பதற்கு நீர் கேட்கச்சொன்ன வெகுமதியைச் சொன்னேம் என்றுபொருள் சொல்லலாம். அவர்சொன்ன வெகுமதியாவது "வெற்றிக்குடையினைக் கொண்மின் அல்லால் கலவியைக் கொண்மின்" என்றது. உமர் - உம்மவர் - உம்மடியவர்: "தான்தாம் நாம் முதல்குறுகும் &" (ந - ஆ - 247) எனனும் விதியில் 'பிற' என்ற மிகையால் நீர் - என்னும் முன்னிலைப்பெயர் வேற்றுமை ஏற்கும்போது உம் எனதிரியும். ஐய - அண்மை விளி: "அண்மையினியல்பும் ஈறழிவும் &" (ந-சு - 313) என்பதனால் னகர வீறுகெட்டது: ஐயன் - முதலவேற்றுமை. உரைத்தேம - ஏம்-தன்மைப்பன்மை விகுதி. உயிர்-முதனிலைத் தொழிற்பெயர்: ஆகுபெயராய்ப் பிராணனை உணர்த்திற்று. (உயிர் உயிர்த்தல - சுவாசித்தல்).

26. (இ-ள்) என உரைத்திட - என்று சொல்லவே, வெயர்த்து - உடம்பெல்லாம் வேர்வைகொண்டு, இடிஇடித்தென - இடிமுழங்கினாற்போல, நகைத்து - சிரித்து, இருகண்ணிலும் - இரண்டுகண்களிலும, கனல் - நெருப்பு, தெறித்து-சிந்துதலாய், இருபுடை - இரண்டுபக்கத்திலுமுள்ள, கடம் - காடு, அனைத்தும்-எல்லாம், புகை-புகையானது, எழுந்து நெருங்கி, மூட - மண்ட, சினம்-கோபம், மிகுத்து-அதிகமாக, (இனி) இறைவனுக்கு-அரசனுக்கு, இடர்-துன்பத்தை, விளைத்திடுவதே - செய்கிறதே, செயல-செய்யத்தக்க காரியம், என-என்று, தன் - தம்முடைய, மனம் - மனதில், நினைந்து - ஆலோசித்துக் கொண்டு, அரு - அருமையான, மறை - வைதிக ஒழுக்கமுடைய, தவமுனித்திரள் - தவமுனிக்கூட்டங்கள், உடன்வர - கூடவர, நடந்தான் - நடந்தார்.

Visvamitra, on hearing such report from the damsels, burst forth into a peal of laughter, his ire was up, and eyes glowing fiery red, emitted such fearful flames as to reduce the forests round, to ashes. He then thought the proper course was, to get the king into a scrape, and accordingly left the place with a host of sages.

(க-து) அந்தப்பெண்கள் சொன்னவார்த்தையைக் கேட்டவுடனே இடியிடித்தாற்போல நகைத்து, இரண்டுகண்களிலும் நெருப்புசிந்துதலாய் இரண்டுபக்கத்திலும் காடெல்லாம் புகைநெருங்கி மண்டும்படியாகக் கோபமதிகரித்து விசுவாமித்திரர் இனி அரசனுக்குத் துன்பம் விளைப்பதே செய்யத்தக்ககாரியமென்றுகொண்டு தவமுனிவர் கூட்டத்துடனே நடந்தார் என்பதாம்.

உரைத்திட - (உரை+த்+த்+இடு+அ) த் - சாரியை, இடு - பகுதிப்பொருள் விகுதி. "இடியிடித்தெனநகைத்து" - இங்ஙனஞ் சிரிப்பதைவெடிசிரிப்பென்பர் நச்சினார்க்கினியர். புகை - புகப்படுவது என்னும் பொருளில் புகு-பகுதி, உகரக்கேடுசந்தி, ஐ- செயப்படுபொருண்மை விகுதி: தொழிலடியாகப் பிறந்தபெயர்

27. (இ-ள்) கரதலத்திடும் - கையிலே கொண்ட, எழில் - அழகிதான, குசை-தருப்பையைப் புல்லும், விதிர்ப்பு உற-படபடவென்று நடுங்கவும்; இணை-இரண்டு, கழல் - கால்கள், வருந்த - வருந்தவும்; பரவு பரவுதலாய், பொன்-பொன் நிறமான, தடம் - நீட்சியுள்ள, மலர் - மலரணிந்த, சடை-சடைகளை, விரித்து - விரித்துக்கொண்டு, அகல - போகிற, பெரும் - பெரிதான, படியினால - உருவத்தைக்கண்டதினாலே, அ - அந்த, சுரர் - தேவர்கள், மிக - மிகவும், பரிதவித்து - பரிதவித்து, அபயமிட்டு - அபயஞ்சொல்லி, அலறிட - கூக்குரலிடவும், சுவணவெற்பால்-பொன்மலையினாலே, புரம்-திரிபுரத்தை, எரித்திட - எரிக்க, வரும - வருகிற, புனிதன-பரமசிவனை, ஒத்து - ஒப்பாகி, அணி - அழகிதான, மலர்பொய்கை - அந்தப்பூந்தடாகக்கரைக்கு, புக்கான் - வந்தார்.

When Visvamitra, with the sacred grass quivering in his hands and with fatigued legs, reached the lily-grown tank, like Siva when he reached the city of Tirupuram to reduce it to ashes, the gods screamed in terror, and fled for refuge in all directions.

(கு-து) கையிற்கொண்ட தருப்பையும் நடுங்கவும், இரண்டுகால்கள் வருந்தவும், சடைவிரிந்தோராமாய்ச்செல்கின்ற பெரிய உருவத்தைக்கண்டதனாலே தேவர்களும், அச்சங்கொண்டு அபயஸ்தானந்தேடிக்கூக்குரலிடவும், விசுவாமித்திரமுனிவர், திரிபுரசங்காரஞ்செய்யச்செல்லும் சிவபெருமானைப்போலே, அழகிதான அந்தப்பூந்தடாகக்கரையைச் சென்றடைந்தார் என்பதாம்.

புனிதன் - பரிசுத்தமானவன். புனிதம் - பரிசுத்தம். சுரர் (சு-செவ்வையாக, ர - பிரகாசிப்பவர்) தேவர். opposite அசுரர். அபயமிடுதலாவது - பயமில்லாமலிருக்க இடங்கிடைக்குமோ என்று கூவிச்சொல்லுதல். சுவணம் - S. ஸ்வர்ணம். கரதலம் - கரம்+தலம் - கையாகிய இடம். விதிர்ப்பு - தொழிற்பெயர்; பு-தொழிற்பெயர் விகுதி.

புனிதன் சுவணவெற்பால் புரமெரித்த சரித்திரம்:—

செம்பொன் வெண்பொன் கரும்பொன் ஆகிய வுலோகங்களால் நிருமிக்கப்பட்டு முப்புரங்களென்னும் பெயர்வாய்ந்த கோட்டைகளிலேவதிந்திருந்த தாருகாக்ஷன் கமலாக்ஷன் வித்யுன்மாலி முதலிய அசுரர்கள் தேவர்களுக்குப் பல இடுக்கண்செய்து வந்தமையால் அத்தேவர்கள் ஆறுமுருபாயவெல்லோருமொருங்குகூடித் திருக்கைலாசத்திற்குச்சென்று சிவபெருமான் ஸ்ரீபாதகமலங்களைத் தொழுது அஞ்சலிபத்தராய் "ஸ்ரீகைலாசபதி! மஹாதேவா; எம்பெருமானே!" என்று பலவாறு துதித்து "திரிபுரவாசிகளாகிய அசுரர்கள் எங்களுக்குப் பல இடுக்கண்செய்து வருகின்றமையால் அவர்களையழித்து அடியோங்களைக்காத்தருள்க" என்று வேண்டிக்கொள்ள அவ்வேண்டுகோளிணங்கிய பரமபதியாகிய தயாநிதி திருவுளமிரங்கி பூமியைத் தேராகவும், சந்திரசூரியர்களை அத்தேரின் இரண்டு உருளைகளாகவும், நான்கு வேதங்களும் அத்தேரிற் பூட்டும் நான்கு குதிரைகளாகவும், பிரமனைத் தேர்ச்சாரதியாகவும், சுவணவெற்பு (பொன்மலை i. e. மேருமலை) வில்லாகவும், ஆதிசேஷன் அவ்வில்லின் நாணியாகவும், மாயோனை பாணமாகவும் மறைந்த தேவர்களெல்லோரும் போர்க்குரிய ஏனைய அங்கங்களாகவும் கொண்டு அந்தத்தேரின்மீதுபோர்க்கோலமாய் எழுந்தருளி, அச்சுவணவில்லிலே அவனைத் தொடுத்து பாணப்பிரயோகஞ்செய்து அத்திரிபுரவாசிகளாகிய அசுரர்களினுறைவிடமழிந்து புனலவைசெய்தனர்; அப்பொழுதே முப்புரங்களும் அவற்றிலவதித்திருந்த அசுரர்களுடனெரிந்து நீறாயின என்பதாம்.

கருமிடற்றவன் - திருப்பாற் கடலைக் கடையா நிற்கையில், அதில் நின்றும் ஆலகாலவிஷம் உண்டாகவே தேவர்களும் அசுரர்களும் அச்சங்கொண்டு ஓட்டெடுத்தனர்: அப்போது சிவபெருமான் அவர்களை அஞ்ச வேண்டாமென்று சொல்லி விஷத்தை உட்கொண்டார். உடனே பார்வதி தேவியார் அச்சங்கொண்டு விஷம் உள்ளிறங்காதபடி சிவபெருமானுடைய கழுத்தை இறுக்கிப்பிடிக்க விஷம் அங்கேயே தங்கி ஸ்தம்பித்து நின்றுவிட்டது: அந்த விஷம் கருநீலநிறமுடையதாதலால் அக்காரணம்பற்றிச் சிவபெருமானுக்கு நீலகண்டன் கருமிடற்றண்ணல் (மிடறு - கழுத்து) எனப்பெயர் வழங்கலாயிற்றென்பார் புராணநூலுடையார். விஷ்ணுவானவர் கருநிறமுடையவரென்றும் அவருடைய இராமகிருஷ்ணாதி அவதாரங்களும் அந்நிறமேயென்றுங் கூறுவர்: அதனால் அவனைக்கார (மேக) நிறவண்ணனென்றும் கடல்நிறவண்ணனென்றும் காயாம்பூமேனியனென்றும் வழங்குவர். கமலன் - மகாபிரளயகாலத்திலே திருமால் திருப்பாற்கடலில் வடபத்திரசாயியாய் யோகநித்திரைபொருந்தி யிருக்கையில் அவருடைய உந்திக்கமலம் (கொப்பூழ்) பூத்ததென்றும் அதில் நின்றும் உதித்தான் பிரமனென்றுங்கூறுவாதலின் பிரமனுக்குக் கமலன் என்றொருபெயர் வழங்கலாயிற்று. ஏற்று - ஏகுதல் உற்று - ஏகல் உற்று. நழீஇ - இறந்தகால வினையெச்சம்; சொல்லிசை யளபெடை. நிலத்திடை - இடை - ஏழனுருபு.

31. (இ-ள்) கரம் - தனது இரண்டுகைகளும், உற - பொருந்த, தழுவலும் - பற்றிக்கொண்டுகிடக்குமளவில், கௌசிகப்பெயரினன் - கௌசிகரென்னும்பெயரையுடைய விசுவாமித்திரர், கால் - தம்முடையகால்களை, பறித்து - உதறிப் பிடுங்கிக்கொண்டு, சிரமிசை - அவன்தலைமேல் அணிந்த, திருமுடி - திருமுடியான கிரீடத்திலே, சுடர - விளங்குகின்ற, மணிகள்தொகைகள் - இரத்தினக்கூட்டங்கள், பஃறிசை - பலதிக்குகளிலும், தெறிக்க - தெறித்துவிழவும்; உரமிசை - மார்பின்மேல் அணிந்த, பணி - ஆபரணங்கள், தெறித்திட - தெறித்துவிழவும், உதைத்தனன் - உதைத்தார். உதைத்திடலும் - அவர் அப்படி உதைத்தபோதும், உன்தன - தேவரீருடைய, மரு - மணங்கொண்ட, மலர் - மலர்போலும், கழல - பாதங்கள், சிவப்புறும - சிவப்புறுமே, என - என்று, கைகளால - தன்கைகளாலே, வருடல்உற்றான் - தடவிப்பிடித்தான், ஏ - அசை.

When with his body prostrate before Visvamitra, Harichandra was holding his feet with his hands, the former forcibly pulling and lifting up his leg, dealt a stunning kick with all his might, which scattered about the gems set in his crown, and the jewels he had on his breast. Harichandra on receiving the kick, gently rubbed and pressed Visvamitra's feet, lest they should have been hurt in the operation.

(க-து) அரிச்சந்திர மகாராசன் விசுவாமித்திரருடைய திருவடிகளைக் கைகளாற் பற்றிக்கொண்டு நமஸ்கரித்துக்கிடக்கையில், அம்முனிவர் தம்முடைய கால்களை உதறிப்பிடுங்கிக்கொண்டு அரசனுடைய கிரீடத்திலேயுள்ள இரத்தினங்களும் அவன்மார்பிலணிந்திருந்த ஆபரணங்களும் தெறித்துச்சிதறும்படியாக உதைத்தனர். அப்படி உதைக்கும்போது ஐயோ உம்முடைய திருவடிகள் சிவந்துபோகுமே என்றுசொல்லி அரிச்சந்திரன் அவருடைய திருவடிகளைமெல்லத்தடவிப்பிடித்தான் என்பதாம்.

ஏகசக்கராதிபதியானவனுடைய முடியாதலால் திரு என அடைகொடுத்துக்கூறினர். "அரிச்சந்திரனென்முசுகுந்தன் புரூரவாச் - சகரன்காகுத்த

வீரியனென்றிவர் — அறுவகைச்சக்கரவர்த்திகளென்ப. பன்னிருதிசை-(பல+திசை) "குறில்வழி லளத்தவ்வணையின் ..." (ந-சூ 228) என்னும் விதியான் பண்புத் தொகைச்சந்தியில் லகரம் [illegible] திரிந்தது. ஏறு-செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்.

32 (இ-ள்) உன்கத்து உபகத்து, குடியாய் குடியாய், கிரமிடை-கிரமவி லே, [illegible] உபகத்து அடிமையில் [illegible] குற்றமுமில்லை, [illegible] தோப, [illegible] அடி உடைய [illegible] [illegible] [illegible] என்ன? மொழிந்து சொல்லுக, என்றான்-என்று சொன்னான்.

Harichandra then respectfully begged of Visvamitra to kindly vouchsafe to him the cause of this ebullition of spirit, assuring him "Oh Sire, as your humble subject and servant, I am not guilty of any neglect of duty what distresses my mind most is, not that my head would be bruised in your fire and repeated administration of kicks on it, but that your feet might be contused thereby.

(ஈ-நு) சுவாமி, உமக்குக் குடியாகும் முறையில் யாதொரு குற்றமுஞ் செய்யவில்லை, உமக்கு அடிமையாகிற முறையிலும் யாதொரு குறைவுமில்லை, தேவரீர் கோபித்தலால் என் தலை [illegible] புண்ணாகுமென்று வருந்தவில்லை; தேவரீர் கோபஞ்செய்த காரணத்தைச் சொல்லியருளும் என்றான் அரிச்சந்திரமகாராஜன் என்பதாம்.

இடைவிடாது என்னும் உதைத்த (இடைவிடாமல் Continually) என்றுமாம். [illegible] இப்படிச் சொல்லாதே [illegible] உண்டாகும் என்று பொருள் [illegible] பிறழ்தலும் இறந்தகால எதிர்மறைத்தன்மைப் பன்மை வினைமுற்று (பிழைக்கின்றிலம்) [illegible] முதலிய மாயினையுங் கூட்டி [illegible] ஐய ஆணைமைவிளி. மொழிதி மொழிப்பகுதி, [illegible] இ புணர்வில் ஒருமை ஏவல்விகுதி.

33 (இ-ள்) (அப்போது விசுவாமித்திரன் அரிச்சந்திரனைப் பார்த்து நானுடைய), மாவின்னை மிருகங்களிடை [illegible] செய்தாய் - கொன்றாய், கேழலுக்கு - பன்றிக்கும், இடர் துன்பம், [illegible] உண்டாக்கினை, வான - ஆகாயத்தை அளவும் - [illegible], காவினை இந்தச் சோலையையும், பொடிசெய்தாய் - அழித்துவிட்டாய், நீதிப்படி முறைப்படியே, [illegible] [illegible] [illegible] பக்கள் - பெண்களுடைய, பாவினை - [illegible] - இசைப்பாட்டை,(ஆசைப்பட்ட) தீவினைக்கு - பாவச்செய்கைக்கு, உரிய தகுதியுள்ள, ஓர் - ஒப்பற்ற, பாவ - பாவியாகிய, நீ - நீ, ஆவி [illegible] நலத்த [illegible] சோலை, [illegible] மூடிக்கொண்டு அடி - கொண்டுள்ள புல் புலியினது. தொழில் - செய்கையை, செய்தாய் - செய்தாய் அழித்து - உன்செய்கை கண்டாயிருந்தது, என்றான் - என்று சொன்னான். தான் - அசை.

Visvamitra thus made known the cause of his exasperation. "Harichandra, you injured the pigs I sent you, laid waste the forest that reaches up to the very vault of heavens, sneered the melodious strains of the damsels whom I had brought up, verily, you are a lion in a lamb's skin, your actions are simply exemplary"

(க-து) கோபங்கொண்ட காரணத்தைத் தெரிவிக்கும்படி கேட்ட அரிச்சந்திரமகாராஜனைப் பார்த்து விசுவாமித்திரர் "நானனுப்பிய மிருகங்களைக் கொன்றுவிட்டாய்; நானனுப்பிய பன்றிக்குத் துன்பஞ்செய்தாய், ஆகாயத்தை யளாவிய இந்தச் சோலையையும் பங்கம் பண்ணிவிட்டாய், நான் பெற்றெடுத்த பிரியப்பெண்களின் இசையைப் பழித்தாய் மகாபாபியாகிய நீ பசுவின் தோலைப் போர்த்துக்கொண்டு புலியின் றொழிலைச் செய்கிறாய். உன்னுடைய செய்கை வெகு நன்றாயிருந்தது" என்று சொன்னார் என்பதாம்.

ஆவின்றோல்போர்த்தபுலித்தொழில் செய்தவா றது-பார்வைக்குமகா சாதுபோலிருந்துகொண்டு துஷ்ட கிருத்தியங்களைச் செய்வதென்பதாம். அழகிதென்றன (Irony) மக்கள் - ஆண்பால் பெண்பாலகளுக்குப் பொதுவாகிய பலர்பாற்பெயர் ஈண்டு பெண்பன்மையை யுணர்த்திநின்றது. ஆடுபுலி - வினைத்தொகைநிலைத்தொடர்.

"மாக்களைமுன் கொன்றாய் வராகத்திற கூறுசெய்தாய்
பூக்குழலென் காதற் புதல்வியர்தம் - வாக்கிலெழும்
பாட்டைப் பழித்தாய் படுபாவி நீயென்றான்
கேட்டைக்குறித்தமுனி கேட்டு" (அ - வெ)

34. (இ-ள்) (அதற்கு) அரிச்சந்திரன் - அரிச்சந்திரமகாராஜன், நாடு - என்னுடைய நாட்டையெல்லாம், அழிக்கினும் - அழித்தாலும், நல - நல்ல, நகர - நகரமுழுவதையும், அழிக்கினும் அழித்தாலும் என - என்னுடைய, நறு - பரிமளமுள்ள மலர - புஷ்பங்கள் நிறைந்த, பூ - அழகிய, காடு - சோலைகளையெல்லாம், அழிக்கினும் அழித்தாலும் நீள - நீண்ட, கால - என்னுடைய வமிசம், அற - அற்றுப்போக, கிளையினை - உறவினரையெல்லாம், களையினும் - களைதல் செய்தாலும், (இன்னும்) ஈடு - என் பெருமைகளையெல்லாம், கொன்று - கொன்று, அழிக்கினும் கெடுத்தாலும், நீர் தான - தேவரீரே, விடுத்தன - அனுப்பினீர், என்று - என்று, யான - அடியேன், அறிந்தால் - தெரிந்திருப்பேனேயானால், பாடு - இப்படியான காரியத்தை, இழைக்கிடுவனோ - செய்வேனோ, என்று - என்று, பல - பலவகையும், மொழிந்தான - சொன்னான்.

Harichandra replied "Oh Sire, I was not aware they were sent by you. My Kingdom may go to ruins, my forests may run waste, my relatives may all be extirpated, all other things I may forfeit, but had I known they were sent by you, I dare not have treated them thus"

(க-து) அரிச்சந்திரன் முனிவரைப்பார்த்து "சுவாமீ! அவைகளெல்லாம் உங்களாலனுப்பப்பட்டன வென்னும் செய்தியை நானறியமாட்டேன். என்னுடைய நாடுநகரம் அழிந்தாலும் என்னுடைய சோலையழிந்தாலும் என்னுடைய வமிசத்தைச்சேர்ந்த சுற்றத்தினரெல்லாம் அடியோடழிந்தாலும் இன்னுமுள்ள வெல்லாமழிந்தாலும், அவைகள் உம்மால் அனுப்பப்பட்டன வென்று நான் தெரிந்திருப்பேனேயாகில் இப்படிச்செய்வேனோ" என்பதாகப் பலவிதகாரங்களை யெடுத்துச் சொன்னான் என்பதாம்.

அறிந்தால்—து - சாரியை, ஆல் - செயின்என்னும் வாய்பாடுபெற்றுவந்த வினையெச்சவிகுதி.

"நாடுநகர் பூம்பொழிலை நாசப்படுத்திடினு
மீடுடைய நீவிடுத்தா யென்றறிந்தா - னீடுகலை
தூய்விலஙுனை விட்டுவேறு தொல்வினையேன் செய்பிழையை
தாயைநிகர்த் தாய்பொறுச்சென்றான்." (அ - வெ).

35. (இ-ள்) தீமை-தீச்செயல்கள், சிறியரானவர்தமக்கு - (அறிவின்றிச்) சிறியராயிருப்பாருக்கு, உரியவேயல்லவோ-தகுதியானவையேயல்லவா? பொறை-(அத்தீச்செயல்களைப்)பொறுத்துக்கொள்வது, நன்னூல்-நல்ல சாஸ்திரங்களை, அறிஞரானவர் தமக்கு (அறிந்த) அறிவுடையவர்களுக்கு, (உரியவே) அல்லவோ-தகுதியானவையேயல்லவா (இவ்விருவகையும்)பிறர்க்காகுமோ- அவ்விருவகையாரைத்தவிர) வேறே யாரிடத்திலுண்டாகும் (இப்படியிருக்க) நெறியிலா-நீதிநெறியறிவில்லாத, வினையினேன் ஒரு வினை-ஒருபாபியான புல்லியனாகிய) என்னை, பொருளதா-ஒருபொருளாகமதித்து,நீ-நீர், முனிந்தால்-கோபங்கொள்வீரானால், பொறையும்-பொறுமையும், நின்னருளும் உம்மிடத்துள்ள இரக்கமும், எனளவிலோ-என்மட்டிலோ, இலவாக இல்லனவாக, போன-போயின, என்றான்-என்றுசொன்னான் (அரிச்சந்திரன்.) தான்-அசை.

Are not evil deeds those of illiterate fools? Is not patience the characteristic of wise persons well versed in good shastras? In whom else are these attributes to be found except in these two? (this being so) If you consider me (a sinner who has no knowledge of the path of rectitude) as worthy of your wrath, and grow angry with me, then your patience and sympathy have been of no avail with me

(க-து) தீமையானது இழிந்தவர்களுக்கு உரியது; பொறுமையானது கற்றறிந்தவர்களுக்கு உரியது. இவ்விருவகையும் முறையே இவ்விருவகையாரைத்தவிர மற்றவர்களிடம்பொருந்துவதில்லை. அப்படியிருக்க, கேவலமாகிய என்னை ஒருபொருளாக மதித்து நீர் என்மேல்கோபங்கொண்டால் உமக்குப் பொறுமையும் இரக்கமும் என்மட்டிலே இல்லனவாகப் போயின என்றான் என்பதாம்.

"நன்னூல் அறிஞரானவர்தமக்கல்லவோபொறை" - "அகழ்வாரைத்தாங்கு நிலம்போலத்தம்மை, யிகழ்வார்ப்பொறுத்தறலை" என்று நாயனாரும், "பெரியார்பெருநட்புக் கோடல்தாஞ்செய்த, அரியபொறுப்பவெனறன்றே" எனக்ஷமணமுனிவரும் கூறியவாறு காண்க. உரியவே என்பதை "அறிஞரானவர் தமக்கு" என்பதனோடுங்கூட்டிப் பொருள்கொள்க. சிறியர்-சிறுமையென்னும் பண்படியாகப்பிறந்தபலவோர்படர்க்கைப்பெயர் ஆனவர் இறந்தகாலத்தெரிநிலை வினையாலணையும்பெயர்; (ஆ+இன்+அ+வ்+அர) முறையே பகுதி, இடைநிலை,சாரியை,சந்தி,பலர்பால விகுதிஎனவும்; இடைநிலையின் இகரங்கெட்டது முதற்குறை விகாரமெனவுங் கூறுக. சிறியரானவர்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அறிஞரானவர் என்பதும் அத்தொகை,சிறியரானவர் தமக்கு-என்பது சிறியரானவர்களாகிய தங்களுக்கு எனப் பொருள்படுகின்றமையால், தாம்-என்னும் படர்க்கைப் பன்மைப்பெயர "தான்தாம் நாமுதற்குறுகும்" என்னும் விதியால் முதற்குறுகி "நான்காமிரட்டல" எனபதனால் தன்னொற்றிரட்டாயல்"குவ்வின் அவ்வரும" எனபதனால் அகரச்சாரியைப்பெற்று (தமக்கு) எனவாயிற்று. ஆனவர்-என்பதை ஏழுவாயின் சொல்லுருபாகவும்

தாம் என்பதைச்சாரியையாகவுங் கொட்டுமாம். அறிஞரானவர் தமக்கு - என்பதையும் இங்ஙனமே கொள்க. தீமை - பண்புப்பெயர்; செயல்களின்மேல் நிற்றலால் ஆகுபெயர்.

அறிஞர் - அறி பகுதி, ஞ்-பெயரிடைநிலை, அர்-பலர்பால் விகுதி. பொறை தொழிற்பெயர், பொறு பகுதி, ஐ-தொழிற்பெயர் விகுதி. பிறர்க்கு-பிறர்-பிற என்னும் இடைச்சொல்லடியாகப்பிறந்த பலர்பாற்சுட்டுப்பெயர்; கு-நான்காவதன் இடப்பொருளில் வந்தது. நெறி-வழி, சொன்னீதியின்மேலதாகலின் காரியவாகுபெயர் இலர்-ஈறுகெட்டஎதிர்மறைக்குறிப்புமுற்றெச்சம். வினையினேன் தன்மை ஒருமைக்குறிப்புவினையாலணையும்பெயர். இதில் ஏ சாரியை. வினையினேனொருவன் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இதுதன்மையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி. பொருளாக-ஏவாது சற்கெட்டப் பொருளாகஎன நின்றது. பொருளது என்றது அஃறிணை முனிவர்க்குமுனை பொருளல்லாத தன்மையையுணர்த்திநின்றது. முனிந்தால் - செயின் என்னும் வாய்பாட்டுவினையெச்சம் (முனி+த்+த்+ஆல்) த-சாரியை, ஆல் - வினையெச்சவிகுதி. "முனி தாமென்னாலியன்ற இவ்வினையைப்போனே" என்றமையால், முனிவ விழியெனவுமிவனுளனென்பெறப்படுதலால், ஓகாரம் ஒழியிசைப்பொருட்டு. மறைப்ப ஓகாரம் முனிந்தோர் - முனிவோய இரண்டும் அறிவின்பின்வாய்வு எதிர்மறை ஏ - பிரிநிலைப்பொருளும் தேற்றப்பொருளும் ஒருங்கேயமைந்துநின்றது. (போன-பலவின்பாற்படர்க்கை இறந்தகால வினைமுற்று. (போ+இன்+அ) இன் - இடைநிலை, இது முதற்குறைந்து நின்றது. தீமைசெய்தல் சிறியோர்க்கியல்பும், அதைப்பொறுத்துக்கொள்ளல் பெரியோர்க்கியல்புமாகலின், ஆதலால் அரசர்க்குயர்வாகிய விஷயத்தில் தேவரீர் இவ்வாறு கோபங்கொண்டீராயின் உமது பொறுமையும் அருட்குணமும் அடியேனிடத்தில் மாத்திரம் இல்லாமற்போயினவென்று விசுவாமித்திரரை நோக்கி அரிச்சந்திரன் கூறினனென்க.

36. முனிவர், (அதனைக்கேட்ட விசுவாமித்திர முனிவர்), மடித்த-மடித்த, வாயினர்-வாயராகியும் மிக - மிகவும், கொதிக்க- கொதிக்கின்ற, நெஞ்சினர்-நெஞ்சையுடையராகியும், எதிர - எனக்கு முன்பாக, மறுத்து - என் சொல்லைத் தடுத்து, நீ - நீ, படித்த - முன்பு கற்ற, வாசகமெல்லாம் - வார்த்தைச் சமர்த்துக்களையெல்லாம், எனக்கு எதிரே தெரிவிப்பதாக, நீ - நீ பிதற்றிற்பாலனோ பலவசனங்களையுஞ் சொல்லத்தகுமோ? (அதுவிருக்கட்டும்) வடித்த - தெரிந்துணர்ந்த, ஏழ் இசை எழிச்சுர, நினக்கு - உனக்கு முன்னே, இசைக்க - பாடுதற்காக, வந்த - வந்த, மாதர் - என்னுடைய, மக்கள் தம்மை - மக்களிருவரையும், அடித்த - அடித்துத்துரத்துதற்குண்டான, காரணமெலாம் - காரணங்களையெல்லாம், எனக்கு - எனக்குத் தெரியுமாறு, நீ - நீ, தக்கவாறு - தகுந்தபடி, அறைதி - உள்ளவைகளைச் சொல், என்றான் - என்றுகேட்டார். தானே - தான் - ஏ அசை

Visvamitra whose temper rose to boiling point, said, " Dare you **gainsay my** words and rattle in this fashion in my presence, to display **your proficiency** what made you illtreat the damsels that came to enter**tain you** with soft melodious airs ?"

(க-ரை) அரிச்சந்திரனுடைய சொல்லைக்கேட்ட விசுவாமித்திரர் மடித்தவாயினராய் மனங்கொதித்த நெஞ்சினராய் "என்னெதிரில் என் சொல்லைமறுத்து நீ கற்றவித்தைகளையெல்லாம் பிதற்றலாமோ? சப்தசுரங்களைப் பாடும்படி உன்னிடம் வந்த என் பெண்களிருவரையும் அடித்துத் துரத்தியகாரணத்தையெல்லாம் எனக்குத் தெரியக்கூறவேண்டும்" என்று சொன்னாரென்பதாம்.

வாயினன் - நெஞ்சினன் - சினையால் பிறந்தபெயர்கள்; இன் - சாரியை.
"வேந்தனுரை காதிலுற விச்சுவாமித்திரன்றான்
சேந்தவழி நோக்கித் தெரிவையர்பாப்—போந்திசைத்தால்
அன்னாரை நீயடித்தே யாங்கோட்டு காரணமற்
றென்னுடென்றானே யிடித்து" (அ - வெ).

37. (இ-ள்)(உடனே), மன்னவன் - அரிச்சந்திரன், மீண்டும் - மறுபடியும், வேதியன் - அந்தவிசுவாமித்திரருடைய, தாள் - பாதங்களை, கரம் - கைகளால், பூண்டு - பிடித்துக்கொண்டு, வாயில்-வாயிலே, புனல்- நீர்,வாண்டு-வற்றி, அற்றிட - காய்ந்துபோக; ஆண்ட - என்னை அடிமையாகக்கொண்ட. நாயக - சுவாமி! இ - இந்த,முனிவு - கோபத்தை,ஆற்றிடல்வேண்டும் - தணிவுசெய்யவேண்டும். யான்- நான்,அது -அந்தச்செய்கையை(உள்ளபடி),விண்ணப்பம் செய்வன் - தேவரீர் சந்நிதியிலேதெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆல் - அசை.

Harichandra again taking hold of Visvamitra's feet, repeatedly begged of him to cool his temper, promising to submit him a satisfactory explanation for the illtreatment received by the damse s.

(க-து) அதன்மேல் அரிச்சந்திரன் மறுபடியும் விசுவாமித்திரருடைய பாதங்களைக் கையால் பிடித்துக் கொண்டுவாயிலே உமிழ்நீரும் வற்றிப்போக "சுவாமி! இந்தக்கோபத்தைத் தாங்கள் தணித்துக்கொள்ள வேண்டும்.அந்தப் பெண்களை அடித்துத் துரத்திய காரணத்தை விண்ணப்பஞ்செய்து கொள்கின்றேன் கேளுங்கள்" என்றான் என்பதாம்.

வாண்டு also வறண்டு.வேதியன்-விசுவாமித்திரன் பிறப்பால் இராஜகுலத்தாராயினும் வேதஞானத்தாலும்தவச்செய்கையாலும் இருடித்தன்மையெய்தினன்;அதனால அவனை வேதியன் என்றார்,' பிரம்மசநியா னாதுபிராமமணஃ" எனபதுங் கொண்டு. தாள்கரம் – இரண்டாம் வேற்றுமைத் தொகையாகலின் விகாரத்தியல்பும்' எனபதனால் ஏகாரம் புணர்பாயிற்று. நாயக - அண்மை விளி;நாயகன்-முதல் வேற்றுமை. ஆற்றிடல வேண்டும்-பிறவினைத் தொழிற்பெயர். (தன்வினை ஆறிடல்.) வேண்டும்-தொழிற் பெயராய்த் தேற்றப்பொருள் பட்டு வந்தது. இது ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவாம். விடங்கோட்பொருளிலும் வரும் என்ப.

38. (இ-ள்) இ-இந்த, கரும்-கறுத்த, குழல்-கூந்தலை யுடைய, ஏழையர் தம்மை - பெண்களை, நின்மக்கள் - உமமுடையபெண்கள், என்பது - என்ற சங்கதியை, உணர்ந்திலன் - தெரிந்திலேன். மாதவ - ஓ மகாமுனிவரே!(அந்தப்பெண்கள்) தக்கவாறு - தகுந்தபடி, உரையாமையின்-வார்த்தைகள்சொல்லாமையினாலே, தள்ளினேன் - தள்ளிவிட்டேன். ஈது - இதுவே, புகுந்தது - நடந்தசெய்கை, நீ-தேவரீர், பொறுத்து அருள்-இந்தக்குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும், என்றான் - என்று சொன்னான் அரசன்.

Harichandra continued "Sire, I had no idea that those damsels were yours; there was something very objectionable in their style of address, that I was forced to expel them from my presence. This is all that transpired. I beseech your forbearance and crave for pardon"

(க-து) "சுவாமீ! இந்தப்பெண்கள் உம்முடைய புதல்விகள் என்பதை நான் அறிந்ததில்லை.அவர்கள் கிரமப்பிசகான வார்த்தைகளைச் சொன்னமையி

றாலே அவர்களைத்தள்ளினேன். இவ்வளவுதான் உள்ளபடிநடந்தசெய்தி. அடியேனுடைய குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்'' என்றுவேண்டினான் அரிச்சந்திரமகாராஜன் என்பதாம்.

ஏழையர் - ஏழைமை-அறியாமை: பெண்களுக்கு "பேதைமையென்பது மாதர்க்கணிகலம்'' என்றபடி அறியாமையும் ஒரு சிறந்தவாபரணமாதலால் அவர்க்கு அப்பெயர்வந்தது: ஆயினும் அறியாமை என்பதை அறிந்துமறியாதுபோலிருக்குங் குணமென்க. இக்கருங்குழல் - மேலதேவரீர் கூறிய இப்பெண்கள். உணர்ந்திலன் இறந்தகாலஎதிர்மறைதன்மைஒருமைவினைமுற்று:(உணர் + த் + த் + இல் + அன்) ஆன் - தன்மை ஒருமைவிகுதி.

"தக்கபடி பேசாத தன்மையினால் இந்நின்ற
விக்குமொழி யேந்திழையார்க் கேனுவிதேன் — புக்கதிறம்,
தன்றியுநின மக்களிவரென்ப றிந்திலன்யா
னின்றிதனை நீ சமிக்கவென்று'' (அ - வெ).

39. (இ-ள்) கழுத்து-கழுத்தை, அரிந்து-அறுத்து விட்டு, (ஏனென்றால்), இது - இப்படிச்செய்தது, கை - கையின், பிழை - குற்றமாக, வந்தது - நேரிட்டது, என்று - என்பதுபோல, அழுத்தமாக - திடமாகவே, உரைத்தனை - (அஞ்சாமல்) சொல்லுகிறாய்; ஆதலால் - ஆகையால, பழுத்த - முதிர்ந்த, நல்லறிவு - நலலஞானத்தை, உற்று - உடையராய், உனை - உன்னை, பற்றிய - ஆதரவாக அவ்விருவருமகொண்ட, ஒழுக்கம - சீலத்தை, அற்று - இகழ்ந்து, உளம் - அவவிருவர்மனமும், உட்கிட - அஞ்சுமபடி, கூறினாய் - பேசினாய்.

"Bravo Harichandra," replied Visvamitra "your impudence is something like that of a man who would behead a person, and yet would claim to be absolved of all blame in the matter, holding his hand that gave the blow responsible for the deed. So, when the two damsels with implicit faith in your ripe sagacity, and wisdom, sought your protection, you had the hardihood to treat them in such outrageous fashion as to fill their minds with trepidation"

(கு-து) கழுத்தை அறுத்துவிட்டு இது கையினால் வந்தகுற்ற மென்பதாகப்பேசுகின்றாய். ஞானமுதிர்ச்சியுடையராய் அவ்விருவரும் உன்னை ஆதரவாகக்கொண்டசீலத்தை இகழ்ந்து அவர்களுடையமனமும அஞ்சும்படிபேசினாய் என்றுசொன்னார் விசுவாமித்திர முனிவர் என்பதாம்.

விசுவாமித்திரர் - தம்பாலுதித்த பெண்களிருவரும் தம்மிடம் பலகலைகளும் பயின்று அறிவுமுதிர்ந்தவராதலின் அவர்களை "பழுத்தநல்லறிவுற்று'' என்றார். பெண்கள் முனிவரிடம் பலகலைகளும் பயின்றார் என்பதை இந்நூலாசிரியர் கூறிய அடியிற்குறித்த செய்யுளாலு முணர்க.

"மாதங்க முனிவன்பார்த்து வரவழைத் திருத்தி நாளு
பேதமு மெழுத்துஞ் சொலலும் பெருகலை யிருநாலெட்டும்
கீதமு நாதயாழுங் கின்னர முதலவாய
போதமும்வாரிந்நிற் கரைதுடன் புகட்டினானே.''

40. (இ-ள்) இரப்பவர்க்கு-(இதஞ்சொல்லி) யாசகஞ்செய்பவர்களுக்கு, ஒன்று - யாதொன்றையும், இலையெனில்-இல்லையென்று சொன்னால், யாவையும் - எவறறையும், கரப்பவாகளு - காத்தலாகிற செய்கையுளளபேருக்கு, உறு கட்டுரை - (இயல்வதுகரவேல் முதலிய) தகுந்தசொற்களை, கூறுவர் - (யாவ

ரும்) சொல்வார்களேயல்லாமல் சொல்லாது விடார்கள், (அப்படியுண்டாகு மானால்) புரப்பவர்க்கு-(உலகத்தை ஆண்டு) இரக்ஷிக்கவல்ல அரசர்க்கு, பொறுத்தலல்லால்-(அச்சொற்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமேயல்லாமல், அடித்து இரப்போரை) அடித்து, உரப்பலும்- அதட்டித் துரத்துவதும், தகுமோ என்று தகுதியாகுமோ என்று உருத்தனன் - கோபித்துக்கொண்டார். (விசுவாமித்திரர்)

Visvamithra grew angry saying —
Those who refuse to give alms to the poor and go to all kinds of men flattering them, will be strongly advised by others (to perform charitable deeds), this being so, does it become kings to illtreat beggars instead of being patient with them?

(க-து) யாசிப்பவர்கள் கேட்கின்ற யாதொருபொருளும் இல்லையென்று சொன்னால் அப்படி ஒன்றுங் கொடாமல் இயல்வது கரத்தலாகின்ற போக ளுக்கு அப்படிச் செய்வது தகுதியல்லவென்று யுக்தமதி சொல்வார்கள். அப்படி புத்திசொல்லுகின்றவர்களைநோக்கி அரசர்கள் பொறுமை கொண்டிருப்பதல் லாமல் அவர்களை அடித்துத் துரத்திவிடுவது தமக்குத் தகுதியாகுமோ என்று சொல்லிப் பின்னுங் கோபங்கொண்டார் விசுவாமித்திரர் என்பதாம்.

கரப்பவர்க்குச் சென்று கட்டுரை கூறுதலாவது —'இயல்வது கரவேல்' 'ஐயி யாகக் கொண்டீவதே யீகைமற்றெல்லாங் குறியெதிர்ப்பை நீரதுடைத்து' "இரப்பவர்க்குச் செல்சார் ஒன்றீவார்" என்று இவைமுதலாக, இலக்குறி ஆய அசிதி இனமுகம்பெருந்து வருநர் மீளவாளையின் அவ்வில்பத்தவன் புண்ணியத்தில் பாகிப்பகிர்ந்து கொள்பவோயினன் என்பது அறநூற்றுணிபு ஆதலானும் ஆன்றோராயிருந்த மறைகள் கூறிப் பறப்புதல் "ஈகையரிதெனினுமிய இன் சொலினாற்கூடாதல் ஓகோ கொடுத்துகொடுத்தமர்" என்பவர்களாலும், இயல்வது கரந்துவிட்டதும் இன்சொல்லும் சொல்லாதும் 'அடித்துரப்பல்' எவர்க்கும் பொருந்தாது; அதனிலும் மன்னர்க்கோ எவ்வாற்றானும் பொருந்தாது என்பார் 'புரப்பவர்க்குப் பொறுத்தலல்லால் அடித்துரப்பலும் தகுமோ' என்றார். யாவை யும் கரப்பவர் எதுகேட்டாலும் இல்லையென்னு மியல்புடையார் = உலோ பிகள். உம்-முற்றும்மைப்பொருளது கரப்பவர் - உள்ளதை இல்லென மறைத்து வைப்பவர். கட்டுரை கூறுவார் என்றமையால் யாவரும்-என எழுவாய் வருவி த்துரைத்தாம் உறு வினைத்தொகைவினை கட்டுரை பண்புத்தொகை நிலைத் தொடர் உறு-என்பதை உரிச்சொல் எனக்கொண்டு மிகுதியும் ஐ பொருள் கூறினும் அமையும் நன்று - எண்ணுள்ளவையாகும் என்பர்; இதனிற்றல் இடைவு சிறப்புமமை தொக்கது உரப்பலும் - உம்மை இறந்தது தழீஇயது தகுமோ-ஓகாரம் எதிர்மறை நக்கண்ணது இரப்பவர்க்கு இயல்வது கரந்துவிட்டது தரு லா அறநூற்றுணிபுகளை எடுத்துரைப்பாரையாவது அவ்வாறு சொல்லுமை பொறுத்தலவே ணடும்; அங்ஙனமபோறுக்காது அவரை யடித்துரப்பல் யாவரையும் பாதுகாக்கு மன்னர்க்கு எவ்வாற்றானும் பொருந்தாது என்பது கருத்து.

41. (இ-ள்) மைம்-அருச்சனம், சூலாவு - விளங்குகின்ற, கை - கைகளையு டைய, மாதரை-ஆதப்பெண்களை, மோதிய இடித்த, ஈக்கைக்களை, தடைக்கி னும்-அழகத்தாலும், (சமயத்தே), கண்ணினை - கண்களை, குலிசுப்போந்தனை டி றனும், சம்மதமே, மெய் - உடம்பெல்லாம், குறைக்கினும் - சேதித்தாலும், (சம்மதமே), நீ வேண்டியவாறு-உன் முடைய மனதுக்குவேண்டியபடி, செய்க- செய்துகொண்டருள்க, என்ன - என்று அரிச்சந்திரன் சொல்ல, மணமுனி வைதிகரான விசுவாமித்திரர், செப்புவார் சொல்லத்தொடங்கினார்.

"Oh Lord," rejoined Harichandra, "you may amputate the arms that hit the damsels, whose eyes glistened with streaks of black paint, you may scoop out my eyeballs, you may butcher, and hack my body to pieces, you may dispose of my person as you choose for the offence brought at my doors."

(க-து) கோபங்கொண்ட விசுவாமித்திரரைப் பார்த்து "சுவாமி! அந்தப்பெண்களை அடித்த கையை வேண்டுமானாலும் அறுத்து விடுங்கள்; என் கண்ணை வேண்டினாலும் தோண்டி விடுங்கள்; என் உடலைச் சதை சதையாக வேண்டுமானாலும் அரிந்து விடுங்கள்: உமக்கு எப்படி இஷ்டமோ அப்படி செய்தருளும்" என்று சொல்ல, அதனமேல் அம்முனிவர் சொல்லத்தொடங்கினார் என்பதாம்.

42. (இ-ள்) மாக்களை - மிருகங்களை யெல்லாம், கொய்து-அறுத்து, கொன்றதும் கொன்றதும்; பன்றியை-பன்றியை, எய்ததும்-அம்பால்எய்து துரத்தினதும்; இசை - இசைப்பாட்டுகளை, கேட்டு - கேட்டு, அடித்து - அவர்களுக்குப்பரிசு கொடாமல் அடித்து, ஈனமாய் - இழிவாக, வைததும் - அவர்களை உதாசீனஞ்செய்ததும்; என்தன் - என்னுடைய, மக்களை - பெண்களான அவ்விருவரையும், நீ - நீ, மணமசெய்திடில் - விவாகஞ் செய்துகொண்டால், பொறுப்பேன் - நான் பொறுத்துக் கொள்ளுகிறேன், என்று செப்பினான் - என்று சொன்னார்.

"I shall forget the past and exonerate you entirely," replied Visvamitra, "for your having slaughtered animals, chased and inflicted arrow-wounds on helpless pigs, and slighted and insulted the damsels, instead of properly rewarding them, provided you will take them as your wives."

(க - து) நீ என் பெண்களாகிய அவ்விருவரையும் விவாகஞ்செய்து கொண்டால் நீ செய்த குற்றங்களை யெல்லாம் பொறுத்துக் கொள்ளுகிறேன் என்று சொன்னார் விசுவாமித்திரர் என்பதாம்.

பெண்ணென்றால் பேயுமிரங்கு மென்பார்கள்: நீ அவர்களிசையைக்கேட்டதற்கு வெகுமதி செய்யவேண்டும்; அதுசெய்யாமல் அடித்தது பெண்பாவமாகின்ற கொடுமை யாயிற்று: அம்மாததிரத்தான் அமையினும பெரிதலவ: "நேர்ந்தது நேரல்லார் நீரலல சொல்லியக்கால - வோர்த்து வெகுளார் விழுமியோர்" என்றதை மறந்து அவர்களை ஈனமாய் வைதனை என்றார். இப்படிப்பட்ட நீசத்தொழில் செய்தவன் நீச மாதரைப்புணர்ந்து நீசத்துவ மடைவதே தகுதி யாதலின் அப்பெண்களை மணஞ்செய்து கொண்டால் பொறுப்பேன் என்றார்.

"ஒதி மலாப்பதசதை ஒண்முடிசேர்த் தானிருபன்
கோத மகலாத கோசிகனென்---கோதையரை
நீவதுவைசெய்தக்கா னின்பிழையை யான்பொறுப்பேன்
காவலனே காணென்றா னல்" (அ - வெ).

43. (இ-ள் அதற்கு, நாயகன-அரிச்சந்திரன், நிலத்தில்-உலகத்திலே, யாரும் - யாரானாலும், நெறியல-நீதிக்கு விரோதமானவைகளை, செய்திடின - செய்தால், விலக்கும் - அவைகளை விலக்கத்தக்க, நீ - நீர், இவை - இந்த அநீதியான காரியங்களை, என்கண - என்னிடத்திலே, விளம்பல் - சொல்லுகிறதற்கு, என் காரணம்? புலைகுலமதனில்-நீசசாதியாருடனே, மன்னர்-அரசர்கள், பொருந்துதல் - கூடுகிறது, நலத்ததோ - நல்லநீதியோடு கூடியதாகுமோ? என்று கூறினான் - என்று சொன்னான்.

Harichándra said in reply "Sire, while your position as a sage enjoins on you the duty of giving timely admonition to those that go astray, I am surprised to hear you exhorting me to adopt a sacrilegious step. Are not kings forbidden to ally themselves with low-caste maidens ?"

(க - து) அதற்கு அரிச்சந்திரமகாராஜன் "சுவாமி! பூலோகத்திலே எவராகிலும் அக்கிரமமான காரியங்களைச்செய்தால் அப்படி செய்வது தகுதியல்லவென்று தடுக்கத்தக்க தேவரீர் இப்படிப்பட்ட அநியாயமான செய்கையைச்செய்யும்படி என்னிடத்தில் சொல்லுவது என்னகாரணம்? நீசசாதிப் பெண்களை அரசர் கூடுவது நியாயமாகுமா"? என்று சொன்னான் என்பதாம்.

அல - பலவின்படர்க்கை எதிர்மறைக்குறிப்பு வினையாலணையும்பெயர். இவை - என்மக்களை நீமணஞ்செய்திடின் மாக்களைக்கொன்றது முதலியபொறுப்பேன் என்றது.

"வேதமுடி வுணர்ந்தோய் வேந்தர் புலைக்குலத்து
மாதர்தமை வேட்டல் மரபோவென் — றோதினன்மற
சாவத்தால் சண்டாள னானவன் சேய் நீயிவரை
மேவத்தகுமென்றான் விண்டு" (அ - வெ).

[வசிஷ்டமுனிவனுடைய சாபத்தினாலே நீசனானதிரிசங்குராஜன்பெற்ற மகனானபடியால், நீ இந்தப்பெண்களைக் கூடுவது நீதிதான் என்று விசுவாமித்திரர் சொல்ல அதற்கு அரிச்சந்திர மகாராஜன.]

44. (இ-ள்) அற்றைஞான்று - அந்தநாளில், எமது - எங்களுடைய, ஐயன - ஆசாரியராகிய, வசிட்டனால் - வசிஷ்டராலே, பெற்ற - உண்டான, சாபம் - சாபத்தாலான, பெரும் - பெரிய, புலை - நீசத்துவத்தை, தீர்த்தனை - நீரே தீர்த்தருளினீர். இற்றைஞான்று - இந்தநாளிலே, இங்கு இவ்விடத்தில், எனை - என்னை, நீ - நீரே, புலைஆக்க - நீசனாக்க, கற்றது எது - யாதுகாரணத்தால் கற்கலானீர்? என - என்று சொல்லி, கால் - அவர்பாதங்களை, கரம் - தன்கைகளாலே, பூண்டனன் - பிடித்துக்கொண்டனன்.

"Oh Lord," continued Harichandra," in days of yore, you were instrumental in redeeming us from the degradation, in which our family was plunged by the curse of our guru Vasishta, while now, it pleases you to force me to degrade myself again into the lowest caste. May I know why ?"

(க-து) "சுவாமி, அந்தநாளில் ஆசாரியர் வசிஷ்டரால் எங்கள் குலத்துக்குண்டானநீசத்துவத்தைத்திரஸ்கரித்தீர். அப்படிச்செய்ததேவரீரே இந்தநாளில அடியேனை நீசனாக்கும்படி யாதுகாரணத்தினாலே கற்கலானீர்" என்று சொல்லி விசுவாமித்திரருடையபாதங்களைப் பிடித்துக்கொண்டான் அரிச்சந்திரன் என்பதாம்.

தன்குலகுருவாதலின் தன் சுற்றத்தாரைத்தழுவி எமதையன் என்றான், அற்றை - அன்று என்பது விகிர்தல் பெற்று ஐகாரச்சாரியை ஏற்று வந்தது. இற்றை - என்பதும் அது.

"அன்றுமலரோன் மதலை யாடுகொடுஞ் சாபத்தால்
துன்றுபுலை தீர்த்திட்ட தூயோனே — இன்றெனை நீ

சண்டாள னாக்கத் தணிமனத்து முன்னியதென்
விண்டே விளம்பெனமுன் வேந்து" (அ - வெ).

வசிட்டனாற் பெற்ற சாபப் பெரும்புலை தீர்த்த சரித்திரம்:—

அரிச்சந்திரன் தந்தை திரிசங்கு மன்னன் எனபான் குலகுருவாகிய வசிட்டமாமுனிவரை யடைந்து "தேகத்தோடு சுவர்க்கமெய்த அடியேற்கருளுக" என்றனன். அம்முனிவரர் "அது அடாதது; வாழ்நாண்முடிவில் அடைக" என்றார். திரிசங்கு குரவனைநோக்கி "தேகத்தோடு சுவர்க்கம் ஏகுவிப்பது உமக்கு இயையாதாயின் என்மனதுக்கிணங்கியார் எவரையாயினுந்தேடி அதைக்குறித்து வேள்வியியற்றுவேன்" என்ன, வசிட்டர் மன்னனைநோக்கி "கொடுந்திறனுடையாய்! என்னைவிட்டு வேறொரு நலஞ்செய்வோனைக்குறித்து நின்றாயாகலின் நீ புலையனாகுக" என்று சபித்தனர். உடனே அவ்வரசர்கோமான் பொலிவிழந்து புலையுருவடையவே எவரும் "சீ சீ" என இகழ்ந்தனர். பின்னர் மன்னன் மனத்திகைப்படைந்து காடுசேர்ந்து காலங்கழிப்புழி, ஓர் நாள் விசுவாமித்திரர் வதியும்சோலைகுறுகினன்; அவர் "நீசனாகிய நீயாவன்? ஈண்டுநேர்ந்ததென்னை?" என்ன, புலைமன்னன் முன்னம் விளைந்தனவெல்லாம் விளம்பினன். விளம்பலும் விசுவாமித்திரர் சிரித்து "யான் பெருவேள்வியியற்றிச் சுவர்க்கம் அளிப்பேன்" என்று சொல்லிப்பெரியதோர் வேள்விமுடித்து "வானவர்களே! வருக" எனறழைத்தனர். அவ்வானவர்கள் 'இவன் புலையனிமித்தம் யாகமியற்றி நம்மை வருகெனறழைக்கின்றனனே" என்றுசிரித்தனர். அதுகண்ட விசுவாமித்திரர் திரிசங்கை நோக்கி "யானே என் தபோபலத்தினால் சொன்னேன்: நீ சுவர்க்கம்ஏகுக" என்ன, அந்திரிசங்கு விமானமீதேறிச்சுவர்க்கலோகத்தை யடையாநிற்புழி வானவர் வெகுண்டு "புலையனிங்குவருவதென்னை; பூமியில் இறங்குக" என்று தள்ளினாராக, குப்புறவீழ்வான் "தாபதனே! அடைக்கலம் அடைக்கலம்" என்று கூக்குரலிடவே அவ்விசுவாமித்திரர் உயர்ந்து நின்று 'நில் நில்' என வுரைத்து இடியிடித்தாற்போல நகைத்து "விண்ணோர்கள் பெரும்பதமுதலிய வெல்லாம் இன்னே படைப்பேன்" என்று, "சூரியன் - சந்திரன்-கிரகங்கள் - நக்ஷத்திரங்கள் தெற்கு வடக்காய் வருக" என்று சகல உயிர்களையும் உண்டாக்கக் கருதுங்கால் பரமசிவம் முதலானவானவரெல்லோருங்கூடி "ஓ முனிவனே! பொறுத்தருள்க: அடைக்கலம்புகுந்தானைக் காக்கும் அறத்திறன் நன்று: அவன் விண்மீன கூட்டத்தோடுசேர்க" என்று சொல்லிச் சென்றனர். திரிசங்கு மன்னனும் அங்ஙனேயானான் என்பது புராணவரலாறு.

45. (இ ள்) (அதுகேட்ட விசுவாமித்திரர்), முன்னம்-முன்னே, உனதை - உன்தகப்பனுடைய, முழுபுலை-பூர்ணமான நீசத்துவத்தை, நீக்கினம்-போக்கினோம்: எமக்கு - அப்படிச்செய்த எமக்கு, இன்னம் - இன்னமும் (அப்படிவருகின்ற நீசத்துவத்தை), நீக்க-போக்குவது, அரிதன்று - அருமையான காரியமல்ல. (ஆகையால்) யாம் - நாம், சொன்ன - சொன்ன, வாசகம் - வார்த்தையின்படி, கேட்டு - கேட்டு, சுடர் - பிரகாசம்பொருந்திய, முடி - கிரீடந்தரித்த, மன்னர் - அரசர்களுக்கெல்லாம், மன்னே - அரசனானவனே! என் மக்களை-என்பெண்களை, சேர்க - கூடுவாயாக, என்றான் - என்றுசொன்னார்.

Visvamitra replied " I who have once redeemed you, can easily do so again if I choose ; Oh king of kings wearing a resplendent crown, you had better act up to my words, and marry my damsels."

(க-து) "முன்னே உன் தகப்பனுடைய நீசத்துவத்தைப் போக்கின எமக்கு இன்னும் அப்படிச்செய்வது கஷ்டமான காரியமல்ல. ஓ மன்னர்மன்னவ

னே! எம்முடைய சொல்லின்படியே என் பெண்களைக்கூடுவாயாக'' என்று சொன்னார் விசுவாமித்திரர் என்பதாம்.

தன்னுடைய வலிமைச்செருக்கினால் தன்னைப்பன்மை வகையால் (நீக்கி னம், எமக்கு எனக் கூறினான் விசுவாமித்திரன். உடனே என்மக்களை என ஒருமையில கூறினான் அவர்கள் ஆண்பெண் கூடிப்பிறவாமல் அவன் சினத்தீயி னின்றும் உதித்தமையால்: இன்னும் இவர்கள் காட்சிக்குப்புலையரேனும் என் வயின் உதித்தவராதலின குற்றமில்லையெனறுக் குறிப்பிக்க அங்ஙனங் கூறி னான் என்றலுமாம். உந்தை - உன் + தந்தை. (உன் + தம்பி = உம்பி. உன் + தங்கை = உங்கை. என் + தம்பி = எம்பி, என் + தங்கை = எங்கை). மன்னர்மன் னன் - அரசர்க்கரசன் - இராஜாதிராஜன்-சக்கரவர்த்தி. அன்றியாம் = அன்றி யாம்: "உயிரவிரிறுசகுறள் மெய்விட்டோடும் யவ்வரின் இய்யாம் &c" என்ப தனால் உகரம் இகரமாகத்திரிந்தது. முடி - காரணச்சிறப்புப்பெயர். சோகெ ன்றான் - சேர்க + என்றான்: அகரந்தொகுத்தல்.

"முன்னுனது தாதை முழுபபுலையை நீக்கினால்
இன்னுமது செய்த லெனைகளிஞன் —றென் னுரைகேட்
டேந்தலே யானீன்ற வேழையரைச் சோகென்றான்
வாய்ந்தவிறற் காதிமகன்'' (அ - வெ).

46. (இ-ள்) இடினும் - (தேவரீர் என்னைத்) தாழச்செய்தாலும் ; நின் - உம்முடைய, விழி - கண்களில், ஆர் - நிரம்பிய, அழலால் - கோபாக்கினியா ல், எனை - என்னை, சுடினும் - சுட்டாலும் ; என - என்னுடைய, உடல்தனை - உடலை, துறந்து - விட்டு, உயிர் உயிர், விடினும - போகிறதாகச்செய்தாலும்; மேனியை-என் உடம்பை, வெட்டி- வெட்டி, அரிந்து-(சதைசதையாக) அரிந் து, கூறு இடினும்-பலபலகூறுகள்செய்தாலும்; இசொற்கு-இப்போது நீர்சொ ன்ன இந்தவார்த்தைக்கு, யான்-நான், இசைகிலன்-எவ்வளவும் சம்மதிக்கமா ட்டேன், என்றான் - என்று சொன்னான் அரிச்சந்திரன்.

"Sire," rejoined, Harichandra, you may hurl me down, reduce me to ashes by the fire of your anger, take the life out of me, chop and mangle my body to pieces, I can never find it in my heart to do this deed."

(க-நு) அதுகேட்ட அரிச்சந்திரன் "ஐயா! "நீர் என்னைத்தாழச் செய் தாலும கோபாக்கினியால் எரித்து விட்டாலும் உடலை விட்டு உயிர்போகும் படிசெய்தாலும் உடலைச்சதைசதையாக அரிந்தாலும் இப்பொழுது நீர்சொன் னவார்த்தைக்கு நான் இசையவேமாட்டேன்'' என்று சொன்னான் என்பதாம்.

47. (இ-ள்) யூபம்-தூண்கள் நிறுத்திச்செய்கிற, வேள்வி - யாகங்களிலே மிகுந்த, கௌசிகன் - விசுவாமித்திரர், ஓய்வு இலா - மாறாத, கோபம்-கோ பத்தை, எய்தி - கொண்டு, கொடி - கொடிபோலும், இடை - இடையையு டைய, மங்கையர் - பெண்களாகிய, தீபம் - விளக்கை, அன்னவர் - போன்ற வர்களை, சேர்கிலை ஆயின் - நீசேராது போவையானால், எம் - என்னுடைய, சாபம் - சாபத்தை, நீ - நீ, பெறுக - பெறக்கடவை, என்று - என்று, உரை - மறுமொழி, சாற்றினன் - சொன்னார்.

Visvamitra, was highly excited on hearing such words and said, he would hurl heavy imprecations on his head, if he declined to marry them

(க-நு) அதற்கு விசுவாமித்திரர் அதிககோபங்கொண்டு அந்தப்பெண்க ளை நீ கூடாமல்போனால் என்னுடைய சாபத்தைப் பெறக்கடவாய் என்று ம றுமொழி சொன்னார் என்பதாம்.

யூபம் - யாகப்பசுவைக்கட்டும்தறி. வேள்வி - வேள் - விருப்பம்: எவ்வெதனை விரும்பி யாகஞ்செய்கின்றனரோ அவ்வதனைத் தருவதாகலின் யாகத்திற்குத் தமிழில் வேள்வியென்னும் பெயருண்டாயிற்று. கொடியிடை - உவமைத்தொகை

48. (இ-ள்) (அதற்கு) அரிச்சந்திரன், எமது-எமகளுடைய, ஆருயிர் அரிய உயிரை, கூற்றம் - இயமன், உண்ண - உண்ணும்படி, கொடுத்து - கொடுத்தும், தோற்றல் - தோல்வியை அடைகிறது, நன்றுநன்று-மிகவும் நல்லதுதான், என்று துணிந்து - என்று துணிவு கொண்டு; நின் - ஐயா உம்முடைய, சீற்றம் - கோபம், மாற்றிட-தீர்வதாக, செப்பிடும்-நீர்கொடுக்கிற, சாபம்- சாபத்தை, யான் - நானே, ஏற்றல் - ஏற்றுககொள்ளுதல், நன்று - நலமுடையதாகும்; இடுக - நீர்சாபம்இடும், என்ன-என்று, இயம்பினான்-சொன்னான்.

Harichandra who preferred death, and defeat to such a degrading step said, " Sire' I am prepered to take the consequences of your cuise to propitiate youi anger."

(க-து) அதற்கு அரிச்சந்திரன் இவர்சொல்வதைச் செய்வதைப்பார்க்கிலும் எங்கள் உயிரையிழநதும் தோல்வியடைகிறதே மிகவும் நலலதுதான் எனறு துணிவுகொணடு "ஐயா! உம்முடைய கோபம் தீர்வதாக நீர்கொடுக்கிற சாபததை நானே ஏறறுக் கொள்ளுகிறேன். சாபமிடும்" என்று சொன்னான் என்பதாம்.

சீற்றம் ஆற்றிட - எனப்பிரித்து, கோபததைத் தணிக்க எனப்பொருள் கூறலுமாம். நன்று - குறிப்பு வினைமுற்று. பண்புப்பெயருமாம. இடுக+என்ன - இடுகென்ன. கூற்றம்- பண்புப்பெயா. பண்பாகுபெயராய்இயமனை உணர்த்தியது. (அரசு - அரசன்: முருகு முருகன: என வருவதுபோலக),உடலினின்று உயிரைக கூறுபடுத்துகிறவனாதலின் இயமனுக்குக்கூற்றுவன எனப் பெயர் வழங்குகின்றது எல்லாப்பொருளினும் உயிா பெறுதறகரியதாதலின் அதனை 'ஆருயிா' எனறும; இத்தகைய உயிரை இயமனுக்கிரையாக்கல் அவ்வடாத செய்கை செய்தலினும் மிகவும் நன்றெனத்துணிந்தான எல்பார் "கூற்றமுண்ணக்கொடுத்தெமதாருயிர் தோறறல நன்றுநன்றெனறு துணிந்து" என்றார். தன்மனைவிமக்கள் முதலாயினரையுங கூட்டி 'எமது' என்றான்.

49. (இ-ள்) அ-அந்த, பெருந்தகை-அரசன், அன்னது - அப்படிப்பட்டவார்த்தையை, உரைத்திட-சொன்னவளவிலே, இ இந்த, பெரும்-பெரிய, தகைக்கும் - குணங்களுக்கும், பொறைக்கும் - பொறுமைக்கும், யான் - நான், ஒப்பு - உவமானத்தை, எடுத்துஉரைக்க - எடுத்துச்சொலல,தகுமோ-தக்கதுமுண்டோ? என - என்று, செப்பஅரும-சொல்லுதறகு அரிய, தவன்-தவத்தையுடைய விசுவாமித்திரர், சிந்தையில்-மனததிலே, எண்ணுவான்-ஆலோசிக்கலானா.

Visvamitra on hearing this resolve of Harichandra, exclaimed to himself. " His calm patience, self-possession, and other amiable attributes, are simply marvellous, and challenge admiration; it is difficult to find the like of him."

(க-து) அப்படிக்கென்று அரிச்சந்திரன் சொன்னவளவிலே விசுவாமித்திரர் "அடடா! இவனுடைய குணங்களுக்கும் பொறுமைக்கும் சமானங் கற்பிக்கமுடியுமா" எனறு மனத்திலே ஆலோசிக்கலானார் என்பதாம்.

"ஒப்படுத்துரைக்கத்தகுமோ" என்றும்பாடம்; சமானஞ் கூட்டிச்சொல்லத்தக்கதுமுண்டோ என்பதுபொருள். தகை - பண்பாகுபெயர். அன்னது. "சாபம்யான் எற்றனன்றிடுகென்ன வியம்பல்" ; ஒன்றன்பால் குறிப்புவினையாலணையும்பெயர். செப்ப+அரும்=செப்பரும்: வினையெச்சவிகுதி அகரம் தொகுத்தல். ஓ - எதிர்மறைப்பொருளது.

50. (இ-ள்) இரைத்து - சப்தித்து, எழுந்த-(நம்மிடத்தில்) உண்டான, கதத்தை - கோபத்தை, இறுத்திடின் - (இந்தமட்டிலே இந்தச் சமயத்திலே நாம்) முடித்தோமானால், யாம் - நாம், வரை-மலைபோலும், தடம் - பெரிய, புயம் - தோள்களையுடைய, வாசவன் முன்னர் - இந்திரன் எதிரிலே, உரைத்த - சொன்ன, வாசகம் - வார்த்தை, தோற்கும்-தோல்வியடையுமே, என்று உன்னுபு - என்று நினைத்து, நிரைத்த-வரிசை வரிசையாக நீண்ட, வேணி - சடைகளையுடைய, நெடும் - கெடிதான, தவன் - தவத்தையுடைய விசுவாமித்திரர், கூறுவான் - சொல்வாராயினர்.

It then struck Visvamitra, that the words uttered in presence of Indra would become ineffectual and remain unfulfilled, if he should suppress his anger at that stage, and he continued to address Harichandra further on the subject.

(க-து) நம்முடைய கோபத்தை இந்தச்சமயத்தில் இந்தமட்டிலே முடித்து விட்டால் நாம் இந்திரனுடையசம்முகத்தில் சொன்னவார்த்தைதோல்வி அடையுமே என்றுயோசித்துக்கொண்டு விசுவாமித்திரர் பின்னுஞ்சொல்லலானார் என்பதாம்.

வரை - கணு - பண்புப்பெயர்: இது அவ்வாகுபெயராக மூங்கிலை உணர்த்தி, பின்தானியாகு பெயராக அஃதுள்ளமலையை உணர்த்தி நின்றது. உன்னுபு-செய்பு என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம் ; உன் - பகுதி, ன் - சந்தி, உ-சாரியை, பு - வினையெச்சவிகுதி: விகுதியேகாலங்காட்டியது. வாசவன்-(வசு-தனம்) சிந்தாமணி முதலிய இரத்தினங்களையுடையவன்.

51. (இ-ள்) துடி - உடுக்கைபோன்ற, மருங்குல் - இடையையுடைய, அ - அந்த, தோகையர் தங்களை - பெண்களை, கடிமணம் - விவாகம், செயல் - செய்துகொள்வது, தீது என்ற - குற்றம் என்று சொன்ன, கள்வனே-திருடனே! (இனி), நீ - நீ, குடிமை - குடிமையான இழிதொழிலை, செய்யும்-செய்கின்ற, கொடும் - கொடிய, புலையற்கு - புலையனுக்கு, அடிமை ஆவை-அடிமையாகக்கடவை, அறிதி - இது நீ பின்போ தெரிந்துகொள், என்று ஓதினன் - என்றுசொன்னார்.

"You villain" thundered Visvamitra in a towering passion "dare you refuse to marry my damsels with thin waists ; thou shalt become a slave to a Pariah.

(க-து) விசுவாமித்திரர் "அந்தப்பெண்களை விவாகஞ் செய்வது குற்றமென்று சொன்ன திருடனே! நீ இழிதொழிலைச் செய்கின்ற புலையனுக்கு அடிமையாகக்கடவாய்" என்று அரிச்சந்திரனுக்கு சாபங்கொடுத்தார் என்பதாம்.

துடியானது மேலுங்கீழும் அகன்று நடுவில் சுருங்கியிருப்பது: மருங்குலும் மேலே மார்புமுதலிய உறுப்புகளும் கீழேதொடைமுதலிய உறுப்புகளும் பரந்திருக்கத் தானொடுங்கியிருப்பதுபெண்களுக்குச்சிறந்தஉடற்கூற்றிலக்கண

மாமரத்தின் துடி வேண்டியவையாதலறிக. கடிமணம் - கடி என்பது பலபொருளொருசொல்; இங்கே புதுமை அல்லது இன்பம் என்னும் பொருளில் வந்தது. கடி என்பது புதுமை என்னும் பொருள்படுதலால் கடிமணம் என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகையுமாம். கடி என்பது கழித்தல்-நீக்குதல், என்று பொருள் கொள்வதை ஆதாரமாகக்கொண்டு.—

"மாண் டருந்தவொடு மக்கட்பேறிலவெனினும்
பூண்டான் கழித்தற்கருமையால் - பூண்ட
மிடியென்னும் காரணத்தின் மேன்முறைக் கணேனை
கடியென்றார் கற்றறிந்தார்" என நாலடியார் கூறுதல் காண்க.

குடிமைபாவது-குடிமக்களதொழில் - குடிமக்கட்குச் செய்யுந்தொழில். கொடும்புலையனை - வெட்டியென்க (சரசமேதம் பிணமசுடுதல முதலிய அஞ்சாத செய்கை செய்தலின்). ஆவை - முன்னிலை ஒருமை எதிர்கால வினைமுற்று; (ஆ + வ் + ஐ) முறையே பகுதி, காலவிடைநிலை, முன்னிலை ஒருமை விகுதி.

"அம்மொழியுமன்னை மறுத்திடலுமவ்விருடி
வெம்மையழலென்ன விழிசிவந்தே —இமமணிடை
வெட்டிமைசெய பஞ்சமறகு வேகவதொழுமபாதியென
விட்டனன் வெஞ்சாபமெடுத்து" (அ-வெ).

52. (இ-ள்) (அதற்கு அரிச்சந்திரன், கொஞ்சி - கொஞ்சிக் கொஞ்சி, பேசும் - பேசுகின்ற, குழவி - மழலைப்பிள்ளையின், சொலகுறறத்தால்-சொற குற்றத்தினாலே, அன்னை - தாயானவள், வஞ்சித்து-வஞ்சனைசெய்து, வனமு-(தன்னுடைய) அழகான, முலைப்பாலினில - முலைப்பாலிலே, நஞ்சிட்டால் - நஞ்சு கலந்துகொடுத்தால், அதைநாடி - அதைத்தெரிந்து, விலக்கும-விலக்குகின்ற, நல - நல்ல, நெஞ்சுடையார் - நெஞ்சுள்ளவர்கள், இ - இந்த, நிலத்திலே - உலகத்திலே, உளரோ - உள்ளாரவரோ.

Harichandra said "If because the prattling words of a lisping child should be imperfect, its mother should insidiously administer poison in suckling it, who is there more interested besides that very mother, that would care to avert such impending catastrophe ?"

53. (இ-ள்) வாரி - கடல், காய்ந்து - வெப்பமகொண்டு, கொதித்திடின் - கொதிப்படையுமாகில், மாற்ற (அவ்வெப்பத்தை) மாற்றுதற்கு, தண்ணீர - குளிர்ச்சியாகிய நீரை, யார சருவார்கள்-(எங்கிருந்து) யார் கொண்டு வருவார்கள்? அந்நீதியில - அந்த நீதிதன்மைபோல, சீரியாய் - சிறந்த மகா முனிவரே! எனை - அடியேனை, நீ-தேவரீர், மிகச்சீறிடின் - மிகவும கோபித்துச் சபிக்கத்துணிந்தால, அஞ்சல் - நீ பயப்படாதே, என்பவர் - என்று எனக்குச் சொலலவருவார், யார் யார் - எவர்தாம் உளர்? என்றனன்-என்று சொன்னான் (அரிச்சந்திரன்).

"If the oceans should swell and surge, who can procure adequate supply of cold water to apply over it for cooling the temperature ? Even so, Oh, great muni, if you should yourself take it into your head to smite me with your curse, who else is there to cheer, sooth and comfort me ?"

(இவை யிரண்டு மொருதொடர்.)

(க-து) கொஞ்சிப் பேசுகின்ற குழந்தையானது குற்றமான வார்த்தை சொல்லிற்றென்று தாயானவள் வஞ்சனையாகத் தன முலைப்பாலில் விஷங்கல

ந்து கொடுக்க உத்தேசித்தால் அதையறிந்து விலக்கமுடியுமா? சமுத்திரமே வற்றிக் கொதித்தால் அதைத் தணிக்கத் தண்ணீர் கொடுப்பாரெவருளர். தேவரீரே என்னைக் கோபித்தால் அஞ்சேல் என்றென்னை ஆதரிப்பவர் எவரிருக்கின்றனர் என்றான் அரிச்சந்திரன் என்பதாம்.

கொஞ்சுதலாவது மழலைவார்த்தைபேசுதல். மழலையாவது நிரம்புதலில்லாதசொல். தாங்கள் பெற்ற இளங்குழந்தையை ஈன்றெடுக்குங்கால் பெண்களின்வலி அப்படிச்செய்பவரன்றாயின் அதையறிந்து விலக்கமுடியாது; என்றதனால், ஒருகுற்றமும் செய்யாத நான் சொல்லாலேயே குற்றஞ்செய்ததாகக்கொண்டாலும் தாய்போன்ற தேவரீர் என்னை இங்ஙனம் சாபமிட்டுவது அடுக்குமோ, உம்மை அங்ஙனஞ்செய்ய வேண்டாவெனத் தடுக்கத்தக்கவர் உளரோ என்பது உள்ளுறையாகக்கொள்க. இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமை. குழவி - பண்படியாகப்பிறந்த பெயர். குழ - பகுதி (இளமை), வ்-சந்தி, இ - ஆண்பால் பெண்பாலகளுக்கும் பொதுவான விகுதி.

நீர்+யார் - நீரியார், யார்+யார் - டாரியார். "தனிக்குறில் முன் ஒற்று... மெய்யும், ... முன்றுதணிநருமோரே" என்னும் விதியான இகரசாரியை தோன்றிற்று. வாரி-யார்-ஐவர், அத்தன்மையுடையது வாரி; (சகரரால்) வாரப்பட்டது என்ப பொருள் கொள்ளின் தொழிலடியாகப் பிறந்த பெயரெனக; இங்ஙனங் கொள்ளுங்கால், இ செயப்படுபொருண்மை உணர்த்தும் விகுதி எனக. கொதித்திடின்-(கொதி+த்+த்+இடு+இன்) முறையே பகுதி, சந்தி, சாரியை, இறந்தகாலங்காட்டும் இடைநிலை, துணைவினை, செயவெனெச்சவிகுதி எனவும், உகரங்கெட்டமை சந்தி எனவுங்கொள்க. யார்-இச்செய்யுளில் வினைச்சம் காரியப்பொருட்டாகலின் எதிர்காலத்தது. யார் - வினாவடியாகப் பிறந்தபெயர்; தருபவர் ஒருவரும் இலரெனக்குறித்து நின்றது.

நீக்கியில - ஐந்தனுருபு ஒப்புப்பொருளது. சிரியாய் - சீரியன் என்பது விளிவேற்றுமையில் "ஒருசாரன விளியாதல் ..." என்னும் (நன்-சூ-307) விதிப்படி சீரியாய் எனவாகது. (சீர்+இ+ய்+அன்) முறையேபகுதி, சாரியை, சந்தி, விகுதி என்க. என்-யான் என்றது வேற்றுமைப்புறமையின், என-என்பதிரிந்து வந்தது. யார்யார் இவ்வுலகத்து அறிவு எவரையுமேனாமல் சேனையுடையதுகுறிக்குமன்றி, ஒருவருமிலர் என்னும் இன்மையைப் பொருளையுங்குறித்து நின்றது.

"தன்னையாளுடைய என்னை அரசசீரிஷன் வெருமல
என்ன செவிவார்த்தா இருக்கிறதின்—என்னசுமே
கா மேதிகி வேவடிஞம் மலர்கிவன்று பெண்டிரையுன்
கூடல் என்ற கோண்குர்" (சூ-வெ.

54. (இ-ள்) சேயும் - பிள்ளையாகிய லோகிதாசனும், வேந்தும்-அரிச்சந்திரனும், திருவும் - இலக்குமி போன்ற சந்திரமதியும், அமைச்சனும்-மந்திரியாகிய சத்தியகீர்த்தியும், தாயும் - தாயும் தந்தையும்-தகப்பனும் சுற்றமும் ஆதாரமும், தெய்வமும் - தெய்வமும் ஆக, நீ-நீரே, உண்டு என்று - எங்களுக்கு உண்டாயிருக்கிறீர் என்று, நினைத்து இருக்கிறோம்-நாங்கள் எண்ணியிருக்கிறோம், என்று - என்றுசொல்லி, மேல் - முனிவர் அடிகளின்மேல், உன் பாதம் - உம்முடைய பாதமே, புகல் - எங்களுக்குக்கதி, என்று - என்று, பூண்டனர் - கைகளால் பிடித்துக்கொண்டார்கள்.

Harichandra's son Logudhasan, his Lakshmi like wife, Chandramathi, and his minister Satayakirti all threw themselves prostrate before Visvamitra's feet, placed themselves at his mercy saying, 'Oh Lord we look upon you as our father, our mother, our protecting angel and god.',

(க-து) அரிச்சந்திரனுடைய குமாரனாகிய லோகிதாசனும் அரிச்சந்திரனும் சந்திரமதியும் மந்திரியாகிய சத்தியகீர்த்தியும் "ஐயா! உம்மையே நாங்கள் தாயும் தகப்பனும் ஆதாரமும் தெய்வமுமானவர் என்று நினைத்திருந்தோம் என்றுசொல்லி முனிவரைச்சரணாகதி யடைந்தனர் என்பதாம்.

பெண்ணென்றால் பேயுமிரங்கும் பாலகனென்றால் பாவிகளும் இரங்குவர் ஆதலின் பிள்ளையும் தாயும் அடிவணங்கினா ரென்க. முன்னம் திரிசங்கு மன்னனை இரக்ஷித்த உறவைக்கொண்டு "தாயும்.. நினைந்திருந்தோம்" என்றனர். "நீயுண்டென்றுநினைத்திருந்தோம்" நீசேறின் நாங்கள் இனிஆதரவற்றோமாயினோம் என்றார் என்பதுள்ளுறை. சேய்-வேந்து-பண்பாகுபெயர்கள. திருப்போலவாளைத்த்ரு என்றது உவமையாகுபெயர். அமைச்சன்-அமாத்தியன் என்னும் வடமொழிச்சிதைவு: அமா-கூட-(அரசன்கூட), தியன்-இருப்பவன்: அரசன்கூட இருப்பவன் என்பது. அரசனுக்கு வேண்டியவைகளை யெல்லாம் அமைப்பவன் எனக்கொண்டு தமிழ் மொழியாகக் கோடலுமாம். புகழ்-தொழிலாகுபெயர். லோகிதாசன்-சிவந்தமுகமுடையவன்: (லோகிதம்-சிவப்பு, ஆசியம்-முகம்.)

55. (இ-ள்) (அப்போது விசுவாமித்திரர் அரிச்சந்திரனைப் பார்த்து), அன்னை என்பை-அப்பா நீ என்னைத் தாய் என்பாய், அரும்-அரிய, துணைஎன்பை-சகோதரம் என்பாய்; உன்முன்னை வாழ்வும்-முன்னுள்ள உனது ஐசுவரியமும், முதல்வனும்-அந்த ஐசுவரியத்தைக்கொடுத்த தெய்வமும், என்பை-என்றுசொல்வாய்: என்னை-என்னை, இபபடி - இப்படியாக உயர்த்திச் சொல்லி, வெல்பவன் - வெல்லத்தக்கவன, இ - இப்படிப்பட்ட, சமர்த்து - சாமர்த்தியத்தையுடைய, உன்னை அலலது - உன்னையல்லாமல், உண்மையே-மெய்யாகவே, கண்டிலன் - நான் வேறெவரையுங் கண்டதில்லை. மற்று - அசை.

'Oh Harichandra,' cried Visvamitra, "in sooth, I know of no other with that peculiar knack to cajole and coax another ; you make me your father, your prop, your brother, your wealth and the very giver of wealth"

(க-து அப்போது முனிவர் அரசனைப்பார்த்து "என்னை நயப்புவார்த்தைகளால் வெல்லத்தக்க சாமர்த்தியமுடையவரை உன்னையன்றிவேறு எவனையும் நான் கண்டதில்லை" என்றார் என்பதாம்.

துணை-பண்பாகு பெயர் முதல்வன்-முதன்மை என்னும் பண்படியாகப் பிறந்த ஆண்பாற்பெயர். கண்டிலன் - இது இறந்தகாலம். (காண்கின்றிலன் - நிகழ்காலம், காண்கிலன் - எதிர்காலம்).

56. (இ-ள்) (அதற்கு அரிச்சந்திரன்), கண்ணை - என்கண்களை, வேண்டினும்-கேட்டாலும், ஈகுவன் - கொடுக்கிறேன்: காக்கின்ற-நான் ஆளுகின்ற, மண்ணை - உலகத்தை, வேண்டினும்-வேண்டினாலும், வாழ்வுடன்-என் செல்வத்துடனே கூட்டி, ஈகுவன் - கொடுக்கிறேன்: யான் - நான், பண்ணை-இராகங்களை, வேண்டிய - வேண்டத்தக்க, செஞ்சொல் - செவ்விதான சொற்களையுடைய, பறைக்குலப்பெண்ணை-பறைச்சாதிப்பெண்களை, வேண்டிலன்-வேண்டேன், என்று பேசினான் - என்று சொன்னான்.

'Sire,' Said Harichandra in reply, 'I shall give up even my eyes away, my kingdom with all its wealth, but never can I bring myself to think of marrying the degraded Pariah damsels, well versed in the art of charming music."

(க-து) அதற்கு அரிச்சந்திரன் ஐயா என்கண்களை வேண்டு மாறும் கொடுப்பேன்; என் அரசியலை வேண்டுமாறும் என்செல்வத்துடனே கூட்டிக்கொடுப்பேன்; அந்தப்பறைச்சிகளை மாத்திரம் நான்வேண்டுவதில்லை என்று சொன்னான் என்பதாம்.

பறைக்குலம் - முற்காலத்துப் பறைகொட்டுவது இவர்கட்குத் தொழிலாதலின் இப்பெயர்வந்தது. இவர்கள் திராவிடர் என்னப்பட்ட தென்னாட்டுப் புராதன குடிகளுக்கு முன்னரே இங்குக்குடியேறி யிருந்தவர்களாய் அவர்களோடு ஒருவாறு ஒத்திருந்தமையின் ஆதிதிராவிடர் என்னவும்படுவர். இவர்கள் அடிமையாக்கப்பட்டு இழிவான தொழில்களைச் செய்யுமபடி நிர்ப்பந்திக்கப்பட்டபடியால் இவர்கட்கு (புலைமை - இழிவு; புலையர் - இழிதொழிலாளர்) புலையர் என்று பெயர் வழங்கலாயிற்று. உயர்குடிப்பிறப்பினர் என்னப்பட்டவர்களில் சிலர் இக்காலத்தும் கலியாணமுதலிய காலங்களில் ஒருவாறு அனுசரித்துவரும் முறைமைகளை நோக்கும்போது பறையர் என்னப்படுவோர் ஒருகாலத்தில் சற்று நல்ல அந்தஸ்துடையவர்களாகவே இருந்திருக்க வேண்டும் என்று Bishop Caldweld என்னுமின்றனர். மணி-கருவியாகு பெயர். ஈகுவன்-(ஈ+கு+வ்+அன்) கு - சாரியை, வ்-எதிர்கால இடைநிலை.

57. (இ-ள்) மன்னர்மன்னன்-இராஜாதிராஜனான அரிச்சந்திரன், உரைத்திட-அப்படியென்று சொல்ல,(அதனைகேட்டவுடனே), மாதவன்-மகாதவசிரேஷ்டராகிய விசுவாமித்திர முனிவர், அன்னதே-(அரசை வேண்டினும் கொடுக்கிறேனென்று சொன்ன) அப்படிப்பட்ட வார்த்தையே, நமக்கு ஆம் என்று-நமக்குச் சம்மதமென்று, அவா உறீஇ-அன்படைந்து, சொன்னதே-சொன்னதே, அமையும் - போதும்; கடல் - கடல், சூழ் - சூழ்ந்த, புவி - உலகமெல்லாம், என்னதே - என்னுடையதே ஆயிற்று, என்று - என்று, எழுந்து எழுந்து - எழுந்தெழுந்து, ஆடினான் - கூத்தாடினார்.

Visvamitra on hearing those words from the king of kings, jumped elated with joy, saying " Harichandra, highly pleased am I at your words ; so the whole of your sea-girt kingdom is at my disposal."

(க-து) அரிச்சந்திரன் சொன்ன வார்த்தையைக் கேட்டமாத்திரத்திலே விசுவாமித்திரர், "அப்பா! நீ என்னிடம் அன்புடையவனாய் அரசை வேண்டினும் தருவதாகச்சொன்ன சொல்லே போதும்" என்று சொல்லி "இனி இந்தப்பூலோகமெல்லாம் என்னுடையதே" என்று ஆநந்தக்கூத்தாடினார் என்பதாம்.

மன்னர்மன்னர் - மன்னர்க்கு மன்னன் King of Kings, also like the Persian Shah of Shahs

மாதவன்-மஹாதபச்செல்வமுடையவன்.அவாவுறீஇச்சொன்னதாவது-"மண்ணை...ஈகுவன்" எனமுன்பாட்டில்சொன்னது. அவாவுறீஇ-என்பதை விசுவாமித்திரர்க்கு ஏற்றினும் அமையும். அன்னது - இடைச் சொல்லடியாகப்பிறந்த ஒன்றன் படர்க்கைக் குறிப்பு வினையாலணையும் பெயர்; (அன்+ன்+அ+து) அன்-பகுதி, ன் - சந்தி, அ - சாரியை, து-ஒன்றன்பால்விகுதி. சொன்னது - இறந்தகால ஒன்றன்பால் வினையாலணையும் பெயர்; சொல் - பகுதி, லகரம் - னகரமானது சந்தி, ன் - இறந்தகால இடைநிலை, அ-சாரியை, து - ஒன்றன்பால்விகுதி. என்னது ஒன்றன்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

58. (இ-ள்) மருவும்-உனவசமாக இருக்கிற, நாடும்-கோசல நாட்டையும், வளம்-வளமைகொண்ட, நகரும்-அயோத்திமா நகரத்தையும், பெருநம்-பெரிதான, திருவும்-செல்வத்தையும், ஈகுவன் - தருவேன், என்றனை-என்றுசொ

என்றும், செல்வியோய் - செவ்வியக்குணத்தையுடைய அரசனே! தருவன்னென்று - (இப்படித்) தருகிறேனென்று சொன்ன, மொழிதவறுமல் - சொல் பொய்யாமல், உன - உன்னுடைய, அரசு - அரசாட்சியை, அளிக்கின் - கொடுத்தால், அமையும் - போதும், எனக்கென்றுன - என்று சொன்னான்.

"Harichandra full of amiable attributes" continued he, "you have promised to place the kingdoms of Kosala, and Ayodhya, with all their wealth at my feet, it is enough if you will make good your word in that respect"

(கருத்து) [illegible] முதலியவைகளைத் தருவதாகச் சொன்னபடி, சொன்ன சொல்தவறாமல் உன்னுடைய அரசாட்சியைக் கொடுக்கல் போதுமென்று சொன்னான் விசுவாமித்திரன் என்பதாம்.

சொன்னேர் - சொல்லுதலிலேசான (சொன்னோர்) [illegible] - இடப்பெயர், [illegible] விளக்கு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] எனும் [illegible] [illegible] [illegible] [illegible] விளைமுறை: [illegible] + [illegible] + அ + [illegible] [illegible], [illegible], சாரியை, விகுதி எனக் செவ்வியோய் - [illegible] [illegible] செவ்வியன)

[illegible] (இ-ள்) அரசனானவன் (அடியேனிடத்து [illegible] விசுவாமித்திரரை, கோசல-[illegible] [illegible] [illegible] அரிச்சந்திர மகாராஜனும், உந்தம் - [illegible] [illegible] [illegible] - [illegible], [illegible] - [illegible], [illegible] - [illegible] [illegible], [illegible] [illegible] - [illegible], நாடு- நாட்டையும், [illegible] [illegible], [illegible] செல்வத்தையும், தந்தனை - [illegible] [illegible] - [illegible], தப்புவது - தவறுகிறது, இல - இல்லை, என்றான் - என்று சொல்லினான்.

Harichandra said, On [illegible] [illegible] [illegible] exhortation of yours, to marry the low caste damsels, [illegible] anything you may require of me, my kingdom with all its wealth [illegible] hence forth yours, my words shall be fulfilled to the very letter

(க-து) அரிச்சந்திர முனிவரைப் பார்த்து "[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]" என்று சொன்னான் என்பதாம்.

[illegible] [illegible] [illegible] [illegible] (இசுவாகுவின் குலத்திலே [illegible] [illegible] [illegible]) [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] துணிவென்றும் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இயற்றிப் புடைய [illegible] இது [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. இ[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] தப்பைக்கு சமானமாகக் கொண்ட [illegible] [illegible] [illegible] [illegible] - [illegible] [illegible] (ப + அ + ல் + அ + து) - அ இரண்டும் சாரியை, து - தொழிற்பெயர் விகுதி.

(இவ்விகுதி மற்ற இரண்டுகால இடைநிலைகளோடும் சேர்ந்துவரும். மை-என்னும்தொழிற்பெயர் விகுதி இறந்தகால நிகழ்கால இடைநிலைகளோடு மாத்திரம் சேர்ந்துவரும். மற்றையதொழிற்பெயர் விகுதிகளெல்லாம் காலஇடைநிலைகளோடுசேரா.)

60 (இ-ள்) (அதற்கு), கௌசிகன்-விசுவாமித்திரர், பாரை-உலகத்தை, வார்த்தையினால்-வாய்ச்சொல்லாலே, ஈதல்பாலதோ-கொடுக்கத்தக்கதோ? தாரை வார்-நீ தாரைவார்த்துக் கொடுக்கவேண்டும், என-என்று, சாற்றிட-சொல்ல (அரிச்சந்திரன்), நாரைவாய-நாரைகளின்மேல், கயல் பாய்-கெண்டைகள், பாயும்-துள்ளிவிழுவனவான, நறும-நன்மையுடைய, தடநீர்-(அந்தக்) குளத்து நீரை (கொண்டுவந்து), நீள்புவி-உலகத்தையெல்லாம் ஆள்க என்று-ஆளுகை செய்யக்கடவீர் என்று, வார்த்தனன்-தாரை வார்த்துக்கொடுத்தான்.

'Oh no said Vi vamitri a mere verbal promise of gift is not valid or binding unless ratified by the due ceremony of pouring water on my hands to give it effect. Whereupon Harichandra fetched water from the tank hard by where water fowls and fish were sporting, and the gift was made and sanctified with the proper ceremony.

(கருத்து) உலகத்தை வாய்ச்சொல்லாலே கொடுக்கத்தகாது ஆகையால் நீ தாரைவார்த்துக் கொடுக்கவேண்டும் என்று விசுவாமித்திரர் சொல்ல, அரிச்சந்திரன் அண்டையில் உள்ள குளத்தில் நீரைக்கொண்டுவந்து அப்படியே தாரைவார்த்துக்கொடுத்தனன் என்பதாம்.

பத்திரமுதலிய சாதனங்கள் ஏற்படாத பழங்காலத்தில் நிலமுதலியன வற்றைத் தானமாகக் கொடுப்பவர் ஒருவருக்குக் கொடுப்பதற்கு அந்த நாடுகளில் வெவ்வேறு சடங்கு ஒரு பிரமாணமாக இருந்தது. அந்தச் சடங்கின்படி செய்துகொடுத்தால் ... இந்நாட்டிலே "என் சொத்தை இவருக்குக் கொடுத்தேன்" என்று சொல்லி தாரைவார்த்துக் கொடுக்கிறேன் என்று கொடுக்கும் வழக்கம் ... ஆகையால் "பாரை ... தாரைவார்" என்று கூறினார். இப்போது "தாரைவார்த்துக் கொடுத்தான்" என்ற வழக்கு ...

'சொன்னமொழி தப்பாமல் தோன்றலே ஈங்கு
மன்னரசை நீர்வார்த்து நல்கெனவே—என்னமுனி
சொற்றிடலுங் கேட்டிச் சுடர்முடிவேந் தேந்தி
மற்றவனைச் செய்தான் மகிழ்ந்து' (அ. வெ)

61 (இ-ள்) இனி, வையம்-இந்த உலகமும், நின்னது-உம்முடையது, மாநகர்-அயோத்திமாநகரமும், நின்றது-உம்முடையது, வெய்ய-கடுமையுடைய, வாசியும்-குதிரைகளும், வேழமும்-யானைகளும், நின்ன-உம்முடையன, பொன்-பொன்னாலமைந்த, செய்ய-செவ்வையான, தேர்களும்-தேர்களும், செல்வமும்-செல்வமும், சேவிக்கும் ஏவலாளர்களும், பணிவிடைசெய்கின்ற தையலார்களும்-பெண்களும், தானையும்-சேனைகளும், நின்னவே-உம்முடையனவேயாம்.

Harichendra poured water into Visvamitra's hands, saying 'This kingdom of mine, with all the swift horses, elephants, magnificent golden cars, inexhaustible riches, my attendants, maids of honour and army, is yours."

62. என்று இயம்பி - என்றிப்படியாகச் சொல்லி, மன்னன் - அரசன், இறைத்த - வார்த்த, நீர் - தாரைநீரை, அன்று - அப்போது, கௌசிகன் - விசுவாமித்திரர், அங்கையில் - உள்ளங்கையிலே, ஏற்றபின் - ஏற்றுக்கொண்ட பின்பு; நின்ற - தம்முடனே கூட நின்ற, மாதவர்தங்களை - மாதவமுனிவர்களை, நேர்குறித்து - நேரேவரச்சொல்லி, இன்று - இப்பொழுது, நீர் - நீங்களெல்லாரும், எழுந்து - எழுந்தெழுந்து, ஆர்த்திடும் - காஜ்ஜனை பண்ணுங்கள், என்றனன் - என்று சொன்னார்.

Visvamitra, after receiving the water in his hands, summoned all the sages that accompanied him, to appear before him, and told them all to jump and demonstrate the exuberance of their joy, by loud acclamations.

இவையிரண்டு மொருதொடர்.

(க-து) இனி என்னுடைய நாடுநகர முதலானவெல்லாம் உமக்குச்சொந்தமென்று அரிச்சந்திரன் சொல்லிவார்த்த தாரைநீரை விசுவாமித்திரர் தம்முடைய உள்ளங்கையில் ஏற்றுக்கொண்டபிறகு தம்முடன் வந்த முனிவர்களை ஆரவாரிக்கும்படி சொல்லினார் என்பதாம்.

நின்னது - ஒருமை; ஒன்றன்பால் குறிப்புவினைமுற்று: (நின் + ன் + அ + து) நின்ன - பன்மை: பலவின்பால் குறிப்புமுற்று: அ - பலவின்பால்விகுதி. செல்வம் - கைக்குக் கை செல்வது: பண்டமாற்றலில செலாவணியாவது. பண்டமாற்றலில் செலாவணியாகாதன பயன் படாமையின் செலாவணியாவனவே செல்வமென்க. சேவிக்கும் தையலார்கள் - பணிப்பெண்கள் - தாஸ்யைகள். தானை - ஸ்தானு எனனும் வடமொழி. சகலபொருளும வைத்தற்கு இடமாயிருத்தலால் பூமி வையம் எனப்பட்டது. வெய்ய - செய்ய - முறையே வெம்மை செம்மை என்னும் பண்படியாகப் பிறந்தகுறிப்புப்பெயரெச்சங்கள். அங்கை - (அகம் + கை) "அகமுனாச செவிகை வரி னிடையனகெடும்" (ந-சூ-222) என்னும் விதியான் அகம் என்னும் இடப்பெயர்முன் கை என்னும் சினைப்பெயர் வந்ததினால நிலைமொழி இறுதிமகரம "வன்மைக்கினமாத் திரிபவுமாகும்" என்னும் விதிபபடி ங் ஆகத்திரிந்து, இடைநின்ற ககர மெய்யும் அகரவுயிரும்கெட்டு அங்கை எனவந்தது.

63. (இ-ள்) கோசிகன் - விசுவாமித்திரர், இன்னே - இவ்வகை, கூறிய பின் - சொன்னபினபு, மாசனர் - அந்தமகாஜனங்களெல்லாம், கூகூவென்று - பெருங்கூச்சலாக, ஆசிகள சொனனா - (அரிச்சந்திரனுக்கு) ஆசீர்வாதங்களைச் சொன்னாகள்: ஆடினர் - கூத்தாடினார்கள, ஆர்த்தார் - காஜ்ஜனை பண்ணினார்கள்: அணி - தாங்கள் உடுத்தியிருந்த, ஆடை - வஸ்திரங்களைக்கொணடு, வீசினர் - வீசினார்கள்; நீயே - நீயே, மேல்மகன் என்று - மேன்மகனானவனென்று, மேன்மேலும் - மேலுமேலும, பேசினர் - கொணடாடினார்கள்: பேசி - அப்படிக் கொண்டாடி, பெரிது - மிகவும், நேசம் - (அரிச்சந்திரனிடம்) பிரியம், உற்றார் - கொண்டார்கள். ஏ - அசை.

The host of sages, accordingly set up loud shouts of joy, showered their blessings on Harichandra, fanned him with their cloths, called him a precious gem among mankind, and lavished their kindly feelings on him.

(க-து) விசுவாமித்திருடைய வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் தபசிகளெல்லாம் பேரிரைச்சலாய் அரிச்சந்திரனுக்கு ஆசீர்வசனங்கள்சொல்லி

ஆக்ததத்தாண்டவஞ்செய்து அணியாடைவீசி அரிச்சந்திரனை "நீயே புருஷோத்தமன்" என புகழ்ந்து அவனிடம் பிரியமிக்க கொண்டவர்களாயினார்கள் என்பதாம்.

கூகூ - ஒலிக்குறிப் பிடைச்சொல் இது அடுக்கியே வருவது காண்க மேனமேலும் - மிகுதியையும் இடைவிடாமையையும் குறித்து அடுக்கிவருகின்றஇடைச்சொல்

64 (இ ள்) வாரணமும் யானைகளும், திண-பலமான, தேர்-தேர்களும், பரி குதிரைகளும், தேசம் தேசமும், வளன் எல்லாம் அதிலுள்ள எல்லாசம்பத்துகளும், ஆரணம் ஓதும் வேதபாராயணஞ்செய்கிற, கௌசிகனுக்கு விசுவாமித்திரருக்கு, ஆயின-வசமாயின, என்று - என்று கொண்டசந்தோஷத்தினால்), துறவோர் - அநதததுறவற முனிவர்கள், வீதிகள்தோறும் - தெருக்களெல்லாம், பூரண குமடம - நிறைந்த நீர்க்குடங்களை, பொலிவித்து - நிறையவைக்கச்சொல்லி, தாரணி எங்கும்-உலகமுழுதும், தோரணம் இட்டார் தோரணங்களும் கட்டினார்கள், ஏ வ-அசை.

The kingdom with its elephants, horses and riches having passed in the possession of Visvamitra the reciter of Vedas the sages ordered pots filled with water to be placed along the streets, and adorned the whole kingdom with festoons and buntings

(க து) யானைமுதலானவைகள் விசுவாமித்திரருக்குச் சொந்தமானசந்தோஷத்தால் மறைமுனிவர்கள் அங்கங்கே பூரண குமபங்களை வைப்பித்துததோரணங்களும் கட்டினார்கள் என்பதாம்.

பூரணகுமபம-பூரணகலசம- நீறைகுடம full pot of water, used on auspicious occasions. தாரணியெங்குமுள்ள துறவோர்கள் பொலிவித்து இட்டார் எனக்கூட்டி யுரைபபதுமாம்,

65. (இ ள்) மெல் - மிருதுவான, நடை - நடையிலேலே, அனனம-அனனமபோன்று, நல நடையாளை நலல இல்லறத்துக்கேற்ற செய்கையையுடையசந்திரமதிக்கும், விறலானை வெற்றிகொண்ட அரிச்சந்திரனுக்கும், முன அடையா - முனசென்று, நின்று நின்றுகொண்டு, இன்னவை - இவ்விதவார்த்தைகளை, பின்னும பின்னும், முனி - விசுவாமித்திரர், கூறும-சொல்லுகிறார். (அதாவது), என் எனக்குச்சொந்தமான, நகரினதே அயோத்தியிலிருந்து, இ-இந்த, உலகு எல்லாம உலகத்தையெல்லாம், யான்-நான், ஆள-ஆளவதாக, மாறுநெறி தபபாத மா சுகத்துடனே, நின-உன்னுடைய,அடையாளம - அடையாளத்தை, நந்திடு - கொடு, என்று-என்று சொன்னார்.

Visvamitra stood before Chandramathi of graceful swan like gait, the pattern of conjugal bliss, and Harichandra, the achiever of victories, and asked for a tangible proof for his having been made the sole ruler of their kingdom.

(க-து) சந்திரமதி அரிச்சந்திரன் ஆகிய இருவருக்கும் எதிரிலே போய் "அயோத்தி இனி இவ்வுலகத்தை, அரசு செய்யஅடிப்படையான உன்னுடைய, அடையாளத்தைக்கொடுப்பாய்" என்றுசொன்னார் விசுவாமித்திர முனிவர் என்பதாம்.

மென்னடையுடைய அன்னத்தைப் போன்ற நல்ல நடையாளை என்பதுமாம். அடையாளந்தந்திடு,இதுதாளமாறுநெறிஎனபிரிந்துபொருள்சொல

வுதுவுமாகும். முத்திரை பொறிக்கும் மோதிரத்தைப்பெற்றாலல்லாமல் அரசு பெற்றபடியாகாது ஆகையால் அரசின அடையாள மாகின்றதைக் கொடுக்கும்படி கேட்டான்.

66. (இ-ள்) பார் - உலகம், உள்ளமட்டும்- உள்ளளவும், அழியாதான் - அழியாதிருக்கிற மெய்யென்னுங் கீர்த்தியைக்கொண்ட அரிச்சந்திரமகாராஜன, என்-என்னுடைய, வாழிய - வாழ்வை யுடையதான, நாடு - நாட்டையும, ஊர்-ஊரையும், செலவம - செலவத்தையும், அமைச்சு - மந்திரிமார்களையும், மா-பெரிதான, சேனை - சேனையையும், குழி-முகபடாமணிந்த, நெடும் - நீண்ட, கை-துதிக்கையை உடைய, போர் பலமுள்ள, மதவேழம-மதயானைகளையும், துரகம் - குதிரைகளையும், தேர் இரதங்களையும், ஊழியின்மட்டும்-ஊழி காலத்தளவும், ஆளுதி - நீரே ஆளக்கடவீர். தந்தேன் - இதோ (அடையாளத்தையும்) கொடுத்துவிட்டேன, உனது என்றே-உமக்குச்சொந்தமாகவேயென்று சொல்லி, ஆழி-தனகையிலுள்ள மோதிரத்தையும,அளித்தான்-கொடுத்தான்.

Harichandra of immortal and world-wide fame for his stubborn and rigid veracity presented his ring to Visvamitra as a token of proof, saying "The thriving kingdom of Kosala, with its overflowing wealth, sagacious ministers, huge armies, richly caparisoned elephants of long trunks and huge sizes, horses, cars, have become yours, till the destruction of the world."

(க-து) அரிச்சந்திரன் "சுவாமி! நாடுமுதலியவைகளை ஊழிகாலம்வரையில் ஆளும். இதோஉம்முடையதென்றே அடையாளத்தையுமகொடுத்தேன்" என்று சொல்லிக் கணையாழியைக் கழற்றிககொடுத்தான் எனபதாம்.

வாழிய-முன்னிலை யசையாகவும்,வியங்கோளாகவும் கொள்வதும்அமையும். ஆழி-(சமுத்திரம் என்னும் பொருளில ஆழமுடையது என்பது)விரலில் ஆழ்வது ஆதலின மோதிரத்திறகுப பெயராயிறறு: அலலதூஉம், முத்திரை பொறித்தற பொருட்டு எழுத்துககுறியும் ஆழமாக குழித்திருத்தலின் அரசர் மோதிரத்திற்கு ஆழி எனப்பெயா வநதது என உதகேதசிககககூடும். சத்தியத்துக்கு அரிச்சந்திரன என்றபூமி யுளளளவும் எடுததுககாட்டப்படுதலின் "பாருளமட்டும் அழியாதான்" என்றார்.

67. (இ-ள்) குடை - என்குடையையும், தந்தேன் - கொடுத்தேன், நீள்-நீண்ட, கொடி -கொடியையும், தநதேன்-கொடுததேன், என் -என்னுடைய, குழுவாய - கூட்டமாகிய, படை - சேனைகளையும், தநதேன் - கொடுததேன், நல்-நல்ல, கனகம் - பொன்மயமாகிய, இன் - பலங்கொண்ட, தேர்பரி-தேர்குதிரைகளையும், தந்தேன்-கொடுத்தேன். தடைதநதேன் இன்று-இதற்கு யாதொருதடையும் சொல்வதில்லை. (இனி) அடியேன்-அடியேன், ஏக-போக, விடைதந்து - விடைகொடுத்து விட்டு, தவனே - முனிவரே! நீ - நீர், ஏக என்று - போகலாமென்று, அடிமேல் - அவா பாதங்களினமேல், பரவி- துதிசெய்து, வீழ்வான் - விழுகின்ற அரிச்சந்திரனை;

Harichandra throwing himself before Visvamitra's feet, then begged leave of him to go, reiterating once more, "My umbrella, stately flag, vast armies, glittering car-horses are all yours ; I give them to you unstintedly without any hesitancy."

68. (இ-ள்) துணியும்-துணிவுகொண்ட, தனி-ஒப்பில்லாத, நெஞ்சஉடையான் - கடினசித்தரான விசுவாமித்திரர், (அரசனே!) நினது - உன்னுடைய,

தோள் - தோளிலுள்ள, மாலை மணியும்-மணிமாலைகளையும், வளையும்-கங்கணங்களையும், வலயங்களும் - கேயூரங்களையும், நின் - உன்னுடைய, வடி-கூரிய, வாளும்-வாளாயுதத்தையும், அணியும் - ஆபரணங்களையும், முடியும் - கிரீடத்தையும்; சேயும் - உன்பிள்ளையும், தாயும்-அந்தப் பிள்ளையைப் பெற்றதாயும், அணியும் - அணிந்தனவான, பொன் மணியும் - பொன் ஆபரணங்களையும்; கழலும் - வீரகண்டா பணியையும்; தந்து- கொடுத்துவிட்டு, ஏக என்று-போவென்று, பல - பலவாறாக, சொன்னான் - சொன்னார்.

The stone-hearted Visvamitra next pressed Haricbandra, to give up to him his pearl necklaces, bangles, sharp, glittering sword, crown and other jewels, together with the gold ornaments worn by his wife and son,

இவை யிரண்டு மொரு தொடர்.

(க-து) "எல்லாங்கொடுத்து விட்டேன் இனிநான் போகிறேன் விடை தருக" என்று சொன்ன அரிச்சந்திரனைப்பார்த்து விசுவாமித்திரர், "நீயும் உன் மனைவியும் மகனும் அணிந்திருக்கின்ற ஆபரணங்களை யெல்லாங் கொடுத்து விட்டுப்போவாய்" என்று சொன்னார் என்பதாம்.

அணியும்-அணியும் பொன். செய்யும் என்வாய்பாட்டுப் பெயரெச்சம். சேய்-தாய்-எழுவாய்.

69. (இ-ள்) இவை-இவைகளெல்லாம், எத்துக்கு என்று-என்னத்துக்கென்று வெறுத்து, அணி-தானணிந்திருக்கிற, மாமுடியும்- பெரிய கிரீடத்தையும், வடி-கூரிய, வாளும்-வாளாயுதத்தையும், புத்தி - புத்திசாலியான, புதல்வன் - (தன்) புத்திரன், பூணும்-அணிந்திருக்கும், பணியும்-ஆபரணங்களையும், புனை- அலங்கிருதமுள்ள, மாதின- மனைவியின, பத்தி - வரிசையாக, கிரணம் - ஒளி வீசுகின்ற, பணியும்-இரத்தினாபரணங்களையும், கனகம்பணியும் - பொன்னாபரணங்களையும், வெண்-வெண்மையான, முத்தின் பணியும்-முத்தாபரணங்களையும் கழியா-கழற்றி, முனிவன்முனம்-விசுவாமித்திரர் முன்னே, உய்த்தான் - வைத்தான்.

With an air of disgust, Harichandra placed before Visvamitra his big crown, the ornaments of his smart son, and those of his wife, which shone resplendent in variegated colours jewels of gold, and white pearl necklaces.

(க-து) இவைகளெல்லாம் எங்களுக்கேனென்று வெறுப்புடைய அரிச்சந்திரன் அப்படியே ஆபரணங்களை யெல்லாங்கழற்றி முனிவர் எதிரில்வைத்தான் என்பதாம்.

எற்றுக்கு என்றபாலது எதனைநோக்கி எத்துக்கு எனவந்தது. கழியா - செய்யா எனனும்வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். மாமுடி-என்றார்மன்னர்மன்னனான சக்கரவர்த்தியின முடியாதலின். புத்திப்புதல்வன்-என்றார் அவனும் வயதிற்சிறியனாயிருந்தும் இவ்வணிகலன்களைக் கொடுக்கச்சம்மதிக்க மாட்டேனென்றழாமல் வாளா இருந்தமையினாலே.

இவ்வுலகையாளு மெங்கள் நினதாழிமுடி
தெவ்வடுவாள் கேயூரஞ் செய்யகழ — னவ்விவிழி
மாதணியு மெமக்கீந் மணிப்பணியுந் தா வென்றான்
மாதவன் உள்ளவ்வுதனைப் பார்த்து. (அ வெ).

70. (இ-ள்) (அதன்மேல் விசுவாமித்திரர்), அரசே-அரசனே! உனையும்-உன்னையும், மடம்-இளமைபொருந்திய, மாதினையும்-(உன) மனைவியையும், உன்-உன்னுடைய, மைந்தன்தனையும் - புத்திரனையும், விடுதற்கு - நான் விடும்படியாக, அணியும் - அணிந்திருக்கிற, பணி-ஆபரணங்களை யெல்லாம், நீ தந்தாய்-நீ கொடுத்துவிட்டாய், (சரிதான்). வினையும் - கட்டின, கழலாய் - வீரகண்டாமணியை யுடையவனே! மகனும் - உன்மகனும், நீயும் - நீயும், மடவாளும் - உன்மனைவியும், புனையும் - கட்டியிருக்கிற, கிரணம் - ஒளிபொருந்திய, கலை - வஸ்திரங்களை, தந்து - கொடுத்துவிட்டு, அகல - தூரமாக, போ- போகக்கடவாய், என்றான் - என்றுசொன்னார். காண் - முன்னிலையசை.

"Oh king wearing badges of valour, it is true you have given away all the ornaments, to have yourself, your adolescent wife and son liberated," said Visvamitra, "but you should also give up the glittering cloths worn by yourself, your wife and your son."

(க-து) "உங்களை விடுதற்கு ஆபரணங்களை யெல்லாம் கழற்றிக் கொடுத்துவிட்டாய். சரிதான் நீங்கள் கட்டியிருக்கின்ற சோதியான வஸ்திரங்களையும் கொடுத்துவிட்டு அகன்றுபோகலாம்" என்று சொன்னார் விசுவாமித்திரர் என்பதாம்.

"அணைவகை எல்லாம் அளித் தின்ற கோமானைப்
பிணைருமக காதிசுதன் பேசினன்கண் — டின்னவைமன்
வீடுபெறத் தந்தனை நீ மெல்லியலசேய் சாத்துவிலை
நீடுடையை நீட்டியகல் என்று." (அ - வெ).

71 (இ-ள்) ஊரை-ஊரையெல்லாம், அளித்த-ஆண்ட, காவலன்-அரசன், நின்று-அங்கேநின்றுகொண்டு, அரனே சிவனே சிவனே! ஆடை-நாங்கள் கட்டியிருக்கிற வஸ்திரங்களையும், அளித்தால் - கொடுத்துவிட்டால், ஆரை - (இனி)யாரிடத்திலேபோய், இரப்போம - (உடுத்திக்கொள்ள வஸ்திரங்கொடு என்று)கேட்போம், என்று - என்று எண்ணி, உயிர்சோரும் தாரை-ஆவிசோர்கின்றது போலாய் அழுகின்ற கண்ணீர்த்தாரையை, நினைந்து - கண்டு ஆலோசித்து, கௌசிகன் - விசுவாமித்திரர், ஆங்கு - அப்போது, தான்மூடும் - தாம் தம்முடைய அரையை மூடியிருக்கிற, சீரை - மரவுரியை, கிழித்து - துண்டித்து, மூவகை இட்டு - மூன்றுபங்கு செய்துகொடுத்து, செல - (அவர்கள் உடுத்துக்கொண்டு) போகும்படி, உய்த்தான் - அனுப்பினார்.

"Oh Siva, where shall we go a-begging for cloths, if we are sent a-drift, deprived of our cloths," cried the ruler of the earth, with tears streaming down his cheeks." Seeing the king drooped in spirits, Visvamitra took off his bark raiment and tearing it into three pieces sent them away with them.

(க-து) அரிச்சந்திரனானவர் "கட்டியிருக்கின்ற ஆணியையும் அவிழ்த்துக்கொடுத்துவிட்டால் ஐயோ சிவனே கட்டத்துணி வேண்டுமென்று எவரிடம் போய்க்கேட்போம்" என்று மனம் ஏங்கிக்கண்ணீர்சொரிகிற குறிப்பையறிந்த விசுவாமித்திரர் தாம் உடுத்திருந்த மரவுரியை அவிழ்த்துமூன்று துண்டாகக்கிழித்துக் கொடுத்தார் என்பதாம்.

"உயிர்நீப்பின் வாழாக்கவரிமா வன்னார் உயிர் நீப்பர் மானம்வரின்" ஆதலின் இம்மானம் பொறுமல் அரசன் உயிர் சோரவன்: நம்முடைய காரியங்கை கூடாது என்றஞ்சியே இது செய்வானுயினான் விசுவாமித்திரன் என்க. தான்

மூடும் சீரை என்றதனால் அதன் பற்றுமை கூறியவாறு. காவலன் - (காவல் + அன்) காத்தலையுடையவன். கா + வலன் - எனப்பிரித்துக் காத்தலில் வல்லவன் எனக்கூறலுமாம்.

"ஆரையினிப் போயிரப்போ மாடையளித்தாலெனக்கோன்
கூறுநாக்கொண்டா னுணர்ந்து கோசிகனாரன்—சீரையினை
மூவகையாகக் கிழித்திட்டா னேற்றான் முனியாது
தாவில்திரி சங்குமகன் றாழ்ந்து" (அ - வெ)

72 (இ-ள்) நாறல் - நாற்றமடித்த, பாழ்ந்துணி - பழந்துணியாய, சீலைப்பேன் - சீலைப்பேன் ஒருநாள் - ஒருநாளும், மாறு - போகாமல் மொய்த்துக்கொண்டிருக்கிற பீறல் சீலை - கிழிந்த வஸ்திரம், இது - இது, ஆருக்கு என்று - யாருக்குத் தகும் என்று, உரை - யாதொரு பேச்சும், பேசாமே - பேசாமல், மாறல் காலம் - நமக்கு எல்லாம் மாறிப்போகிற காலம், இதாகி - இப்போது வந்தது ஆனால், செய்வது - நம்மாலே செய்யத்தக்கது, மற்று - வேறு, என் - யாதிருக்கிறது, என்று - என்று கூறற்கு - (எல்லாரும்) சொல்லுதற்கு ஆம் - தகுந்த இசை - கீர்த்தியை பூண் - பூண்கின்ற அ - அந்த, கோன் - அரசன், அது - அந்த வஸ்திரத்தைக் கொண்டான் - உடுத்திக்கொண்டான் ஏ - அசை.

Without a word of murmur against the begrimed and tattered rags, emitting bad odour Harichandra of world wide renown wore them thinking he should accept inevitable evils with what grace he could command and with calm resignation

(க-து) "இது நாற்றமடித்த பழந்துணி ஒருநாளும் சீலைப்பேன் நீங்கப்பெறாத கந்தை இது யாருக்கு வேண்டும்" என்று வெறுக்காமல் "காலவிதியாசம் இப்படியானால் நம்மால் ஆவதென்ன இருக்கிறது" என்று திருப்தியடைந்து அரிச்சந்திரன் அந்த மரவுரியை ஏற்றுக்கொண்டான் என்பதாம்.

கூறற்காமிசை - சத்தியந்தவறாதபடி இப்படியும் செய்தானே கண்டீர் என்று உலகினர் சொல்லுதற்கு ஆகும் புகழ் பூண் - என்பதனை வினையெச்சமாக்கிப் பொருள்கொள்ளுதலும் ஒன்றாம் பொருந்துமாயினும் பொருள் சிறப்பின்மையறிக. பாழ்ந்துணி - பண்புத்தொகை நிலைத்தொடர்; பழந்துணியெனவிரியும் "பழமுன்னாகச் சுத்தய வலைழி &c" (ந - சூ - 224) என்னும் விதியில் 'மேல்' என்ற மிகையால் உறழுமெனக. பேசாமே - (பேசு + ஆ + மே) மே - வினையெச்சவிகுதி. மற்று - பிறிது பொருளது. கோன் - னகரமசாரியை.

73 (இ-ள்) காவிச்சீரை - (அப்படி அவர் கொடுத்த) காவிவஸ்திரத்தை, உடுத்து - உடுத்திக்கொண்டு, கூறை - (தான் உடுத்தியிருந்த) வஸ்திரத்தை, கழித்து - அவிழ்த்துக்கொண்டு, சென்று - போய், சேனை - சேனைகளானவை, ஆவிக்கு - தம் உயிருக்கு, ஆகுலமாக - வியாகுலத்தோடு அழுங்க - வருந்துகின்றதைப் பார்த்துக்கொண்டு, பாவி - பாவியான, கோசிகனார் முனி - விசுவாமித்திரருகிலே, போய் - போய், ஒருபால் - ஒருபக்கத்திலே, வைத்து - வஸ்திரங்களையெல்லாம் வைத்துவிட்டு, தாவி - விரைவாக, தாள் இணை - (அவருடைய) பாதங்கள் இரண்டையும், பூசித்து - பூசைபண்ணிக் கும்பிட்டு, விடை தா - உத்தரவு கொடும், என்றான் - என்றுகேட்டான் ஏ - அசை.

Changing their cloths in rich purple for the bark raiments, Harichandra for whom the whole army felt bitter commiseration, went before Visvamitra, and after placing the cloths before him, and worshipping at his feet, begged permission of him to go.

(க-து) காவிவஸ்திரத்தை உடுத்து கூறையைக்கழித்து விசுவாமித்திரர் முன்னிலையில் ஒரு ஒதுக்கிடத்தில் வைத்து அவர்பாதங்களை வணங்கி விடை தரும்படி வேண்டினான் அரிச்சந்திரன் என்பதாம்.

காவிச்சீரை - (காவி என்பது காவிக்கல் i. e. செம்மண் கலந்துள்ளகல்) செம்மண்கரைத்த நீரிலே தோய்த்த சீலை. இது காவுக்கலிங்கம் எனவும் படும். ஆகுலம் - வ்யாகுலம ஒன்றும் வடமொழி. தாவுதலாவது - பாய்தல்: இங்கே விரைவின்மேலது.

"தானுந்தனிமகனுந் தையலுஞ் செங்கற்றுணியை
மானங்கெடாமை மகிழ்ந்துடுத்தார்—வானுமண்ணும்
போற்றுமிறை பிற்சூழ்த்த பொறுகலையைக் கொண்டுவைத்தான்
ஆற்றலறவோன் முன்பணிந்து." (அ - வெ).

74 (இ-ள்) தா - (பிறவிக்)குற்றத்தை, வென்றான்-வென்றவராகிய விசுவாமித்திரர், விடைதந்தேன் -உனக்கு உத்தரவு கொடுத்தேன்: நீ-(இனி)நீ- ஒரு சார்பு ஊடு - ஒருபுறத்திலே, போ - போவாயாக, என்றான் - என்றுசொன்னார். (அப்போது), இதுவே - இதுதான், நலன் - நல்லகாலம், என்று - என்று நினைத்து, போவானை - போகின்ற அரிச்சந்திரனை, வா - (அரிச்சந்திரா) இங்கேவா, என்றான் - என்றார். அது - அந்தச்சொல்லை, கேளா - கேட்டு, மீளவும் - திரும்பவும், வந்துஎய்தி - அருகிலேவந்து, எந்தாய் - சுவாமீ! யா- என்ன? யான் - நான், ஈகுவ - கொடுப்பன, இனி - இனி, என்தான்-என்பொருள்தான்? என்றான - என்றுகேட்டான்.

"If you want permission to go, well it is granted" said Visvamitra "you may find your way where you please," Visvamitra who wanted to take advantage of the opportunity, ordered the king to return ; the king then retraced his steps, and asked what more he could give to his worship.

(க-து) விசுவாமித்திரர் "விடைதந்தேன். ஒரு புறமாகப் போவாயாக" என்னக்கேட்டு "இதுவே நல்லசமயம்" என்று போகின்ற அரிச்சந்திரனைஅவர் மீண்டும் அழைத்தார். அதுகேட்டு அரிச்சந்திரன் மறுபடியும் வந்து "சுவாமி! என்ன? நான் கொடுப்பன இன்னும் என்னபொருள்?" என்று கேட்டான் என்பதாம்

எந்தாய் is the vocative of எந்தை. தா குற்றம் - பண்புப்பெயர்: அழிவு எனப்பொருள்கொண்டு இறப்பைவென்றவன் என்பதுமாம். சார்பு-தொழிலாகுபெயர்.

75. (இ-ள்) செந்தேன - சிவந்ததேன், ஒடும்- பாய்வதாகிய, தண்-குளிர்ந்த, பணை-வயல்கள், சூழும்-சூழ்வதான, திருநாடா- திருநாட்டையுடைய அரசனே! நாளும - நாளும், மாமுனிவோரும் - அந்தப்பெரிய முனிவர்களும், வந்து- உன்னிடத்துக்கு வந்து, வளர-செய்வதற்கொத்த, வேள்விக்கு- யாகத்துக்காக, உம்தே (ய) ம - உங்களுடைய, நண்ணி - அடைந்து, இரந்து - யாசகங்கேட்ட, பசும்பொன் - பசும்பொன்னுக,உள எல்லாம் - உள்ளவைகளையெல்லாம், தந்து - இப்போது கொடுத்து விட்டு, போவாய் - போவாயாக, என்று - என்றுசொல்லி, இறையோனை - அரசனை, தடைசெய்தான் - (போகவொட்டாமல்) தடைபண்ணினார். ஏ - ஏ - அசைகள்.

"Oh king, whose king-dom is surrounded with mellifluous lands, overflowing with crimson-coloured honey" said Visvamitra "you shall

leave this place before you pay me all the gold mohurs you promised to place at my disposal when sometime ago, I applied to you for your assistance, to perform the great horse sacrifice worthy of myself and my revered, esteemed colleagues"

(க-து) அதற்கு விசுவாமித்திரர் 'அப்பா! முன்னே முனிவருடனே வந்து நான் யாகத்திற்காக யாசகங்கேட்ட பொருளையெல்லாம் இப்போது கொடுத்துவிட்டுப் போகக்கடவாய்' என்றுசொல்லி அவனைப்போகவொட்டாமல் தடைசெய்தனர் என்பதாம்.

தேயம் என்பது இடைக்குறையாய் தேம் என வந்தது. உன்தே(ய)ம் என்பாலது எதுகைபற்றி உந்தே(ய)ம் என வந்ததுமாம் பொருந்தும். தந்தே என்னும் ஏகாரத்துக்குத் தர மறபோகக்கூடாது எனப்பொருள் கூறவுமாகுமாதலின் அதனைத்தேற்றமெனறுங்கொள்க.

'மெய்த்தவனே நல்காய் விடையெனக்கென் றுணிருபன்
குத்திரமார் நெஞ்சத்துக் கோசிகன்கேட்—டித்தினத்தே
யான்றிரு வந்திரப்ப இப்படிக்கு நேர்ந்தபொருள்
நீ நாகி நீங்கென்றுரைத்ல (அ வெ

76 (இ-ள்) முன்னம் முன்னே உனக்கு உமக்கு சொன்னதிறத்தின்-சொன்னவகையிலே, மொழிமாறி சொல்மாறி, அன்பாது அந்தப் பொருள்களை கைக்கொண்டு என் வசமாக்கிக்கொண்டு இருந்தி - இருந்தத்திரவியங்களை, யான்-நான் தந்தேனல்லேன் தாவில்லை நல நலம், நகரோடு ஊருடனே, உள்-உள்ள, பொன்முற்றும் - பொருள்முழுவதையும் நனி - அதிகமாக, தந்தேன்-உமக்கே கொடுத்து விட்டேன். இன்னம் இன்னமும், உனக்கு - உமக்கு, பொன் பொருள், தர கொடுக்க, என்பால் என்னிடம், இடம் - வேறே ஏதுகாரணம், உண்டோ உண்டோ (இல்லையே)

'Sire rejoined Harichundra, when I just made the gift, I did not reserve to myself the portion of gold you now claim as your due, and give you anything else instead that quantity of gold you allude to, has been already included in the gift I just made to you of my whole kingdom with everything in it How then can I meet this fresh demand ?"

(க-து) அப்போது அரிச்சந்திரன் 'ஐயா! முன்னே நான் வாக்கிட்ட பொருளை அந்த வாக்குத்தவறி, அதனை வேறாகக்கையில் வைத்துக்கொண்டு மற்ற இந்தச் செல்வங்களைக் கொடுத்தவனல்லேன் எல்லாவற்றையும் நாட்டு நகரத்தோடுசேர்த்துக் கொடுத்துவிட்டேன் இன்னும் உமக்குப் பொருள்கொடுக்க எனக்கு வகையில்லையே என்செய்வேன்" என்றான் என்பதாம்

"முற்றும் நனி தந்தேன்" என்பது புகழ்ந்துபேசியபடியாகாது தன்னிடம் இம்மியளவும் பொருள் இல்லை என்பதை வற்புறுத்தும் பொருட்டே அங்ஙனங் கூறியது. மேனக ஓ - எதிர்மறைப்பொருளது

77. (இ-ள்) தாருடனே-மாலையுடனேகூட, செந்தாமரையாள் - செந்தாமரைத் திருவும், சேர் சேர்வதான, தடம் விசாலமான, மார்பா - மார்பையுடைய அரிச்சந்திரா! (இனி), யாருடனே யாரிடத்தில், இ-இந்த, மோசம்-மோசவார்த்தையை, உரைப்பாய் - பேசுகிறாய்? அறிவிலாய்-புத்தியில்லாதவனே! ஊருடனே உன்னுடைய ஊருடனே, முன்கூறிய - (நான்) முன்னே கொடுப்பதாகச் சொன்ன, பொன்னும் - பொன்னும், உடன்-கூடவே (கொ

(டுகிறேன்), என்று - என்று, நீருடனே - தாரைவார்த்த நீருடனே, நீ - நீ, பேசி - சொல்லி, அளித்தனை - கொடுத்தாய், உண்டோ - உண்டோ. ஏ - அசை

"Oh Harichundra with garland, on your broad chests wherein lotus Latchmi resides, know ye with whom you quibble' cried Visvamitra, 'Oh confounded man" said he, 'you have already made over to me all the riches of your kingdom by virtue of the gift of your empire, with all its contents The point at issue therefore is, that the previous promise of payment, yet remains unfulfilled-

79 (இ-ள்) பானுகுலத்தில் - சூரியவம்சத்து, தொல் - பழைய, வேந்தர் - அரசர்கள், சொன்னது - சொன்னசொல், மாறார் - தப்பமாட்டார்கள், அன்னது - அந்த நிலைமை, நின்னிடை - உன்னிடத்தில், காணேம் - நான் கண்டிலேன், என்றனன் - என்று விசுவாமித்திரர் சொன்னார், அது - அதை, கேளா - கேட்டு, மன்னவன் - அரசன், உள்ளம்நொந்து - மனம்நொந்து, அறமிகவும், நாணி - வெட்கமுண்டாகி, மதியோய் - (ஓ) புத்திமானே! இன்னமும் - இன்னும், ஒன்று - ஒருவார்த்தை, உண்டு - உண்டு, என்னா - என்று, இரந்து அவருக்கு உபசாரமான சொல்லி, இயை - இயைவார்த்தைகளை, கூறும் - சொல்லானுயினன். ஏ - அசை.

Visvamitra then addressed Harichundra 'Kings of the solar line of old, remarkable for their scrupulous honesty but it is conspicuous by its absence in you.' The king who keenly felt this cutting insinuation, addressed Visvamitra in soft, gentle accents that he had a word to speak to

இவையிரண்டு தொடர்கொடா.

(கு-து) அதுகேட்ட விசுவாமித்திரர் "ஐயா! நீசனான பெருமோசமாயிராநின்றது மதிகேடா! நீ முன்னே தாரைவார்த்த தொகை போது "நீருடனே கூடமுன் ராச்சியத்திற்கு வேண்டும் பொருள்களைச் சொன்னபொருளையும் உடனே சேர்த்துக் கொடுக்கிறேன்' என்று சொன்னாய் அல்லவா? சூரியகுலத்துப் பழைய அரசர் சொன்ன சொல் தவறமாட்டார்கள் அந்தத் தன்மை உன்னிடம் காணப்படவில்லை' என்று சொல்ல அதுகேட்ட அரசன் 'ஐயா! இன்னும் ஒருவார்த்தை சொல்லுகிறேன் கேட்டருளும்' என்று சொல்லலானான் என்பதாம்.

மாலையை வெற்றிமாலை என்று, இலக்குமியைப் பெற்றயானைத் தொகைகள் ... முகம் ... தன்மையைச் சிறப்பித்துக் கூறிய ... என்பதைச் செம்மை ... கூறினமையால் ... குறிக்குமாறிக. பூவை ... வென்றி ... அறிவும் அவ் இலக்குமியைக் குறிக்குமென ... வெண்டாமரையாள் என்பது சரஸ்வதியைக் குறிக்கும்.—

'வெள்ளைக்கலைபுக்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் — ...
அரியாசனத்தில் அரசரோடென்னைச்
சரியாசனம் வைத்த தாய்'

என்றதனாலும், "வெண்கலசமுற்றூள் என்றுங்கண்டானுமறிக. தன்குலப்பெருமை தன்னிடமில்லையாகக் கூறப்பட்டதனால் அற நாணினனென்க மதிவல்லேயாய என்றூன் பிடித்த பிசாசிக்கக் கூடியசூழ்ச்சி யெல்லாம் சூழ்ந்து செய்யவல்லவன் என்பதுகுறித்தற்கு

79. (இ-ள்) நித்தனே - நித்தியனுன பரமசிவனையும், பிரமனே - பிரமாவையும், அனையாய - ஒப்பானமகாமுனிவரே! நினைவு அழிந்த - நினைவு தடுமாறின, பித்தனே பயித்தியக்காரனுன என்னை, பொருள்-பொருள், வினுயினை - கேட்கிறீர் யான் நான், எங்கு - எங்கேபோய், பெறுகோ - சம்பாதித்துக் கொடுப்பேன். (ஆனாலும்) இத்தனை தினத்து இவ்வளவுநாளுக்குள்ளே, ஈவது என்று பொருள் கொடு என்று, இயம்புவை என்னின் ஒரு கெடுவைச் சொன்னீரானல், யான் - நான், அத்தனைக்குள் - அவ்வளவு நாளுக்குள்ளே, நின் உம்முடைய, பொருள் - பொருளை, தர கொடுக்க, அமைதி - தகுந்த கெடுவு இது என்று, ஈக - கொடும், என்றூன் - என்று சொன்னான்,

“Oh rishi possessing the attributes of Siva and Brahma’ said Harichandra “ you claim money from me now that my mind is in frenzy under the influence of your wrath, where shall I get it from? If, however you will kindly fix a reasonable time for payment I shall duly fulfil my promise

(க-து) "சாக்ஷாத் பரமசிவத்துக்கும் பரப்பிரமத்துக்கும் சமானமானவரே! பித்தனுகிய என்னைப் பொருள் கேட்டீர் அதனை எங்கு சம்பாதிப்பேன் இத்தனை நாளுக்குள்ளே கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அதற்குள் எப்படியாகிலும் சம்பாதித்துக் கொடுப்பேன். ஆகையால் ஒரு கெடுவைக் கொடும்’ என்றூன் என்பதாம்

இருடியேயாயினும் புகழ்ந்தால் சற்று இரக்கங்கொள்வனென்று கொண்டு "நித்தனே பிரமனே அனையாய’ என்று கூறினன் தனது தற்கால அவாந்தர நிலைமையை உணரக்கூடியவனாயினும் இங்ஙனம் இன்னல்விளைக்கலாகுமோ எனக்குறித்தற்கும் அங்ஙனம் கூறினனென்னவுமாம் நூலாசிரியர் சைவராதலின் நித்தனே என்பது இங்கே சிவபெருமானையே நோக்கிற்றாகக் கொள்ளல் வேண்டும் நினைவழிந்த பித்தனென்று தன்னைக் கூறினன் இனிச்செய்வது இன்னதென அறியக்கூடாது இடர்ப்பட்டு நின்றூனாதலின். பெறுகு - (பெறு+கு) தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்று கு - தன்மை ஒருமை விகுதி. இவ்விகுதியே காலங்காட்டியது

"எப்பொருளும் நாடுகா என்காய நின்கணிதத்தேவ
இப்பொழுதென்பால யாதுமில்லை மொழி—தப்பலனயானன
றிரங்கி நீயவதி நல்கியெனக் காளவிட்டால
மன்றப்பொருள ஈவலென்றூன் மன்" (அ - வெ)

80. (இ-ள்) ஊரும் - ஊர்களையும், நாடும் - நாடுகளையும், நீள - நெடிய, மலைகளும்-மலைகளையும், கானமும் - காடுகளையும் உழன்று - அலைந்து, உன்னோடு - உன்னோடேகூட, இழுப்புண்பவர் - இழுக்குப்பேசுகிறவர்கள், யார் - யார்? அவதியிடுவார் - கெடுவு கெடுக்கிறவர்கள், டார் யார்? சோரம் உள்ள - இருட்டுத்தனமுள்ள, நீ-நீ, கூறும் - முன்னேகொடுப்பதாகச் சம்மதித்துச் சொன்ன, அ - அந்த, பொருள்தனை - பொருள்களெல்லாவற்றையும், சொரிந்து இங்கே கொண்டுவந்து குவித்துவிட்டு, போஅடா - அப்பால் போகக்கடவையடா, உனை - உன்னை, தடுத்தனர் - பொருள்கொடாமல் அப்புறம்போகக்கூடாதென்று தடுத்திருக்கின்றனர் போகலை - போகாதே, என்றூன் - என்று சொன்னார்.

"Who can follow your wanderings" said Visvamitra, "through villages and countries, hills and woods, to square our differences? Who is to fix the time? Let me not permit you to depart before the promised heap of gold is placed before me I now place you under an interdict and thou shalt not go without paying the gold"

(க-து) அதற்கு விசுவாமித்திரர் "உன்னோடுகூட 'ஊரூராய் நாடு நாடாய் மலையுங் காடுஞ்சுற்றி இழுப்புண்பவர் யார்? உனக்குக் கெடு கொடுப்பவர் யார்? இருட்டுத்தன்னுள்ள நீ ஆசைப்பொருளைக் கொடுத்துவிட்டே போகவேண்டும். பொருள் கொடாமல் அப்புறம்போக லாகாதென்று தடுத்திருக்கின்றோம் இருந்த இடத்தைவிட்டு நகராதே" என்றுசொன்னார் என்பதாம்.

81 (இ-ள்) (அகற்றச் சம்மதியாத தடைக்குள்ளே நின்று), பக்கம் - சுற்றிலும், நோக்கிலன் - பாராமல், பாரின்மிசை - பூமியின்மேலே, வீழ்ந்து - விழுந்து, அடி பூண்டு - அவர் பாதங்களைத் தன்சிரசின்மேல் கொண்டு, கக்கல்வந்திட - ஒருவனுக்குக் கக்குதல் வந்தபோது, மிடற்றினை அவன் கழுத்தை, ஒடுக்கும் - மற்றொருவன் வந்து நெருக்கிப் பிடிக்கும், அக்கதைபோல - அந்தக்கதை போல, விக்கலும் விக்குதலும், பொருமலும் - பொருமுதலும், மிசைமிசை - மேலும் மேலும், எழ - தோன்ற, விரிநீர் - விரிவான நீர், உக்க - சிந்துகின்ற, கண்ணன் கண்களையுடையவனாய், வாய் வாயிலே ஊறு ஊறுகின்ற, நீர் - நீரும், வற்றிட - வற்றிப்போக, உரைப்பான் சொல்வானாயினன்

Harichandra faithfully obeyed his order and without even stirring from the place or looking about threw himself on the ground placed Visvamitra's feet on his head and like a man who was strangled while vomiting he heavily panted and sighed his eyes were swimming in tears, which streamed down his checks, and with parched up tongue addressed Visvamitra as follows.

(க-து) விசுவாமித்திரருடைய தடையில் கட்டுப்பட்டவனாய் அவரை வணங்கி அவர் அடிகளைத் தலைமேற்கொண்டு விக்கியும் பொருமியும், கண்ணீருடனே, நாவறண்டு ஒருவார்த்தை சொல்லுகின்றான் அரிச்சந்திரன் என்பதாம்.

நோக்கிலன் - கண்ணன் - முற்றெச்சம் கக்கல் - இருமல் க்ஷயமுதலிய நோயால் கக்குதல் கதை என்பதை இங்கே உவமொழி ஆவலத்துவாரத்தை என்னும் பொருளில் பொருத்திக்கொள்க வாழ்வு நீ- sub

82 (இ-ள்) இழைத்த நீசெய்த, தீவினை - குற்றத்தை, பொறுத்தனை - பொறுத்தருளுகிறேன், அரசு உன்னுடைய அரசாட்சியை, தா - கொடுத்துவிடு, என்ன - என்று சொல்ல, தழைத்த சந்தோஷமான, அன்பொடு பிரீதியுடனே, யான் - நான், தந்து - கொடுத்துவிட்டு, அகன்றிடுங்காலை போகும் போது, அழைத்த - கூப்பிட்ட, நீ - நீர், எனக்கு - எனக்கு, அவதியிட்டு - ஒரு கெடு கொடுத்து, ஆள் ஒரு ஆளை, விடின் - கூட அனுப்பினால், ஐய - சுவாமி! பிழைத்தனன் - உய்ந்து போவேன். (ஆதலால்), இது - இந்த, ஓர் - ஒரு, பெரும் பெரிய, புகழ் - புகழாக, பெறுதி - பெறுவீர், என்று என்று, இரந்தான் - மிகவும் உபசாரங்கள் சொல்லி வேண்டினன்.

"You wanted my kingdom as a penalty for the offence brought against me, it was duly given and when I departed from you you called me up again and asked for fresh payment of money, to quit old scores Sire, if you will only fix a time and do the favour to send a man with me I shall not fail to discharge the debt"

(க-து) "உன் குற்றத்தைப் பொறுக்கிறேன் உன் அரசாட்சியைக் கொடுத்துவிடு" என்று சொல்லாமலே, நானும் அரசாட்சியைப் பிரீதியுடனே கொடுத்து விட்டுப் போகும்போது கூப்பிட்ட நீர் ஒரு கெடுவைத் தந்து ஒரு ஆளையுங் கூட்டவனுப்பினால் நான் உய்ந்து போவேன் இது தேவரீருக்குப் பெரும் புகழாகும் என்று உபசாரங்கள் சொன்னான் அரிச்சந்திரன் என்பதாம்.

அவதி - தவணை Specified time பெறுதி - பெறு+த்+இ) த் - எழுத்துப்பேறு

"எப்பொருளும் நாடுங்கால் எங்கோய் நினக்களித்தேன்
இப்பொழுதென் பாலொன்றும் இல்லைமொழி—தப்பலனை யான்
நண்ணிரங்கி நீ அவதி நல்கினக் கோள்விட்டால்
மன்றபொருள் ஈவலென்றான் மன்" (அ-வெ)

83 (இ-ள்) சுற்று சுற்றிலும் உண்டாகிய-உண்டாகிய மலைகளில்-மலைகளிலும் வனங்களில் வனங்களிலும், தொட்டு தொடர்ந்தலைய உன் - உமது, பற்று சம்பந்தம், உண்டாகிய - உண்டாகிய, பதிகளில்-ஊர்களில், படு-உண்டாகிய, பொருள் - பொருள்களே அல்லால் அல்லாமல், உற்று உண்டாகிய-உமக்குச் சேரவேண்டியதாய் உள்ள, நிதியம்-திரவியங்கள், உன் திருவுளம்-உம்முடைய திருவுள்ளம், உணர தெரிவதாய், மற்றுண்டாமெனின் வேறே எங்கேனும் உண்டாயிருந்தால், விளம்பிடு சொல்லும், வழங்கிட-நான் கொடுக்கிறதற்கு, என்றான் - என்றுசொன்னான் அரிச்சந்திரன்.

"Sire" continued Harichandra, 'I who am doomed to wander in the surrounding hills, and forests have no wealth which I can call my own besides that contained in the kingdom which has now become yours. If, therefore you will kindly enlighten me as to where I can obtain the money due to you, I shall be glad to avail myself of your direction."

(க-து) 'சுவாமி! உம்முடைய சம்பந்தமான ஊர்களிலுண்டான பொருள்களேயல்லாமல் வேறொன்றுமில்லை; உம்முடைய திருவுள்ளந் தெரியத் திரவியம் நான் கொடுக்கும்படி வேறெங்கேனும் உண்டாயிருந்தால் சொல்லியருளும்' என்பதாய்ச் சொன்னான் அரிச்சந்திரன் என்பதாம்

திருவுளம்-the will of a person of high dignity நிதியம்-அம் சாரியை.

84 (இ-ள்) ஆம் - ஆமாம், இங்கு எனின் - இப்படிக்குச் சம்மதியாகுமென்று நீ சொன்னால், அரச-அரசனே! கேள் கேள், அறி ஓரளவு யான் - நான், உரைப்பன் - சொல்லுகிறேன், ஏமகூடமும் ஏமகூடபர்வதமும், காசியும் - காசியும், அறியில் - அல்லாமல், இப்பால் இதற்கு இப்பால் (உள்ள நாடுகளே), தாமம்-மாலையணிந்த, மார்ப-மார்பையுடையவனே! நீ, தந்த எனக்குக்கொடுத்த, நா-நவ, நாடு - நாடுகள் இதற்கு - இவற்றுக்கு, அப்பால் - அப்பால், போம் அது - நீ போவது, உண்டேனில் உண்டானால், பொருளும் நீ கொடுக்கவேண்டிய பொருளும், அப்பொருள் அலாது-அதுவுள்ள பொருட்சுமையல்லாது (இவருள்ள பொருள்களை), அளியேல்-நீ கொடாதே.

"Indeed" cried Visvamitra, 'if that is all you want, I can suggest this to you,—you have given up to me your kingdom on this side of Hemakuta and Kasi, if you go beyond the limits of this kingdom

you may give me the wealth you acquire there; but you have no right to the property of this kingdom which is already mine by virtue of your recent gift"

(க-து) "அரசனே! அப்படியானால், நீ எனக்குக் கொடுத்த ஏமகூட பருவதத்துக்கும் காசிக்கும் இப்பாலுள்ள நாடுகளாகையால், இவற்றுக்கப்பால் நீ போவதுண்டாகில், அங்குள்ள பொருள்களையே எனக்குக் கொடுக்கக் கடவாய்" என்று சொன்னார் விசுவாமித்திரர் என்பதாம்.

ஏமகூடம். Hemakuda The sacred golden mount—one of the eight chief ranges. It is the second of the ranges dividing the known continent of India into nine Varshas lying south of the Ilavarata or central division, and immediately north of the Himalaya forming with it the boundary of the Kinnara Varsha, பொன்மலை. காசி-புண்ணியத்தால் பிரகாசிப்பது. (காசு பிரகாசம்).

85. (இ-ள்) இந்த எல்லையில் - இந்த எல்லைக்குள்ளான, இ பொருள் - இந்தப்பாக்கியான பொருள்களை. ஈதல் - கொடுக்கிறது, அல்லாமல் - அல்லாமல், அந்த எல்லையில் அந்த எல்லைகளுக்குள்ளான, பொருள் - பொருளை, தர - கொடுக்க, வல்லையேயானால் - நீ வல்லவனானால், மூத்த முனிவனே, நீ - நீ, சொன்ன - சொன்ன, முறைமையால் - நியாயப்படி யான் - நான், அவதி - கெடுவு, ஈவேன் - கொடுக்கிறேன். தந்திடாய் எனில் அந்தக்கெடுவுக்குள்ளே நீ கொடாமல்போனால், சத்தியம் - அதற்குப் பிரமாணம், ஏது என - என்ன சொல்லுகின்றாய் என்று விசுவாமித்திரர் கேட்க, சாற்றும் - அரிச்சந்திரன் சொல்லுகிறான்.

If then you renounce all your claims to the wealth with in the limits of this kingdom to clear off old accounts and would procure the amount elsewhere, I shall fix a time for payment, but, if you fail to discharge it duly, what penalty will you undergo?

(க-து) "எனக்குப் பாக்கியான பொருளை, மேலே நான் சொன்ன எல்லையில் சவதரித்துக் கொடுப்பதானால், நீ கேட்டுக்கொண்டபடியே கெடு உனக்குக் கொடுக்கிறேன். அப்படி அந்தக் கெடுவினுக்குள்ளே பொருளைக் கொடுக்காவிட்டால் அதற்குப் பிரமாணம் என்ன சொல்லுகிறாய்" என்றனர் விசுவாமித்திரர் என்பதாம்.

சத்தியம்-பிரமாணம் oath

86 (இ-ள்) நின் பிழைத்திடின் - உம்முடைய விஷயத்திலே அபராதனானாலும், நினக்கு உமக்கு, யான் - நான், அருநிதி - அருமையான பொருள், அளிக்கும் கொடுப்பேனென்று சொல்லிய, சொல் - சொல், பிழைத்திடின் - தவறினாலும், சூளுறவு - உறுதியான சபத வார்த்தை, ஏது எனில் - எதுவென்றால், சொல்வல் சொல்லுகிறேன், நின் - உம்முடைய, இரு பெரிதான நிதி - பொருள்களை, கொடேனெல் - கொடாமற்போவேனேயானால், கற்பு - பதிவிரதாதர்மத்தையே, இழைத்த - நடத்திக்கொண்டுவாத, நல - நல்ல, சொல் - புகழையுடைய, மாதரார்தமை - அந்நியருடைய மனைவியை, கருதி - எண்ணி, இல - இல்லறம், பிழைத்தவன் - வழுவாநடந்தவன், ஆவன் - ஆவேன்.

"In default of fulfilling my promise" said Harichandra "the heinous sin of coveting the virtuous and devoted wife that is a source of honour and pride to her husband, shall be on my head"

(க-து) "உம்முடைய விஷயத்திலே அடியேன் அபராதனானாலும், உமக்குப் பாக்கியான பொருளைக் கொடுக்கத் தவறினாலும், பிறனொருவனுடைய தாரத்தை விரும்பி இல்லறம் வழுவ நடந்தவனாவேன். இதுதான் நான்செய்யும் பிரமாணம்" என்றான் அரிச்சந்திரன் என்பதாம்.

சூளுறவு-சத்தியஞ்செய்தல். நற்சொல் என்பதற்கு—கணவனுக்கு நல்ல புகழ்வரச்செய்கிற என்பொருள் கூறுவதுமாம். சொல்வல் -(சொல்+வ்+அல்) வ் - எதிர்கால இடைநிலை; அல் - தன்மை ஒருமை விகுதி.

> "சொல்திறம்பு வாயாயில் சூளுறவேதென்றிறையை
> நற்றவத்தோன் கேட்டான் நரேந்திரனையான் -சொல்தவறி
> னலணியன்ற ஆயிழையை யாதரித்தனென் கடைவாய
> மன்னுமவனாவனென்றான்மன்" (அ - வெ).

87. (இ-ள்) காசிநாட்டினில் - காசிதேசத்துக்கு, சென்ற - போன, அந்நாளில் - அப்போது, உன - உம்முடைய, கனகம் - பொருளை, ஆசு இல் - குற்றமில்லாத, மாதவ - பெரியதவத்தையுடையவரே! அளிப்பன் - கொடுப்பேன். அவ்வதியில் - சொன்ன அந்தக்கெடுவில், (ஆசலால்), அது - அந்தக் கெடுவை, நீ - நீர், பேசிடாய் - சொல்லவேணும், என - என்றுசொல்ல, இருபதுநாளையின் - (அதற்கு) இருபது நாளைக்கு, பின்பு - பிறகு, மூசி - நெருங்கி, வண்டு - வண்டுகள், உறை - மொய்க்கின்ற, தாரினோய் - மாலையை அணிந்தவனே! தருகவென - கொடுக்கக்கடவாயென்று, மொழிந்தான் - சொன்னார் விசுவாமித்திரர்.

"Even if I should go to Kasi," continued he, "I shall take good care to make the payment, thou sage of great penance, kindly fix the time; where-upon Visvamitra said," Oh King, that wearest a garland swarming with beetles, thou shalt pay it in twenty days "

(க-து) "சுவாமி காசிதேசத்துக்குப் போனாலும் நீர் சொல்லுகிற கெடுவினுக்குள்ளே உம்முடைய பொருளைக் கொடுப்பேன், ஆகக்கெடுவைச்சொல்லும்" என்று அரிச்சந்திரன் கேட்க, விசுவாமித்திரர் "இருபது நாள்களுக்குப்பின்பு கொடுக்கக்கடவாய்" என்று சொன்னார் என்பதாம்.

மூசி - மூசு - பகுதி, இ-இறந்தகால வினையெச்ச விகுதி

83. (இ-ள்) அங்கு - அந்தக்காசிக்கு, உற்று - போய் எய்த-சேர்கைக்கே, நாள் வேண்டிய நாள்கள், அம்முறைக்கு - அந்த இருபது நாளைக்கு, இருமடங்கு - இரண்டுபங்கான நாற்பது நாளானாலும், அடங்கா-போதாது (அப்படியிருக்க), ஐய - சுவாமி! இந்த, பொருள்-பொருள்களையெல்லாம், எங்கு-எங்கே, உற்று - போய், கட்டுவது - சமபாதிக்கிறது, என்று என்று, இயம்ப-சொல்ல; (அதற்கு), நம் - நம்முடைய, குற்றம் - குற்றம், இலை - யாதொன்றுமில்லை; நாற்பதிற்றெட்டு - நாற்பத்தெட்டுநாள் கெடுகொடுத்தோம், என-என்று, நவின்றான் - சொன்னார் விசுவாமித்திரர் இதற்குள்-இந்தக்கெடுவுக்குள், கொடாது ஒழிந்திடல்-கொடாமற்போனால், உனக்குற்றம்-உன்குற்றமாகவே முடியும், என்றான்- என்று சொன்னார்.

Harichandra submitted that it was a physical impossibility to reach Kasi from there, even in forty days, and that the amount could not therefore be paid. Visvamitra then extended the time to forty eight days, and added that he would be held liable, if he should fail to pay the amount within that period.

(க-து) அதற்கு அரிச்சந்திரன் "சுவாமி! காசிக்குப்போய்ச் சேரவே நாற்பது நாள்களும் போதாதே. பொருளை எப்படிச் சுவதரிப்பேன்" என்று சொல்ல, விசுவாமித்திரர் "அப்படியானால், என்னுடைய குற்றமில்லை நாற்பத்தெட்டுநாள் கெடுக்கொடுக்கிறேன். அந்த கெடுவினுக்குள் பொருளைக்கொடுக்காவிட்டால் குற்றம் உன்னுடையதேயாம்" என்றனர் என்பதாம்.

உங்குற்றம்-(உன்குற்றம்) எதுகைநோக்கி வந்தது. அவன் மனையாள் முதலியாரைக் கூட்டியுரைத்தாருமாம். நாற்பதிறறெட்டு (நாற்பது + இற்று + எட்டு) "ஒன்று முதலீரைந்தாயிரங்கோடி &c" (ந-சூ-197) என்னும் விதியான் இறுசசாரியை பெற்று வந்தது.

"நாற்பதின் மேலெட்டி னையந்த நாளையில் எந்நாள கரத்தின்
பாற்பொழிவாய் பொன்னெல்லாம் பார்த்திவனே—மேற்புகன்ற
காலத்துள் நல்கரயேல காசுனக்கோங் கானென்றான்
கோரச்சடை முனிவர்கோன்" (அ-வெ).

89. (இ-ள்) இப்பதிக்கு - இந்த அபிப்பிராயத்துக்கு, இனிது - நன்றாய், ஒத்தனன் - சம்மதியானவனாகி, ஆள்விடுக - (இனி) ஆளைவிடும், என்று - என்று, குப்புறறு - அவரைவிட்டு, ஏகலும் - போகுமளவில், கௌசிகன் - விசுவாமித்திரர், மீளவும் - மறுபடியும், கூவி - (அரிச்சந்திரனைக்) கூப்பிட்டு, தப்பு தீர்தர - (ஒரு காசளவாவது) குறையில்லாமல், தந்த - நீ கொடுத்த, அ - அந்த, பொருளெலாம் - பொருள்முழுதும், பதி நானிருக்கும் இடத்துக்கு, வந்து - வந்து, ஒப்புசதந்து - எனக்குச்சம்மதிப்படுத்தி, பின - அப்புறம், போ - போகக்கடவை, எனு - என்று, மன்னனுக்கு - அரிச்சந்திரனிடத்தில, உரைத்தான் - சொன்னார்.

Harichandra agreed to the terms, and asked a man to be sent with him. Just when he was about to leave him, Visvamitra called him, and bade him not to go, before he should make him owner of the entire wealth in the kingdom he just gave him, to his entire satisfaction.

(க-து) அரிச்சந்திரன் அதற்குச் சம்மதித்து ஆளை யனுப்பும்படி சொல்லிப்போகும்போது விசுவாமித்திரர் மறுபடியும் அரசனை அழைத்து "நீ பொருள்முழுவதையும் என்னிடத்திற் கொணர்ந்து சேர்த்து எனக்குச் சம்மதிப்படுத்தியபிறப்பு அப்புறம் போகக்கடவை" என்று சொன்னார் என்பதாம்.

"வனகிவிடை பெற்றகலு மன்னவனைக் கூய் நீ
யினைந்தெனைக் கீந்தபொரு ளெலலாம்—குணஞ்சிறந்தோ
யென்னுடனே வந்துபதியே கொப்புத் தந்தெனறான
மனனுதவக கௌசிகனுமன்" (அ-வெ).

90. (இ-ள்) பார - நான் ஆளும்படி உன்னுடைய) உலகத்தை, அளித்தனை - (எனக்குக்) கொடுத்தாய், புரக்க - (அதனை) அரசுசெலுத்த, நின் - உன்னுடைய, பதியிடை - பட்டணத்துக்குள்ளே, சென்றால் - நானபோனால், நின - உன்னுடைய, அடியவர் - ஊழியக்காரர்கள், எலலாம - எல்லாரும், ஆர் அளித்தனர் - (உனக்கு) யார் (இந்த பட்டணத்தை ஆளும்படி) கொடுத்தார், எனபர் - என்றுகேட்பார்கள்: (ஆசையால்) ஊர - (உன) ஊரை, அளித்திட - (எனக்குக்) கொடுக்க, உடன் - (என்) கூட, வர - வருதற்கு, இசைந்தி - சம்மதிப்படு ஈது ஒழியின் - (இதற்குச்) சம்மதிக்காவிட்டால், நீர் அளித்ததே - (நீ) தாரைவார்த்தமாத்திரமே, எனக்கு - எனக்கு இலாபமாகும்: மனை - ஊர் முழுதும், நினக்கு - உனக்குச்சொந்தமுடிவுபெறும, என - என்று, மொழிந்தான - சொன்னார்.

"For," said he, "though you have given away your kingdom, if I should enter it, your subjects and servants will doubtless question my authority and dispute my sovereignty. It is therefore absolutely necessary that you should go with me through the kingdom to the capital to proclaim the fact yourself; other-wise, the gift will be nominal, and I shall not benefit by it.

(கு-து) அப்புறம் விசுவாமித்திரர் பின்னும் அப்பா! உன் அரசாட்சியை எனக்குக் கொடுத்தாயென்று உன் ஊரில் நான் தனியாகப்போனால் உன்னுடைய ஊழியக்காரர்கள் 'உனக்கு யார் இந்த ஊரைக் கொடுத்தவர்' என்று கேட்பார்கள். ஆகையால் நீ என்னுடன் வந்து ஊரை என்னிடம் ஒப்புவித்துவிட்டுப்போகவேண்டும். இல்லாவிட்டால் தாரைவார்த்தது மாத்திரமே எனக்கு இலாபம். ஊர் உன்னுடையது தான் என்பதாகும்" என்று சொன்னார் என்பதாம்.

மண் - கருவியாகுபெயர். ஆர் - யார் என்பதன் மரூஉ.

91. (இ-ள்) நன்றுநன்று - நல்லது நல்லது; நீ-நீர், நகரியில்-பட்டணத்துக்கு, எழுந்தருள்-எழுந்தருளும்; நாயேன்-நாயடியேன், இன்று-இப்போதே, நின்பிறகு - உமதுபின்பற்றி, எய்துவல் - வருகிறேன், எனறு - என, இனிது-சந்தோஷமாக, இயம்ப - சொல்ல; சென்று - அங்கு நின்று போய், கௌசிகன்-விசுவாமித்திரர், தேர்மிசை -தேரின்மேல், ஏறினன் - ஏறினார். திரண்டு-கூட்டமாக, நின்ற - நின்ற, மாதவர் - மகாமுனிவர்களும், கரியினும்-யானைகளின்மேலும், பரியினும்-குதிரைகளின்மேலும், நிறைந்தார் ஏறிச்செல்லுவாரானார்கள்.

Harichandra gladly yielded, and accordingly Visvamitra got into a car accompanied by the host of sages on horses and elephants.

(கு - து) அதற்கு அரிச்சந்திரன் "நல்லது சுவாமி! எழுந்தருளும். நாயடியேன் பின்பற்றிவருகிறேன்" என்று சந்தோஷமாகச் சொல்லவே, விசுவாமித்திரர் தேர்மேல் ஏறினார். அவருடன்வந்த முனிவர்கள் யானை குதிரைகளின்மேல் ஏறிச்செல்வாராயினர் என்பதாம்.

நன்றுநன்று - இவ்வடுக்கு—உவகையைக் குறிக்கின்றது. நகரி - இ - சாரியை. கரி - கரத்தையுடையது (கரம்—கை—தும்பிக்கை): கருமையையுடையது என்னும் பொருளில (அடுப்புக்) கரி என்றும், சாரதல் என்னும் பொருளில் (உப்பு) கரிக்கிறது என்றும் வழங்குவதறிக. யானையைத்தானும் கருநிறமுடைய காரணத்தால் கரி எனத் தமிழ்மொழியாகவே கூறப்படுதல் பொருந்துவதுகாண்க. பரி - விரைவுடையது - குதிரை. கௌசிகன் - குசன் வம்சத்தில் பிறந்தவன்.

92. (இ - ள்) தேரில் - தேரிலே, ஏறி - ஏறிக்கொண்டு, மாமுனி - மகாமுனிவரான விசுவாமித்திரர், செல - போக, சேனை - சேனைகளும, பின் செல்ல - பின்னேபோக, போரில - யுத்தசாமார்த்தியத்தையுடைய, வீரனும்-வீரனான அரிச்சந்திரனும், தேவியும் - அவன்தேவியும், புதல்வனும் - மகனும், நடுவே - அந்தச் சேனைகளுக்கு நடுவே, பாரின்மேல் - மண்ணின்மேல், நடந்து - நடந்து, அடி - கால்கள், பொறாது - பொறுக்கமாட்டாமல், உடல்-உடம்பு, பதை பதைக்க - துடிதுடிக்க, மேயரி - மனம்பொருந்திய, வாயில் - கோட்டைவாயிலை, விட்டு - நீங்கி, அயோத்தியை - அயோத்தியாபுரியை, நோக்கி - குறித்து, விரைந்தார் - சீக்கிரமாகச்சென்றார்கள் ம - அசை.

While the citizens were plunged in the depths of sorrow, owing to the mournful fate that had befallen their king and their mother like Chandramathi, Visvamitra who was at the bottom of all this misery, reached the gates of the great city and alighted from the car.

(க-து) "ஐயோ! அரசனுக்கும் சந்திரமதிக்கும் லோகிதாசனுக்கும் என்ன பாபமோ வந்து கூடிற்று" என்று ஏங்கியிருக்கையில், விசுவாமித்திர முனிவர் வாயிலுக்குப் பக்கமே வந்து சேர்ந்து தேரை விட்டிறங்கினார் என்பதாம்.

அந்தோ - alas - இரக்கக்குறிக்கு மிடைச்சொல் — [illegible] பாவம் வந்தெய்த இம்முடிபு சரிதாமோ? ஏன்!

97 (இ-ள்) கோசிகன் தனை அந்த விசுவாமித்திரரை, நகர் கொண்டு [illegible] கொண்டு, கோநகர் - பெரிய பட்டணத்துக்குள்ளே, புகுந்து சென்று, வாசி உள்ளவும் - குதிரைகளையும், மதகரி உள்ளவும் - பின் [illegible] யானைகளையும், வழங்கி - கொடுத்து, நல காசினை [illegible] நல்ல பொக்கிஷ வீட்டையும், பூசனை அறை - பூசைவீட்டையும், [illegible] [illegible], காட்டி - காட்டிக்கொடுத்து, [illegible] [illegible] வீட்டையும், [illegible] அறை [illegible] வீட்டையும், பார் [illegible] - என்று, சொல்லினன் - சொன்னான் அரிச்சந்திரன்.

Harichandra then led Visvamitra round the city, put him in possession of his elephants and horses, showed him his treasury, his sanctuary, wardrobe, and bedchamber.

(க-து) அந்த விசுவாமித்திரனைக் கூடக்கூட்டிக்கொண்டு பட்டணத்தினுள்ளே சென்று குதிரைகளையும் கொடுத்து பொக்கிஷசாலை பூசைவீடு [illegible] [illegible] காட்டிக்கொடுத்து [illegible] வீட்டையும், [illegible] [illegible] பாருமென்று காட்டினான் அரிச்சந்திரன் என்பதாம்.

"[illegible] புகுந்து" என்பதனால் அரசனோடு நகரத்தில் பிரவேசித்து என்றும் பொருள் கூறலாம். அறை - பாகம், பாகமாக அறுக்கப்பட்டிருப்பது, room.

98 (இ-ள்) என்றி[illegible] மூன்றொடு - இருபத்தொன்றான அரசர்கள், இருபதொருவர் [illegible] [illegible], உண்டி [illegible] அரசர் [illegible], வைத்த வைத்த, செம்பொன் செம்பொன் உள்ள, அறை - [illegible], [illegible] - [illegible], [illegible] - [illegible], அன்னசத்திரம் [illegible] [illegible], இவை - இவைகளை, அடியனேன் - அடியேன். வைத்த - வைத்திருந்த, பொன் - பொன்னிருக்கும், அறை - [illegible] [illegible] [illegible], சொன்னவனை - [illegible] [illegible] [illegible] [illegible] புகழ் [illegible] மாறனான அரிச்சந்திரன், கொடுத்தனன் கொடுத்தான்.

Harichandra of great renown, showed him over the treasury rooms of his twenty one tributary kings, the feeding house, his own treasury rooms and handed them over to his charge.

(க-து) அரிச்சந்திரன் 'இருபத்தொரு அரசர்களுடைய அரசர் இருப்பதற்கு உரிய [illegible] [illegible] இவ்வறையில் இருக்கின்றது" என்று சொல்லி அக்[illegible] காட்டி "இவைகள் அன்னசத்திரங்கள் இவைகள் [illegible] [illegible] [illegible] இவ்வறை [illegible] [illegible] ஒப்புக்கொள்ளும்' என்று சொல்லி ஒப்பித்தான் என்பதாம்.

இருபதோடொருவர் - [illegible] - என்று பொருள்.

99 (இ-ள்) பின்னை - பின்னும், ஆடு - ஆடுகிற, அரங்குகள் - நாடகசாலைகள், அம்பலம் - பொதுச்சவடி, மடம் - மடம், அன்னசாலை - அன்னசத்திரம், மாடம் - மாளிகை - மண்டபம், மஞ்சனசாலை - திருமஞ்சனச்சாலை, கூடகோபுரம், மடைப்பள்ளி - திருமடைப்பள்ளி, கோயில் - செய்குன்றம் - பீடம், ஆசனம் - ஆசனம், இவை என - இவைகளென்று, கொடுத்தனன் - காட்டிக்கொடுத்தனன்.

Theatres, rest houses, choultries, banqueting halls, storied mansions, bathing ghats, towers, kitchens, temples, artificial mounds, dais were next shown to Visvamitra.

(க-து) அரிச்சந்திரன் பின்னையும் நாடகசாலை முதலானவைகளையும் காட்டிக்கொடுத்தான் என்பதாம்.

அரங்கு - பொதுவாக சபை அல்லது இடத்தைக் குறிக்கும் ... கவிபரவக்கு என இத்தனைச் சொற்களும் ... பெருள் கொள்ளவேண்டும் ... அன்னம். மடைப்பள்ளி - மடைத்தொழில் செய்யுமிடம் ... சமைக்கும் பள்ளி ... கட்டம், பரிகை, திரிபெரும்பள்ளி என ... தனித்தனி கோயில் என்பது முதலிய ... கூடம், ... என்னும் பெருளுடையதாயினும் ... இச்செய்யுளில் ... artificial hillock. பின்னை ஐ - சாரியை.

100 (இ-ள்) இந்த - இந்த, அநேகனு - அநேகர், ... முதலோரும், என - என்று சொல்ல, முனி - விசுவாமித்திரர், இருந்தனன் - அங்கே இருந்தான், ஆசனம் - ... திரமும், அவன் அந்தமுனிவருடைய, அடி - பாதங்களை, ... ணங்கினுன் வந்த - கூடவந்த, மாந்தர் - அமாத்தியரும், ... சரிசரும் மங்கையர் பெண்களும், ... கூட, ... கான், கழல் வீரகண்டாமணிகட்டின, சேனையும் - சேனைகளும், இவர் ... அரிச்சந்திரனுடைய பாதங்களை ... வணங்கினுன்.

Visvamitra at Harichandra's request then took his seat on the dais. Harichandra, his feudatory chiefs, ministers, maids of honour, his soldiers wearing badges of valour in their anklets, made their obeisance to Visvamitra, by prostrating themselves before him.

(க-து) அரிச்சந்திரன் முனிவரை ஆசனத்தில் எழுந்தருளச் செய்து அவரை வணங்கினன். கூடவந்த அரசர் முதலாயினோர் அரிச்சந்திரனை வணங்கினார் என்பதாம்.

அமைச்சர் அமாத்தியர் என்னும் ... அமைச்சன் என்னும் ... அமைப்பவர் எனக்காரணக் ... இருக்கின்றது?

“கல்லை ஆயோசி வணங்கினி ...
புலவுமிழ் ... வீட்டிழந்தார் பூபாலர் ...
தன்னை ... கொண்டேபோய் ... பொருகல நாக ...
மீன்றுமிரியாதனந்தினை மீது.

வீற்றிருப்பச் செய்தவனை வேரிமலர்த்தாள் பரவிப்
போற்றி நின்றான் போந்த புரவலரும்—நூலதுறைதேர்
மந்திரிமார் மங்கையரும் மள்ளரும்பின் அவ்வறிஞனை
சுந்தரத்தாள் தாழ்ந்து துதித்து" (அ-செ).

101. (இ-ள்) தொழுது - அடிவணங்கி, எழுந்து - எழுந்திருந்து, தம் - தம்முடைய, சுடர் - ஒளிபொருந்தின, முடி - கிரீடந்தரித்த, மன்னனை - அரசனை, நோக்கி - பார்த்து, அழுது நின்ற - அழுது நின்ற, அ - அந்த, தலைவரை - அரசர்கள் பிரதானிகளை, (எல்லாரையும்), அவன் - அரிச்சந்திரன், கையால் - தன்கையால், அமைத்து - அடங்கச்செய்து, பழுது - குற்றம், இலாது - இல்லாமல், நீர் - நீங்கள், எமக்கு - எங்களுக்கு, முன் - முன், செய்த - நடந்துவந்த, அப்படியே - அந்தப் பிரகாரமாகவே, முழுதும் - உள்ளகாலமுழுதும், இந்த - இந்த, மா - மகா, முனிவற்கு - முனிவருக்கு, முறைசெயும் - நீதி செய்யுங்கள், என்றான் - என்று சொன்னான்.

Harichandra wearing a resplendent crown, quieted the anxious fears of the chiefs and ministers, who stood there quite heartbroken, and advised them to behave as dutifully and loyally all their lives, as they did towards him.

(க-து) அப்படியாகத் தொழுதெழுந்து அரிச்சந்திரனைப்பார்த்து அழுதுநின்ற அரசர் முதலானவர்களைக் கையாலடக்கி அவர்களைப்பார்த்து "நீங்களெல்லாம் எங்களுக்கு முன்னே நடந்துவந்த நீதியாகவே இந்த மகாமுனிவருக்கு நீதி செய்யுங்கள்" என்று சொன்னான் என்பதாம்.

எமக்கு என்றான் அத்தலைவரும் வரன்முறையாகவே அயோத்திமன்னர்க்குப் பாரம்பரியமாய் தொழில் செய்துவருதலின். தான் அரசனாதலின் தன்மைப்பன்மை வகையாற் கூறிக்கொண்டனனென்பதில் ஏனைய சிறப்பிலது.

"நிற்கின்ற தங்கள் நிருபனைக் கண்டேயழுதார்
கற்கொன்ற தோளரசன் கையமைத்து—நிற்கொன்றும்
அன்போடு நீர் முன்செய்த அப்படியே யிம்முனிவற்
கின்புறுமா செய்கமுறை யின்று" (அ-செ).

102. (இ-ள்) எவர்க்கும் நல்லவர் - இந்த முனிவரோ எல்லாருக்கும் நல்லவராய்ச் சிறந்தவர் (இன்னமும்), திரிபுரம் - திரிபுரமானது, எரிஎழ - நெருப்புத்தோன்றித் தகனமாகும்படி, சிரித்த - சிரித்த, சிவற்கும் - பரமசிவனிலும், நல்லவர் - சிறந்தவர். செங்கண் - சிவந்த கண்களையுடைய, மாலுக்கும் - விஷ்ணுவிலும், நான்முகத்த - நான்குமுகங்களையுடைய, அயற்கும் - பிரமாவிலும், நல்லவர் - சிறந்தவர். அமரர்க்கும் - தேவர்களுக்கும், நல்லவர் ஆயவர் - சிறந்தவரான, இவர்க்கு - இந்தமுனிவருக்கு, நல்லையா - நல்லவராயிருப்பவர்களே, எனக்கு - எனக்கு, நல்லவர் - நல்லவராவார்கள், என இசைத்தான் - என்று சொன்னான்.

"This muni you see before you, is the most precious among men, is superior to the great Siva who reduced Tirupuram to ashes by a smile, superior to the four-faced Brahma, in fact to all the celestial gods, you will best show your loyalty to me by your devotion to him."

(க-து) இந்த முனிவரோ எல்லாருக்கும் நல்லவராய்ச் சிறந்தவர்; சிவபெருமான் திருமால் பிரமன் ஆகிய இவர்களிலும் சிறந்தவர்; தேவர்களுக்கும்

சிறந்தவராகின்ற இவருக்கு நல்லவரானவர்கள் எவர்களோ அவர்களே என க்கு நல்லவராவர் என்று சொன்னான் அரிச்சந்திரன் என்பதாம்.

எவர்க்கும் நன்மைசெய்பவர், சிவற்கும் மாலுக்கும் நான்முகத்த அவற் கும் அன்பரானவர், அமரரைக் காட்டில் மிக நலலவர்; இப்படிப்பட்ட இவரு க்கு அன்பராகின்றவர்களே என் மனதுக்கொத்த நல்லவராவர் எனக் கூறினு மாம். நீங்கள் இம்முனிவரைத் தக்கபடி முறைசெய்ய தொழிந்தால் எனனை இகழ்ந்தவராயினீர் எனக்கூறினனெயிற்று இவ்விருத்தத்தால். செங்கண (செம் மை-எனபது குறிப்புச்சொல்) செந்தாமரை மலாபோன்றகண் என்க. அமரர்- மரணமில்லாதவர்.

103. (இ-ள்) எழ்வையம் - ஏழுலகத்தையும், உடை - உடைய, மன்ன வன் - அரிச்சந்திரமகாராஜன், அவ்வுரை - அந்த வார்த்தையை, வழுவை - சொல்லவே, (எல்லாருமே), செய்ய - சிவந்த, மலர் - மலர்போன்ற, வாய் - தங் கள் வாய்களை, செங்கையால் - சிவந்தகையால், புதைத்து - மூடிக்கொண்டு, அடிவணங்கி - பாதம் வணங்கி, ஐய-ஐயா! நின்மொழி - உன வார்த்தையை, மறுப்பவர் - தடுப்பவர்கள், ஆர் - இங்கேயாரிருக்கிறார்கள்; என்று - என்றுசொ ல்லி, முகத்தில் - தங்கள் முகத்திலே, கை அறைந்து - கையாலேமோதி அடி த்துக்கொண்டு, அழ - அழ, கண்ட - அதைப்பார்த்த, அ - அந்த, கௌசிகர்- விசுவாமித்திரர், கருதும் - ஆலோசிக்கிறார்.

The men assembled, on hearing the exhortation of their king, the ruler of the seven worlds, placed their hands with great humility on their lotus-like lips, made a low profound bow to him, and thrashing their faces with their hands, assured their king that no body present there, dared contraveno his orders, and set his words at naught. Visva. mitra who silenty witnessed all this, fell into the following train of thought.

(க-து) அரிச்சந்திரனுடைய வார்த்தையைக்கேட்டு அவ்வரசராதியோா வாயைமூடிக்கொண்டு "ஐயா! உம்முடைய வார்த்தையை மறுப்பவாகள யாரி ருக்கின்றனர்" என்று சொல்லித தஙகள முகங்களில கைகளால் மோதியறை நதுகொண்டு அழுவதைப்பாாதத மாத்திரத்திலே விசுவாமித்திரர் ஆலோசிக் கிறார என்பதாம்.

"வையமேழுடைமன்னவன்" என்றார், "தேவர்நாங்கம் அஞ்சாமற் காத்த ருள் பெருமான்" ஆகலின. எழ்வையம் - பூலோகம், புவலோகம், சுவலோ கம், மகாலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம் என்பன. சப்தத்வீ பங்கள எனினுமாம். அவை:—நாவல், இறலி, கிரவுஞ்சம், குசை, இலவம், தெங்கு, புட்கரம் என்பன. "கௌசிகர் கருதும்"—"பல்லோர் படாசகை டீட" (ந-சூ-318) என்னும் விதியானறிக.

"என்றியம்பினன் வினவி எல்லோரும் வள்ளலடி
பன்றிறைஞ்சி வாய்புதைத்து மெய்நடுங்கி—நின்றிறைவ
நின்னுரையை யார்மறுப்பா ரிவ்வுலகில் என்றழுதா
அன்னதவன் பார்த்த வசனாய்" (அ - வெ).

104. (இ-ள்) அறம் - தருமமே, திரண்டு - திரண்டு, உருவாகிய - வடி வாயிருக்கிற, அரசனை - அரசனை, புன்மையேம் - அல்ப குணத்தையுடைய நாம், புந்தி இல்லாமல் - புத்தியில்லாமல், அவமே - வீணாக, புறம்பு அறைந்த னம் - புறமே தேவர் முன்னே நிந்தித்து உளறினோம். இறம் - நீதி, தெரிந்த

வர் - தெரிந்தவர்களுடைய, செயல் - செய்கை, இதோ எனா - இப்படியோ என்று, சவுசிகன் - விசுவாமித்திரர், மெய்மறந்து இருந்து - தம்முடம்பு மறந்திருந்து, பின் - பின்னும், மற்றும் ஓர்வாசகம் - வேறொரு வார்த்தையை, உரைப்பான் - சொல்வாராயினார்.

"Alas" cried Visvamitra to himself, "I made an egregious fool of myself, in having raved libellously about Harichandr, who is in fact the living embodiment of all virtue. Just see, how right-minded men always behave, with honor and credit to themselves. Visvamitra's mind was completely absorbed in thoughts like this.

(க-து) அப்பருணமுடைய நாம் தருமசுவரூபியாகிற இந்த அரசனைத் தேவர்கள் எதிரில் வீணே நிந்தித்தோம். இது நீதியறிந்தவர்கள் செய்கையா குமா என்று நினைத்துச் சந்தோஷம் மெய்மறதியாக இருந்து பின்பு விசுவாமித்திரர் ஒரு வார்த்தை சொல்லுகிறார் என்பதாம்.

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல் - அறங்கூறும் ஆக்கந் தரும்" என்பது ஓதுதாகலின் "பறம்பறைந்தனர்...செயலிதோ" என்றெண்ணினான். புந்தி - புத்தி என்பது மெலித்தல் விகாரம் பெற்றுவந்தது.

105. (இ-ள்) இந்த - இந்த, வையமும் - உலகத்தையும், இரு - பெரிதான, நிதிக்குழுவும் - பொருட்குவியலையும், இ - இந்த, பொருளும் - வஸ்துக்களையும், முந்து - முன்னமே, நீ - நீ, தர - தருவதாக, மொழிந்த - சொன்ன, அ - அந்த, பொருளும் - பொருளையும், யான் - நான, இழப்பேன் - விட்டுவிடுகிறேன், எந்தம - எம்முடைய, மக்களை - பெண்களை, மணம புணர்ந்து-கலியாணம் பண்ணிக்கொண்டு, இ - இந்த, நகர் - பட்டணத்திலேதானே, இரு என்று - இரு என்று சொல்லி, அந்தணன் - விசுவாமித்திரர், மகிழ்ந்து - சந்தோஷங்கொண்டு, அரசனை - அரிச்சந்திரனை, கைபிடித்து - கையைப்பிடித்து, அமைத்தான் - அவனொருப்பச சமாதானஞ்செய்தார்.

Once more did Visvamitra in vain try to persuade and tempt Harichandra to marry the two damsels, and reign happily in his kingdom, promising that he would renounce all his claims to the kingdom, and the wealth which he had formerly made a gift of to him.

(க-து) இந்த இராஜ்ஜிய முதலானதை நான் விட்டுவிடுகிறேன். நீ என் குமாரத்திகளை கலியாணஞ்செய்துகொண்டு இந்த நகரத்திலே இருக்கலாம் என்று சொல்லிச் சந்தோஷத்துடனே விசுவாமித்திரர் அரிச்சந்திரனைக் கையைப்பிடித்துச் சமாதானஞ்செய்தார் என்பதாம்.

"இந்நகரும் நாடும் இருநிதியும் நீ மகற்கு
முன்னளிக்க நேர்ந்தபொருள் முற்றும்யான் — மன்னிழப்பேன்
எம்மகளிர் தம்மைமணந் திங்கிருத்தி என்றிறைவன்
பொன்மலர்க்கை தொட்டான் புரிந்து" (அ - வெ).

அந்தணர் - "அந்தணரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் - செந்தண்மை பூண்டொழுகலான்" என்பர் நாயனார் [அம் - அழகிய, தணை (மை) - தட்பம். அழகிய தட்பமுடையார] (வேத) அந்தத்தை அணவியிருப்பார் என்பார் நச்சினார்க்கினியார்.

106. (இ-ள்) கைபிடித்தலும்-அப்படி அவர் கையைப்பிடிக்கவே, இறைவன் - அரசனானவன், முனிவனைக் காலபிடித்து - முனிவருடைய கால்களைப்

பிடித்துக்கொண்டு, மெய் - சத்தியத்தை, பிடித்தலும் - உறுதியாகப்பற்றுதலும், மிக்கவை - அதற்குமேலான காரியங்களை, செய்தலும் - நடத்துவதும், அல்லால் - அல்லாமல், மைபிடித்த - மையிட்ட கண்களையுடைய, பாதகையர் - பாதகிகளை, புணர்தலும் - கூடுவதும், வழங்கா - சொல்லத்தகாத, பொய் பிடித்தலும் - பொய் சொல்லுவதும், அறன் அல் - தருமமல்லாத காரியங்களை, செய்தலும் - செய்வதும், புகழ்க்கோ - கீர்த்திக்குக் காரணமாகுமோ?

Harichandra whereupon taking hold of Visvamitra's feet mildly remonstrated thus 'A king is bound to uphold righteousness, to promote the cause of truth. It is quite unbecoming, nay a blot in my fair escutcheon to prevaricate, to swerve from the path of rectitude or to ally myself with damsels degraded in social status.

107. (இ-ள்) எமக்கு - (சுவாமீ) உமக்கு யான் - நான், சொல்லுவனோ - சொல்லத்தக்கவனோ? மநுவின் - மனுவுக்குப் பின்னே, உதித்த - பிறந்த, எமக்கு முன் - எங்களுக்கு முன்னே பார் - பூமியை, அரசாண்ட - அரசாண்ட, வேந்தர் - அரசர்கள் ஏழ் எழுவர் - இருபத்தொருபேர், தமக்கு முன் - அக்கருத்துக்கு முன்னே, ஒருத்தருக்கும் - ஒருவராலும், [illegible] சாத்தக்கூடாத, பெரும் பாதகம் - அச்சமான பெரிய பாதகத்தை, சுமக்கவல்லேன் - நான் தாங்கவல்லவனல்லேன், இசைச்சொல் - இப்படிப்பட்ட செய்கையைச் சொல்லுதலை, சுவாமி [illegible] விட்டுவிடவேணும், என்று [illegible] வணங்கினான்.

Harichandra then bent in adoration before Visvamitra, saying 'Oh Sire! It is not becoming you to preach in this fashion. I cannot be guilty of a heavy crime, a crime too heavy to be borne by my twenty one predecessors who ruled the empire after Manu.

இவையிரண்டுமொரு தொடர்.

(க-கு) கையைப் பிடித்த முனிவருடைய காலைப் பிடித்துக்கொண்டு அரிச்சந்திரன் "சுவாமி! சத்தியத்தை உறுதியாகப்பற்றி அதற்கு மேலான காரியங்களைச் செய்வதேயல்லாமல் பாதகியரைச் சேர்தலும் சொல்லத்தகாத பொய்சொல்லுதலும் அதர்மங்களைச் செய்தலும் கீர்த்திக்குக் காரணமாகுமோ? மனுவுக்குப் பின் எங்களுக்குமுன் அரசாண்டவர்கள் இருபத்தொருவர். அப்படிப்பட்ட ஒருவராலும் சாத்தக்கூடாத அத்தகைய பெரும்பாதகத்தைத் தாங்க என்னால் முடியாது. இப்படிப்பட்ட செய்கைகளைச் சொல்லுவதை விடவேணும்" என்று சொல்லி வணங்கினான் என்பதாம்.

"புலவர்க்குமே அரிமா பொருப்பினாலும்
கலைமறை கற்றுணர்ந்தோர் நாட்டார்க்கும்—சொல்லலுமன்
மெய்ம்மையே இசைச்சொல் மிக்கொன்றே வேண்டுமென் சால
பூணானவைக்கு யாவர்க்கும் புகன்று" (அவ்வை)

கால் - அனைவருடையவும் கால்களுக்குக் கொண்டிருக்கலின் இப்பெயரமைந்தது. ஓ - எதிர்மறைப் பொருட்டு. வழங்கா - எதிர்மறைப் பெயரெச்சம். (வழங்கு + ஆ) வழங்குதற்காகா(த) [illegible] பொருள் கூறலுமாம். மநு - சுவாயம்பு மநு - முதற்சக்கரவர்த்தியாக வேதங்கூறும் [illegible] - மனு [illegible] இருபத்தொருவர் [illegible] தலைவன் - [illegible] - [illegible] - [illegible] - [illegible] அரிச்சந்திரனுக்கு

108. (இ-ள்) குலக்கூட்டம் - வேசைக்கூட்டத்துக்கு, யான் - நான், பொருந்திலேன் - சம்மதிக்கமாட்டேன்; சொன்ன-கொடுப்பதாகச் சொன்ன, இ - இந்த, பொருளுக்கு - பொருளுக்காக, ஆளை - ஒரு ஆளை, கூட்டு - கூட்டி என்பின்னே வரவிடும், என - என்றுசொல்ல; (அதற்கு), முனிவன் - விசுவாமித்திர முனிவர், அரசனை - அரசனை, நோக்கி - பார்த்து, நாளை - நாளைக்கு, கூட்டுவன் - கூட்டியனுப்புகிறேன்; இன்று - இன்றைத்தினமே, நீ - நீ, புறத்து - வெளியே, நட - போ, என்ன - என்றுசொல்லவே; (அரசன்), தாளை - அவர் அடிகளை, கூட்டரவு ஆக்கிய தலையினன் - சேர்வனவாகத் தன் தலைமேற் கொண்டவனாகி, சாற்றும் - சொல்கின்றான். ஏ - அசை.

Harichandra at last most emphatically declined to ally himself in marriage with the degraded damsels, and once for all, requested Visvamitra to send a man with him to take payment of the promised gold Visvamitra called upon Harichandra to quit the kingdom that very day, saying that a man would be sent with him the following day. Harichandra made his obeisance by placing Visvamitra's feet on his head, and addressed him thus.

(க-து) "வேசைக் கூட்டத்தக்கு நான் சம்மதிக்கமாட்டேன்; கொடுபபதாகச்சொன்ன பொருளைக் கொடுகக ஒரு ஆளை என்னுடனே கூட்டியனுப்புங்கள்" என்று அரிச்சந்திரன் சொல்ல, விசுவாமித்திர "ஆளை நாளைககு அனுப்புகிறேன்; நீ இன்றே புறம்போககடவாய்" என்ன; அரசன அவர்பாதங்களைத் தலையிற்கொண்டவனாகிச் சொல்லலானான் என்பதாம்.

கூட்டரவு-சிநேகம்-துணை; இதில் அரவு என்பது தொழிற் பெயர்விகுதி.

109. (இ-ள்) சிறுத்த - சிறிய, நாயினேன் - நாய்போன்ற அடியேன், செய்த - செய்த, இ - இந்த, புன்மைகள் எல்லாம் - கேவல காரியங்களையெல்லாம், பொறுத்தல வேண்டும் - தேவரீர் பொறுத்துக் கொளள வேண்டும், என்று - என்று, அடியிணை - அவர் பாதங்கள் இரணடையும், இருகரம் - தன் இரண்டுகைகளால், பூண்டான் - பற்றினான். (அதற்கு), கறுத்த - கோபமுள்ள, சிந்தையன் - மனத்தை யுடையவரான, கௌசிகன் - விசுவாமித்திரர், பொறுத்தனன் - பொறுத்தேன், என்றுன் - என்றுசொன்னார். (அதன்மேல்) மறுத்தும் - மறுபடியும், வள்ளல் பிரபுவான அரிச்சந்திரன், இன்றும்ஒன்று - இன்னொருவார்த்தை, உரைத்திட - சொல்ல, கேள் - கேட்டருளும், என - என்றுசொல்லி;

110. (இ-ள்) அமைச்சரை - மந்திரிமார்களை, கையினால் - தன்கையினாலே, பிடித்துக்காட்டி - பிடித்துக்காட்டி, (ஐயா!), இவர்கள் - இவர்கள், நினை வையினும் - உம்மைத் திட்டினாலும்; மறுக்கினும் - உம்மை வேண்டாமென்று சொன்னாலும்; மற்றும்ஓர் - வேறே யாதொரு, குற்றம் - குற்றத்தை, செய்யினும் - செய்தாலும்; பொறுத்து - (நீர்) பொறுத்து, அருள செய்வாய் - அருள் செய்யவேண்டும்: செலகதி அளித்த - போகும்படி விடைகொடுத்த, ஐயனே - சுவாமி! இவர் - இவர்களெல்லாம், உனது அடைக்கலம் - உமக்கே அடைக்கலப் பொருள்கள், என - என்று, அளித்தான் - அவரிடத்திலே சேரக் கொடுத்தான். மற்று - அசை.

Holding Visvamitra's feet by his hands, he said "I crave your forbearance, sire, for any wrongs of commission or omission on my part" Visvamitra in an angry mood nodded assent, and Harichandra submitted that he had one word more to say.

Taking his minister by the hand, he said, "Sire, you have given permission to go; I have only to say that I entrust these ministers of mine as hostages to your kind protection, and if they should slight you or set your words at naught, or in any other way shew signs of disrespect, you will kindly overlook them with a magnanimity truly your own."

இவையிரண்டும் ஒரு தொடர்.

(க-து) அரிச்சந்திரன் "சுவாமி! நாயேன் செய்த பிழைகளைப் பொறுத்தல்வேண்டும்" என்றானாக, விசுவாமித்திரர் "பொறுத்தேன்" என்றார்: மறுமடியும் அரிச்சந்திரன் "சுவாமி! இன்னுமொரு காரியம் உண்டுகேளுங்கள்" என்று சொல்லி, தன் மந்திரி மாரகளைப் பிடித்துக்காட்டி "இவர்கள் உம்மை வைதாலும் வேண்டாமென்று மறுத்தாலும் வேறுயாதொரு குற்றஞ்செய்தாலும் பொறுத்தருள வேண்டும். இவர்களெல்லாம் உமக்கே அடைக்கலம்" என்று அவரிடத்திலே சேரக்கொடுத்தான் என்பதாம.

"ஆயி னதுபொருட் காளவிடுவேன் நாளைப்
போயகல்நீ மன்றொ புறத்தின்றென்—றாயுமறைக்
கோசிகன்சொற் றான்வினவிக்—கோசலாகோமா நாயேன்சொல்
ஆசெவையும் நீபொறுத்தியால்.

என்றுபுலஞ் செற்றோன் இணைச்சரண்மேல் வீழ்ந்திருந்தான்
நன்றெழுதி நான்சமித்தே னற்குணத்தோய்—என்றறவோன்
சொல்ல எழுந்திருந்து தோன்றல் அமைச்சரைக் கை
மெல்லப் பிடித்து விழைந்து.

காட்டி யிவர் செய்யுங் கடும்பிழையு நீகருதல்
நீட்டுசடையோய் நின் அடைக்கலமென்—றேட்டலக
மாதுடனே சேயை வணங்குவித்துப் போற்றிவிடை
நீ தருகென்றானகன்றா னேர்ந்து" (அ - வெ).

111. (இ-ள்) குடைநிழல்- குடைநிழலின்கீழே, பொலி-விளங்குகின்ற, கௌசிகன் - விசுவாமித்திரருடைய, அடியின்மேல் - பாதங்களிலே, கொடிநேர்- கொடிபோலும், இடையினளையும்- இடையையுடைய சந்திரமதியையும், மகனையும் - மகனையும், இறைஞ்சுவித்து-வணங்கச் செய்துகொண்டு, ஏத்தி- தானுந்துதித்து, படையை - சேனையை எல்லாம், நோக்கி - பார்த்து, நீர் - நீங்கள், நில்மின - நில்லுங்கள், என்று - என்று, அம் - அழகிய, கையால் - தன்கையாலே, பணித்து - அமைய நிறுத்தி, விடை - விடை, இதே - இதுதான், என்ற- என்று, பணிந்தனன்- (விசுவாமித்திரரை) வணங்கினான். வேந்தர்க்கு வேந்தன் - அரசர்க் கரசனான அரிச்சந்திரன்.

Harichandra made his consort, Chandramathi with creeper-like waist, and his son, bow before Visvamitra, and after doing the same himself, bade his army to stop there and observe order.

(க-து) அரிச்சந்திரன் தன் மனைவியையும் மகனையும் விசுவாமித்திருடையபாதங்களைவணங்கச்செய்து தானும் துதித்துச் சேனைகளைப் பார்த்து நீங்கள் நில்லுங்களென்று கையால் அமையநிறுத்தி விடைஇதுதான என்று, விசுவாமித்திரரை வணங்கினான என்பதாம்.

112. (இ-ள்) உலகுபாரம்-(இனிப்) பூபாரம், உனக்கு - உமக்கே உரியது என்று - என்றுசொல்லிவிட்டு, இறை - அரசன், அகன்றனன் - அப்பால் போ

பிறகு பரிந்து அகமகுப்பரிவுகொண்டு, புரமெரித்தவனை - திரிபுராந்தகனை, அனைய - ஒத்த, மாமுனி விசுவாமித்திரர், புவி - உலகினை, புரந்தானை - ஆண்டார். சிரமம் ஆயாசம், நீங்கு - நீங்கப்பெற்ற, வீரர் - வீரர்கள், செறி - கூடின, மன்றமும் - சபைகளிலும், தெருவும் - தெருக்களிலும், பிரமசாரிகள் - பிரமசாரியப்பிராமணர்கள், பெருகும் - பெருகுவதான, உவகையிற்பால் - உள்ளக்களிப்புடனே, மலிந்தனர் - கூடினார்.

Harichandra, after all, left Visvamitra's presence, leaving the anxious burden of governing the kingdom in Visvamitra's hands. Visvamitra who might be compared to the great Siva that reduced Tiripuram to ashes assumed charge of administration, and the appeased warriors thronged in streets and assemblies with ever increasing delight.

(க-து) பின்பு பாரம் [illegible] உரியதென்று சொல்லிவிட்டு அரிச்சந்திரன் அப்பாலேபோய் விட்டானாக, விசுவாமித்திரர் அரசுசெய்தனர். வீரர்கள் கூடின சபைகளிலும் தெருக்களிலும் பிரமசாரியப் பிராமணர்கள் அக்களிப்புடனே கூடிய [illegible] என்பதாம்.

தாம் [illegible] சாகசத்தை இனிமேல் செய்தல்லது இயற்கையில் இராக்கமுடையவரென்ற [illegible] பரிந்து [illegible] புரமெரித்த [illegible] முன்னாக [illegible] வீரர்கள் கூடினார் [illegible] பிரமசாரிகள் [illegible] எனகிறார். வீரர்களுக் குச்சிரமம் [illegible] தங்கள் [illegible] வீரத்தொழில் முறைப்படியையே செய்வ [illegible] உண்டாம் தேகவுருமம்.

113. (இ-ள்) காமம் - விருப்பத்தைத்தரும், தோகையார் - பெண்கள், சுரும் - [illegible], கரிய, குழல் - கூந்தல், விரிந்தனர் விரித்து, பரப்பி - பரவ விட்டு, (அப்படிச் [illegible]) சேமத்தூபங்களை அகிற்புகைகளை, காட்டும் - [illegible], அ - அவ்வமையமான, சிரப்பு [illegible] எல்லாம், தேயந்து - இயம்பாது குறைவாய், [illegible] - [illegible], [illegible] மலர்களும், தருப்பைகள் - தருப்பைகளும் சமித்துகளும் [illegible], விரித்த - விரித்த திருப்பதான, ஓமதூமமே - ஓமப்புகையே, உயர் - உயர்ந்த, மனை எல்லாம் - வீடுகளின் மேலெல்லாம், [illegible] - [illegible]தாயின.

The luscious fragrance that filled the atmosphere, when after baths, the maids of honour of the palace, dried their loose hairs in the odoriferous incense, now disappeared, and in its stead rose above the roofs of stately houses, the smoke of the sacred grass, and other accessories used at the sacrificial fire.

(க-து) பெண்கள் [illegible] கூந்தலை விரித்து உலர்த்துமபடி அகிற்புகை [illegible] எல்லாம் நீங்கலாய், மலர்களும் தருப்பைகளும் சமித்துகளும் விரித்திருப்பதான ஓமங்களின் புகையே வீடுகளின் மேலெல்லாம் [illegible] என்பதாம்.

காமத்தோகையார் [illegible] காமத்தை உண்டு பண்ணுந் தகைத்தான அழகுடைய பெண்களென்க. [illegible] செல்வப்பெண்டீர் கள் [illegible] நீங்கியனவென [illegible] அகிற்கட்டையின் புகையை [illegible] "மாளிகைகளை [illegible] புகைத்தவிட்ட அகிற்புகையும்" என [illegible] வீடுகளின்மீது அகிற்புகை [illegible] [illegible] என்கிறார்.

114 (இ-ள்) [illegible] கொடிகளாகின்ற, [illegible] களிலெல்லாம், தோலின்றோ[illegible] யானைவீரர்களும், [illegible] [illegible] சோதி ஒளிபொருந்திய, வேலின்றோ[illegible] வீரர்களும், [illegible] [illegible] போய், [illegible] இடை - இடையில் [illegible] [illegible] முனிவர்களும், [illegible] [illegible]

The ranks of elephant riders, cavalry men, warriors and their families thinned and vanished and Brahmin celibates, chanting Vedic hymns, sages with waist bands and waist clothes, and nude mendicantes with their sacred staffs occupied their places.

(கு-து) [illegible] பெண்களும் [illegible] [illegible]

தோல் [illegible] தோல் [illegible]

[illegible]

என்று [illegible]

முக்கோல் [illegible] the [illegible] two ord [illegible] சன்னியாசி - one who [illegible] திரிதண்டி [illegible] one who carries three staves tied together and is a worshipper of Vishnu [illegible] a wandering devotee who has renounced social life, subjected his person, and lives on what is given him unasked. He remains in a village only one day, in a town not more than three days, and in a city only five [illegible] his mind become [illegible] முக்கோல். [illegible] புமஉணைதகுமைக் [illegible]

115. (இ-ள்) (இப்படியாக), புனிதம் - பரிசுத்தமான, மாதவர் - மகா முனிவர்கள், சூழ்ந்திட - சூழவும், புரவலர் - அரசர்கள், போற்ற - சேவிக்கவும், கனி - கொவ்வைக்கனிபோல், திருந்திய - திருந்தியதான, செய்ய - சிவந்த, வாய் - வாயையுடைய, கன்னியர் - பெண்கள், காண - பார்க்க, நனி - மிகவும், திருந்திய - திருத்தமான, நவமணி - நவரத்தினங்கள் இழைத்த, ஆதனத்து - சிங்காசனத்தின்மேல், ஏறி - ஏறி, இனிது - சந்தோஷமாய், இருந்து - இருந்துகொண்டு, கௌசிகன் - விசுவாமித்திரர், உலகு - உலகத்தையெல்லாம், ஆண்டனன் - ஆண்டார். இப்பால் - இனிமேல் (அரிச்சந்திரன் நகர் நீங்கிய சரித்திரத்தைக் கூறுவோம்).

Thus was Visvamitra installed on the throne set with precious gems, as ruler of the vast empire, surrounded by pious sages, and kings, making their obeisance, attracting the gaze of cherry-lipped damsels.

(க-து) இப்படியாக மகா முனிவர்கள் சூழ அரசர்கள் சேவியா நிற்ப, கன்னியர்காண, விசுவாமித்திரர் நவரத்ந கசிதமானசிங்காசனத்தின்மேலேறி யிருந்துகொண்டு உலகத்தையெல்லாம் ஆண்டனர் என்பதாம்.

மாதவர்க்குப் புனித மாவது திரிகரண சுத்தி, அஃதாவது - மனத்தால் நினைப்பனவும், வாக்கால் சொல்வனவும், காயத்தால்செய்வனவும்சத்காரியங்களேயாக இருக்கும் ஒழுக்கம் என்பதாம். புரவலர் - புரத்தலில் வல்லவர் (புரத்தல் - உயிர்களைக்காத்தல்). செய்யவாய்என்றதனால் கனிகொவ்வையின் மேலதாயிற்று. நனி - மிகுதியைக்குறிக்கும்உரிச்சொல். உரிச்சொற்கும் பண்புப்பெயர்க்கும் வித்தியாசம்:—உரிச்சொல்செய்யுள்வழக்கிற்கே உரியதாய், மனத்தால் மாத்திரமே குறித்து உணரும் பொருளுடைய சொல்லாம்; பண்பு பொறியால் (senses) உணரப்படுங் குணமாம். நவமணி-கோமேதகம், நீலம், பவளம், புருடராகம், மரகதம், மாணிக்கம், முத்து.வைரம், வைடூரியம் என்பனவாம். ஆதனம் - ஆசனம். ஈண்டு இப்பால் என்றதை முன்னடந்த சரித்திரத்தையும் இனிநடக்கும் சரித்திரத்தையும் தொடுக்கும்பற்றுசாகக்கொள்க.

"முப்புரிநூல் மார்பு முதுமறைதேர் நாவினொடு
துப்புறழ்நீள் வேணியுள னாயோர்கள்—எப்புடையும்
சூழமுடிவேந்தர் துதைந்திறைஞ்சக் கௌசிகனும்
ஆழியுலகாண்டா னமர்ந்து" (அ - வெ).

அரிச்சந்திர புராணச் சுருக்கம்.

விவாகம்.

கோசல நாட்டிலே, அயோத்திமாநகரிலே, சூரியகுலத்தில் இருபத்திரண்டாவது சக்கரவர்த்தியாய் அரிச்சந்திர மகாராஜன் அரசு செலுத்திவந்தான். செலுத்திவருகையில் ஒருநாள் தீர்த்த யாத்திரையாகப் போதரும் சில முனிவர்கள் அயோத்தியடைந்து அரசனைப்பார்த்தார்கள். அவர்களை அரசன் அருக்கிய முதலியவற்றால் உபசரித்து ஆசனங்களிலிருக்கச்செய்து, அவர்கள் அங்கங்கே கண்ட அதிசயங்களை எடுத்துச் சொல்லும்படி வேண்டிக்கொண்டான். அதன்மேல் முனிவர்கள்:—“நாங்கள் கன்னோசி நாட்டிற்குப் போயிருந்தோம். அங்கே சந்திர குலத்தனாய் அரசுசெலுத்தும் மதிதய மகாராஜன் சந்ததியில்லாக் குறையால் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து ஒரு பெண்மகவைப் பெற்றிருக்கின்றான். அவளுக்குச் சமானமான பெண்கள் தேவலோகத்திலும் இருக்கமாட்டார்கள்; பூலோகத்திலும் இருக்கமாட்டார்கள். அருந்ததியின் கற்பினும் எண்மடங்கு அதிகமான கற்புடையவள். மகா சௌந்தரியவதியாயிருப்பவள். சிவபெருமானால் குறிக்கப்பட்டவனுக்கன்றி மற்றவர்களுக்கு அந்தப் பெண்ணை விவாகஞ்செய்து கொடுப்பதில்லையென்று அரசன் சொல்கிறான். அந்தப்பெண்ணானவள் உம்முடைய குணத்துக்கும் அழகுக்கும் இசைந்தவளாயிருக்கிறாள்” என்றனர். இதைக்கேட்ட அரசன் அந்தப்பெண்ணைத் தனக்கு மணம் பேசும்படி அம்முனிவர்களை வேண்டினான். அவர்கள் அங்கு நின்றும் புறப்பட்டு மதிதயனிடஞ்சென்று மணம் பேசாநிற்க அவ்வரசன் ‘இந்தப்பெண்ணின் விஷயமாய்ப் பரமசிவன் அருளிச்செய்த தெய்வரகசியம் ஒன்றுண்டு. அதைத்தெரிந்து கொள்ளக்கூடியவர்களே இவளுக்கு நாயகராதற்பாலர்” என்று சொல்லிப் பின்னும் ‘இப்படியிருத்தலால் அரிச்சந்திர மகாராஜனை இங்கே வரும்படி செய்யுங்கள். இங்கே வந்தால் அந்த இரகசியத்தைத் தெரிந்து காரியசித்தியடையினும் அடையலாகுமே’ என்னக்கேட்டு முனிவர்களும் அரிச்சந்திரனிடம் போனார்கள். இப்பால் மதிதயன் “இன்னும் ஏழுநாளில் சந்திரமதி என்னும் பெயருடைய என் பெண் சுயம்வரங்கொள்வதாக நிச்சயித்திருக்கிறேன்” என்று அரசர்களுக்கெல்லாம் ஓலை போக்கினான். சுயம்வரநாளின் முன்னாள் அரசரெல்லாரும் வந்து சேர்ந்து மதிதயனைக் கண்டனர். அப்போது இவர்களைக் கவனித்திருந்த தாதியொருத்தி அரிச்சந்திரனுடைய அழகையும் பெருமிதக்காட்சியையுங் கண்டு ஓடோடிச் சென்று அச்செய்தியைச் சந்திரமதிக்கு வருணித்துச்சொன்னாள். சந்திரமதியும் அரிச்சந்திரன்மேல் காதல்கொண்டு மறுநாள் சுயம்வரச் சடங்குகள் நடந்தேறுகையில் அரிச்சந்திரனுக்கே மாலைசூட்டக்கருதி நிற்கையில், அரிச்சந்திரன் அவள்கழுத்தில் ஒரு தாலியானது மின்னுவதைக்கண்டு தன் அம்மானாகிய மதிதயனைப்பார்த்து “இவளைக் கன்னிகையென்று நினைத்தோம். இவள் கழுத்தில் முன்னமே ஒரு தாலி கட்டியிருக்கிறதே, இவளை இன்னுமொருவன் மணம் புரியலாகுமோ? அப்படிச் செய்வது இழிஜனர்களுடைய செய்கையாகுமே. இச்செய்கையை நீங்களும் செய்வதாகச் சுயம்வரம் காட்டினீர்களே. இஃதென்னை” என்று சொன்னான். அந்தத்தாலியானது மற்ற அரசர்கள் கண்ணுக்குத் தோன்றாமையால் அவர்கள் அரிச்சந்திரனைப் பொய்யனென்றும் நினைத்தார்கள். அதன்மேல் மதிதயன் “மகாராஜர்களே! சிவபெருமானுடைய அருளால் இவளை நான் பெற்றபோது அப்பெருமான் ஒரு தெய்வரகசியத்தை அருளிச்செய்தார். அஃதாவது இவள் பிறக்கும்போதே கழுத்தில் மங்கிலியத்துடன் பிறப்பாள்; அந்தத் தாலி எந்த மகாபுருஷனுக்குக் கட்புலனாகுமோ அவனே இவளுக்கு மணவாளன் ஆவான்” என்பதாம். இதுவரையில் இந்தத் தாலியை எங்கள் வீட்டில் ஒருவரும் கண்டதில்லை, இந்தப் பெண்ணுக்குத்தானும் அது கண்ணாடி நிழலில் மாத்திரமே கட்புலனாவது

"உண்டு" என்று சொன்னான். உடனே சந்திரமதி அரிச்சந்திரனுக்கு மணமாலையைச் சூட்டினாள். அப்புறம் கல்யாணச்சடங்குகள் நிறைவேறின. அரிச்சந்திரன் சந்திரமதியுடன் அயோத்தியடைந்து சின்னாள் கழிந்தபின் லோகிதாசியன் என்று பெயர் சொல்லப்பட்ட ஒரு பிள்ளையைப்பெற்று இன்புற்றிருந்தான்.

இந்திரன் சபையில் அரிச்சந்திரனைக் குறித்து நடந்த விவாதம்.

லோகிதாசியனுக்கு ஏழுபிராயம் நடக்கிறபோது, ஒருநாள் தேவேந்திரனுடைய திருவோலக்கத்திலே தேவர்களும் முனிவர்களும் கூடியிருந்தார்கள். சபையினரைப்பார்த்து இந்திரன் "பூலோகத்திலே சுசீலராய் விளங்கப்பட்ட அரசர்கள் உண்டாயிருந்தால் அப்படிப்பட்டவர்கள் பெயரை எடுத்துச்சொல்லுங்கள்" என்று கேட்டான். உடனே வசிஷ்ட மகாமுனிவர் "பூலோகத்திலே சமானஸ்கந்தனாய் பரதார சகோதரனாய் பராக்கிரமசாலியாய் வேதவிதிகளையும் ஸ்மிருதி ஒழுக்கங்களையும் வழுவவிடாதவனாய் யோக்கியர்களில் யோக்கியனாய் இருக்கப்பட்டவன் அரிச்சந்திரமகாராஜனே என்று பெயர் சொல்லப்பட்ட ஒருவன் உளன்" என்று சொன்னார். அதைக்கேட்ட விசுவாமித்திரமுனிவர் "ஐயா! வசிஷ்டரே! பொல்லாதவனும் பரதார இச்சையுடைய பொய்யனும் அல்பனும் வஞ்சகனுமாய் இருக்கப்பட்ட ஒருவனை இந்த மகாசபையிலே மிக நல்லவனென்று புகழ்ந்துபேசினீர். அதனால் உமக்குக் காரியார்த்தம் ஏதாகிலும் உண்டோ" என்றார். அதனாலே அவ்விருமுனிவர்களுக்கும் விவாதமுண்டாகி, வசிஷ்டர் "என் வாக்குப்பொய்த்தால், நான் என் தவத்தை இழந்து புலைச்சேரியில் தலையோட்டில் பிச்சைவாங்கிக் காலங்கழித்து யமலோகம் போகக்கடவேன்" என்றும் விசுவாமித்திரர் "நான் தோற்றால், என் தவத்தில் பாதியைக் கொடுக்கிறேன்" என்றும், சபதஞ் செய்துகொண்டனர். விசுவாமித்திரரும் அரிச்சந்திரனுடைய ஒழுக்கங்களைப் பரீக்ஷித்தறிய ஆலோசனை செய்துகொண்டு மேருமலைச்சாரலில் தம்முடைய தபோவனத்தைச் சென்றடைந்தனர்.

விசுவாமித்திரர் செய்த வஞ்சனைகள்.

விசுவாமித்திரர் தாம் செய்ய நினைத்திருக்கும் ஒரு யாகத்திற்கு வேண்டுமான பொருளுதவிசெய்ய அரிச்சந்திரனிடத்தில் வாக்குறுதிபெற்று வரும்படியாகச் சில முனிவர்களை அனுப்பினார். அவர்களும் அப்படியேபெற்றுக்கொண்டு வந்தபின்பு தாமே அரசனிடம் நேரில்சென்று அந்தப் பொருளைப்பெற்று அதனை அவனிடத்திலே தானே அடைக்கலமாக வைத்துப்போய், கோசலநாட்டையெல்லாம் அழிக்கத்தக்கதாக சில மிருகங்களையும் ஒரு பன்றியையும் ஏவினார். இது செய்தியை இன்னதென்றறியாத அரசன், பயிர் பச்சை முதலானவைகளை அம்மிருகங்கள் நாசஞ்செய்வதாகக் குடிகள் முறையிட்டுக்கொண்டதைக் கேள்வியுற்று, அம்மிருகங்களையெல்லாம் வேட்டையாடி வதைத்துவிட்டான். இதையறிந்து விசுவாமித்திரர் மிகுந்த கோபாவேசங்கொண்டவராகவே, அவருடைய தவாக்கினியினின்றும் இரண்டு நீசப்பெண்கள் உற்பத்தியானார்கள். அந்தப்பெண்களை அரிச்சந்திரனிடம் அனுப்பி ஆடல் பாடலால் அவனை மயக்கி அவனோடு கலவிசெய்து வரும்படியாகத் திட்டப்படுத்தி யனுப்பினார். அவர்களுடைய ஆடல் பாடல்களைக்கண்டு சந்தோஷமடைந்த அரசன் அவர்களுக்கு வேண்டுமான பொருளைக் கேட்கும்படி சொன்னான். அந்தப் பெண்கள் "நீர் முடிசூட்டிக்கொள்ளும்போது பிடித்துக்கொள்வதான வெண்கொற்றக் குடையைக் கொடுக்கவேணும்" என்றார்கள். அதற்கு அரசன் "சூரிய குலத்து அரசர்கள் தலைமுறை தலைமுறையாகப் பிடித்துவருகின்ற குடையாதலால் இதைக் கொடுக்க உதவாது. இங்கே காணப்படுகிற வேறெந்தப்பொருளை வேண்டுமானாலும் கொடுக்கிறேன்" என்று சொன்னான். "ஆனால் எங்களுக்கு உம்மை அணைந்து சுகிக்க விருப்

பெண்டு அந்தச் சுத்தத்தைக் கொடுத்தால் போதும்" என்றார்கள். உடனே மந்திரியாகிய சத்தியகீர்த்தி என்பவன் "சூரியகுலத்தரசர்கள் கேட்கத்தக்கதைக் கேட்டால் கொடுக்கத்தக்கதைக் கொடுப்பார்கள். ஆகையால் நீங்கள் தக்கபடி ஆலோசித்துக் கேட்கத்தக்கதைக் கேளுங்கள்; இல்லாவிட்டால் இங்கே நிற்காமல் போய் விடுங்கள்" என்று சொன்னான். அதன்மேல் அந்தப் பெண்கள் "உங்களைப் பிரபு என்று நினைத்து வந்தோம்; இப்படிப்பட்ட மனுஷர் என்று தெரிந்தால் வந்திருக்கமாட்டோம்" என்று சொன்னார்கள். அதைக்கேட்ட அரசன் அவர்களை வெட்டித்தள்ளும்படியாக ஆக்கியாபித்தான். அவர்களும் விசுவாமித்திரரிடம் சிதைந்த கோலமாக ஓடிச்சென்று நிகழ்ந்ததை எல்லாம் தெரிவித்தார்கள். தெரிவிக்கவே விசுவாமித்திரர் கோபாக்கிராந்தராகி அரிச்சந்திரனிடம் செல்வாராயினார்.

அரிச்சந்திரனைப் போய்ச்சோல்விக்க எண்ணி விசுவாமித்திரர் செய்த உபாயங்கள்.

தன்னைக் கோபித்து வந்த விசுவாமித்திரருடைய பாதங்களை அரிச்சந்திரன் வணங்கினான். வணங்கினவனது தலையில் முனிவர் உதைத்தார். அரசன் அவர் கால்களுக்கு நோமே என்று [illegible] கால்களை வருடிக்கொண்டு "சுவாமி! நான் செய்த குற்றமென்ன?" என்று கேட்டான். முனிவரும் "நானனுப்பின மிருகங்களையெல்லாம் கொன்றுவிட்டாய்; நானனுப்பின பன்றிக்குத் துன்பஞ் செய்தாய்; பெண்களை [illegible] செய்தனுப்பினை. [illegible] இருக்கின்றாய் செய்கிறதெல்லாம் கெட்டவர்களுக்கு [illegible] ன் என்றார். அரசன் "சுவாமி! தேவரீர் அனுப்பின சங்கதி அடியேனுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இப்படிச் செய்திருக்கமாட்டேன். பொறுக்கவேணும்" என்றான். முனிவர் நீ கற்றவித்தையை [illegible] வேண்டாம். என் பெண்களின் [illegible] அவர்களை அடித்துத் துரத்தின காரணத்தை உள்ளபடி சொல்லாய்" என்று சொன்னார். அதற்கு அரசன் "சுவாமி! உங்களுடைய பெண்கள் என்று [illegible] தெரியாது. [illegible] சகியமான சில வார்த்தைகளைச் சொல்லவே அவர்களை [illegible] யிற்று. இதுதான் நடந்த சங்கதி. பொறுக்கவேணும்" [illegible] மேல் 'யாசகஞ் செய்ய [illegible] வந்தவர்களுக்குப் பொருள் [illegible] கொடாவிட்டாலும் நல்ல வார்த்தையாகிலும் சொல்லுகிறது [illegible] பொறுமையில்லாமல் அடித்துத் துரத்தியது அரசனுக்குத் தகுதியாகுமா" என்று கோபித்துக்கொண்டார். அப்போது அரசன் "சுவாமி! அந்தப் பெண்களை இடித்த [illegible] குற்றம் [illegible] உடம்பை எல்லாம் [illegible] செய்யும்" என்று சொல்ல, முனிவர் 'அந்தப் பெண்களை [illegible] கொள்வதானால் நீ செய்த குற்றமெல்லாம் பொறுக்கிறேன் [illegible]' என்று சொன்னார். அதைக் கேட்ட அரசன் ஐயா! "[illegible] தான். இந்த ராஜ்யமாத்திரம் [illegible]. முனிவர் கோபங்கொண்டு 'ஆனால் நீ புலையர்க்கு அடிமையாகக் கடவாய்' என்று சபித்தார். அரிச்சந்திரன் 'அதற்காக [illegible] சபித்தால் இனி எனக்கு [illegible] வழி [illegible] சுவாமி! என்னுடைய ராஜ்யத்தை வேண்டிய [illegible] கொள்ளுங்கள். அந்தப் பெண்களை மாத்திரம் விவாகம் பண்ணேன்' [illegible] மாத்திரத்தில், முனிவர் "ஆனால், ராஜ்யத்தைத் தாரை வார்த்துக் கொடு" என்று சொன்னார். அப்படியே அரசன் [illegible] தாரை வார்த்துக் கொடுத்தான். பின்பு முனிவர் [illegible] ஆடையாபரணங்களையுங் கைப்பற்றிக்கொண்டு [illegible] முடித்து [illegible] கொடுத்தனர். அதையவனே [illegible]

..டுத்திக்கொண்டு விடைபெற்றுச்செல்லும் அரசனை வாவென மீண்டும் அழைத்து "முன்பு உன்னிடத்தில் யாகத்தின் பொருட்டாக வைத்துள்ள அடைக்கலப்பொருளைக் கொடுத்துவிட்டுப் போவாய்" என்று சொன்னார். சொல்லவே அரசன் "ஐயா! நான் அதை வேறே யெடுத்துவைத்துக்கொள்ளவில்லை இப்பொழுது தாரைவார்த்துக் கொடுத்ததில்தானே அதுவும் சேர்ந்துளது" என்றான். முனிவர் "நீ தாரைவார்த்துக் கொடுக்கும்போது அப்படிக்கென்று சொன்னதுண்டோ? இல்லையே, சூரியகுலத்தரசர்கள் சொன்ன சொல்தவறுவதில்லை, அது உன்னிடத்தில் நான் காணக்கூடாததாயிருக்கிறது" என்று சொன்னார். அதைக் கேட்டு அரிச்சந்திரன் "உம்முடைய கோபத்தால் நினைவு தடுமாறிப்பித்தனை என்னைப்பொருள் கேட்கிறீர். நான் எங்கேபோய்ச் சம்பாதித்துக் கொடுப்பேன். ஆனாலும் இத்தனை நாள்களுக்குள்ளே கொடுக்கவேண்டும் என்று ஒருகெடுவை ஏற்படுத்தினால் அப்படியே கொடுத்து விடுகிறேன்" என்றான். இப்படியாகப் போராடவே கடைசியாக நாற்பத்தெட்டுநாளில் கொடுக்கவேண்டுமென்று ஒரு கெடுவை வைத்து, அரசனைத்தம்முடன்வந்து நாடுநகரத்தை ஒப்பிக்கும்படி செய்து, அதன்மேல் சுக்கிரனை அழைத்து அரசனுடனே தரகனாக அனுப்பினார். சுக்கிரனிடத்தில இரகசியமாய்க்கெடுவுக்குள் பொருளைக் கொடுத்தால் பார், இல்லாவிட்டால் சாக்ஷிவைத்துவிட்டு நீ உடனே வந்துவிடு. பொருளைப்பெற்றுக்கொண்டபிறகு உனக்குத்தரகையும் கேட்டுவாங்கிக்கொள். வழியிலே எப்படியாகிலும் அவனிடத்திலே பசப்புவார்த்தைகளைப்பேசி பொருளைக்கொடேன் என்று சொன்னால் நாடுநகரங்களை முனிவரிடத்திலே வாங்கிக்கொடுத்துவிடுகிறேன்; பாபம் சுகமாக இருப்பாய் என்று சொல்லி, அவன் வாயில் ஒரு பொய்யை மாத்திரம் வாங்கிவருவாயானால் அஃதொன்றுமே எனக்குப்போதுமானது என்று சொல்லிவைத்தார். சத்தியகீர்த்தியென்னும் முதல்மந்திரியானவன் என்னசொல்லியுங்கேளாதவனாய் அரிச்சந்திரனுடனே போனான்.

அரிச்சந்திரனும் மனைவிமகனும் அடிமைகளாகி இன்னல் படுவது

அரிச்சந்திரன் மனைவி மகனுடனே காட்டில் சத்தியகீர்த்தித் தேடிக்கொடுக்கும் கிழங்கு கனிகளைச் சுக்கிரனுக்குங் கொடுத்து மற்றவர்களும் உண்டு வழிகடந்து காசிநகரை யடைந்து மனைவியை விலைகூறினான். வாங்குவாரின்றிக் கடைசியாய் விசுவாமித்திரருடைய சூழ்ச்சியால் ஒரு பார்ப்பான், கொடுக்கவேண்டிய பொருளைக்கொடுத்து, சந்திரமதியையும் லோகிதாசியனையும் அழைத்துக்கொண்டுபோய்த் தன் வீட்டில் உள்ள வேலைகளைச் செய்யும்படி இம்சைசெய்துவந்தான். சுக்கிரன் விசுவாமித்திரருக்குச் சேரவேண்டிய பொருளைப்பெற்றுக்கொண்டபிறகு தன் நடைகூலியைக் கேட்கவே, அரசன் தன்னையே வீரவாகு என்னும் புலையனுக்கு அடிமையாக விற்றுத் தரகு கூலியையுங் கொடுத்துவிட்டு, புலையனிடத்தில் சுடுகாடுகாக்கும் ஏவலில் அமர்ந்திருந்தான். இதுநிற்க ஒரு நாள் லோகிதாசியனைப் பார்ப்பான அயல்வீட்டுச் சிறுவர்களோடு காட்டுக்குப் போய் விறகு தருப்பை கொண்டுவரும்படி யனுப்பினான், காட்டில் லோகிதாசியன் பாம்புகடித்திறந்துபோனானென்று சிறுவர்கள் சொல்லக்கேட்ட சந்திரமதி வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு இரவில் காட்டுக்குப்போய் மகன் செத்துக்கிடக்கிற இடத்தைக் கண்டுபிடித்து அவனைப்பார்த்துப் பலவிதமாகப் பிரலாபித்துப் பின்பு அவனைத் தகனஞ் செய்யும்படி சுடுகாட்டைத் தேடிக்கொண்டுபோனாள். அங்கே சிதறிக்கிடக்கும் குறைகாஷ்டங்களை எடுத்தடுக்கித் தீமூட்டிச் சவத்தை எடுத்துவைத்தாள். தீயைக்கண்ட சுடுகாட்டுக் காவலனாகிய அரிச்சந்திரன் "யாரது! கொள்ளிக்காசு - முழச்சீலை - வாய்க்கரிசி கொடாமல் என்னுத்தரவில்லாமல் சுடுகாட்டுக்குள்ளே வந்து இப்படிச்செய்கிறது" என்று கேட்கச், சந்திரமதி

ஐயா! இக்கிலலாதவள், பிள்ளை பாம்பு கடித்து இறந்துபோனான்! காஷ்டம் வாங்கித் தகனம்பண்ணவும் பொருளில்லை" என்று சொன்னாள். இவளை இவளென்றறியாத அரிச்சந்திரன் "யாரும் இல்லையென்கிறாயே! கழுத்திலிருக்கும் தாலியை விற்றுத் தகனஞ் செய்யலாகாதா" என்று கேட்டான். இதைக் கேட்ட சந்திரமதி "ஐயோ! இந்த ஊரைவிட்டுச் சேர்ந்தும் பெயரும் பொய்த்துவிட்டதே! என் பாதத்தாவலவாத பிறருக்குக் கட்புலனாகாததால் இந்தப் பறையன் கண்ணுக்கும் தெரியலாயிற்றே! என்னுடைய பெருமையும் அழகும் பொறுமையும் முதலான [illegible] கற்பும் தவறுமோ" என்று வருந்தப்பட்டதைப் பார்த்து, அரிச்சந்திரன் இவள் மனைவியாயினா [illegible]

[illegible]

அரிச்சந்திரன் முதலானவர்களுடைய பூர்வ சரித்திரம்.

(1) **அரிச்சந்திரன்.**—நீலலோகிதன் என்னும் அரசன் தனக்குத் திரிலோகாதிபத்தியம் வேண்டுமென்று விசுவாமித்திரரைப் பிரார்த்திக்க, அவர் "நீ ஏழுஜன்மம் தவஞ்செய்யவாகிலும் வேண்டும் அல்லது ஒரு ஜன்மத்தில் மிக்க துன்பம் அநுபவிக்கவாகிலும் வேண்டும்" என்றனர். அவ்வரசன் "ஆனால் ஒருபிறப்பிலே துன்பம் அநுபவிக்கிறேன்" என்றான். விசுவாமித்திரர் "அப்படியே மூவுலகாட்சியை அடைக" என்றநுக்கிரகம் பண்ணினார். அந்த அரசன் அரிச்சந்திரனாய்ப் பிறக்கவே, விசுவாமித்திரர் அவனைத் துன்பநுகர்வித்து மூன்றுலகத்தையும் ஆளும்படி செய்தனர். இவன் அக்கினிதேவனது அம்சம் என்பர்.

(2) **சந்திரமதி.**—சோதிமான் என்னும் அரசன் பிள்ளைப்பேறில்லாமல் அரியதவஞ்செய்து ஒரு பெண்ணைப்பெற்றான். அவள் பிறந்தவேளை அநர்த்தத்துக்கு ஏதுவானதாதலால் அவளை எங்காகிலுங் கொண்டுபோய் விட்டுவிடவேண்டுமென்று சோதிடர்கள் சொன்னார்கள். அவள் நித்திரை செய்துகொண்டிருக்கும்போது அவளை அரசன் ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டுவிடும்படி உத்தரவு பண்ணினான். அந்தப் பெட்டியை மயன் என்பவர் எடுத்துப்பார்த்துப் பெண்ணிருக்கக்கண்டு "தீர்க்க சுமங்கலியாயிரு" என்றாசீர்வதித்தவிட, அவள் "சுவாமி! எனக்கு விவாகமேயில்லை; என்னைத்தேசத்துக்கு அரிஷ்டமென்று ஆற்றில் விட்டுவிட்டார்கள்" என்று சொன்னாள். அவர் 'ஆனால் நீ என் தவமகிமையால் சந்திரமதியாய் மாங்கலிய சூத்திரத்தோடு பிறப்பாய்' என்று அநுக்கிரகஞ்செய்தார். உடனே அவள் தீக்குளித்திறந்து மதிதயன் புத்திரியாய் அவ்வாறே அவதரித்தாள் என்பர்.

(3) **லோகிதாசியன்.**—முற்காலத்தில் தக்ஷகன் (the serpent) இந்திரனிடம் செல்கையில் தன்குமாரனை அழைத்துக்கொண்டுபோய் அளகாபுரியின் (குபேரன்பட்டினம்) அருகில் நிறுத்தித் தானுட்செல்ல, அரம்பையின் மனைவாயிலுக்குக் குறுக்காக ஒருபாம்பு (தக்ஷகன் குமாரன்) இருப்பதை நளகூபரன் (குபேரன் மகன்) கண்டு வாளால் வெட்டினான். அதைக் கண்ட தக்ஷகன் நளகூபரனைப்பாம்பு கடித்திறக்கும்படி சபித்துத் தன் புதல்வனை மிருதசஞ்சீவினியால் உயிர்ப்பித்துக்கொண்டுபோனான். நளகூபரன் அம்சத்தில் பிறந்தவன் லோகிதாசியன் என்பர்.

(4) **வீரவாகு.**—விசுவாமித்திரருடையகிருபையால் சண்டாள உருவத்துடன் சுவர்க்கநோக்கிச்செல்லும் திரிசங்குமன்னனை இந்திரலோகம் வந்திருந்த யமன் இகழ்ந்து காலால் உதைத்துத்தள்ளினான். அதுகண்ட விசுவாமித்திரர் யமனைப் புலையனாகும்படி சபித்தார். அதன்மேல் யமன் வீரசேனன் என்பவனுக்குப் புத்திரனாய் வீரவாகு என்னும் பெயரினனாய்ப் பிறந்தான் என்பர்.

(5) **காலகௌசிகன்.**—சூரியன் சமிஞ்ஞை என்பவளை மணந்து மனு-யமன் என்பவரைப் பெற்றான். சமிஞ்ஞை சாயை என்பவளைச் சிருஷ்டித்துத் தன் கணவனுக்கும் மக்களுக்கும் துணையாக வைத்துக் கணவனுடன் சொல்லாமல் தாய்வீடுசென்றாள். சாயையும் தன்னை இன்னாள் என்று தெரிவிக்காமல் சூரியனைச்சேர்ந்து சௌவர்ணி - சனி - என்னும் இருவரைப் பெற்று சமிஞ்ஞையின் மக்களை ஆதரியாமலிருக்க, யமன் சமயம்பார்த்துச் சனியின்காலை ஒடித்தனன். சனியானவன் நடக்க முடியாதவனாய் நைமிசாரணியத்தை அடைந்து கௌசிகமுனிவர் அருளால் உபதேசிக்கப்பெற்றுத் தவஞ்செய்து இரகபதத்தை அடைந்தனன். ஆதலால் சனி கௌசிகமுனிவர் கட்டளைப்படி காலகௌசிகனானான் என்பர்.

இராமநாதபுரம்.

பாலவநத்தம் ஜமீந்தார்

ஸ்ரீ-பாண்டித்துரைத் தேவரவர்கள்

வரலாறு.

இவர், செந்தமிழ் வளர்த்தவள்ளலும், காலஞ்சென்ற இராமநாதபுரம் சேதுபதியவர்களின் தமயனாரும், ஷை சமஸ்தானத்தை நன்னிலைமையில் நிறுத்தினவருமான, ஸ்ரீ-பொன்னுச்சாமித் தேவரவர்களின் மூன்றாவது புதல்வர். பெருங்கீர்த்திபெற்ற தமது தந்தையார், தமதிளம் பருவத்தே சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தமையால், இவர் தமக்கையாரால் போஷிக்கப்பட்டும், கல்வி கற்பிக்கப்பட்டும் வந்தார். அக்காலத்து ஆங்கிலம் கற்று வந்த இவர், அப்பாஷையில் வேண்டுமளவு பயின்ற பின்னர், தாய் பாஷையாகிய தமிழினையும் நன்கு பயிலும் பேரவாக்கொண்டு அதனைச் சிறந்த ஆசிரியரிடம் இடையறாத ஊக்கத்துடன் கற்கத்தொடங்கினார். அவ்வாறே வேண்டும் இலக்கண இலக்கியங்கள் கற்று, பதினாறாம் பருவத்தே கம்பராமாயணத்தி னுட்பங்களைத் தெளிவாகப் பிரசங்கிக்கும் திறமையும் பெற்றார். பின்னரும் அந்நூலில் அவருக்குமிக்க பயிற்சியுண்டு. அஃதன்றி வடமொழியினுஞ் சிறிது பயிற்சியுடையராய்ப், பின்னர்ச் சைவபுராணங்கள் கற்கத் தொடங்கி மதுரை இராமசுவாமிப்பிள்ளை யென்னும் ஞானசம்பந்தப்பிள்ளையவர்களிடம், பெரியபுராணம்-திருவிளையாடல்-காஞ்சி-தணிகை-திருவானைக்கா முதலிய புராணங்களும் இன்னுஞ் சில நூல்களுங் கற்றுச், சைவசமயத்தில் மிக்க பற்றுடையரானார், கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து வித்துவான் தம்பிரானாயுள்ள ஸ்ரீலஸ்ரீ, பழனிக்குமாரசுவாமிகளிடம் சித்தாந்த சாத்திரங்கள் பலகற்றுணர்ந்தார். இவர்கட்குச் சிவஞான சுவாமிகளியற்றிய நூல்களிற் பயிற்சி பெரிதுமுண்டு. இஃதன்றியும் தமிழ் நூல்களின் உட்பொருளைப் பிறருக்கு எளிதில் எடுத்துரைக்கும் வன்மையும், பலரும் வியப்பப் பிரசங்கிக்கும் பெருந்திறமையும் அமைந்துள்ளன. திருவள்ளுவர்-திருக்கோவையார்-தருக்க சங்கிரகம் - சேதுபுராணம் முதலிய நூல்களை வெளியிடற்குப் பேருதவி புரிந்த தமது தந்தையைப்போலவே, தாமும்

சிவஞானசுவாமிகள் பிரபந்தத்திரட்டு மணிமேகலை புறப்பொருள் வெண்பா மாலையுடன் திருவிளையாடலுரை முதலியவற்றை லோகோபகாரமாக வெளியிட்டதும் பேருதவி புரிந்தன. மற்றைச் சமீபநூல்களில் இம்முறை காய போல [illegible] செய்யுட்களைப் பெருமுயற்சியுடன் ஆராய்ந்து [illegible], '[illegible]' [illegible] வெளியிட்டுதவினார்கள். ஸ்ரீ [illegible] மணிமேகலை பதிப்பாட்டு புற நானூறு [illegible] யந்திரசாலைகளில் [illegible] பதிப்பித்துள்ளார் என்பதை, [illegible], இவ் ஆதிமொழியில் சொற் சுவை [illegible] கேட்போர் மனங்களில் [illegible] செய்யுட்க [illegible] இன்றைய ஆங்கி லேய [illegible] (P[illegible]), ம[illegible] (Magic) முதலிய [illegible] [illegible], உயர [illegible] தமையிலன்றி [illegible]கள்" என்று [illegible] மாக [illegible] டனே அ [illegible] என்பா [illegible] (th [illegible] ணடுமே [illegible] செல்ல [illegible] ஞன [illegible] சல் சண்டாள உருவத்தை [illegible] புகுந்திருந்த [illegible] (15) [illegible]

விக்கா [illegible]



பன்னூற்றிரட்டு.

பன்னூற்றிரட்டு —(பல்+நூல்+திரட்டு) திருக்குறள் போலப் பால்களாகவும் அதிகாரங்களாகவும் வகுத்துக்கொண்டு பலநூல்களினின்றுந் திரட்டியதாதலின் இது காரணவகையாற் பெற்ற பெயராமென்க. பலவாகிய நூல்களினின்றுந் திரட்டிய திரட்டு (திரட்டு-தொகுதி) என மூன்று சொல் இரண்டு தொகையாய்த் தொக்குமுடிந்த தொகைநிலைத் தொடர்ச்சொல். பல்+நூல் என்பது பண்புத்தொகைநிலை; நூல் திரட்டு-நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகைநிலை [illegible]. நூல் உவமையாகு பெயர். திரட்டு - (பிறவினை) முதனிலைத் தொழிற்பெயர். பன்னூல் என்னும் அடையடுத்து [illegible] திரட்டு என்னுந் தொழிற்பெயர் ஆகுபெயராய் நூற்கு [illegible]. [illegible] "பல [illegible] எழுமினை [illegible]" (நன். 170) [illegible] 'பிறவினி [illegible] ஆகும் [illegible]' என்பதனால் நிலைமொழி [illegible] அகரம் [illegible]. பல்+நூல் [illegible] "[illegible] வருநனவும் [illegible] ஆகுர [illegible]" (நன். 237) [illegible] வருமொழி [illegible] ஆயிற்று. '[illegible] வேற்றுமை [illegible]' (நன். 227) என்பதனால் நிலைமொழியீற்று லகரம் [illegible]. பன்னூல் + திரட்டு - பன்னூற்றிரட்டு "[illegible] முன்னவும் [illegible]" என்பதனால் வருமொழி [illegible] ஆயிற்று. "[illegible] வேற [illegible]. பெருகவும்" என்பதனால் [illegible] மொழியீறு [illegible] ஆயிற்று.

மான் திருவடி நீழலை அடைந்த [illegible].

பட்டும், கல்வி கற்பிக்கப்பட்டும் [illegible] மறைமுதலிய நூல [illegible] இவர், அப்பாவையில் வேண்டு [illegible] ஒழுக்கம். அவ்வகை [illegible] அறம் தொ [illegible] தமிழினையும் நன்கு பயிலும் [illegible] பொருள். அற- [illegible] ரிடம் இடையறாத ஊக்கத்து [illegible].

டும் இலக்கண இலக்கியங்க [illegible].

யணத்தி ஐட்பங்களைத் ([illegible] கொடுத்தல.

பின்னரும் அந்நூலில அவர் [illegible].

யினுந் சிறிது பயிற்சிய [illegible].

தொடங்கி மதுரை இர [illegible] புராணங்க [illegible] யவர்களின் [illegible] நிலைகளுள [illegible] பெருங்காப்பியமா [illegible] ஆசாரியர் இரா [illegible] ஆசாரியரை [illegible] என்று [illegible] 10316 [illegible] [illegible] மெழு [illegible] இருகு [illegible] என்பதனால் [illegible] பித் பட்டவர் என்பதனில் [illegible].

1. (வாசனைக்கிரமம்) [illegible] முறைமையெனின், யார்க் கெனினும் [illegible] (அவர் [illegible]) [illegible] முடி [illegible] (யாக்கும்) (அவர்) [illegible] முடித்தல இடையா

கும், (அவர்) சொல்லுகினும் பன்னாள் மறுத்து (அப்பால்) புரிதல் கடைப் பான்மையதே (யாகும்).

(இதன்பொருள்) யாதொருவன் - எவனாகிலுமொருவன், தன்னால் முடியும் எனின் - தன்னால் கூடுமானதாக இருந்தால், யார்க்கு எனினும் - எவருக்கானாலும், என் ஆயினும் ஒருதவி - எதாகிலும் ஒருதவியை, தானே முடித்தல் - (அவர் சொல்லுமுன்னர்) தானே செய்துமுடித்தல், தலை - உத்தமமாகும்; சொன்னால் முடித்தல் (அவர்) சொன்னால் (அப்புறம்) செய்துமுடித்தல், இடை ஆகும் மத்திமமாகும்; சொல்லுகினும் - (அவர் முன்னதாகச்) சொல்லிக்கொண்டாலும், பன்னாள் மறுத்து - பலநாள் செய்யாமல் மறுத்து, புரிதல் - (அப்பால் அவ்வுதவியைச்) செய்தல், கடைப்பான்மையதே - அதமமேயாகும்

It is best that a man should do what he can to anybody himself before he is asked for it It is middling to do it after he is solicited It is worst to do a thing after long refusal even though he was solicited previously

(கருத்து) ஒருவர்க்குத் தன்னால் செய்யக்கூடிய யாதோருபகாரத்தை ஒருவன் அவர் [illegible] கேட்குமுன்னரே செய்வது உத்தமம் அதனை அவர் கேட்ட பின்னர்ச் செய்தல் மத்திமம்; அவர் கேட்ட பின்னரும் பல நாள்வரையில் முடியாதென மறுத்து அப்பாற் செய்வது அதமமாம்

"சொல்லாமலே பெரியர் சொல்லிச் சிறியர் செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே — நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடின்
பலாமாவைப் பாதிரியைப் பார்" என்று ஒளவையாரும்

(பலா பூவாது பயன் தருவது; மா பூத்துப் பயன் தருவது, பாதிரி பூத்தும் பயன் தரா தொழிவதாதலால் 'பலாமாவைப் பாதிரியைப் பார்' என்றார்)

என் எவன் என்னும் வினாவினைக் குறிப்பின் மரூஉ. பெயராய் யாதொரு பொருள் எனக் குறித்து நின்றது ஆனும் - ஆயினும் என்பது தொகுத்தல் யாதோருவன் - வழக்குப்பற்றியவந்த வழுவமைதி: யாரொருவன் என்பது வழாநிலை யார் யா என்னும் வினாவடியாகப் பிறந்த பலர்பாற் பெயர் தலை - தலைமை என்னும் பண்புப் பெயர் ஈறு குறைந்தது என்ப தற்குப் பெயப் பயனில்லாய் நின்றது தலைமை,' உவமையாற்றிச் சிறப் புணர்த்தும் அவ்வகைகளில் சிறப்புடையது தலை இது சிறப்பை அல்லது முதன்மையை உணர்த்தி நின்றது ஏ சிறப்பு சொன்னால் - சொல் + ன் + ஆல்: ன் சாரியை ஆல் வினையெச்ச விகுதி சொல்லுகின்-சொல் + உ + கு + இன்: உ, கு சாரியை இன் - வினையெச்ச விகுதி உம் - எதிர் மறை கடைப்பான்மையது - கடையாகிய பான்மையது பண்புத்தொகை நிலைத்தொடர் பான்மையது குறிப்பு வினையாலணையும் பெயர் பான்மை (ய்) + அ + து: அ சாரியை, து - ஒன்றன்பால் விகுதி பான்மைய, பான்மையன - பலவின்பால்

காஞ்சிப்புராணம்.

காஞ்சி நகரிலே நிகழ்ந்த சிவமகாத்மியத்தை உரைக்கும் புராணம். இதன் முதற்பாகம் பாடினவர் சிவஞானமுனிவர் இவர் பாண்டிநாட்டில் பாவநாசத்தையடுத்த விக்கிரமசிங்கபுரத்தில் வேளாளர் மரபில் அம்பலக்கூத்

தர் என்பவருடைய புத்திரர். இவர்க்கு இளமையில் வழங்கிய பெயர் முக்களாலிங்கர் என்பது. இவர் இளமையில்தானே திருவாவடுதுறை மடத்தையடைந்து இலக்கண இலக்கியங்களில் வல்லவராய்ப் பின்பு வடமொழியிலும் நிரம்பிய பாண்டித்தியமெய்தினார். இவருடைய ஞானாசாரியர் வேலப்பதேசிகர். பதிசாத்திரங்களிலும் வல்லவர். இவர் செய்த வேறு நூல்களாவன:— சோமேசர் முதுமொழி வெண்பா-நன்னூலுக்குச் சங்கரநமச்சிவாயர் எழுதிய விருத்தியுரையைத் திருத்திய புத்தம் புத்துரை - தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தி - இலக்கணவிளக்கச் சூறாவளி - தருக்கசங்கிரகம் முதலியனவாம். சிவஞானபோத அகலவுரையாகிய திரவிட மகாபாஷியமே சைவசித்தாந்திகளால மிகவுங்கொண்டாடப்பட்ட நூல். இது இன்னும் அச்சில் வரவில்லை. இலக்கணத்தில் மிகநிபுணர் என்பது தமிழ் வித்துவான்கள் நன்குணர்ந்த விஷயம்.

2. (வ-ம்) கொடையே எவர்க்கும் எப்பேறும் கொடுக்கும் (என்றும்), நெறியிற் பிறழாத கொடையே யாரும் தன் வழியின் ஒழுகச்செய்யும் (என்றும்), குறை தீர்ந்த கொடையே பகையை (யும்) உறவாக்கும் (என்றும்), கொடையே குலவும் பூதம் அனைத்தினையும் புரக்கும் என்றும் கவுதமன் உள்ளங்கொள்ளப் புகன்றான். ஏ - அசை.

(இ-ள்) கொடையே - ஈகையே, எவர்க்கும் - எப்படிப்பட்டவர்க்கும், எப்பேறும் - பலவகையான பாக்கியத்தையும், கொடுக்கும் (என்று) - கொடுக்குமென்றும்; நெறியின் பிறழாத - (பெரியோர் அனுசரித்த) மார்க்கத்தினின்றுந் தவறாத, கொடையே - ஈகையே, யாரும் - எப்படிப்பட்டவரும், தன் வழியின் - தான் விரும்பின வழியே, ஒழுகச் செய்யும் (என்று) - நடக்கும்படி செய்யுமென்றும்; குறைதீர்ந்த - (ஈகைக்குரிய இலக்ஷணங்களில் குறைவில்லாத, கொடையே - ஈகையே, பகையை - விரோதிகளையும், உறவாக்கும் (என்று) - உறவாகச் செய்யுமென்றும்; கொடையே - ஈகையே, குலவும் - பொருந்திய, பூதம் அனைத்தினையும் - உயிர்கள் எல்லாவற்றையும், புரக்கும் என்று - ரக்ஷிக்கும் என்றும்; கவுதமன் - கௌதமமுனிவன், உள்ளம் கொள்ள - மனதில் நன்றாய்ப் பதியும்படி, புகன்றான் - சொல்லினான்.

“ Only alms-giving bestows on anyone all kinds of blessings. Only Giving in the proper manner makes all inclined to one's ways. Only Gifts of the best kind even turn enemies into friends, only giving protects all lives” so said Gauṭamu very impressively.

கொடை - ஐ - தொழிற்பெயர் விகுதி: கொடுத்தல் என்பது. ஏ-பிரிநிலை. பேறு - பெறு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்: இது ஆகுபெயராய் பாக்கியத்தை உணர்த்தி நின்றது.

நெறியிற் பிறழாத கொடை என்பது இன்னார்க்குக் கொடுத்தல் வேண்டும் இன்னார்க்குக் கொடுத்தலாகாது என நூல்கள் விதித்த வழியில் தவறாத கொடையாம். இதனைப் பின் வருகின்ற 9-வது 10-வது செய்யுள்களாலும் உணர்க. தன் வழியின் ஒழுகச் செய்தலாவது - தன்னால் கருதப்பட்ட நல் வழியில் ஒழுகச்செய்தலாம். பிறழாத - பிறழ் + ஆ + த + அ: ஆ - எதிர்மறையிடைநிலை, த் - எழுத்துப்பேறு. ஈகைக்குரிய இலக்ஷணம் குறிப்பறிந்தல் முதலாயின.

குறைதீர்ந்த கொடையே பகையை உறவாக்கும்-பகைவரை வசப்படுத்தும் சதுர்வகை யுபாயங்களில் தானம் (கொடை) ஒன்றாதலால் அது பகையை உறவாக்கும் என்றார். என்றும் இது கருமசாஸ்திரங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டதாகலின், இது கொடுப்பார்க்கும் கொள்வார்க்கும் குறை (அவமானம்) தருவதன்று ஆதலால் கொடையைக் குறைதீர்ந்த என விசேடித்தார் என்றும் கொள்ளலுமாம். பூதம் - பூதசம்பந்தமான உடலையுடைய உயிரைக் குறித்தலால் இருமடியாகுபெயர். புரக்கும் - புர (க்)+கு+உம்; புர - பகுதி. புகன்றன் - புகல-பகுதி.

தணிகைப்புராணம்.

திருத்தணிகை - சுப்பிரமண்ணியர் எழுந்தருளியிருக்கும் ஸ்தலம்.

அகத்திய னருள்பெறுபடலம் [illegible] வது செய்யுள்.

(ஆசிரியர் வசனாரனை ஆகிய செய்யுளாயிற் காண்க.)

3. (வ ம்) (ஒருவ [illegible]) [illegible] (ஆ [illegible]) [illegible] றைல் பிழைகளெல்லாவற்றையும் [illegible] கலகூரின (அவன்) [illegible] [illegible] ணடும, (ஒரு பொருளை யாசிக்க) [illegible] மறுக்க [illegible] அறிவிலார்க்கு [illegible] (ஆ [illegible] ஏ - அசை.

(இ ள்) தருக்கு உறும் - [illegible] மிகுவிக்கின்ற, செல்வம் - செல்வத்தை, [illegible] (ஒருவன்) அடைந்தால், [illegible] (அவனிடம் உண்டாக [illegible]) [illegible] - பிழைகள் பலவற்றையும், பெருக்கும் (தானே [illegible]) [illegible] (ஒருவன்) [illegible] [illegible] இரந்து சேறல் - யாசித்துச் செல்லுதல், [illegible] துயரம் - சாதல் [illegible] உண்டா [illegible] [illegible] - [illegible] (பாவிகளுக்கு) [illegible] போகளுக்கு, இரக்கம் அற்று - [illegible] ([illegible]) [illegible] - ([illegible]) [illegible] னமையை அறிதலில்லாருக்கு, [illegible] - [illegible] சொல்லளிலும் மிக, கடுந்துயர் [illegible] யாகும்.

The elation of wealth multiplies all sorts of faults in a man. To go a-begging that when [illegible] befall produces misery greater than that of death [illegible] to the indigent produces greater misery to the misers who are not aware of the fruits of alms-giving.

(க-து) செல்வத்தினுடைய சுபாவம் [illegible] அதிகரித்தல் ஒருவனுக்குச் செல்வம் உண்டா[illegible] அதன் காவலதை [illegible] குற்றங்களையே அதிகமாக [illegible] சித்திருண்டாகுமெனர், பாவம் பிறிடத்தில் யாசித்துச் [illegible] வேதனையைக் காட்டிலும், மிக்க [illegible] தன்னிடம் யாசித்தவர்களுக்கு [illegible] கொடாமல் ஒளிப்பதானது [illegible] அறியாதவர்களுக்குத் தீவிரத்தால் உண்டாகும் [illegible] துன்பத்தை உண்டாக்குகின்றது

தருக்கு - முதனிலைத் தொழிற் பெயர். இதனடியாகத் தருக்குதல், தருக்கல், தருக்கினேன், தருக்குவேன், தருக்க என வினை விகற்பங்கள் வருவது காண்க.

உறும் - உறு என்னும் உரியடியாகப் பிறந்த பிறவினை வினையெச்சம்: பிறவினையைக் காட்டும் விகுதி தொகுத்தலாய் நின்றது. செல்வம் - செல்- பகுதி. வ் (செவ்வுழிச் விண்வதனாக கொக்கு என்பவற்றிற்போல) உடம்படு மெய்யல்லாத மெய். அம - காரணப் பொருள் விகுதி. செல்வமா என்பது பொருள். அதாவது கைக்குக்கை செல்வது; ஒரு பொருளுக்கு மாறுகச் செல்வது. இது இப்பொருட்டாதலை 'இந்தக் காசு செல்லுமா' 'இது செல்லாத காசு' என்னும் வழக்காலு மறிக. செல்லும பொறுப்புடையது எனவுமாம். இங்கிலீஷிலும் அர்த்த சாஸ்திரத்தில Wealth is that which has exchangeable value எனக் கூறுதலால் இத்தன்மைத்தே பொருளாமெனக. பெருந்தும் - பிறவினை: பெருநம - தன்வினை நல்கார் - நல்கு+ஆர்; பிறர் நல்குவதைத் தராதல: பிறர் கொடுப்பதைத் தேறக் கேட்டுச்செலுத்தல் இது திரிந்ததல் துரவு எனத் தொழிற்பெயராயும், திரியாமல் நல்கார், நல்கரின், நல்கார்ந்தான் என வினைவிகற்பங்களாயும் வருகின்றன.

பிறர் - பிற என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்த பலர்பாற் பெயர்; பிறன் பிறள்-பிறிது பிற என ஏனைப்பால்களினும் வரும். உயாழ - ஏழாம் வேற்றுமை உருபு. இரந்து: இர-ப. சேறல் - செல+தல்: பகுதி முதல் நீட்டல். இரக்கம் - இரங்கு+அம்; பகுதி - வலித்தல் விகாரம் பெற்றது; தொழிற்பெயர். ஊங்கு -முன் என்னும் பொருளில 'வெவ்வேறெணணற் காறு ஊங்கே - நினணினும் புல்லியேம' எனப் புறநானூற்றில் வருகின்றது. மிகுதிப் பொருளிலும் வழங்கிவருகின்றது. இங்கே மிகுதிப்பொருள். இடைச்சொல். (ஆங்கு ஈங்கு) ஊங்கு எனச் சுட்டாக வருதலுமுண்டு.

விநாயகபுராணம்.

விநாயகபுராணம் - விநாயகருடைய மகத்துவங்களைப்பாடிய புராணம்- இது பாடினார் கச்சியப்பமுனிவர். இவர் திருத்தணிகையில வேளாளர் குலத்தில் பிறந்தவர். திருவாவடுதுறையாதீனம் சிவஞான முனிவரிடத்திலே இலக்கண இலக்கியம் பயின்றவர். அவருடைய மாணாக்கருக்கு முதன்மையாயிருந்தவர். இவர் பாடின ஏனை நூல்கள்.—திருத்தணிகைப்புராணம், பூவாளூர்ப்புராணம் பேரூர்ப்புராணம் - திருவானைக்காப்புராணம் - காஞ்சிப்புராணம் இரண்டாம் பாகம தணிகையாற்றுப்படை முதலியனவாம். இவை கி. பி 17:0-ஆல தேகவியோகமாயினார்.

4-5 6-7

சோமகாந்தன்-தன்மைந்தனை யமகண்டகனுக்கு கூறுவது.

(உபாசனோபதேசப் பிரயோகப்படலம்.)

4. (வ-ம்) மைந்தா! இரப்பவன் யாவர்க்கும், எவ் (நான்) இரவினையும் எவ்வதனை(ப பிறரிடம) கூறாது, (அவனுக்கு) இரப்பினை தீர்ப்பதல நன்றாம். இரப்பவன் (தான) இல்லை என்று ஆர் இரப்பிய எவ்வதை (வேறொருவர்) சொல் என்று இரப்பிய, (அவனைப், பிறர்க்கு கூறுவ. இரக்கமொடு ஈதல இதனின் நல்லறம் ஆகும்.

(இ-ள்) மைந்தா - மைந்தனே! இரப் [illegible] - பயனின்றி, சென் - செல்லுமாறு. இல்லை [illegible] வழியோன் என்று சொல்லும் இழிவை, கூறுவ பிறரிடத்து [illegible], இரப்பினை தீர்ப்பதல - (அவன்) [illegible]

[illegible] ... இதனின் - இசை ... [illegible]

It is good to help a beggar without expressing to others the baseness of his poverty that he may go away uselessly. It is better to help, ungrudgingly without speaking to others even when asked to do so the baseness of the poverty fully expressed by him.

(1 து) [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

தச் செய்தலும் (ஆகிய இச்செயல்கள்), ஒன்றினொன்று - ஒன்றைக்காட்டிலும் ஒன்று, புகழ்மிக - மேன்மேலும் மிகும்படியாக, விளங்கி நிற்கும் - விளங்கி நிற்கும்.

To help a man willingly before he expresses his want; to help a man with abundance so that he may not complain of want thereafter; to settle upon a man boundless wealth so that he may without expressing want give help when pressed by others in need: these stand in the ascending grade of [illegible]

(க-ள்) [illegible]

[illegible]

6. (வ-ம்) (பூதசரீரத் ஜநகத்த) சாதல் வந்தாலும், பூதலம் இறக்குங்காலும், புகழுடம்பு [illegible] அந்தக் கோதறு [illegible]

(இ-ள்) சாதல் (பூதசரீரத் [illegible]) [illegible]

[illegible]

Death may happen, the earth may perish, but the body of fame lives imperishably for ever. It is only those who live happily with the spotless body of fame obtained by charity that are envied even by the gods.

(க-ரு) [illegible]

த்திரம் கல்பாந்த காலத்தும் அழிவில்லாததாய் எக்காலத்தும் நிலைபெற்றிருக்கும். ஈகை நலத்தினாலே இந்தப் புகழுடம்பைப் பெற்று வாழ்பவர்களே தேவர்களாலும் பூசிக்கப்பட்ட யோக்கியதை உடையவராவார்.

ஈகையால் புகழுடம் படைதலை—

"களைகளைத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய
தானுடம்பென்று புகழுடம் போம்புதற்கே
தானுடம் பட்டார்கடாம்"

என்னும் நீதிநெறிவிளக்கத்தாலு முணர்க.

சாதல் - சா - பகுதி: இப்பகுதி இறந்தகால வினை விகற்பங்களில் செனத் திரிந்துவரும்:—செத்தான், செத்து, செத்த: ஏனைக்காலங்களில் திரியாதுவரும் :—சாகிறான், சாவான், சாக, சாகின், சாகும் : எதிர்காலத்தில் செத்தால், செத்தக்கால், செத்தக்கடை என வருதலுமுண்டு.

அடுத்தகால் - பெயரெச்சத் தொடர் : செய்திய வென்னும்...பல்வகைப் பெயரினெச்சம் &c" என்கிற விதிப்படி இயல்பாயிற்று. அடுத்தக்கால் எனவரின் ஒரு சொல்லாய் வினையெச்சமென்றுணர்க. கால் - காலம் என்பது கடைக்குறை. பூ - பூமி: வடசொல். தலம் - ஸ்தலம் : வடசொல். பூதலம்- இருபெயரொட்டு. புகழுடம்பு - பண்புத் தொகை நிலைத்தொடர். புகழின் யாக்கை என்பதில் இன் - சாரியை. யாக்கை - யா + க் + ஐ: கு - சாரியை; ஐ - செயப்படுபொருண்மை விகுதி: சப்த தாதுக்களால் கட்டப்பட்டது என்பது பொருள். கூர - கூர என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த குறிப்பு வினையெச்சம். அன்றே - தேற்றப் பொருளில் வந்த இடைச்சொல். வானம் - இடவாகுபெயர். நீரார் - நீர்(மை) + ஆர்: நீர்(மை) - தன்மை, யோக்கியதை.

7. (வ-ம்) (ஒருவன்) பொருளை (த்தொகுத்து) வைத்துத் தானும் நுகரான் (பிறர்க்கும்) வழங்கான் (உயிரோடு) இருந்தும் செத்தானே (யாவன்). (ஆகவே அவன் தான்) செத்தபின்னர் (அதைக்கொண்டு) என்செய்வான். (அதனைத்)தீயார்கொள்வர். (பாவம் அதனை)ஈட்டுதலான்...வழங்கலேயாகும்.

(இ-ள்) பொருளைவைத்து - (ஒருவன்) பொருளை (ச்சேர்த்து) வைத்து, தானும் நுகரான் - தானும் அனுபவியாமல், வழங்கான் - பிறருக்கும்) கொடாமலிருப்பவன், இருந்தும் - உயிரோடு இருந்தும், செத்தானே - செத்தவனே யாவன். செத்தபின்னர் - (உள்ளபடி) அவன் மரணமடைந்தால், என் செய்வான் - (அப்பொருளைக்கொண்டு) என்ன செய்வான்? தீயார்கொள்வர் - (அவன் செத்தபிறகு அப்பொருளை) கொடியவர் வெளவிக்கொள்வர். ஈட்டுதலான் - (அப்பொருளைத்) தேடுதலால், மெத்தும் - மிகுதலான, வருத்தமே அன்றி - வருத்தமேதவிர, வேறு ஒன்று இல்லை - வேறு ஒரு நன்மையும் (அவன் அடைந்ததாக) இல்லை, ஆதலினால் - ஆதலால், பொதிதும் - (தேடி) மூடிவைத்திருக்கும், வைப்பு - திரவியமானது, நன்றியுறல் - நன்மையடையுமாறு யாதெனின், புசித்து வழங்கலே ஆகும் - தானும் உண்டு பிறருக்கும் கொடுத்தலேயாம்.

He, who, possesing wealth, neither, enjoys it himself nor gives to others, is dead though alive. Of what avail would it be to him after death? The vicious will covet it. He had no good of it except that he took great pains to acquire it. The only good, therefore, of wealth locked up is to enjoy it and give it to others.

(கு-ரு) பிரயாசை எடுத்துக்கொண்டு பொருளைத் தேடிவைத்தும் அதனைத் தானும் தன்மட்டில் அநுபவியாமல் வறுமையால் வருந்துகின்ற பிறருக்குங் கொடுக்காமல் இருப்பவன் உயிரோடிருந்தும் செத்தவனுக்குச் சமானமேயாவான். தான் இருக்கும்போதே அந்தப்பொருளை ஒன்றுஞ் செய்யாதவன் செத்தபிறகு அதைக்கொண்டு என்ன செய்யப்போகிறான்? ஒன்றுமில்லை. எப்படியும் அதனைக் கொடியவர்கள் அவன் இறந்தவுடனே வௌவிக்கொள்வர். வீணாக அவன் அப்பொருளைத் தேடும்பொருட்டுப் பட்ட பிரயாசையேதவிர அவன் அடைந்த பிரயோசனம் யாதொன்றுமில்லை. ஆகையால் பெட்டி பேழைகளில் மூடி வைக்கப்பட்ட பொருள் நன்மையடையும் மார்க்க மென்னவென்றால் அதனைத் தேடினவன் தானும் உண்டலும் பிறருக்கும் ஈதலுமே யாகும்.

தான்+நுகரான் = தான்+ னுகரான் = தா+ னுகரான் = தானுகரான்: "னலமுன் றனவும் ணளமுன் டணவும், ஆகுந் தநக்களா யுங்காலே" (நன்-சூ-237) என்றபடி வருமொழி நு-னு ஆயிற்று: "குறிலணை வில்லா ணனக்கள் வந்த நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே" (நன்-சூ-210) என்கிறபடி வருமொழி நகரம் திரிந்தவுடனே நெடிலை யணைந்து வந்த நிலைமொழியீற்றுனகரம் கெட்டது. நுகரான்-நுகர்+(ஆ)+ஆன்: எதிர்மறையிடைநிலை ஆ தொகுத்தல். வழங்கான் என்பதிலும் அப்படியே: வழங்கு+(ஆ)+ஆன். இருந்தும் - எச்சவும்மை. செத்தானே-ஏ தேற்றம். தீயார்-தீ(மை+(ய்)+ஆர். மெத்தும்-செய்யு மென் வாய்பாட்டுப் பெயரெச்சம்: மெத்து (to become great) பகுதி: இதனடியாக மெத்த, மெத்தி, மெத்தினேன், மெத்துகிறேன் எனவரும். வருத்தம் - தொழிற் பெயர்: வருந்து - பகுதி. ஏ - பிரிநிலை. பொத்தும் - பொத்து - பகுதி: பொத்தி - பொத்திய - பொத்துகிற - பொத்துதல் என வருதல் காண்க. வெறுக்கை - வெறு+கு+ஐ = வெறுக்கப்படுவது, வெறுக்கத்தக்கது. நன்றி-என்பதில் றி பண்புப் பெயர் விகுதி. வழங்கலே-பிரிநிலை.

கூவத்துப் புராணம்.

திருக்கூவம் சென்னைக்குச் சிறிது தூரத்திலுள்ள ஒரு சிவஸ்தலம்.

இதன் புராணம் பாடினார் சிவப்பிரகாச சுவாமிகள்.

(ஆசிரியர் வரலாற்றை அடியில் 14-வது செய்யுள் உரையிற்காண்க.)

கௌதமன் கூறியது: நைமிசாரணியச்சருக்கம் 36-வது செய்யுள்.

8. (வ-ம்) இகத்தில்...உரைசெயார். அரிதாகத் தொகுத்த ஓர் பொருளை அவர் நல்குவர் என்பது என்; (வேண்டுவார்) வேண்டுமுன்னே மிகுந்த ஆவியைத்தானும் விரும்பி துணிந்து கொடுப்பார். ஆல்-அசை.

(இ-ள்) இகத்தில் - இம்மையில், நன்கொடைப் பெருமையை - நல்ல ஈகையினால் உண்டாகும் பெருமையை. அறிந்துளோர் - அறிந்தவர்கள், இல்லென்ற அகத்தின் நாமமும் - யாதொரு பொருளும் இல்லையென்ற தமது வீட்டின் பெயரைத் தானும், உரைசெயார் - (யாசிப்பவரிடம்) சொல்லமாட்டார். அரிதாக - பிரயாசையுடனே, தொகுத்த - தேடிச்சேர்த்த, ஓர் பொருளை - அப்பொருளையாயினும், அவர்-அப்படிப்பட்டவர், நல்குவர் என்பது-கொடுத்து விடுவார் என்பது, என் - என்ன சிறப்பு? வேண்டும் முன் - (வேண்டுவார்) வேண்டுமுன்னரே, மிகுந்த ஆவியும்-பொருள் முதலிய வற்றிலும் அருமை மிக்கதான உயிரைத்தானும், விரும்பி - மனவிருப்பத்துடனே, துணிந்து-(இஃதொருபொருட்டன்று எனத்) துணிவுகொண்டு, கொடுப்பர் - கொடுத்து விடுவார்.

Those who have understood the greatness of alms-giving in this birth would not even speak words expressive of their needy homes. Why say that they would give away any one thing acquired by them with great difficulty? They would venture willingly to give away their precious life too even before it is asked for.

(க-து) இம்மையில் ஈகையாலுண்டாகின்ற நல்ல பெருமையை அறிந்துள்ளவர்கள், தங்கள் வீடு வெறுவீடாயிருப்பினும் அதனைச் சொல்லளவாகவும் சொல்லாராய்க் கையில் சுவல்பமான பொருளிருப்பினும் அதையுந் தமக்கு வேண்டுமே என்கிற எண்ணமில்லாமல் கொடுத்துவிடுவர் என்பது என்ன: தங்கள் அரிய உயிரை வேண்டினாலுஞ்சரியே, அதனை வேண்டுவோர் அது வேண்டுமென்று சொல்லு முன்பே மனவிருப்பத்துடன் துணிவுகொண்டு அவ்வுயிரையுங் கொடுத்துவிடுவர்.

ஈகையின் பெருமையை அறிந்தவர் உயிரை வேண்டினாலுங் கொடுத்துவிடுவார்: ஆகவே அவர் கையிலுள்ள சுவல்ப பொருளைக் கொடுப்பர் என்பது என்ன சிறப்பு என்பதாம்.

இகம் - இஹ - வடசொல்: இவ்விடம்; இப்பிறப்பு; (Opp-பரம்) இல்லெனிறகம் - இல்லென்ற + அகம்: என்ற என்பதனீற்றகரம் தொகுத்தல், தொடுத்த - தொடு - பகுதி, த - பிறவினை விகுதி; தொக்க - தவ்விகுதி, நல்குவர் - நல்கு - பகுதி. ஆவியும் - உயர்வு சிறப்பு. "அன்புடையாரென்பு முரியர் பிறர்க்கு" என்றார் திருவள்ளுவர்.

காசிகாண்டம்.

காசிகாண்டம் - அதிவீரராம பாண்டிய ராசா வினாலே மொழிபெயர்க்கப்பட்டது. இவர் ஐந்நூறுவருடங்களுக்கு முற்பட்டவரென்று யூகிக்கலாம். இவர்செய்த வேறு நூல்களாவன:—நைடதம் - இலிங்கபுராணம் - கூர்மபுராணம் - திருக்கருவைக் கலித்துறையந்தாதி - திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி - திருக்கருவை வெண்பாவந்தாதி - வெற்றிவேற்கை யென்னப்படும் நறுந்தொகை.

9. (இ-ள்) முகன் எதிர் - முகத்துக் கெதிரிலே, ஒன்றும் - புகழ்ச்சியான ஒருவார்த்தையும், பிரியின் - பிரிந்திருக்கும்போது (பின்னால்), மற்று ஒன்றும் - இகழ்ச்சியான வேறுவார்த்தையும், மொழிபவர் - மொழிவோரும்; விழைவு உறு - (எசமானனுடைய நன்மையையன்றித் தம்முடைய நன்மையை) விரும்புதல் மிக்க, தூதர் - தூதரும்; அகன்ற - விஸ்தாரமான, கேள்வி - (நூற்பொருள்களையும் பெரியருடைய அநுபவங்களையும்) கேட்டல், இலார் - இல்லாத இழிஞரும்; அருமருத்துவர்கள் - அரிய வைத்தியர்களுக்குக் கொடுக்கவேண்டிய, அரும்பொருள் - அரிய பொருளை, கவருநர் - (கொடுக்காமல்) கவர்பவரும்; தூர்த்தர் - காமுகரும்; புகல் அருந்தீமை - (வாயினால்) சொல்லலாகாத கொடுமைகளை, புரிபவர் - செய்பவரும்; மல்லர் - மற்போர் செய்வோரும்; செருக்கினர் - கர்வம் படைத்தவர்களும்; புன்தொழில் - இழிவான காரியங்களைச்செய்யும், தீயோர் - கொடியோரும்; (ஆகிய), இகழ்தரும் - இகழலான, இனையோர் ஒன்பது பெயர்க்கும் - இவர் ஒன்பதுபேர்களுக்கும், ஈந்திடல் - பொருள் ஈதல், பழுது - குற்றமாம், என இசைப்பார் - எனப் பெரியோர் கூறுவார்கள்.

They say that it is wrong to help these despicable nine kinds of persons:—those who say one thing before and another thing behind, the covetous agent, those who have not heard much the discourses of the

great, those who covet what is due to great physicians, gallants, those who perpetrate unutterable evil, wrestlers, the proud, and the vicious who perform base acts.

முகன் - முகம் என்பதில் மகரத்துக்கு னகரம்போலி. முகனேதிரோன்றும் பிரியின் மற்றென்று மொழிபவர் - புறங்கூறுவோர் - Backbiters. அகன்ற - அகல் பகுதி: (அகல் - to be wide) விஸ்தாரமான. மருந்துவர்-மருந்து-ஔஷதம்: மருந்து கொடுக்கும் தொழிலுடையவர், மருத்துவர். கவருநர் - கவர் + உ + ந் + அர்: உ-சாரியை, ந் - பெயரிடைநிலை. தூர்த்தர் - (தூர்த்தம் - வடமொழி - துன்மார்க்கம்) கெட்ட மார்க்கத்தில் நடப்பவர்: காமலோலர். புகல் -முதனிலைத் தொழிற்பெயர்: புகலுதல். புகன்ற, புகன்று, புகன்றுன் என விளைவிகற்பங்கள் காண்க. செருக்கினர் - செருக்கு + இன் + அர்: இன்-சாரியை. இகழ்தரும்-இகழ் - ப: தா என்னும் துணைவினை சேர்ந்த இகழ்தா பகுதி: தா - த ஆனது குறுக்கல்: ர் - விரித்தல்: உம் - பெயரெச்ச விகுதி. இனையோர் - இன் + ஐ + (ய்) + ஆர்: விகுதி ஆகாரம் ஓகாரமானதை "பெயர் வினையிடத்துனளரய வீற்றயல், ஆ ஓ ஆகலும் செய்யுளுளுரித்தே" (நன்-சூ-353) என்பதனுலறிக. ஈந்திடல்- (இடு என்பது தனக்கென வேறு பொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியாய் வரும்) ஈந்திடு - பகுதி: ஈ என்பதும் இடு என்பதும் நடுவில் நுச்சாரியை பெற்று இடையில தகரமிச்கு, அத்தகரம்மெலித்தலாய் ஈந்திடு எனப் பகுதியானமை அறிக.

10. (இ-ள்) மாண்புடையாளர் - பெருமையுடையவரும்; கேண்மையர்-சிநேகமாயிருப்பவரும்; தத்தம்வழி - தங்கள் தங்கள் வருணாசிரமங்களுக்கு விதித்த வழியிலே, முறை-கிரமமாக, ஒழுக்கினில்-நடத்தலில், அமர்ந்தோர்-பொருந்தினவர்களும்; சேண்படு - நீளம்பொருந்திய (அதாவது நெடுநாளாகத் தொடர்ந்துவருகிற), கிரப்பின் - தரித்திரத்தினுல், எய்திஞேர்-துன்பம் எய்தினேரும்; புரப்போர் இிர்ந்தவர்-ஆதரிப்பார் அற்றவர்களை அனாதைகளும், தந்தை - தகப்பனும்; தாய் - தாயும்; குரவர் - போதகாசிரியர் ஞானசிரியர் முதலான ஆசிரியர்களும்; காண்டரும் உதவி - பிரத்தியக்ஷமான உபகாரத்தை, புரிந்தோர் - (தமக்குச்) செய்தவரும், இனையோர் ஒன்பதின்மரும்-(ஆகிய) இவர்கள் ஒன்பதுபேர்களுக்கும், உளம் களிப்பு - மனம் சந்தோஷம் அடையும்படி, வேண்டிறு - விரும்பதான, கிதியம் - திரவியத்தை, அளிப்பின் - கொடுத்தால், ஒன்றே - (கொடுத்த) ஒரு பொருளே, கோடியாம்-கோடிபொருள் கொடுத்த பலனுக்கும், என - என்று, மறை - வேதம், விளம்பும் - கூறுகின்றது.

The Scripture says that the wealth given to the following nine kinds of persons to their heart's content produces good in the proportion of one to a crore:—the noble, friends, those who walk in the appointed ways of life, those who suffer misery from protracted poverty, the helpless, father, mother, the preceptors, and those who have previously afforded help.

மாண்பு - பி - விகுதிபெற்று மாட்சி என்றும் வரும். கேண்மை - (கேள் - சிநேகம்) சிநேகமான தன்மை. சேண் - தூரம்; சேண்படு - தூரம் பொருந்திய. நெடுங்காலமாகவரும் (protracted). நிரப்பு-ஒருவன் தன்னிடத்தில் யாதொன்றுமில்லாமல் ஒவ்வொரு குறையையும் அவாவுங்களினிக்கொண்டு நிரப்புதல்: இது இல்லாமையினுல் (வறுமையால்) செய்யப்படுவதாதலின் இது நிரப்பு என வழங்குவதாயிற்று. காரியத்தைக் காரணமாக வழங்கிய

வழக்கு, தீர்ந்தவர் - தீர் - பகுதி. குரவர் (வடசொல் - குரு): குரவன் - குரத்தி என ஆண்பெண்பால்களில் வருவது காண்க. குறவர்-குறஜாதியார்.

காண்டரும் - காண் + தரும்: காண் - முதனிலைத் தொழிற்பெயர்; காணுதல் தக்க. காண்டரு - பகுதியாகக் கொள்ளலுமாம். ஒன்பதின்மர் - ஒன்பது என்பதனடியாகப் பிறந்த பலர்பாற் பெயர்: இங்ஙனமே ஒருவன், ஒருவர், இருவர்; மூவர், நால்வர், ஐவர், அறுவர், எழுவர், எண்மர், பதின்மர், நூற்றுவர், ஆயிரவர் என வருதல் காண்க. கோடி (வடசொல்) நூறுலக்ஷம். கோடி என்பதற்கு நுனி, வஸ்திரம், இருபதுகொண்டது, புதுமை எனப்பல பொருளில் வரும்: வினைப்பிரயோகத்தில் அலங்கரி - கொள்ளுதி எனவரும். மறை - மறைவான பொருளுடையது: இலை மறைகாய்போல இரகசியார்த்தங்களையுடையது. துவிஜரல்லாதார்க்கு மறைக்கப்பட்டதென்றுங் கூறிவருகின்றனர், சிலர்.

பட்டினத்தடிகள் திருப்பாடல்.

இவர் காவிரிப்பூம் பட்டினத்தில் உற்பவித்த தனவந்தரான வேளாண் வணிகர். பெருப்பொருளீட்டி இல்லறநடத்துகையில் இல்வாழ்க்கையில் வெறுப்புற்றுத் துறவறம்பூண்டு வீடுவீடாய் யாசகஞ்செய்து திரிந்தனர். இங்ஙனந் திரியுநாளில் கோயிற்றிருவகவல் - கச்சித்திருவகவல்-திருவேகம்ப மாலை முதலான பாக்களைப்பாடினர். தமது தாயார்க்கு தகனகிரியை செய்த பிறகு திருவொற்றியூரையடைந்து அங்கே சிலகாலஞ்சென்ற பிறகு சமாதியடைந்தனர். இவருடைய ஜனனஸ்தானம் காவிரிப்பூம் பட்டினமாதலால் இவர் பட்டினத்தடிகள் - பட்டணத்துசுவாமி - பட்டணத்துப்பிள்ளை என்று வழங்கப்பெற்றார்.

11. (இ-ள்) கச்சி - காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும், ஏகம்பனே- ஏகாம்பரநாதரே! பிறக்கும் பொழுது - மனிதர் பிறக்கிறகாலத்தில், கொ(ண்)டுவந்தது - கூடே கொண்டுவந்த பொருள், இல்லை - யாதொன்றுமில்லை: மண்மேல் - பூமியில், பிறந்து இறக்கும்பொழுது - பிறந்து (சிலகாலமிருந்து) இறக்கிறகாலத்தில், கொ(ண்)டுபோவது - கூடே கொண்டுபோகும் பொருள், இல்லை - யாதொன்றுமில்லை: குறிக்கும் - (நாம் இப்பொழுது) குறித்துப் பேசுகின்ற, இச் செல்வம் - இந்தச் செல்வப்பொருளானது, இடை - பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தின், நடுவில் - மத்தியில், சிவன் - சிவபெருமான், தந்தது - (நமக்கும் பிறர்க்கும் பயனுறும்படி) கொடுத்ததேயாம், என்று - என்று கருதி, கொடுக்க - (இரப்பவர்க்குத் தம்மாலியன்றதைச்) கொடுக்க, அறியாது - (வகை) அறியாமல், இறக்கும் - இறந்துபோகின்ற, குலாமருக்கு - ஆடம்பரக்காரர்களுக்கு, என் சொல்லுவேன் - யாது சொல்லுவேன்.

O Ekambara at Kanchi! Nothing did we bring with us when we were born: nothing shall we take with us when we die after being born on the earth. What shall I say to the ostentatious who die not knowing to give (to the poor), with the thought that the wealth we talk of was only given by Siva in the intervening time.

கொடு - கொண்டு என்பதில் ண் தொகுத்தலாயிற்று. தந்தது என்பது தந்ததே என்பதில் தேற்றேகாரம் தொகுத்தலாய் வந்ததாகக் கொள்க. கொடுக்கறியாது - கொடுக்க + அறியாது: கொடுக்க என்பதில் அகரந்தொக்கது. குலாமர் - (குலா-ஆடம்பரம்) ஆடம்பரக்காரர். சொல்லுவேன் என்பதில் உகரம் சாரியை.

12. (இ-ள்) கச்சி ஏகம்பனே - காஞ்சியில் வீற்றிருக்கும் ஏகாம்பரநாதரே! நாயாய் - நாய்ஜன்மமாக, பிறந்திடில் - பிறந்தால், நல்வேட்டை ஆடி - நல்லவேட்டையாடி, நயம் - நன்மையை, புரியும் - செய்யும். தாயார்வயிற்றில - தாய்மாருடைய வயிற்றில், நராய் - மனிதஜன்மமாக, பிறந்து - ஜன்மமெடுத்து, பின் - அப்பால், சம்பன்னராய் - நிறைந்தசெல்வமுள்ளவராகியும்; காயா (த) மரமும் (என்ன)-காய் காய்த்தலில்லாத மரம்போலவும், வறளாம் குளமும் (என்ன) - நீர் வற்றிய குளம்போலவும், கல் ஆவும் என்ன - சிலையினால் செய்த பசுவைப்போலவும், ஈயா(த) - (இரப்பவர்க்கு யாதொன்றுங்) கொடாத, மனிதரை - மனிதர்களை, என்படைத்தாய் - ஏதுகாரணமாகச் சிருஷ்டித்தாய்?

O Ekambara at Kanchi! If our lives were born as dogs, they would do good by hunting usefully Why did you at all create the mortals, who being born out of their mother's wombs and becoming immensely rich, do not give to the indigent, like the barren tree, the dried up tank, and the cow made of granite.

வேட்டை-இது வேட்டம் என்றும் வழங்குகிறது. வேடு என்பது வேடச்சாதியைக் குறிக்கும்; வேடன் - ஆண்பால்; வேடச்சி - பெண்பால். சம்பன்னர் - (சம்பன்னம் - நிறைவு) நிறைந்தசெல்வமுடையவர்.

சத்தியசம்பன்னன் - சத்தியநிறைந்தவன். திரவியசம்பன்னன் - மிக்க செல்வமுடையவன். காயாமரம் - கொட்டிமரம். வறள் - முதனிலைத் தொழிற்பெயர். கல்லா - மட்குடம் என்பதுபோன்ற மூன்றும் வேற்றுமைத்தொகை. என்ன - உவமவுருபு.

13. (இ-ள்) பாழ்மனமே - பயனற்றமனமே! முன் தொடர்பில்-முற்பிறப்பிலே, செய்த-(நல்வினை) செய்த, முறைமையால் - பிரயத்தாலே, வந்த-கிடைத்த, செல்வம் - செல்வத்தை, இந்நாள் - இன்று (இப்பிறப்பில்), பெற்றோம் - அடைந்தோம், என்று எண்ணுது - என்றெண்ணுமல், அற்றவர்க்கு ஈயாமலும் - (பொருள்) அற்ற தரித்திரருக்குக் கொடுக்காமலும், அரன்பூசை ஓராமல் (உம்) - சிவபூசை செய்வதனால் உண்டாகும் நன்மையை உணராமலும், கற்றவர்க்கு ஈயாமலும் - கற்ற பெரியோர்க்கு (உன்னுலியன்றதைக்) கொடுக்காமலும், கண் - இரக்க மென்பதை, மறந்துவிட்டனையே - ஐயோ மறந்துவிட்டாயே (இனி உனக்கு உய்யும்வகை என்ன).

O wretched mind! unaware that you have obtained now the wealth due to you by the deeds of your last birth, you have forgotten what pity is, without giving alms to the indigent, without knowing the good of Sivapuja, and without helping the learned.

இந்நாள்=இன்று+நாள்: "மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையில், தம்மினமாவன் றொடராகா மன்னே" (ந-சூ-184), "ஐயீற்றுடைக் குற்றுகரமுமாவே" (ந-சூ-185), என்றசூத்திரங்களால் அறிக. அற்றவர் என்பதில் அறு - பகுதி: கற்றவர் என்பதில் கல்-பகுதி.

கண் - கண்ணுல் ஒருவருடைய துன்பத்தைப் பார்த்தபிறகே கருணை உண்டாவதால் காரியத்திற்குக் காரணமாக வழங்கிய வழக்கு. இதனை 'உனக்குக் கண் இல்லையா'; என்றும் உலகவழக்கானுமறிக.

நன்னெறி.

நன்னெறி நன்மையாகிய நெறி என்கிறார் ஒழுக்கத்திற்கு நன்மையாகிய நெறி நன்மையைத் தருநெறியுமாம். இது உலகத்து உவமைபற்றிவந்த பெயர். இது செய்தவர் சிவப்பிரகாசசுவாமிகள் கி. பி.-17-வது நூற்றாண்டிலிருந்தவர் இவர் தந்தை குமாரசுவாமிப் பண்டாரம் என்பவர் இவர் வீரசைவ மரபினர் இவருடைய சகோதரர்கள் கருணைப்பிரகாச தேசிகர், வேலயதேசிகர் என்பவர்கள் இவர் பொம்மபுர மடத்தாகிய சிவஞானபாலைய சுவாமிகள் இவருக்கு ஞானாசிரியர் இவரை ஆதரித்தவர் திருநாசலம் அண்ணாமலை ரெட்டியார் சகோதரர்களுடன் திருநெல்வேலியில் வெள்ளியம்பலத் தம்பிரானிடத்திலே பஞ்சலக்ஷணம் பயின்றார். இவர் நைஷ்டிக பிரமசாரியாகவே காலங்கழித்துவிட்டனர் இவர் இயற்றியருளிய நூல்களாவன —

பிரபுலிங்கலீலை-திருக்கூவப்புராணம்-வேதாந்த சூடாமணி-சோணசைல மாலை-வெங்கைக்கோவை-வெங்கைக் கலம்பகம்-வெங்கையுலா-திருச்செந்திலந்தாதி முதலியனவாம். சாதுரியமான கற்பனைகளமைத்துப் பாடவல்லவர்

14 (இ-ள்) பிறர்க்கு பிறருக்கு, உதவிசெய்யார் உபகாரஞ்செய்யாதவருடைய, பெருஞ்செல்வம் பெரிய செல்வமானது, வேறு பிறிதொன்றாயினும், பிறர்க்கு - பிறருக்கு, உதவி அச்செய்பவர் - உபகாரஞ்செய்பவருடைய, பேறு ஆம்-செல்வமாகும். பிறர்க்கு பிறருக்கு, உதவிசெய்யார் உபகாரஞ்செய்யாத, கருங்கடல்நீர்-கரியசமுத்திரசலத்தை புயல் மேகமானது, சென்று-போய், முகந்து-மொண்டு, பிறர்க்கு பிறருக்கு, பெய்யாக்கொடுக்கும்-பெய்து கொடுக்கும்

The great wealth of those that give no aid to others, is only the wealth of those who cause it to be given to others though it does not belong to them The cloud goes and takes the water of the dark sea which does not give aid to others, and pours it out to others

உதவிசெய்யார் செல்வமானது உதவிசெய்வார் செல்வமாகும் என்பது கருத்து. வேறு என்பதை வேறுபிரித்தலைந்து அன்னியருக்கு என்ப பொருளுரைப்பாருமுளர் இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமை திருஷ்டாந்தாலங்காரம்).(பேறு பதனிலைக்கிரந்த பொருள்பெயர். ஆம்-ஆகும் என்பது இடையிலுள்ள உயிர்மெய் கெட்டு ஆம் என்று நின்றது, "செய்யுமென்னெச்சவீற்றுயிர்மெய் சேறலும்" நன் 341). பெய்யா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பெய்யா-செய்யா என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம்.

15 (இ-ள்) பைந்தொடீ - பசும்பொன்னாலாகிய வளையல்களை உடையவளே! எந்தை எங்கள் தகப்பன், இரப்பார்க்கு ஈந்து-யாசகர்களுக்கு (உள்ளதையெல்லாம்) கொடுத்துவிட்டு, நல்கூர்ந்தான் என்று - தரித்திரனானான் என்று, அவன் மைந்தர் அவனுடைய புத்திரர், தம் ஈகை - தமது கொடையை, மறுப்பரோ செய்யாமல் விடுவரோ (விடார்) நின்று-(முன்னே அழிவில்லாமல்) நின்றுகெட்டு, பயன் உதவி - (பழமாகிய) பயனைக் கொடுத்து, நிலவா - (அதனாலே) அழிவையடைந்த, அரம்பையின் - வாழைமரத்தின், கீழ்க்கன்றும் - கீழ்நிற்கின்ற அதன் கன்றும், கனி உதவும் - பழத்தைக் கொடுக்கும்.

O thou adorned with bracelets of fine gold! Shall the sons withhold their liberality saying Our father impoverished himself by giving to the poor? Even the shoot at the root of the plantain-tree that perishes on bringing forth fruit will also bear fruit

பைந்தொடி - மகடூஉ முன்னிலை. மகடூஉ முன்னிலையாவது ஒரு பெண்ணை முன்னிலைப்படுத்தி உரைப்பது (மகடூஉ - பெண்) ஆணை முன்னிலைப்படுத்தி யுரைப்பது ஆடூஉ முன்னிலையாம். பைந்தொடி - பசுமையாகிய தொடியை யுடையாள் என விரிந்து பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. விரியுமிடத்து அல் ஈறுபெற்றுப் பைந்தொடி என வந்தது. தொடி என்பதற்கு வளை என்பது பொருள், சங்கணம் என்னும் பொருளுங்கொள்க. 'தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும் வேண்டாது சாலப்படும்' என்னுங் குறளில் தொடி புழுதி என்பது ஒரு பலம் புழுதி [illegible] உ[illegible] மருவி [illegible] [illegible] வினைச்சொல் [illegible] முதலிய [illegible] [illegible] தொகைக் கிழமை [illegible] உதவும் [illegible]

நீதிநெறிவிளக்கம்

நீதிநெறிவிளக்கம் [illegible] [illegible] சுவாமிகள் 29 [illegible] [illegible] அரசன் அதன் அருமையை [illegible] இராசனு [illegible] [illegible] [illegible] யனவாம்

([illegible])

16 ([illegible]) [illegible] [illegible] அருளி [illegible] [illegible] [illegible] (எம் [illegible])

Even the poverty of the liberal is far better than a miser's wealth for the former is not gratuitously subject to the opprobrious reproaches of the world, is ungracious selfish and pitiless

([illegible]) [illegible] [illegible] [illegible]

'எறிநீர்ப் பெருங்கடல் [illegible] இருக்கும், அறுநீர்ச் சிறுகிணற்று ஊறல் பார்த்துண்பர், மறுமை அறியாத [illegible] சான்றோர், கழிநல்குரவே தலை' என்றும் "வைத்தாரினல்லார் வறியவர்" என்றும் கூறலுங் காண்க.

வள்ளன்மை - [illegible] இஃது பண்புப்பெயர்; வள் - பகுதி, [illegible] சந்தி [illegible] பொருள்விகுதி [illegible] சந்தி, மை [illegible] வள்ளன்மையில்லா தான் - [illegible] (இல் + ல் + ஆ + த் + ஆன் [illegible]) [illegible] பகுதி, சந்தி, [illegible] எழுத்துப்பேறு, [illegible] விகுதி [illegible] [illegible] [illegible] மற்றையோன [illegible] பொருட்டு [illegible] சொல்லடி [illegible] பெயர் [illegible] சந்தி, [illegible] சாரியை, [illegible] சந்தி, [illegible] புணர்ந்ததே' [illegible] (நன் 18) [illegible] 'மற்று' [illegible] 'மற்றை' [illegible] சாரியை [illegible] நல்குரவு [illegible] குறுக்கல் விகாரம் [illegible] சாரியை [illegible] தொழிற் பெயர் விகுதி [illegible] பொருள் [illegible] [illegible] [illegible] பயன் [illegible] கூறினார்.

கோன் - [illegible] பொருள் [illegible] மையிலை [illegible] [illegible] கண்ணோட்டமுடைய [illegible] [illegible] பொருள் [illegible] [illegible] [illegible] [illegible] (இல் + ஆ + த் + ஆன்) முறையே [illegible] சந்தி [illegible] விகுதி [illegible] ஆனபால் விகுதி [illegible] கொள்க.

இராமாயணம்

இராமாயணம் [illegible] இராமன் + அயனம் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இந்த [illegible] காவியத்தை [illegible] அனுசரித்தே கம்பர் [illegible] [illegible] [illegible] [illegible] சோழன் காலத்தவர் [illegible] திருவழுந்தூரில் [illegible] பிறந்தவர் [illegible] சடையப்ப முதலியாரால் ஆதரிக்கப் [illegible] இவர் செய்த.

வை நூல்கள் ஏரெழுபது-திருக்கைவழக்கம்-சடகோபரந்தாதி முதலியனவாம். இவர் இராமாயணத்தின் சிறப்பைக் கண்டவர்கள் இவருக்குக் கவிச்சக்கரவர்த்தி என்று சிறப்புப் பெயரளித்தனர். திருமால் வாமன அவதாரம் பண்ணி மஹாபலிச்சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் வேண்டினர். பலியும் தருவதாகச் சம்மதிக்க, உடனிருந்த அசுர குருவான சுக்கிரன் 'வந்திருப்பவர் திருமால்; உன்னை அழிப்பதான வஞ்சகத்துடன் வந்திருக்கின்றனர். நீ அவருக்கு மூன்றடி மண் கொடுத்தலாகாது' என்று தடுத்தபோது, பலிச்சக்கரவர்த்தி சுக்கிராசாரியரைப் பார்த்து உரைக்கின்றான்:—

17. (இ-ள்) வெள்ளியை-(குருவே! நீ) வெள்ளி என்னும் பெயரையுடையை, ஆதல்-ஆதலால், விளம்பினை-(இங்ஙனம் இந்தப் பிராமண உருவமாக வந்தவனுக்கு அவன் வேண்டினதைக் கொடுக்கவேண்டாவென்று எளிய வார்த்தையைச்) சொன்னாய். மேலோர்-பெரியோர்கள், வள்ளியராக-வள்ளியராகும்பொருட்டு, வழங்குவது அல்லால்-(இரப்பவர்களுக்குக்) கொடுப்பதேயல்லாமல், எள்ளுவ-(சிலவற்றை) இகழ்ச்சி செய்வது, என்-என்ன? இன் உயிரேனும்-(ஒருவன் தன்) இனிய உயிரையேயானாலும், கொள்ளுதல்-(இரந்து) பெற்றுக்கொள்ளுதல், தீது-தீதாம்: கொடுப்பது-(அவ்வாறன்றித் தன் உயிரையேனும் ஒருவர் கேட்டால்) கொடுப்பதே, நன்று-நன்மையாம். ஆல்-அசை.

You have spoken thus, because you are of the name of வெள்ளி (because you are not wise enough). The great give with the intent of becoming benefactors, and why should certain things be despised? It is bad to take, and good to give, even though it be one's life.

வெள்ளியை என்பது இரட்டுறமொழிதல்: அதாவது இரண்டுவிதமாகப் பொருள் படும்படி சொல்லுதல்: வெள்ளி (சுக்கிரன்) என்னும் பெயருடைய என்று ஒருபொருள்; வெண்மையை அதாவது அறிவில்லாமையை உடையை என்று மற்றொருபொருள்: சுக்கிரபகவானாகிய என் குருவாதலின் நீ சொல்லுவ சொன்னாய் என்றும், நீ அறிவில்லாதவன் ஆதலால் இங்ஙனஞ் சொன்னாயென்று உள்ளர்த்தம் தொனிப்பதாகவும் கூறினதாகக்கொள்க. முதலர்த்தத்தில் வெள்ளி என்பது முன்னிலை யொருமைவிகுதி ஐ பெற்று வந்ததாகவும், இரண்டாவதர்த்தத்தில் வெண்மையென்பது ஈறுபோக வெள் என்றாய் இகரச்சாரியையும் ஐகார விகுதியும் பெற்றுவந்ததாகவும் அறிக. வெள்ளி என்பது சுக்கிரனுக்குக் காரணப்பெயர். வெண்மையை யுடையவன் என்பதாம்.

விளம்பினை —விளம்பு-பகுதி, இன்-இறந்தகால இடைநிலை, ஐ-முன்னிலை யொருமைவிகுதி. **வள்ளியர்** - வண்மை பகுதி ஈறுகெட்டு வள் என நின்றது; இ-சாரியை. **எள்ளுவ** - எள்ளுவது என்பது ஈறுதொகுத்தலாய் நின்றது. **உம்** - உயர்வு சிறப்பு. ஏனும்-எனினும் என்பதன் மரூஉ. "நல்லாறெனினுங் கொளறீது மேலுலகம், இல்லெனினு மீதலே நன்று" என்ற திருக்குறளைத் தழுவிக் கம்பரும் "கொள்ளுதறீது கொடுப்பது நன்றால்" என்றார். **தீது** - தீமை ஈறுகெட்டு நின்றது, து-ஒன்றன்பால் விகுதி. **கொடுப்பது** - இங்கே கொடுத்தல் என்னும் பொருளில் தொழிற்பெயராய் நின்றது.

18. (இ-ள்) எந்தாய்-ஐயனே! மாய்ந்தவர்-(உலகத்தில்) இறந்தவர்கள்(என்று சொல்லப்படுவோர்), மாய்ந்தவர்கள் அல்லர்-இறந்தவர்களாகார். (மற்றபடி இறந்தவர்தான் யாரோ என்றால்) மாயாது-இறவாமல், ஏந்திய கைகொ(ண்)டு-(ஒருவரைப்பார்த்து ஐயா! எனக்கீகுதாகிலும் கொடுமென்று) ஏந்திய கையைக்

கொண்டு, இரந்தவர்-யாசித்தபேர்களே, வீந்தவர் என்பவர்-இறந்தவரென்று சொல்லப்படுபவராவர். வீந்தவரேனும் - இறந்தவர்களேயானாலும், ஈந்தவர் அல்லது-(இரந்தவர்களுக்குக்) கொடுத்தவர்களல்லது, இருந்தவர் - (எக்காலத்தும் நிலைபெற்று) இருந்தவர், யாரே-எவர்தான் உளர் (ஒருவருமில்லை).

Father! the dead are not really dead. Only they are dead who go abegging with their hands extended for alms. Who are immortal except the great benefactors though they be dead?

(க-து) கையேந்திக்கொண்டு ஒருவனிடத்தில் சென்று யாசிப்பவர்கள் உயிரோடிருப்பவரேயாயினும் செத்தவர்களே யாவர். யாசிப்பவர்களுக்குத் தங்களால் இயன்றதைக் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள் இறந்துவிட்டாலும், அவர்கள் புகழுடம்பு பெற்றவர்களாதலால், எந்நாளும் இருப்பவரே யாவர்.

“ஒன்றாவுலகத் துயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்பதொன்றில்” என்றும் “வசையொழிய வாழ்வாரே வாழ்வாரிசையொழிய, வாழ்வாரே வாழாதவர்” என்றும் திருவள்ளுவர் கூறியிருப்பது காண்க. எந்தைய-எந்து-பகுதி. எந்தாய் - எந்தை யென்பது விளியேற்றமையின் ஈற்றில் உள்ள ஐகாரம் ஆய் எனத் திரிந்தது. “ஐயிறு பொதுப்பெயர்க்காயுமாவும், உருபாமல்லவற்றாயு மாகும்” (ந-சூ-306). வீந்தவர் என்பதில் வீ பகுதி. இருந்தவர்-இரு+த்+த்+அ+வ்+அர்: அ-சாரியை. யார் - வினாவினைக் குறிப்பு முற்று. “யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்” (ந-சூ-349). ஏ-எதிர்மறைப்பொருள்.

குசேலோபாக்கியானம்.

குசேலோபாக்கியானம் = குசேல + உப + ஆக்கியானம் = முன்னையதொடர் குணசந்தியும், பின்னையது தீர்க்கசந்தியுமாம். ஸ்ரீமத் பாகவத புராணத்திலே குசேல முனிவனுடைய கிளைக்கதை. குசேல என்பதில், கு-என்பது குக்கிராமம் என்பதிற்போலச் சிறுமையை யுணர்த்துவது. குசேலன்-சிறிய அதாவது கிழிந்துண்டான சேலையைத் தரித்தவன் என்பதாம். குசேலன் சிறுவயதிலே கண்ணனோடு ஒருங்குகற்ற ஒருசாலை மாணாக்கன்.

தொண்டைமண்டலத்திலே வல்லூரிலே கருணீகர் குலத்தில் பிறந்த தேவராஜப்பிள்ளை என்பவர், ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணாக்கர். குசேலோபாக்கியானத்தைத் தமிழில் சிறுகாப்பியமாகப்பாடினார். சூதசங்கிதை பாடியவரு மிவரே 51-வருஷங்களுக்குமுன் இருந்தவர். இவ்விருநூல்களையும் தமதாசிரியராற் பாடுவித்துத் தமது பெயரால் வெளியிட்டனர் என்று அநேகர் கூறுகின்றனர். வாக்கும் போக்கும் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை யவர்களுடையவற்றைப்போலவே இருக்கின்றன.

19. (இ-ள்) ஒரு சிறு - மிகக் கொஞ்சமான, தருமமேனும் - தருமத்தை யாயினும், உஞற்றிடார் - செய்யாதவர்கள். இரப்போர் - யாசகர், வந்து - வந்தடைந்து, தரு - ஐந்தருக்களை, நிகர் ஒத்த, கரத்தாய் - கரத்தையுடையவனே! என்று-என, சாற்றினும்-புகழ்ந்துபேசினாலும், கொள்ளார் ஆகி - அந்தயாசகரை ஏற்றுக் கொள்ளாதவர்களாகி, கருணை - இரக்கம், சற்று - கொஞ்சமும், இன்றி - இல்லாமல், எல்லை - வீட்டின் வாயிலை, கடந்திட-கடக்க, துரந்து-துரத்திவிட்டு, மீள்வர் - திரும்புவர். மருவு - தம்மைச்சேர்ந்த, பல் - அநேகமான, கிளையும் - சுற்றத்தாரையும், ஓம்பார் - காக்கமாட்டார்கள். வளம் - செல்வத்தை, படைத்து - அடைந்தும், என் - என்னபயனை, பெற்றார் - அடைந்தனர்? அல்-அசை.

Some rich persons do not perform any the least charity Though beggars approach and adore them saying ' O sir whose hands resemble the kalpaka!' they do not admit them but drive them out of their premises without the least mercy, and return Neither do they protect their many relatives What have they obtained by attaining wealth ?"

(க-ரு) சில செல்வந்தர்கள், அற்பமேனும் தருமஞ் செய்வதில்லை யாசகர் வந்து புகழ்ந்து பேசினாலும் அவர்களை அழைத்துக் கொடுப்பதில்லை; இரக்கமில்லாமல் வெளியில் கடத்திவிடுகின்றார்கள்; தம் சுற்றத்தார்க்கும் உதவிசெய்வது இல்லை. இவர்கள் செல்வம் அடைந்ததனால் என்ன பிரயோசனம் அடைந்தார்கள் (இவர்கள் செல்வம் பெற்றதனால் பெறலான நன்மையைப் பெறவில்லையே,

தருநிகர் கரத்தாய் (ஐந்து தருக்களை யொத்த (இந்திரன் தேவலோகத்தில் உள்ள அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன இவை வேண்டினவர்களுக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் கொடுக்கின்ற கையை யுடையவனே மற்றோர் வேண்டும் வரையிலே தாருந் தருக்களுக்கு (பஞ்சதருக்கள்) உவமையாகுமென்பது.

புறநானூறு

புறநானூறு என்பது கடைச்சங்கப் புலவர்கள் அருளிச்செய்த நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து பரிபாடல் கலித்தொகை அகநானூறு புறநானூறு (இவை எட்டுத்தொகை யெனப்படும்; இவற்றுள் கலியும் அகமும் புறமும், நீங்கலாக ஏனைய தொகை) என்னும் எட்டுத் தொகையுள் ஒன்று இது புறப்பொருள் பற்றிய நானூறு ஆசிரியப்பாக்களை யுடையது. ஆசிரியர் புறநானூறென்னும் இதற்கு முதற் செய்யுளாகிய கடவுள் வாழ்த்துப் பாடியவர் பெருந்தேவனார். மற்றவைகளைப் பல புலவர் பாடினர் இந்நூல் புறம் என்றும் புறப்பாட்டு என்றும் புறநானூறு என்றும் வழங்குவதுண்டு. இதனால் முற்காலத்து அரசர் அமைச்சர் வீரர் கொடையாளர் புலவர் முதலியவர்களுடைய வரலாறும் அக்காலத்தவருடைய நடையுடை பழக்கங்களும் இன்னும் பல விஷயங்களும் நன்கு புலப்படும்.

இச்செய்யுள் மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

20. (வ-ம்) மாவண் தோன்றால்! நால் திசைப் பரிசில் மாக்கள் பலரும் ஒரு திசை(யில் உள்ள ஈகையாளனா)ய ஒருவனை உள்ளி வருவர் (அவ்வருவோருடைய) வரிசை(யை) அறிதல் அரிது ஈதல் பெரிதும் எளிது (நீ) அதனை நற்கறிந்தனையாயின் புலவர் மாட்டுப் பொதுநோக்கு ஒழி ஓ-அசை. மதி முன்னிலையசை

(இ-ள்) மாவண் தோன்றால் - பெரிய வண்மையை யுடைய தலைவனே! நால் திசை - நான்கு திக்குகளிலுமுள்ள, பரிசில் மாக்கள் பலரும் - இரப்போர் பலரும், ஒரு திசை - ஒரு திக்கிலுள்ள, ஒருவனை - (ஈகையாளனாகிய) ஒருவனை, உள்ளி - நினைத்து வருவர் (அவனிடம்) வருவர் வரிசை - (அவ்வருவோருடைய) தரத்தை, அறிதல் - அறிந்துகொள்ளுதல், அரிது - கஷ்டமாகும் ஈதல் - கொடுத்தல், பெரிதும் எளிது - மிகவும் சுலபமாகும் அது - அக்கஷ்டம் அவரவர் தரத்தை யறிதலை, நற்கு அறிந்தனையாயின் - நீ நன்றாக உணர்ந்தா

யாயின், புலவர் மாட்டு - அறிவுடையோரிடத்து, பொது நோக்கு - (தாரதரம் எண்ணாமல்) எல்லாரையும் ஒருதரமாகப் பார்த்தலை, ஒழி - தவிர்வாயாக.

The many mendicants from the four quarters come in search of a benefactor living in one quarter It is difficult to discern their relative merits giving, of course, is very easy O hero of great benefactors! if you understand that well please do not treat the learned in common with others irrespective of their merits

(க-து) ஒருதிக்கிலே வசிக்கின்ற ஈகையாளனாகிய ஒருவனை நினைத்துப் பல திக்கினின்றும் பரிசிலர் வருவர். அவர்களுக்குக் கொடுப்பது எளிதேயாயினும் அவர்களுடைய தாரதரங்களை அறிந்து புரிதல் அரிதாகலால், மிக்க ஈகையையுடைய தலைவனே! உன்னிடத்தில் அறிவுடையோர் வந்தால் அவர்களுடைய வரிசை கருதாது ஏனையவரோடு ஒப்பமாகப் பார்ப்பதைத் தவிர்வாயாக.

உள்ளி - இறந்தகால வினையெச்சம் உள் - பகுதி, இ - வினையெச்சவிகுதி, ள் - சந்தி; விகுதிபெற்ற இறந்தகாலந் தொக்கு நின்றது. நாற்றிசை - நால் + திசை "னமுன் றனவும் ஆகும் தநக்கள்" (ந-சூ 237) என்பதனால் வருமொழி முதல் தகரம் றகரமாயிற்று. 'லளவேற்றுமையிற் றடவும் அல்வழி அவற்றோ டுறழ்வும் வலிவரினாம்'' (ந-சூ 227) என்பதனால் நிலைமொழியீற்று லகரம் றகரமாயிற்று. பலரும் - முற்றும்மை. பரிசில் - ஈகை, வெகுமதி. பரிசில்மாக்கள் - ஈகையுடையானைத் தேடிக்கொண்டு அலைந்து வருவோர். அறிதலோ அரிதே - ஓ - ஏ - அசை. தோன்றல் - விளி: அண்மைவிளியாதலின் ஈறுதிரியாது வந்தது. நற்கு - நன்கு என்பதன் விகாரம். பொது நோக்கு - வேற்றுமை கருதாது அறிவிலரோடு சமமாகப் பார்த்தல்: பண்புத்தொகை. மதி முன்னிலையசை. புலவர் (புலமை-அறிவு) அறிவுடையோர், வித்துவான்கள்.

21. குமணராசன், தன் தம்பி தன்னுடைய நாட்டைக் கைக்கொள்ளவே தான் காட்டில் குடிசென்றிருந்தான். அவனிடம் பரிசில் பெறும்படி வந்த பெருந்தலைச்சாத்தனார் என்பவர் அவனைப் பாட்டினாற் சிறப்பித்தார். அவன் தன்வாளை அவர் கையிற் கொடுத்தனுப்பினான். அவர் அதனைக் குமணன் தம்பியான இளங்குமணனுக்குக் காட்டிப் பாடிய அகவலின், முதலிரண்டுவரிகளை எடுத்துச் சேர்த்திருப்பது.

(பொ-ள்) மன்னா (மன்னு) எப்பொருளும் நிலைத்தலில்லாத, உலகத்து - இவ்வுலகத்தில், மன்னுதல் - நிலைபெறுதலை, குறித்தோர் - கருதினவர்கள், தம்புகழ் - தம்முடைய புகழை, நிறீஇ - நிலைநிறுத்தி, தாம் - தாங்கள், மாய்ந்தனர் - இறந்தனர். துன்னருஞ் சிறப்பின் - நெருங்குதற்கரிய சிறப்பையுடைய, உயர்ந்த செல்வர் - மிக்க செல்வத்தையுடையவர்கள், இன்மையின் இரப்போர்க்கு - வறுமையால் யாசிப்பவர்களுக்கு, ஈயாமையின் - (ஒன்றும்) கொடாமையால், தொன்மை மாக்களின் - பழைய ஈகையையுடைய மனிதர்போல், தொடர்பு - (பிறரும் தம்முடைய பெயரைநினைத்து) உலகோடு தொடர்ந்து போதலை, அறியலர் - அறியார்.

They, who desired perpetuity in this world where all things are transitory, died away establishing their fame on the earth Rich persons of unapproachable greatness do not give anything to those who go

abegging out of indigence and are, therefore, unaware of the way of continuing along with the world by establishing their names like the great benefactors of old.

(க-து) யாதொன்றும் நிலையில்லாத இவ்வுலகத்தில் நிச்சயமாக இருக்க விரும்பினோர் தங்கள் கீர்த்தியை பூமியில் நிலைக்கச்செய்து இறந்துபோயினார். அந்தமான செல்வர்கள், ஏழைகளுக்கு ஏதொன்றும் கொடுக்காமையால், அவ்வுபாயம் அறியாதவரல்லரோ. இரவலாளர்க்கு ஈதலால் உண்டாகின்ற புகழ் உலகத்தில் நிலைத்திடமாயிருப்பது என்பதாம்.

மன்ற ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (நிலைபெறு) - பகுதி. சீர்நிறுவி என்பது இரண்டிசைப்பதம் ... நில - ப, ர - பிறவினை விகுதி, இ - வினையெச்சவிகுதி. இன்மையின் இரப்போர் - மூன்றாம் வேற்றுமைத்தொகை, "இரப்போர்க்கு ஈஇயாமையின்" அளபெடுக்காவிடின் சீர் நிரம்பாதாதலால் செய்யுளிசை அளபெடை. தொடர்பு - தொழிற்பெயர்.

வெண்குடைநிழற்றிய ஒருமையோர்க்கும், கல்லா ஒருவற்கும் உண்பது நாழி உடுப்பவை இரண்டே பிறவுமெல்லாம் ஓரொக்கும் (வேற்றுமையென்ன வென்றால்) செல்வத்துப் பயனே ஈதல் (ஆயிற்) துய்ப்பேம் எனின் தப்புந பலவே - அசை.

இவ்வகவல் மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

22.(இ-ள்) தெண்கடல் வளாகம் தெளிந்த கடலாற் சூழப்பட்ட உலகமுழுதையும், பொதுமை இன்றி - பிறவேந்தர்களுக்குப் பொதுவாகவின்றித் தமக்கே சொந்தமாக ஆண்டு, வெண்குடை நிழற்றிய - வெண்கொற்றக்குடையால் நிழல்செய்த, ஒருமையோர்க்கும் - ஒரு தன்மையை யுடையோர்க்கும், நாள் யாமத்தும் - இடையாமத்தும் (பாதி இரவிலும்), (நடு) பகலும் - நடுப்பகலிலும், துஞ்சான் - தூங்காதவனாய், கடுமா - வேகமான நடையை யுடைய மிருகங்களை, பார்க்கும் - பிடிக்கக்கருதிப்போகின்ற, கல்லா ஒருவற்கும் கல்வியில்லாத ஒருவனுக்கும், உண்பது - உண்ணப்படும் பொருள், நாழி - நாழியே, உடுப்பவை - உடுக்கப்படுமவை, இரண்டே இரண்டேயாம்; பிறவும் எல்லாம் - மற்றுமெல்லாம், ஒக்கும்-ஒருவிதமாகவே ஒக்கும். (ஆகையால்,) செல்வத்துப் பயன் - செல்வம் பெறுதலால் பெறும் பயனாவது, ஈதல் - (இரப்போருக்குக்) கொடுத்தலேயாம். துய்ப்பேம் (நாமே பெற்ற செல்வத்தை) நாமே அனுபவிப்போம், எனின் - என்று கருதினால், தப்புந - தவறுவன, பல - பலவாகும்.

The great kings who ruled themselves the whole world surrounded by the clear waters under one white umbrella, and the illiterate hunter who goes sleepless in search of running beasts at midnight and midday, both are in need of only a measure (of rice) and two garments. They agree even in all other respects. The good of wealth is only giving (in charity) If we desire to enjoy our wealth ourselves, most of our virtues, riches and pleasures fail.

பல என்றது அறம் பொருளின்பங்களை.

(க-து) உலகமுழுவதையும் தாங்களே அரசாண்ட அரசரும், இரவும் பகலும் தூங்காது வேட்டையாடித் திரிகின்ற வேடரும், உணவு உடை முதலானவைகளில் ஒருதன்மையராகவே இருக்கின்றனர். வேடன் செல்வமில்லாத

ஒரு அரசன் செல்வமுடையவன், செல்வம்படைத்ததற்குப் பயன் இல்லார்க்கு ஈதல்; அங்ஙனம் ஈதலில்லையாயின் அறம் பொருள் இன்பங்களை தவறுவனவாக இருக்கின்றன; இவைதரு நின் செல்வம்படைத்தடமனில்லை. அங்ஙனம் ஈயாத செல்வத்தையுடைய அரசர் கல்விகல்லாத வேடனுக்கே சமமாவர் என்பது கருத்தாகக் கொள்க.

பமொனை - யானை யென்றும், கல்லாத ஒருவனைப் பாகனென்றும் உரைப் பொருள் கொண்டிருந்தனர் பழையவுரையாசிரியர்.

வளாகம் - இடம் வளைந்த இடம்; தெண்கடல் என்றது உவர்நீர் பூமியைச் சூழ்கின்றது நீரும்பய நிழல் எனப்பேசாறு பிறவினை விகுதி சேர்ந்து நிழற்றின என்பது யாயதிராறது; இன என்பது இறந்தகால இடைநிலை கடைக் குறைபாடு; ய - சந்தி, அ - விகுதி. யாமம் - அறுவகைச் சிறு பொழுதில் ஒன்றாகிய அவையாவன மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு. புரைசால் - விரைமுறறு இங்கே வினையெச்சமாயினது "வினை யெஞ்சு கிளவியும் வேறுபல் குறிப்பும் மெச்சமாகலும் வரையார்" (நன். 351) பிரைமை - பெருமை உரிச்சொல், நூறுவந்து என்பது மரியாதையாக வந்த பன்மை; தந்ததும் ஒக்குமே என்பது தமைமையின்பம் உடனி ஒக்கும்மே யெனச் செய்யுள் விகாரப் பெற்று வந்தது. தப்புந - தப்பு + ந + அ ந - பன்மை இடைநிலை அ - பலவின்பால் விகுதி.

புறப்பொருள் வெண்பாமாலை.

இன்பம் அகப்பொருளாம். அறமும் பொருளும் புறப்பொருளாம். புறம் பொருளாகிய புறப்பொருளை விளக்கும் வெண்பாக்களின் வரிசை புறப் பொருள் வெண்பாமாலை. இது அகத்தியர்-மாணாக்கர் பன்னிருவரும் சேர்ந்து செய்த பன்னிருபடலம் என்னும் நூலைக் கொண்டியற்றிய வழிநூல். இது சேரமரபில் ஐயனாரிதனார் என்ற சேரராசர் இயற்றியது. காரணம் ... வெற்றியும் கைவரப் பெறாமல் ... முடிவுவரை செய்யும் பாடாண் பாடல் இப்பொழுது வழக்கிலுள்ள நூல். இதன் மொழி வழக்கத்தால் ... தமிழ் வழங்கி யுள்ளபொழுதே எழுதியதாம் ... எமக்குக் கருவாயாக வருமொழி எல்லாரும் அறிய எடுத்துரைப்பது.

20 (ருன்) எல்லை நீர் ஞாலத்துக் கடல் எல்லையாகவுடைய பூமியில், முல்லைக்கு - முல்லைக்கொடிக்கு, தேரும் - பொற்றேரும், மயிலுக்கு மயிலுக்கு, போர்வையும் - பணிப்படாமும், இரக்கின்றி - கேட்கின்றி, குமாறு, தொல்லை - முற்காலத்தில், இரவாமல் ஈந்த - வேண்டாமே கொடுத்த, இறைவர் போல - (பாரி பேகன் என்னும்) உபகாரிகளைப்போல, நீயும் - நீயும், கரவாமல் - ஒளியாமல், ஈகை - வழங்கும், கடன் - கடமை.

It is your duty that you never refuse to bestow your gifts like the great benefactors (பாரி & பாகன்) who, to the splendour of their fame, in this sea-begirt land, gave, unasked, in ancient days, a golden chariot to the முல்லை creeper and golden cloth to the peacock.

பாரி என்பவன் கடையெழுவள்ளல்களில் ஒருவன், முந்நூறு ஊரை யுடைய பறம்புநாட்டிற்கும் பறம்புமலைக்கும் தலைவன், தன்னுடைய ஊர்களை எல்லாவற்றையும் பொருள்களை எல்லாவற்றையும் பரிசிலர்க்குக் கொடுத்தோன். மகா பராக்கிரமசாலியாகையால், தமிழ்நாட்டு மூவேந்தரும் இவ

னைப் போரில் வெல்லமுடியாமல் வஞ்சித்துக்கொன்றார். இவர் முல்லைக் கொடிக்குத் தேர் கொடுத்தான் என்பது "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள்ளருவி வீழும், பறம்பிற்கோமான் பாரி" என்று சிறுபாணாற்றுப் படையில் உரைத்திருப்பதாலுந் தெரிகிறது. வேள்பாரி என்றும் இவர் பெயர் வழங்கும்.

பேகன் - கடையெழுவள்ளல்களில் ஒருவன். மலைநாட்டையுடையவன். இவனது ஊர் நல்லூர். ஆவியர் குடியிற் பிறந்தவன். இவனைப் பெருங்கோப்பெரும் பேகன் என்றும் வழங்கும். "கானமஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய, அருந்திறலணங்கின் ஆவியர் பெருமகன், பெருங்கல்நாடன் பேகன்" எனச் சிறுபாணாற்றுப் படையில் வருவதனாலும் இவன் மயிலுக்குப் போர்வை அளித்தது தெரியும்.

போர்வை - போர்க்கப்படுவது, போர்+வ்+ஐ. ஐ - செயப்படுபொருள் விகுதி. தொல்லை என்பதில் ஐ சாரியை. இரவலர் - உண்மை [illegible] கொடுத்த. ஈகை - கை - தொழிற்பெயர் விகுதி.

நாலடியார்.

பின்னால் திருக்குறளடியிற் சொல்லப்பட்ட [illegible] பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதில் ஆர் திருச்சிற்றம்பலக்கோவையார் - சிவஞானபோதம் போல, திருவுந்தியார் - திருக்களிற்றுப்படியார் என்பவற்றிற்போல் சிறப்புணர்த்தும் விகுதி. நான்கு அடியாலான வெண்பாக்களாலானதனால் இப்பெயர் பெற்றது. சமணமுனிவர்களாற் செய்யப்பட்ட தனிப்பாடல்களிற் சிறந்தவற்றை ஒருங்கு திரட்டிய நூல் இக்கூற்றைப் பதுமனார் என்னும் சமணர் வகுத்தார்.

24. (இ-ள்.) உண்ணான் - (நல்ல உணவுகளை) உண்ணாமலும், ஒளி - மதிப்பை, நிறாஅன் - நிலைக்கச் செய்யாமலும், ஓங்கு - உயர்ந்திருக்கிற, புகழ் - கீர்த்தியை, செய்யான் - தேடிக்கொள்ளாமலும், துன் அருங்கேளிர் - பொருந்திய உறவினருடைய, துயர் - வறுமைத்துன்பத்தை, களையான் - நீக்காமலும், வழங்கான் - (இரப்பவர்க்குக்) கொடாமலும், கொன்னே - பயனில்லாமல், பொருள் - (ஒருவன் தேடிய) செல்வப்பொருளை, காத்திருப்பானேல் காத்திருப்பானாயின், அ அ - ஐயோ, இழந்தான் என்று - அப்பொருளை இழந்துபோனவனென்று, எண்ணப்படும் - (அறிவுடையோரால்) கருதப்படுவான்.

Without taking proper meals, without establishing his name, without acquiring fame, without removing the distress of his dear relatives, without relieving the poor, if one should only keep watching his wealth in vain, alas! he would be considered (by the wise) to have lost it.

(க-ரு) கிடைத்த செல்வத்தைத் தானும் அனுபவியாமலும் தக்காரியங்களில் செலவிடாமலும் காத்திருப்பது அதை இழந்ததற்குச் சமானமாம்.

ஒளி - தான் வாழுநாளில் எல்லாராலும் மதிக்கப்படும் மதிப்பு. புகழ் - தருமங்களைச் செய்தலால் உண்டாகுங்கீர்த்தி. கேளிர் என்பதில் இர் பலர்பால் விகுதி. பெண்டிர் - புதல்வி - மகளிர் என வருதலுங் காண்க. கொன் - பயனின்மைப் பொருள்தாகிய இடைச்சொல். ஏல் - எனில். அ அ - இரக்கக் குறிப்பு இடைச்சொல். இது இங்கே தேமா ஆக ஒரு சீராய் நிற்றலறிக. எண்ணப்படும் என்ற செய்யுமென்முற்று ஆண்பாற் பெயருக்குப் பயனிலையாய் நிற்றலை "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில், செல்லாதாகும்

செய்யுமென் முற்றே" (ந-சூ 348) என்பதனால் உணர்க. நிறான் - நிறு + (ஆ) + ஆன்: நிறு என்பது நில் என்பதனோடு று என்னும் பிறவினை விகுதி சேர்ந்து ஆன பகுதி. உண்ணான் முதலியன முற்றெச்சங்களாய் காத்திருப்பானேல் என்பதைக்கொண்டு முடிகின்றன. இழந்தான் - துணிவினால் எதிர்காலம் இறந்த காலமாக வந்தது காலவழுவமைதி - "விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும், பிறழவும் பெறூஉ முக்காலமுமேற்புழி" (ந-சூ-384).

25. (இ-ள்) வான் தோய் - ஆகாயத்தை அளாவிய, மலைநாட - மலைநாட்டரசனே! உடாதும் - (நல்ல ஆடைகளை) உடுக்காமலும்; உண்ணாதும் - (நல்ல உணவுகளை) உண்ணாமலும்; தம் உடம்பு - தமதுடம்பை, செற்றும் - வருத்தியும்; கெடாத - தாம் கெடாமைக்குக் காரணமான, நல் அறமும் - நல்ல தருமங்களையும், செய்யார் - செய்யாமலும்; கொடாது - (இரப்பவர்க்கு யாதொன்றும்) கொடாமலும்; ஈட்டிவைத்தார் - பொருளைத் தேடி வைத்தவர்கள், இழப்பர் - அதனை இழந்தவராவர், (அதற்கு), உய்த்தீட்டும் - (தேனைக் கஷ்டப்பட்டுக் கூட்டி) சேர்க்கும், தேனீ - தேனீக்கள், கரி - சாட்சியாம்.

O lord of the country whose mountains jut up to the skies! They who, without wearing decent cloths, without taking proper meals, racking their bodies, without performing acts of charity that never beget ruin, hoard up their earnings, only lose it all. The bees that hoard up honey (with great labour) bear testimony to this.

(கு-து) தேனீயானது எதிர்ப்பட்ட புஷ்பந்தோறுஞ் சென்று தேனைச் சேகரித்துவைக்க, அதை எவனேனும் ஒருவன் கொண்டுபோய் விடுகிறான்: அது போல் தனக்கும் பிறர்க்கும் பயன்படாத செல்வத்தைக் கள்வர் முதலானோர் கொண்டுபோய்விடுவர் என்பதாம்.

உடாது, உண்ணாது, கொடாது என்பன எதிர்மறை வினையெச்சங்கள்: இவற்றில் து-விகுதி. உடா அது முதலியன அளபெடுக்காவிட்டால் மாமுன்னேராக வெண்டளை சிதையுமாதலின், இவ்வளபெடைகள் செய்யுளிசை நிறைக்க வந்தன.

26. (இ-ள்) உறக்கும் துணையது - சுருங்கிய அளவினதாகிய, ஓராலம் வித்து - ஒரு ஆலம் விதை, ஈண்டி - முளைத்து வளர்ந்து, இறப்ப - (மற்ற மரங்களைக் காட்டிலும்) மிகுதியாக, நிழல் - நிழலை, பயந்தாங்கு - தந்தாற்போல, தான் - (செய்யப்படும்) அறம், சிறிதாயினும் - சிறியதாயிருப்பினும், தக்கார்கை - (ஒழுக்கமுதலியவற்றால்) தகுதியுடையார் கையிலே, பட்டக்கால் - படுமானால், அறப்பயனும் - அவ்வறத்தின் பயனும், வான் சிறிது ஆக - ஆகாயத்தைச் சிறியதாகும்படி, போர்த்துவிடும் - தனக்கு உள்ளாகக் கொள்ளும்.

Just as a small seed of the banyan grows into a large tree and affords abundant shade, so the good of a virtuous deed, however small, when it falls into the hands of the worthy, will be so great as to envelop the heavens.

உறக்கும் - உறக்கு சுருக்கமென்னுங் குறிப்புணர்த்தும் உரிச்சொல். உறக்கும் - கிள்ளியெடுக்கும் எனறும் பொருள் கூறலாம். **உறக்கும்...வித்து** - The seed of the banyan tree so small as to be nipped with the finger and thumb. இப்பொருளில் உற பகுதி (கிள்ளியெடு). **துணையது** - குறிப்பு வினையாலணையும் பெயர். நிழற்பயந்தாங்கு என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் நிழல் பயந்தாங்கு என இயல்பாக வரத்தக்கது சந்த இன்பத்

தின் பொருட்டுத் திரிந்து வந்தது. வான் சிறிதா - வானினும் பெரிதாக என்றபடி. இறப்ப என்பது வினையுரிச் சொல் பயந்த என்பதைக்கொண்டு முடிந்தது. சிறிதாக என்பது சிறிதா எனத் தொகுத்தலாயிற்று.

27. (இ-ள்) சாம்நாள் - இறக்கும் நாளும், முனி (யத்) தக்க - வெறுக்கத்தக்க, மூப்பு - முதுமையும், முனைமே - எதிரிலதானே, உள - உண்டாயிருக்கின்றன. பின்னரும் - இவையல்லாமலும், பீடு - தேகவலியை, அழிக்கும் - அழிப்பனவான, நோய் - வியாதிகளும், உள - உண்டாயிருக்கின்றன. (ஆதலால்), கைத்து - பொருள், உண்டாம்போழ்து - உண்டாயிருக்கும் காலத்தில், கொன்னே - வீணாக, பரவன்மின் - (மேலும் பொருள் தேடும்படி கருதி) பலவிடங்களிலும் ஓடி அலையாதிரும்; பற்றன்மின் - (கையிலுள்ளதை) இறுகப்பிடியாதிரும். பாத்து உண்மின் - (யாசகர் முதலானவர்களுக்குப்) பகுத்துக்கொடுத்து (நீங்களும்) உண்ணுங்கள்; யாதும் - எதையும், கரவன்மின் - (இரப்பவர்க்கு இல்லையென்று) ஒளிக்காமலிரும்.

Before you are the days of death and detestable old age; there are besides malodies which shatter your physical strength. Do not, therefore, when you have wealth, wander about hankering for more, nor hold fast what you have, but distribute what you have (you enjoying your gusta). do not hide anything (which you may spare to the needy).

(க-து) பிணி மூப்புச் சாக்காடுகள் எதிரிலேதானே எங்கே எங்கேயென்று காத்துக்கொண்டிருக்கின்றன: ஆதலால் கையில் பொருளுண்டானபோது, மேலுமேலுஞ் சம்பாதிக்க வேண்டுமென்று அலைந்து திரியாமல், கையிலிருப்பதை இறுகப்பிடியாமல், இரப்பவர்க்கு இல்லையென்று சொல்லாமல் பகுத்துண்ணுங்கள் என்பதாம்.

சாம் - சாகும். முனிதக்க - முனியத்தக்க என்பது தொகுத்தலாயிற்று. முனிய - செயவெனெச்சம். மூப்பு - மூ - பகுதி. நோய் - நோ - ப, ய்-தொழிற் பெயர் விகுதி. பரவுதல் - பலவிடங்களிலுஞ் செல்லுதல். பாத்து - பகு என்பதன் மரூஉவாகிய பா - பகுதி. பாத்துண்டலாவது - பிரமசாரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி, ஆதரித்தவரால் துறக்கப்பட்டவர், தரித்திரர், ஒருவருமின்றித் தம்பால் வந்திறந்தவர், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் என்னும் பதின்மருக்கும் பகுத்துண்டல். கைத்து - கையது: குறிப்பு வினையாலணையும் பெயர்.

28. (இ-ள்) மலி - வளப்பமிகுந்த, கடல் - கடலினது, தண் - குளிர்ந்த, சேர்ப்ப - துறையையுடைய அரசனே! ஆற்றின் - ஈதலைச்செய்தால், மாறு ஈவார்க்கு - பிரதியுபகாரம் செய்பவர்க்கு, ஈதல் (யாதொரு பொருளைக்) கொடுப்பதானது, பொலிகடன் என்னும் - விசேஷமான கடன் என்கிற, பெயர்த்து - பெயரையுடையது. (ஆதலால்), ஏற்றகை - யாதொரு பொருள் (வேண்டி யாசகன்) ஏந்தின கையை, மாற்றாமை - (இல்லையென்று) மறுக்காமல், என் ஆயினும் - எதாயினும், வரையாது - (இன்னான் இன்னானென்று) வரை ஏற்படுத்தாமல், ஆற்றாதார்க்கு - (பிரதியுபகாரஞ் செய்ய) சக்தியிலாதவர்களுக்கு, ஈவது - கொடுப்பதே, ஆண்கடன் ஆம் - ஆண்மகனது கடமையாம்.

O lord of the cool and plentiful shores of the sea! Giving to those who return it has only the name of a good debt. It is, therefore, the duty of man to give without distinction to the poor anything without turning away from their extended hands.

(க-து) எவர் யாசித்தாலும் இல்லையென்று சொல்லாமல் இயைந்ததைக் கொடுக்கவேண்டும்; இதுவே கொடையாகும்; பிரதியுபகாரஞ் செய்யக்கூடியவர்களுக்குக் கொடுப்பது கடன் கொடுப்பதற்குச் சமானமாகும்.

போலிகடன் - வட்டியில்லாத கடன் அல்லது யாவரும் அறிந்த கடன். மாற்றமை - எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம் (மாறு + ஆ + மை) ஆன்- ஆயினை. வளையாது (வளை-நீக்கு) நீக்காமல், அவளை நீக்காமல், அவளை ஏற்றுக்கொண்டு என்றும் பொருள் கூறலாம். பெயர்ந்து - குறிப்பு வினைமுற்று.

29 (இ-ள்) துய்த்து (அனுபவிக்கலான இன்பங்களை) அனுபவித்து, கழியான - இறவாமலும், துறவோர்க்கு - துறவிகளுக்கு, ஒன்று யாதொன்றும், ஈகலான கொடுத்து உதவாமலும் வைத்து - (கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளை) வீணாக வைத்து, கழியும் இறப்பான், மடவோனை மூடனை (ஐ சாரியை) அவனை - அம்மூடனை, வைத்த - அவன் சேமித்து வைத்த, பொருளும் - பொருளும், நகும் - (நான் உன்னுடைய பொருளல்லேன், பாவம் என்னை வைத்துக் காப்பாற்றினாயே என்று) சிரிக்கும் அவனை - அவனை, உலகத்து - உலகத்திலே விளங்குகின்ற, அருளும் கிருபையும், நகும் - (அறத்துக்குக் காரணமான என்னைப் பெறவில்லையே என்று) சிரிக்கும்

The fool neither enjoys his wealth nor gives it in charity to the ascetics, but only dies leaving it in vain him the very wealth he left derides, him the mercy that exists in this world derides also

மடவோனை என்பதில் ஐ சாரியை வைத்துக்கழியு மடவோனாகிய அவனை (அவனை) வைத்த பொருளும் நகும் எனக் கூட்டியுரைப்பினும் பொருந்தும் துய்த்து - துய் - ப ஈகலான் = (ஈ + கு + அல் + ஆன்) - கு - சா, அல் - எதிர்மறை யிடைநிலை. ஒன்றும் என்ற உம்மை தொகுத்தலாயிற்று. பொருளும் - எந்த தழுவிய எச்சவும்மை அருளும் - இறந்தது தழுவியது. அருளும் பொருளும் நகும் என்றது இயற்றுதலில்லாத அஃறிணைப்பொருளை இயற்றுதல் போலக் கூறுவது இலக்கணை "கேட்குநபோலவுங் கிளக்குநபோலவும், இயங்குநபோலவும் இயற்றுநபோலவும், அஃறிணை மருங்கினும் அறையப்படுமே" (ந கு 409)

30 (இ-ள்) ஏழை - மூடன், பொருளை - (தான் தேடிச் சேர்த்து வைத்திருக்கின்ற) பொருளை, எனது எனது என - என்னுடையது என்னுடையது, என்று இருக்கும் - என்று (தானுள்) சொல்லிக்கொண்டிருப்பான் யானும் - அதனை (வருந்தித் தேடாத) நானும், எனது எனது - என்னுடையது என்னுடையது, என்று இருப்பன் - என்று (என்னுள்) சொல்லிக்கொண்டிருப்பேன் (எவ்வண்ணமெனில்), தனதாயின் - தன்னுடைய பொருளாயிருந்தால், தானும் - (வருந்தித் தேடிய) தானும், அதனை - அப்பொருளை, வழங்கான் - (ஒருவருக்குங் கொடான்), பயன் - அதனாலாயபயனாகிய இன்பங்களை, துவ்வான் அனுபவியான் யானும் - ('அப்பொருளை என்னுடையதென்று சொல்லும்) யானும், அதனை - அப்பொருளை, அது - கொடேன் பயனாகிய இன்பங்களையும் அனுபவியேன்

The fool says of his wealth "It is mine, it is mine", and I also say of it, "It is mine, it is mine" for were it his, he neither gives it to others, nor enjoys it himself, It is alike to me.

பொருளை வருந்தித் தேடினவன் தானுண்ணாமலும் பிறருக்குக் கொடாமலுமிருப்பானாயின், அப்பொருளுக்கு அவன் அன்னியனே என்பதாம். எனது, தனது - என்பன பொருளடியாகப் பிறந்த குறிப்பு வினையாலணை

ழும் பெயர்கள் என்றெண்ணுது என்றும் அமிசகுணத்திணியப்பொருள் யானும் யானும் என்பவைகளில் உம்மைகள் இறந்தது தழுவியன. தானும் - எதிரது தழுவியது. யானு மதனையது என்பதில் யான் - எழுவாய், அது - பயனிலை, அதனை - செயப்படுபொருள். அது குறிப்பு வினைமுற்று, தொகுதி யொருமையாய் பழக்கத்தையும் பயனுடைமையையும் சுட்டி நின்றது. யானு மதனையது (செய்வேன்) எனக்கொண்டு செய்வேன் என்பதைச் சொல் லெச்சமாகக் கொள்வர் சிலர்.

சீவகசிந்தாமணி

முற்காலத்தில் தமிழிலே சிறந்த இலக்கியங்களென்ன நிலைபெற்றன சிந்தாமணி - சிலப்பதிகாரம் - மணிமேகலை - வளையாபதி - குண்டலகேசி என்னும் பெருங்காப்பியங்கள் ஐந்துமாம். அவற்றுள் சிந்தாமணி என்பது ஜைனசமயத்தினராகிய சீவகன் என்னும் ஓரரசனுடைய கதையைக் கூறுதலால் சீவகசிந்தாமணி என வழங்கும். இது திருத்தக்கதேவர் என்னும் ஜைனமுனிவரால் இயற்றப்பட்டது. இவர் கடைச்சங்கத்தார் காலத்தவரென்று யூகித்தறிய இடமுண்டு. சங்கப்புலவர்கள் ஒருகால் இவரை நோக்கி "ஜைனர்கள் சிற்றின்பப் பாட வல்லவரேயன்றி இன்பச்சுவையடங்கிய நூல் பாட வல்லரல்லரே" என்றிகழ, இவரும் இச்செய்தியைத் தமதாசிரியரிடத்துரைத்தனர். ஆசிரியர் இவரை அப்போது எதிர்ப்பட்ட ஒரு நரியைச் சுட்டிக்காட்டி 'இதன் சுபாவத்தை யமைத்துப் பாடுக' என்று கூறலும் நரிவிருத்தம் என்னுமொரு நூலை இயற்றிக்காட்டினர். அவ்வளவிலே ஆசிரியர் அகமகிழ்ந்து "சீவகன் சரித்திரத்தைப் பெருங்காப்பியமாகப் பாடுக" என்று கட்டளையிட்டனர். இவரும் அங்ஙனமே எட்டுநாளில் பாடி ஆசிரியர்க்குக் காட்டினர். அவரும் அதனைச் "சங்கத்தார்முன்னிலையிற் கொண்டு செல்க" என்றார். சங்கத்தாரும் அதனைக் கேட்டு பெருவாய் வியந்தனர் என்ப. இந்நூலுக்கு நச்சினார்க்கினியர் உரையெழுதியிருக்கின்றனர்.

சிந்தாமணி - நினைத்ததைக் கொடுக்கும் தேவமணி. சீவகனது சரித்திரத்தை உணர்த்துவதாய், புலவர் சிந்தித்தவற்றையெல்லாம் தருதலின் சீவக சிந்தாமணி என்று வழங்கப்படுமென்பர்.

31 (வம்) (முற்பிறப்பில்) கொடுத்துண்டறியாதார் (பின்பு) மாசின (வான) சின்னத்துணி (களை) முள்ளின் ஊசி (யால் தைத்த) துன்னம் மூசிய ஆடை (யை) மாசித்திங்கள் (காலத்தில்) உடையாக (க் கொண்டு) கையகல் ஏந்தி, பாவாய்! பிச்சை (இடுக என்று) பேசி (ச் செல்வர் மனையிலுள்ள செல்வத்தற்கு) கூசிக் கூசி நிற்பர்.

(இ-ள்) கொடுத்து உண்டறியாதார் - (முற்பிறப்பில்) பிறருக்கு இட்டு உண்ணாதார், (பின்பு), மாசின - அழுக்கினையுடையனவான, சின்னத்துணி - சிறிய சீலைகளை, முள்ளின் ஊசி - முள்ளாகிய ஊசியாலே, துன்னம் (தைத்த) தையலை, மூசிய - மொய்த்த, ஆடை - ஆடையை, மாசித்திங்கள் - மாசிமாசமாகிய குளிர் மிக்க காலத்தில், உடையாக - உடையாகக்கொண்டு, கை - கையிலே, அகல் - பிச்சையோட்டை, ஏந்தி - ஏந்திக்கொண்டு, பாவாய் - பாவைபோன்றவரே! பிச்சை என - பிச்சையிடுக என்று, பேசி - சொல்லி, கூசிக் கூசி நிற்பர் - செல்வர் மனையிலுள்ள செல்வத்தற்கு மிகுதியுங் கூசிநிற்பர்.

Those who have not distributed their food to the needy (in a former birth), wear (in an after-birth) a cloth patched up of dirty rags with needles of thorn in the month of Masi (February) in the cold season, and stand abashed (out of the houses of the rich) with begging bowls in their hands saying "Madam! please give me alms."

[illegible]

[illegible]

பெரும்பொருள் விளக்கம்.

[illegible] (Govt Oriental Manuscripts Library) [illegible]

32 (வ.ய) [illegible]

[illegible]

That those who hide their wealth in want without giving anything to the needy pass by the name of men as well as those who give without delay what they can afford is not similar to the fact that glittering gold and ordinary iron both pass by the name of gold as belonging to one class.

[illegible]

தமனியம்-ஸ்வர்ணம் என்கிற வடசொல். வெற்றுத்தூவி புகைவெண்மை + இரும்பு. பொன்னின்பெயர் - (இன் - சாரியை) ; ஸ்புதிதாக. படைத்தல் என்கிற வினையெச்சம் பெயர்த்தன்மையாய்ப் போனது ; பெருந்தச் செயப்படு பொருளாய் நின்றது. போலாது-போல்+ஆ+து (opp-போலும்) -எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று. ஒளிப்பாரும் அளிப்பாரும் என்ற உம்மைகள் முறையே எதிரதும் இறந்ததும் தழுவியவை. ஆர - எழுவாய், போலாது - பயனில், படைத்தல் (படைத்தது) - செயப்படுபொருள். இரும்பைப் பொன்னென்று சொன்னாலும் பொருந்தும், கொடாதவரை மக்கள் என்று சொல்லுதல் பொருந்தாது. இரும்புக்குப் பொன் பெயராதலை "பொன்செய்த புனைதோட்டி" என்றும், "பொன்புனை கிரிகி" என்றும் வருகிற பதவுரைகளாலும் உணர்க. சொரிப்பவர் பொன்னையும் கொடாதவர் இரும்பையும் ஒப்பார் என்று உள்ளுறையாகக் கொள்ளவேண்டும், இரும்பு பலவிதமாகப் பயன்படுவதுபோல் கொடாதார் பயன்படாமையின் அதுவும் பொருந்தாது என்பது ஆசிரியர் கருத்தாகக் கொள்க.

பழமொழி

பின்னை திருக்குறளின் வரலாற்றின் கீழ் உரைத்த பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று. இது செய்தவர் முன்றுறையரையர் என்னும் சமணராசன். இது சோடசாவதானம் சுப்பராய செட்டியாரால் அதிகார அடைவு செய்யப்பட்டது. ஒவ்வொரு பாவிலும் ஒவ்வொரு பழமொழியை மேற்கோளாக அமைத்துப் பாடியிருத்தலால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

33. (இ-ள்) கறங்கு-ஒலிக்கின்ற, அருவி-அருவி சொரியப்பெற்றதும், வேய்முற்றி - மூங்கில் முதிர்தலால், முத்து உதிரும் - முத்துக்கள் சொரியப் பெற்றதுமாகிய, வெற்ப - மலையையுடைய பாண்டியனே! வழங்கலும்- (தரும வழியாய்) ஈதலும், துய்த்தலும் (சன்மார்க்கமாய்) அனுபவித்தலும், தேற்று தான் - அறியாதவன், பெற்ற - அடைந்த, முழுக்குமுரசுடை - (காலை நண்பகல் மாலையாகிய முக்காலத்தும் மாளிகையில்) முரசறைந்தும் முழங்கப் பெறும், செல்வம் அன்றே - செல்வமான செல்வம் ஆகிய அதுவே, நாய் பெற்ற-நாயானது அடைந்த, தெங்கம்பழம்-தென்னம்பழம் போலாகும்.

O the possessor of mountains which are adorned with noisy streams, and one which full-grown bamboos pour down pearls! the fortune of a miser whose enormous wealth is proclaimed by beat of tom-tom and who does not know how to enjoy it and how to spend it in charity, is as useless as a coconut in the possession of a dog.

(க-ரு) நாய் தென்னம்பழத்தைப்பெறின் தானும் அனுபவியாது, பிறர்க்குங்கொடாது. அதுபோல ஒருவன் தானும் அனுபவியாது, பிறர்க்கும் ஈயாது வீணே வைத்தபொருள் ஒருவர்க்கும் பயன்படாது.

தேற்றாதான்-உயர்திணைப் பெயர் ஒப்புப்படுத்தப்பட்டு முக்காலத்துக்கும் பொதுவான எதிர்மறைத் தன்வினை வினையாலணையும் பெயர். தேற்று - ஈண்டுத் தன்வினைப்பகுதி. அருவி வெற்பு என்றது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை. அருவியையுடைய வெற்பு என விரிக்க. முற்றி உதிரும் என்பதை முற்ற உதிரும் எனத் திரிக்க; இது காரணப் பொருளதாகிய செயவெனச்சம். உதிரும் என்பது வெற்புக்கு விசேஷணம். (முதல்-விகுதல்) முரசம்-(இடம்) முரசமரத்தின் ஒலியின் வீடு விட்டப்பட்டது) இது காலத்தை உணர்த்திற்று. ஆ-சா-து-அடி மனையாளின், தேற்றப் பொருள். செல்வமுடையாரின் முரசம் முழங்க வினை முதனிலை முச்சாரத்தினும் ஒலிப்பது வழக்கம். இவை சிறந்த விசேஷம் உணர்த்தின. தெங்கம்பழம் - அம் சாரியை.

[illegible] "Like a dog in the manger, you will not eat yourself nor let the horse eat" [illegible] இங்கிலீஷ் பழமொழியாலும் [illegible]

சிறுபஞ்சமூலம்

சிறுபஞ்சமூலம்-[illegible] காரியாசான். [illegible] சிறுபஞ்சமூலம் [illegible] (ஐந்து)-வ[illegible] [illegible] ஐந்து [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] சிறுபஞ்ச மூலம் [illegible] பஞ்சமூலம் - [illegible] - வில்வம் - [illegible] - பாதிரி [illegible]

34 (இ-ள்) [illegible] - [illegible] எண்ணப்படி முடியாமல் [illegible] [illegible] [illegible] இகழ்ந்தவை - (பெரியோரால்) இகழப்பட்டவை [illegible], இன்ப [illegible] - இன்ப [illegible] [illegible] [illegible] - மனம் கசிந்து, மென்மொழியால் - [illegible] கொடுப்பானேயின் (அவன்), விண்ணோரால் - தேவர்களால், இன்மொழியால் - இனிய வார்த்தைகளோடு, ஏத்தப்படும் - துதிக்கப்படுவான்.

Without regretting for what are past, without longing for what cannot be acquired, without taking pleasure in what are despised by the great, if one speaking soft words should give with tenderness of mind what are asked by the indigent, he would certainly be adored by the gods with sweet words.

இழிந்தவை [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] (இழிந்தவை-இழிந்த+ஆகு [illegible] [illegible] (அ-சாரியை) [illegible] [illegible] உள்-[illegible] [illegible] - [illegible] ஏத்தப்படும் - செய்யுமென [illegible] - பகுதி.

திருக்குறள்.

திருக்குறள் - [illegible] குறள்-[illegible] [illegible] இந்நூல் [illegible] [illegible] [illegible] கொண்டு [illegible] [illegible] [illegible] இந்நூலைச் [illegible] திருவள்ளுவநாயனார் [illegible] இந்நூல் திருவள்ளுவப் [illegible] [illegible] புலவர்கள் இந்நூலின் [illegible] பாடியிருத்தலாலும், சிலப்பதிகாரம் மணி

[illegible]

To beg is evil, even though it were said that it is a good path (to heaven). To give is good even though it were said that those who do so cannot obtain heaven.

[illegible]

(இ-ள்) அற்றார்-வறியவரது, அழிபசி - மிக்க பசியை, தீர்த்தல் (தருமத்தைக் குறித்துத் தீர்க்கக்கடவன்; எவனெனின்), பொருள் - பொருளை, பெற்றான் ஒருவன் - பெற்றவனொருவன், வைப்புழி - (தனக்கு உதவும்படியாக அப்பொருளை வைக்குமிடம் ஆவது) அதுவேயாகும்.

Let one remove the killing hunger of the poor because it is the place for one to lay up his wealth

(க-து) பொருள் பெற்ற ஒருவன் அதனைத் தனக்கு உதவும்படியாக வைக்குமிடமாவது வேட்டிப் பேழையாகிய ஏழைகளுடைய பசியைத் தீர்ப்பதே; அதுவே வைக்குமிடமாம்.

"மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை தானந் தவமுயர்ச்சி தாளாண்மை" முதலியவெல்லாம் பசிவந்திடப் பறந்துபோவனவாதலின், பசியை அழிபசி என்றார். தக்கவிடத்தில் சேர்த்துவைத்த பொருள் பின் தனக்கு உதவியாதல்போல அற்றாரழிபசிதீர்த்த பொருள் பின் தனக்கே வந்து உதவும் என்பதாம். 'Cast bread upon the waters for thou shalt find it after many days' என்றது இக்கருத்தே யாமென்க.

37 (வ-ம்) தாமுடைமை வைத்திழக்கும் வன்கணவர் ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்.

(இ-ள்) தாமுடைமை - தாங்கள் உடைத்தாயிருந்த பொருளை, வைத்து - (பிறர்க்குக் கொடாமல்) வைத்து, இழக்கும் - (பின்பு) இழந்துபோகிற, வன்கணவர் - அருளில்லாத வன்னெஞ்சர், ஈத்து - ஏழைகளுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து, உவக்கும் இன்பம் - (அவ்வேழைகள்) மகிழ்ச்சிகொள்ளுதலால் (அருளுடையவர் அடைதலான) மனமகிழ்ச்சியை, அறியார்கொல் - கண்டறியாரோ.

Do the hard hearted who lay up and lose their possessions not know the happiness which springs from the pleasure of giving ?

(க-து) பொருளைத் தேடிவைத்திழக்கும் வன்னெஞ்சர் ஏழைகளுக்குக் கொடுத்து மகிழும் இன்பத்தை அறியாரோ (அறியின் அங்ஙனஞ் செய்யார்).

ஈந்து என்பது ஈத்து என வலித்தல் விகாரம்பெற்றது. உவக்கும் - காரணத்தினகண் வந்த பெயரெச்சம். இன்பம் என்னும் காரியப்பெயர் கொண்டது. இவ்வின்பத்தை அறிந்தாராயின், தாமும் அதனை அடைவதற்கு முயல்வர் என்பது கருத்து.

38 (வ-ம்) (ஒருவனுக்கு) சாதலின் இன்னாதது இல்லை அதுவும் ஈதல் இயையாக்கடை இனிது.

(இ-ள்) சாதலின் - (ஒருவனுக்கு) இறத்தலைப்போல, இன்னாதது - துன்பந்தருவது, இல்லை - (ஒன்று) இல்லை; அதுவும் - அந்த இறத்தல்தானும், ஈதல் இயையாக்கடை - (தரித்திரர்களுக்கு ஏதாயினும்) கொடுக்கமுடியாதவிடத்து, இனிது - இன்பஞ் செய்வதாகும்.

Nothing is more joyless than death, yet even that is joyful where charity cannot be exercised

(க-து) மரணமே மனிதனுக்கு மிகவுந் துன்பந்தருவதாம்; ஆயினும் ஏழைகளுக்கு ஈயவியலாதபோது கொடுக்கமுடியாவிட்டால் அம்மரணமே இன்பந்தருவதாகும்.

சாதலின் - ஐந்தாம் வேற்றுமை ஒப்புப்பொருள். இன்னாதது இன்னா+து+அ+து (து-அ, - சா, து - ஒன்றன்பால் விகுதி): குறிப்பு வினையாலணையும் பெயர். இனிதூஉ - இன்னிசையளபெடை. இயையாக்கடை - எதிர்கால வினையெச்சம்: இயையாவிட்டால், என்பதாம். பிறர்க்குப் பயன்படாத உடலையாம் நீங்குதலால் சாதலும் இனிதென்றார்.

பெருமாள் திருமொழி.

தமிழ் [illegible]யில் வைணவர்கள் தாங்கள் உபாஸநைக்கு ஆதாரமாகக்கொள்வது த்ராவிடவேதமென்று சொல்லப்பட்ட நாலாயிரப் பிரபந்தம். இது பகவத்விஷயமான ஆழ்வார்கள் பன்னிருவரால் அருளிச்செய்யப்பட்டது. அவர்களில் ஒருவர் குலசேகராழ்வார் என்பவர். அவர் அருளிச்செய்த பாகம் பெருமாள் திருமொழி எனப்படும்.

குலசேகராழ்வார் மலையாளத்தில் திருவஞ்சிக்களத்தில் அரசுசெலுத்திய த்ருடவிரதன் என்னும் அரசனுடைய புதல்வர். இவர் திருமாலணிந்திருக்கும் கௌஸ்துப ரத்தினத்தின் அம்சமானவர். இவர் அரசியல் நடத்திவருநாளில் இராமாயண காலக்ஷேபத்திலும் திருமாலடியார்களைப் பூசிப்பதாகிய வைஷ்ணவாராதனையிலும் அளவுகடந்த ருசியுடையராயிருந்தார். ஒருநாள் இராமாயண காலக்ஷேபம் நடக்கையில் "இளையபெருமாளைப் பிராட்டிக்குக் காவல் வைத்துத் தனியே [illegible] ஸ்ரீராமன் [illegible] போர்புரிவாராயினார்" என்று [illegible] சொல்லக்கேட்டு, உடனே நால்வகைச் சேனையுடன் பெருமானுக்குப் படைத்துணையாகப் புறப்பட்டார். அப்போது மந்திரிமார் சிலரை எதிரேவிட்டு "பெருமான் கரன் முதலானவர்களைச் சங்கரித்துவிட்டு மீண்டு எழுந்தருளினார்" என்று சொல்விக்கவே, இவரும் சந்தோஷமடைந்து திரும்பினார். [illegible] மந்திரிகள் அரசனுக்கு ஸ்ரீவைஷ்ணவர்களுடைய கூட்டுறவால் [illegible] உண்டாகின்றன. அவர்களுடைய கூட்டுறவை ஒழிக்கவேணுமென்றெண்ணி அரசனுடைய திருவாராதனையிலுள்ள ஆபரணப்பெட்டியிலிருந்து ஒரு நவரத்தினமாலையை எடுத்து மறைத்து ஸ்ரீவைஷ்ணவர்கள் எடுத்தார்களென்று குறைசொல்லினர். அதுகேட்ட குலசேகரர் ஸ்ரீவைஷ்ணவர்கள் அப்படிச் செய்யமாட்டார்களென்று பாம்புக்குடத்தில் கையிட்டு உறுதிப்படுத்தி மந்திரிகளுடைய வார்த்தையைப் பொய்யாக்கினார். [illegible] அப்பால் அவர் அரசாட்சியில் வைராக்யமுடையராகித் தமது குமாரனிடத்தில் அரசை ஒப்பித்துவிட்டு, ஸ்ரீரங்கத்திலே நித்தியவாசமாய் முகுந்தமாலை என்னும் வடமொழிப் பிரபந்தமும் பெருமாள் திருமொழி என்னும் தமிழ்த் திவ்யப் பிரபந்தமும் அருளிச்செய்து அறுபத்தேழாவது பிராயத்தில் பரமபதத்தையடைந்தார்.

பெருமாள் திருமொழி—இவர் பெரியபெருமாளுடைய [illegible]களைத் தம்முடைய [illegible]களாகப் பாவிப்பவராதலால் இவர்க்குப் பெருமாள் என்ற பெயர் வழங்கலாயிற்று. ஆகவே இவர் அருளிச்செய்த பிரபந்தமும் பெருமாள் திருமொழி என வழங்கலாயிற்று.

திருமொழி - பகவானுடைய விக்கிரஹ வைலக்ஷண்யத்தையும் கல்யாண குணங்களையும் பாசுரமிட்ட அழகிய வார்த்தைகள் ஆகையால் திருமொழி என்பது அழகான மொழிகளாலமைந்த பிரபந்தத்தை உணர்த்தலால் அடையடுத்த ஆகுபெயர். பெருமானைக் காரணமாகப் பற்றி வந்த பெயர் பெருமாள் திருமொழி - (குலசேகரப்) பெருமானது திருமொழி என விரிதலின் செய்யுட்கிழமைப் பொருளதான ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்ச் சொல்.

வித்துவக்கோட்டம்மான்.

விற்றுவக்கோடு என்னும் திருப்பதியில் [illegible] எழுந்தருளியிருக்கும் [illegible] திருமொழி [illegible] வித்துவக்கோடு [illegible] திருப்பதி [illegible] பெருமாளை [illegible] [illegible] பெருமானை [illegible]

சேர [illegible] குலசேகர [illegible] திருவித்துவக்கோட்டு [illegible] திருவடிகளில் விண்ணப்பிக்கிறார்.

1. (வ-ம்) விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட்டம்மானே! (நீ)யே தருதுயரந்தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை; அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன் அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன்றிருந்தேனே.

(கு-ள்) விரைகுழுவு - [illegible] பொழில்சூழ் [illegible] திருவித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கிற [illegible] [illegible] சரணை அல்லால் [illegible] சரண் இல்லை [illegible] அரி - [illegible] அகற்றிடினும் [illegible] அழுகின்ற குழவியைப் போல [illegible]

O lord at Vithuvakkodu surrounded by sweet smelling flower groves! I have no other refuge except your holy feet if you do not remove the miseries given by yourself. I have been like a child which cries thinking only of its mother's love even though she deserts it with violent anger.

(க-து) [illegible] விண்ணப்பிக்கிறார்.

அகாரிழூ ம எனகிற உமனம எகிமனைப பொருள மைகடாம, தாயா னைன தாழ வைததைய அனைக ிைனயாம, ஆசில வரினகனைகளை விழாகைா யிழு ஓ பதநசமடாதமுடையா மறனைாழைப பரியாம் தா ஒருசுனைய ம சதாம அறிவை ஊகியாவிப உடபடமும ஆ கமா எமபெருமான அழனை ய லது வேறு அறிய திருபபது ஆகையால ஆழ மாவின மேட்டுகட அவனை உபாயம எ பபடி கருதத

நீ ஆ ளாட ன நான ஆடின, நீ பரமாதம நான ஜீவாதமா, நீ சவ ந திரை ந ன பரதாதிராஜீ உடையா ா நா ன உடைமை உடனடனமைய உை டவன எனபடு உடை ன பாரி மைடட ஏு உடை டையான எனகு ந்த குறை தாகாகலே கைலா து உபாயம நீ என்ன செய்த லும நம ையே யபான தருச ாக எணணியிருப்பேன

தரு - தழவு அரி - விழைதத தொமைகவினை - சடாய - ரும ப ஆ - எதிமலைா யிமடகிலே மொருகுசுரை, ஆய - மூனாணிலே பெருமை வகுதி. எ மனில புசல தராரா ரா, ரா டி இரணைட மதரன் - புகல், தருசம மைபடுபாா ப இரணை ா ம ே மாறு ம ஊ பு ூம உடன ரேசக்கைதலைக ாரு ன பருதி புழவு குழ ஆனமை) எனனும உரி யடியாகப ட ய மபபா: இளமையையுமடையது எனபதாம.

சாலேம் கோபிதநதாலும மேேேட ரசரமானவைகளாக கண ாலுமசேட ட லும, புழலி யையே நாடுவைத, And as a child when scaring sounds molest clings close and closer to the mother's breast ணைறுறமட லைவை மு பதிக அம்மானை தகபபன (Lem - அமமான: தகபபன பே ா ன

2 (வ ம்) வினைடோம மதிளபுனை சூழ ரமை கமகோட டையான காத லா ாகண டாம இமுடை மவை மசபபடி ம மாணாடாா்ாயலைராட அறி யாத குலமசனமே ப லர (சடி டைகள) மெ ணைடனா ய கிலும உம குணை கழலே சட்டு கூறு ம எ ாம

(இ ன்) வி ாா ஆகா ோ ேே ரப ஊாலிய மசா திருமதில கள, புடைமுசு க ாபு மும் சூழ ுபபதா, விரு வக்கோட் டு அமமான- திருவிதுவக்கோட்டில் எ ழுந்தருளியிருக்கி ற பெ ருமானே! காதலன ா கணே ணை பா ா ன கண ாா ட க கேட ன, இ மானமே-இக மு கக காரி பர் ாமே பெ கிடு ு செய்தாலும, கொண டாணயலலால தானைக கிய ணைமெய ு கொமை ட ு சக்கணை ோைை பிய அறியா மேொருடரு ஆா ம ாதாவும பி மாசத ய ா, மு மகாரா பதவிர தையைய பா ு ே மேகா ம கொணடு அழ ய ா ஆருரகொணடு ஆனா யாகிலும அழைம கொளளாவிடடாலும, உன உணமையடைய, கு ா சப திகளாற, கழலே - வீரகழலணிநத திருவடிகளே, கூறுவன - துதிபேன

O Lord at Vithuvakkodu surrounded by wall reaching to the skies! I would be adoring only your sounding holy anklet feet, though you should not receive me as your humble servant like a virtuous wife who would not even entertain in her mind any other than her husband though he should do things scorned by those who look at them

அறியுகதுககாரணமாய் கணைவ ன கேவலமானவைகளும கண்டு இகழும படியான காரியஙகளைச செயதாலும, உயாகுடியிறபிறநத பதிவிரதையான வள அவரதை பாராட்டாமல அகநிநிக்கு அந்தரியாமியான சாவேை

வினை சாய்த்திடாத தன்மையை மனங்கொண்டு அக்கணவனையன்றிப் பரபுரு
ஷனை மனத்திலும் எண்ணாதவள் அங்ஙனமே, எனக்கு உபகாரகனான நீ குறையு
முடிக்காமல் உபேக்ஷித்திருந்தாலும் உன் திருவடிகளல்லது பிறர்க்குறை மனத்
தகாலும் நினையேன். உபகாரகனான நீ உபேக்ஷித்திருந்தாயென்று கைவிடத்
தகுமவனல்லேன் நான், உன் திருவடிகளல்லது எனக்கு வேறு புகலில்லையென்
கிறார். இச்சுழலவே - பிரிகிலேன். காதலன் - பிரேமத்தையிட்டு நிரூபிக்க வே
ண்டியிருக்கும் மவன். உம் இணையடி - எகிர் மறை, அநாதர - குறிப்பு
வினையெச்சம். தமநன் - இறந்த எதிர்மறை வினைமுற்று - பொதுவுமாம்.
அம்மாஸ் அன்னை விளி அம்மா நீ என்றிருப்பின் ஜயமான எழுவாய் விளி
வேற்றுமையினால் பெற்றனக

குலாகமழல் விசாகசொசை சமூமே பிரிகிலே "இனிய சேவயா முனிபி
னெதிர் நின்று, தனிகொண்ணேசாட ளமொழி சொலகிலார், அனைய
கேள்வரினியினு மனமெபாற, சனிவா நெருசகரபுடைமாதரே" என்றா
பிறரும். "கொண்டானிற துன்னியக்ளிர பிறர் இல" என்றார் நானமணிக்
கடிகையில்.

3. (இ-ள்) மீன்-மீன்களும், நோக்கும் நீக்கிய வாசபண்ணையபாக்கிற,
நீள - நீளவளமுளள, வய சூழ - வடலமாயிலை சூழப்பட்ட, விற்றுவக்கோ
ட்டம்மான - திருவிற்றுவக்கோட்டிலெழுந்தருளியிருக்கும் பெருமானே!
என் - எனக்குச் சல, நோக்காய் ஆகிலும் - நீ கடாக்ஷம் செய்யாதிருந்தா
லும், உனது பாத அல்லால் உன்னைத் தஞ்சமாகப் பற்றுகையொழிய, பற்றி
லேன் - வேறொருவரைத் தஞ்சமாகப் பற்றமாட்டேன் தார் - மாலையணி
ந்த, வேந்தனார் - அரசனுடைய, நோக்காது - (பிரஜைகளை) ரக்ஷியா
மல், எத்துயரம் செய்திடினும் - எவ்வகைப்பட்ட துன்பங்களைச் செய்தாலும்,
கோல்நோக்கி - அவனுடைய செங்கோலைப் பார்த்து, வாழும் - வாழ்கின்
ற, குடிபோன்று - குடிகளைப்போல, இருந்தேன் - இருந்துவிட்டேன்.
ஏ - அசை.

O Lord at Vithuvakkodu surrounded by huge (rice) fields where fishes long to live! I seek protection from no other except you though you may not look on me with clemency I have been like the subjects who look up to the sceptre of their king wearing garlands,though he may inflict unmindfully any misery on them

(க-து) சிறியவையைப் பெரியது நல்லாட்சிபடிக் காக்கடவனான அரசன் ரக்ஷ
ணத்திலே நோக்கற்றிராது மனவன்றி, எவ்வகைத் துக்கங்களையும் விளைத்தாலும்
குடிகள் அவனுடைய ஆஞ்ஞையை வாசைப் பணியிருப்பார்; அதுபோலவே
என்னை ரக்ஷிக்கக்கடவனான நீ அது செய்யாமல் பராமுகமாயிருந்தாலும்
உன்னைவிட்டு வேறொருவரைப் பற்றேன் அரசன் அநாதரவுபண்ணினாலும்
அவனை குடிகளுக்கு தஞ்சம் நீ அநாதரவுபண்ணினாலும் நீயே எனக்குத்
தஞ்சம், நானொருசெயலற்றவன்! இல்லை நீ மாட்டாததொன்றில்லை யென்கிறார்

"வானோக்கி வாழுமுலகெல்லாம் மன்னவன், கோனோக்கி வாழுங்
குடி" என்றும் 'தளியில் மணஞாலத்தின் கொற்றத்தே வேந்த, ளியின்மை
வாழுமுயிர்க்கு" என்றார் திருவள்ளுவர் கூறியிருப்பது காண்க.

கடல்வரைந்ததுவாம் பகுப்பிடமாமிகச் செம்மை நாநசோனாரு
மாறு "மீனோக்கு நீள வயல்சூழ் விற்றுவக்கோடு" என்றார் எனப்பால்-ஏழாம்
வேற்றுமை பற்று - முதனிலைத் தொழிற்பெயர் உன்பற்று - உன்னைப்பற்று
தல். பற்றிலேன் - எதிர்மறைத்தன்மை யொருமை வினைமுற்று.

நாட்டுவேந்தன் - குடிகளுடைய ரக்ஷணைத்தொழிலே இசித்துக் கன்மையோடு விட்டிருக்கிற அரசன். நாடுரேக்காது என ஒருமையாக வருதலால் - நாட்டுடன் என ஒருமையாகவே இருக்கவேண்டும். வியாக்கியானத்திலும் ஒருமையாகவே இருக்கிறது. கோல் (Sceptre) இங்கே ஆட்சிக்கு ஆகுபெயராய் நின்றது. “கோனோக்கி வாழுங் குடியெல்லாம் தாய்முலையின், பானோக்கி வாழுங் குழவிகள், வானத் துளிநோக்கி வாழுமுலகம்” என்றார் நான்மணிக் கடிகையில்.

4. (ப-ம்) வித்துவக்கோட்டம்மான்! மருத்துவன் வாளாலறுத்துச் சுடினும் (அவன்) பால் காதல்மாளாத நோயாளன்போல், நீ மாயத்தால் மீளாத் துயர் தரினும் அடியேன் ஆளாக உனது அருளே பார்ப்பன். ஏ - அசை.

(இ-ள்) வித்துவக்கோட்டம்மான் - திருவித்துவக்கோட்டிலே எழுந்தருளியிருக்கிற பெருமானே! மருத்துவன் - வைத்தியன், வாளால் - கத்தியாலே, அறுத்து - சத்திரம்பண்ணி, சுடினும் - (ஊசியைக் காய்ச்சிச்) சுட்டாலும், (அவன்) பால் - அவனிடத்தில், காதல்மாளாத - பிரியம்நீங்காத, நோயாளன்போல் - நோயாளியைப்போல, நீ - நீ, மாயத்தால் - உன் மாயையாலே, மீளா - நீக்கமுடியாத, துயர் - துக்கத்தை, தரினும் - விளைத்தாலும், அடியேன் - அடியனாகிய நான், ஆள் ஆ (க) - அடிமைசெய்வதற்காக, உனது அருளே - உன்னுடைய கிருபையையே, பார்ப்பன் - புத்திபண்ணியிருப்பேன்.

O Lord at Vithuvakkodu! though you should by your delusion inflict on me eternal misery, I would only be thinking of your clemency to do service to you, like the patient who never gives up his affection to the surgeon who cuts and brands his ulcers.

“அருவியிட்டாற்றுவார் புண்வைத்து மூடார் பொதிக்கு” என்கிறபடி மருத்துவன் புண்ணை அறுத்து சிகிச்சைபண்ணிச் சத்திரம்பண்ணி வாயில் வைசிமைவெதுப்பிக்காய்ச்சிச் சுட்டாலும் அது தன்னுடைய நன்மைக்காகவே யென்றெண்ணி நோயாளன் மருத்துவனை வெறுக்காமல் அவன்மேல் அன்பு நீங்காமலிருப்பான். அதுபோல பகவானே நீ எனக்கு நீங்காத துன்பத்தைச் செய்தாலும் அதுவும் என் உஜ்ஜீவனத்துக்காகவே யென்றெண்ணி உன்னை வெறுக்காமல் உனக்கு அடிமை செய்வதையே நினைவாக உன்னுடைய கிருபையையே புத்திபண்ணியிருப்பேன்; இப்போது நேர்ந்திருக்கிற விபசனங்களை புத்தியிலெண்ணாமல் உன் கிருபையையே புத்திபண்ணியிருப்பேன்; வேறொன்றும் புத்தியில்லை என்கிறார். சுடினும் (அறுத்தது மாத்திரமேயன்றி என்பதைத் தருவதால்) இறந்தது தழுவிய எச்சவும்மை. மருத்துவன் - மருந்து என்பதன் அடியாகப் பிறந்த அன்பெறும்பெயர்; மருந்தால் நோய்ப் பரிகாரஞ்செய்பவன் என்பது பொருள். [மருத்துவச்சி] மாளாத - மாள் + ஆ + த் + அ; நீ - எதிர்மறைப்பெயரெச்சம். நோயாளன் - இங்கேயே அறிவாளன் - வல்லாளன் - கம்மாளன் [கம்-இரும்பு] என வருதல்காண்க. தரினும் - உம் - எதிர்மறை. அருளே - ஏ பிரிநிலை. பார்ப்பன் - தன்மை யொருமை யெதிர்கால வினைமுற்று. பார் + ப் + ப் + அன்: அன் - தன்மை யொருமையிகுதி. அடியேன் - தன்மையொருமைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

5. (ப-ம்) வெங்கண் திண்களிறு அடர்த்தாய்! வித்துவக்கோட்டம்மானே! உன் இணையடியே அடையலல்லால் (நான்) எங்குப்போய் உய்கேன்? எங்கும் போய்க் கரைகாணாது மீண்டு (அங்கு) ஏயும் வங்கத்தின் கூம்பிலே ஏறும் மாப்பறவையைப் போன்றேன். ஏ - அசை.

(இ-ள்) வெங்கண் - வெவ்விய கண்களையும், திண் - திண்ணிய சரீரமுடைத்தான, களிறு - குவலயாபீடம் என்னும் யானையை, அடர்த்து ...

கொன்றவனே ! விற்றுவக் கோட்டம்மானே ! உன் - உன்னுடைய, இணையடியே - திருவடிகளே, அடையல்லால - தஞ்சமாவதொழிய, எங்குமோய் - வேறுபாரிடத்தில போய், உய்கேன் - உஜ்ஜீவிக்கப் போகிறேனா ? எறி - அலையெறிகிற, கடலவாய் - சமுத்திரத்திலே, எங்கும் போய - நான்குதிக்கிலும் போய்ப்பாராதது, கரைகாணது - கரை காணமையாலே, மீண்டு - திரும்பி வந்து, ஏயும - (அக்கடலில்) வர்த்திக்கிற, வங்கத்தின் - கப்பலினுடைய, கூம்பு - பாய்மரத்திலே, ஏறு - ஏறுகிற, மா - பெரிய, பறவை - பக்ஷியை, போன்றேன - ஒத்திருந்தேன்.

O Lord who killed the fierce eyed and strong minded elephant (Kuvalayapitam)! O Lord at Vithuvakkodu! Where else shall I go for support except to your holy feet? I have been like a great bird which returns to roost upon the mast of a ship after seeking for a port in vain in all directions in the sea

(க-து) கடலினடுவில ஒருமரக்கலத்தின பாய்மரத்திலேயிருந்த ஒருபக்ஷி நாலுதிக்கிலும போகவிடந் தேடிப் பறந்தாலும் கரை காணமையால் மீண்டும் வந்து அப்பாய்மரத்தையே அடைவது போல, அப்படியே சமுசார சாகரத்தைக் கடக்கும்போது உன்திருவினை சேர்மான வித்துவக்கோட்டம்மானடிகளை பற்றிக் கடக்கலாமல்லது வேறு உபாயமில்லை. கடலைக்கடக்கு உன் திருவினை தேசத்தை ஒழித்தெல்லாம அக்கடல போமேயாம. நீ கைவிட்டாலும் உன் திருவடிகளையே உறுதியாகப் பற்றுவேன். எனக்கு உஜ்ஜீவிக்கலான உபாயம வேறில்லை யென்றவாறு.

கூம்பு - பாய்மரப் பெயர். உய்கேன் - உய + கு + என், கு - சாரியை தன்மை யொருமை யெதிர்கால வினைமுற்று. இணையடி - இணை என்பதே பன்மையை யுணர்த்தலால் அடி பன்மையில் ஒருமை வந்த வழுவமைதியாகக் கொள்க, இரண்டு கண் என்பதுபோல. எங்கும - முற்றும்மை. எங்கு - என்பது விகுதியாகப் பிறந்த இடப்பெயர், முற்றும்மை தொடர்ந்து வந்ததனால் எஞ்சாமைப் பொருட்டாய் எல்லாவிடமும் என்றாகும. போய் - வினையெச்ச விகுதியான ய் - காலத்தைக் காட்டி நின்றது. எறிகடல - வினைத்தொகை. ஏயும்: ஏய - பகுதி. பறவை - பறப்பது; ஐ - வினை முதற் பொருண்மை விகுதி. பற + வ் + ஐ. போன்றேன - தன்மை யொருமை இறந்தகால வினைமுற்று. நிகழ்காலத்தில் போலகின்றேன் எனவரும். எதிர் காலத்தில போல்வேன.

வேங்கடேசனுக்காக சரித்திரம் எனும் ஸரித்திரம்.

ஸ்ரீ கண்ணனுடைய அம்மான் கம்ஸன் என்பான் அக்கண்ணனிடம் பகைமைகொண்டு அப்பெருமானைக் கொல்லுமாறு பலசூழ்ச்சிகள் செய்தும அவையெல்லாம் அவமாகவே முடிய மனமழிந்து பின்னர் வில்விழா என்று ஓர் வியாஜமமைத்துக்கொண்டு ஸ்ரீ கண்ணனைத் தன்னரண்மனைக்கு வரவழைத்தானாக, அக்கண்ணன் பலராமருடன வருகையில் அவ்வீரர்களைக் கொல்லவேண்டி அக்கம்ஸன் அவனது அரண்மனைவாயிலில வைக்கப்பட்டிருந்த குவலயாபீடமென்னும் யானையினிரண்டு தந்தங்களையும் இலேசாகப்பறித்து அவைகளையே தனக்காயுதமாகக்கொண்டு அந்தயானையை வதைத்தனர் என்பதாம்.

6. (வ-ம்) விற்றுவக் கோட்டம்மான் ! செங்கமலம், அந்தரஞ்சேர் வெங்கதிரோற்கல்லது, செந்தழலே வந்து அழலைச் செய்திடினும், அலரா. ஆல - அவ்வாறே (என்னுடைய) வெந்துயரத்தை (நீ) வீட்டாவிடினும் (நான்) அந்தமில உன் சீர்க்கு (அகம குழைதல்) அல்லால் (வேறொன்றுக்கும்) அகங்குழையமாட்டேன். வ - ஈற்றசை.

(இ-ள்) விற்றுவக்கோட்டம்மானே - திருவிற்றுவக்கோட்டிலே எழுந்தருளியிருக்கிற எம்பெருமானே! செங்கமலம் - அழகிய தாமரைகளானவை, அந்தரம் சேர் ஆகாசத்திலே வர்த்திக்கிற, வெங்கதிரோற்கு அல்லால் - சூரியனுடைய உஷ்ணத்துக்கல்லது, செந்தழல் - சிவந்த நெருப்பானது, வந்து - கிட்டி, அழலச் செய்திடினும் - உஷ்ணத்தைப் பண்ணினாலும், அலரா - மலராவாம். வெந்துயர் - என்னுடைய வெவ்விதான துக்கத்தை, வீட்டாவிடினும் - நீ போக்காவிட்டாலும், அந்தம் இல் - அளவில்லாத, உன் சீர்க்கு அல்லால் - உன்னுடைய கல்யாண குணங்களுக்கல்லது, அகம் குழைய மாட்டேன் - வேறொன்றுக்கும் என் நெஞ்சு களிப்புறாது.

O Lord at Vithuvakkodu! even though live embers approach and warm it the beautiful lotus blossoms not except to the heat of the sun in the sky. Though you do not remove my hard miseries my heart would not melt with love except to your boundless virtues.

(க-து) ஆகாயத்திலே சஞ்சரிப்பவனான சூரியனை அல்லாமல் [illegible] தாமரையானது [illegible] நெருப்பு [illegible] உஷ்ணத்துக்கு அலராது. விற்றுவக்கோட்டம்மானே! [illegible] உன்னுடைய பாதமான [illegible] உன்னுடைய கல்யாண குணங்களைக் கேட்டு என் மனது [illegible] குழைவது [illegible] கல்யாண குணங்களிலே ஈடுபட்டிருக்கின்றது.

செய்திடினும் - உம்மை [illegible] செங்கமலம் - சிறிதும் பயிர் [illegible] அலரா - தாமரையோடு பண்மை விகுதி [illegible] பலவின்பாற்கை, [illegible] (29) [illegible] என்பது [illegible] முடிவெய்தலின் கமலம் பன்மையில் [illegible] வீட்டாவிடின் - வீட்டு பகுதி [illegible] (ஒ-ப) [illegible] அகம் குழைய மாட்டேன் [illegible] முடிவதை 'உயர்திணை தொடர்ந்த பொருண் முதலாறும், அதனொடு சார்த்தின் அத்திணை முடியின'' (ந ஞ-379) என்பதால் அறிக.

7 (வ-ம) விற்றுவக்கோட்டம்மானே! வெங்கண் திண் களிறு [illegible] காலத்து [illegible] மாமுகில் [illegible] பயிர்கள் [illegible] அவை போல, அடியேன், (நீ என்) மெய்த்துயரை வீட்டாவிடினும் [illegible] தெய்வம் [illegible] மிகவைப்பன்.

(இ-ள்) விற்றுவக்கோட்டம்மா - திருவிற்றுவக்கோட்டிலே எழுந்தருளியிருக்கின்ற பெருமானே! பை - [illegible] பயிர்களானவை, வான் - மேகமானது, எத்தனையும் [illegible] - மிகவும் [illegible] காலும், மைத்து - கறுத்து, எழுந்து - ஆகாசத்திலே [illegible] பெரிய மேகங்களையே, பார்த்திருக்கும் - பார்த்துக்கொண்டிருக்கும் [illegible] போல - அந்த பயிர்களைப்போல, அடியேன் - நான், மெய்த்துயர் - (அனுபவித்தே கழியவேணும்) மெய்யான துக்கத்தை, வீட்டாவிடினும் - நீ போக்காவிட்டாலும், எத்தனையும் என் மனத்தை, உன்பாலே உனக்கே [illegible], மிக வைப்பன் - மிகவும் வைப்பேன்.

O Lord at Vithuvakkodu! the tender crops stand gazing at the dark clouds rising in heaven in a season of drought; like those crops I place my heart wholly with you, though you do not remove my real distress.

(க-து) காலத்தில் வர்ஷியாமல் மேகங்கள் மறைந்தாலும் பயிர்களானவை வேறே நீருள்ள நிலத்தைத் தேடிப்போக வகையறியாமல் ஆகாயத்திலுள்ள

கறுத்த மேகங்களையே பார்த்திருக்கும். அதுபோல், பெருமானே! நீ என் பாபத்தைப் போக்கிச் சமுசாரபந்தத்தை அறுத்துக்கொடாமல் இகழ்ந்தாய் என்று தோற்றினாலும் நான் ஒரு காலுக் கொருகால் என் நெஞ்சை உன் விஷயத்திலேதானே வைப்பேன் என்கிறார்.

எத்தனை - [தனை - அளவு] எவ்வளவு. பைங்கூழ் = பை [இளமை] + கூழ்: பசுமை + கூழ் எனவும் பிரிக்கலாம். மைத்து - மை + த் + த் + உ - செய்து என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். இங்ஙனே வெண்மை என்பது வெளுத்து, வெளுக்க, வெளுக்கின் என வருதல்காண்க. சித்தம் - வடமொழி. உன்பாலே - ஏ பிரிநிலை. வைப்பன் - தன்மையொருமை யெதிர்கால வினைமுற்று.

8 (வ-ம்) மிக்கிலங்கு முகில்நிறத்தாய்! வித்துவக் கோட்டம்மான்! புண்ணியனே! ஆறு [கள்] எல்லாம் தொக்கிலங்கி பரந்தோடித் தொடுகடலே புக்கின்றி புறம் நிற்கமாட்டாது. அதுபோல் [நான்] புக்கிலங்கு உன் சீரல்லால் [வேறு] புக்கிலன். காண் - முன்னிலையசை. மற்று - அசை. ஏ - ஈற்றசை.

(இ-ள்) மிக்கு - மிகவும், இலங்கு - விளங்கும், முகில் - மேகம்போன்ற, நிறத்தாய் - திருநிறத்தை யுடையவனே! வித்துவக்கோட்டு அம்மான் - திருவித்துவக்கோட்டிலே எழுந்தருளியிருக்கும் பெருமானே! புண்ணியனே - புண்ணியனே! ஆறு எல்லாம் - நதிகளெல்லாம், தொக்கு - திரண்டு, இலங்கி - விளங்கி, பரந்து ஓடி - பலவிடங்களிலும் பரந்து ஓடி, தொடு கடலே - ஆழமான கடலிலே, புக்கின்றி - சென்று புகலல்லது, புறம் - வேறோரிடத்தில், நிற்கமாட்டாது - நிற்கமாட்டாதனவாயிருக்கின்றன: அதுபோல் - அவ்வாறுகளைப்போல், புக்கு இலங்கு - உள்புக உள்புக விளக்கமாகிற, உன் சீர் அல்லால் - உன்னுடைய கல்யாண குணங்களை யொழிய, புக்கு இலன் - வேறொருபுகல் உடையேனல்லேன்.

O Lord whose complexion resembles the darkish clouds! O Lord at Vithuvakkodu! O thou holy! The rivers cannot stand elsewhere, but all flow into the deep sea with great splendour: like those rivers, I have no other refuge but your virtues, of ever increasing charm.

ஜலராசியெல்லாம் திரண்டு பரந்தவிடமெல்லாம் பரந்தோடி கடலிலே சென்று விழுவதல்லது புறம்பு நிற்பதில்லை. பெருமானே! உள்புக உள்புக உத்தமமான உன் கல்யாணகுணங்களிலே புகுந்து ஈடுபடுவதல்லது வேறொரு புகலறியேன். ஆறுகள் புகுந்தால் கடல் நிறைவதும் இல்லையாகில் குறைபடுவதுமில்லை: அவை புறத்தில் தரிக்கமாட்டாமலே கடலிற் புகுகின்றன. நான் புகுந்து ஈடுபடுவதால் உன் கல்யாணகுணங்கள் விசேஷிப்பதும் இல்லாவிடில் விசேஷங் குறைவதுமில்லை. மற்றைப்படி தரித்திருக்கமுடியாமல் நானும் அக்குணங்களில் ஈடுபடுகின்றேன். தன்னிடம் புக்க ஆறுகளைக் கடல் வேண்டாமென்று விலக்குவதில்லை: உன் கல்யாணகுணங்களில் ஈடுபடவிருக்கும் என்னை நீயும் வேண்டாமென்று வெறுக்கமாட்டாய். புக்கு ஈடுபடுவது என் ப்ரக்ருதி: ஏற்றுக்கொள்வது உன் ப்ரக்ருதி என்கிறார். தொக்கு - புக்கு - மிக்கு என்பவற்றில் பகுதி யிரட்டித்துக் காலங்காட்டுவது காண்க. பரந்து - பர (விஸ்தரி) பகுதி. தொடு - தோண்டு; அதனால் ஆழமான: சகரர்தோண்டியது என்றுங்கொள்ளலாம். ஆறெல்லாம் - தொகுதி யொருமையாகவருவதால் மாட்டாது என ஒருமை முடிபேற்றது. முகினிறத்தாய் - வண்ணவுவமை. காண் - முன்னிலையசை.

9 [வ-ம்] மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட்டம்மானே! நின்னையே வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் தன்னையே தான் வேண்டும் செல்வத்தைப்போல் மாயத்தால் (நீ என்னை உபேக்ஷித்தாலும்) அடியேன் நின்னையே வேண்டி நிற்பன். தான் இரண்டும் அசை. ஏ - ஈற்றசை.

[இ-ள்]-மின்னையே சேர் - மின்னலைப்போலே பளபளத்துள்ள, திகிரி - திருவாழியைத் தரித்திருக்கிற, விற்றுவக்கோட்டம்மானே! நின்னையே வேண்டி - உன்னையே விரும்பி, நீள் செல்வம் - மிக்க செல்வத்தை, வேண்டாதான் தன்னையே - விரும்பாதவனையே, தான்வேண்டும் - தான்மேல் விழுந்து கிட்டு கைக்கு விருப்பங்கொள்ளும், செல்வம் போல் - ஐசுவரியத்தைப்போலே, மாயத்தால் - உன் மாயையாலே (நீ என்னை உபேக்ஷித்திருந்தாலும்), அடியேன்-நான், நின்னையே - உன்னையே, வேண்டி நிற்பன் - விரும்பி யிருப்பேன்.

O Lord at Vithuvakkodu holding a disc bright as lightning! though you should by your delusion be indifferent to me, I would only long for you all the more, like wealth which longs to approach a man who longs for you only and discards it.

(கு-நு) உன்மேலே விருப்பெலாம்வைத்துச் செல்வத்தை வெறுப்பவனையே அச்செல்வம் விரும்பியடைவது போலே, பெருமானே! நீ உன்மாயத்தால் என்னை உபேக்ஷிக்க உபேக்ஷிக்க நான் உன்னையே பற்றி நிற்பேன்.

சேர் - கிட்டுதல்; மின்னையே சேர் - மின்னலையே கிட்டுகிற, மின்னலை ஒப்பாகக் கிட்டுகிற, மின்னலை ஒத்த. இங்ஙனமன்றி மின்னல் போன்ற திகிரியை (சேர்) தரித்த அம்மானே என்றும் பொருள் கூறலாம். செல்வம்-இங்கே மோக்ஷலக்ஷ்மியென்றுங் கொள்ளலாம். நீள்செல்வம்-வினைத்தொகை. வேண்டாதான் - வேண்டு + ஆ + த் + ஆன். மின்-முதனிலைத் தொழிலாகுபெயர்.

10. (இ-ள்) விற்றுவக்கோடு அம்மான் - திருவிற்றுவக்கோட்டிலே எழுந்தருளியிருக்கிற பெருமானே! நீ வேண்டாயேயாயிடினும் - நீ என்னை உபேக்ஷித்திருந்தாயே என்றாலும், மற்றாரும் பற்றிலேன் என்று - வேறொருவரும் எனக்குத் துணையாவாரில்லையென்று, அவனை தான் நயந்த - அவனுடைய திருவடிகளை விரும்பின, கொற்றம்வேல் தானை - வெற்றிபொருந்திய வேலையேந்திய சேனையை உடையவரான, குலசேகரன்-ஸ்ரீ குலசேகரப்பெருமாள், சொன்ன - அருளிச்செய்த, நல் - விலக்ஷணமான, தமிழ் - தமிழாகிற, பத்தும் - பத்துப்பாசுரங்களையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், நரகம் நண்ணார் - ஸம்ஸாரமாகிற நரகத்தைக் கிட்டமாட்டார்கள்.

Those who are able to master the ten well worded Tamil hymns uttered by Kulasekara having an army holding victorious lances, who longed for the holy feet of the Lord at Vithuvakkodu stating "O Lord! though you may discard me, I have no other refuge but you"

(கு-நு) "திருவிற்றுவக்கோட்டிலே எழுந்தருளியிருக்கிற பெருமானே! நீ உபேக்ஷையாயிருந்தாலும் நான் அபேக்ஷையாய்மற்றொரும் பற்றின்றி உன் திருவடிகளையே புகலாகக்கொள்கிறேன்" என்று விண்ணப்பித்த ஸ்ரீ குலசேகராழ்வாருடைய நற்றமிழ்ப் பாசுரங்களான இவை பத்தையும் பாராயணம்பண்ணவல்லவர்களுக்கு நரகப்ராப்தியில்லை என்று இப்பாசுரம் பத்துக்கும் சிறப்புப்பாயிரங் கூறுகின்றார்.

மற்று - வேறு என்னும் பொருள்பட வந்த இடைச்சொல் - "வினைமாற் றசைநிலை பிறிதெனுமற்றே" (ந - சூ-433) ஆர் - யார் என்பதன் மரூஉ. அவனை நீ தான் நயந்த - முதலையையுறிற்சினையைக் கன்னூறும், அது முதற்காயின் சினைக்கையாகும்" (ந-சூ -315) என்றபடி அவனைத் தாளின்கண் நயந்து எனக்கொள்ளவேண்டும் அல்லது அவனை என்பது உருபு மயக்கமாக அவனது என்று (இதற்கு விதி) - "யாதனுருபிற் கூறிற்றாயினும், பொருள்செல மருங்கின் வேற்றுமைசாரும் - [ந - சூ-317] கொண்டு, தாள் - இரண்டாம் வேற்றுமைத் தொகை யெனக்கொள்க. அவனது தாளை நயந்து என்பதாம். கொற்றவேல் = கொற்றம் + வேல். தானை-ஸ்தாநா என்கிற வடசொல். குலசேகரன் - குலத்து சுக்ரீவன் போன்றவன்.

மாணிக்கவாசக சுவாமிகள்

சரித்திரச்சுருக்கம்

செந்தமிழ் நாடாகிய பாண்டிவள நாட்டிலே வையையாற்றங் கரையிலேயுள்ள வாதவூரிலே அமாத்திய பிராமண குலத்திலே, சைவசமயகுரவர் நால்வரில் நாலாவர் மாணிக்கவாசக சுவாமிகள் அவதரித்து, வாதவூரர் என்னுந் திருநாமம் பெற்று, பதினாறாண்டினுள்ளே வேதமுதலாக அறுபத்தினான்கு கலைகளையும் ஓதினவராய்ச் சிறப்புற்றிருந்தார். இச்செய்தியை அக்காலத்து மதுரைப் பதியிலரசுசெய்த அரிமர்த்தன பாண்டியன் செவியுற்று, அவரை வரவழைத்து, அவர் சகல வேதத்திலும் மனுநீதியிலும் வல்லவரென்றறிந்து, அவரைத் தன்னமைச்சரில் முதலமைச்சராக்கி மேம்படுத்தினான். இங்ஙனம் அரசனுக்குக் கண்ணும் உயிரும்போலத் தங்காரியங்களைச் செய்யுநாளில், "மெய்ம்மையாம் பொருள் விவேகமும், ஆகின் வேறாய பொய்ம்மையாம் பொருள் விவேகமும்" இவர் புகப்புகப்பட்டோர், இம்மையாசையும் மறுமையிலாசையும் துறந்து குருவை ஆராய்ந்து பற்றுக்கோடுடையவரானவரை, சுருதியாகம சாத்திரங் கேட்ட பெரியோரைக் கேட்டறிய அவாவையின் சென்று, அவர் மட்டிலர் பொருளைசனாலும் உசாவிய அவ்வையப்பெருமிதமிடப்பட்டனரவர், ஒருநாள் பாண்டியன் ஆணையின்படிச் சென்றார். அப்போது பரிச்சாலைப் பாவலர் அரசன் முன்னர் வந்து "ஆராய் பிரானே! நம் குதிரைச்சாலையில் இறந்துபோக ஏதுவாயின குதிரைகளே மிகுந்து நிறைந்தவும் மெய்ப்படைந்தவுமாயிராச் சிறந்த பரியொன்றும் இலது" என்று கூறலும் அரசன் வாதவூரரை நோக்கி "நீர் சாலைப் பறையைத் திறந்து வேண்டும் பொருள் எடுத்துச் சென்று நல்ல இவுளிகள் மேன்மைக் குதிரைகள் பறப்பன வாங்கி வருமின்" என்று கூறிய அப்பினுள் இருமை விடைபெற்றுச் சேனைமுதல் மற்றும் பல பரிவாரங்களுடனே செல்கையில் திருப்பெருந்துறையைச் சார்ந்தார். அப்போது, இவருடைய இருவினையொப்பு மலபரிபாகமும் கண்டருளிய சிவபெருமான் இவரைத் தடுத்தாட்கொள்ளத் திருவுளங்கொண்டவராய் அத்திருப்பெருந்துறைத் திருவாலயத்துக் குருந்தமரத்தடியின் கண்ணே, (999)-மாணவருடனே ஆசாரிய திருமூர்த்தமாய் அருட்கண் திருவுருவுடன் திருக்கோலங்கொண்டு எழுந்தருளியிருந்தார். ஆலயத்திற் சேர்ந்து திருக்கோபுர வாயிலைக்கடந்து வலம்வரும் வாதவூரர் அக்குரவனைக் கண்ணுற்று, அன்பு மிகுதியுடனே, உரோமஞ்சிலிர்ப்ப, ஆனந்தக் கண்ணீர் பெருக, சிரமேற் குவிந்த கரகமலத்தினராய்ச் சென்று அக்குரவனை வலம்வந்து அவர் திருமுன்னர் விழுந்து அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம் புரிந்து நின்றார். அக்குரவனும் அவர் உடல்பொருளாவியை ஆட்கொண்டு முறைப்படி அவர்க்கு அறுவகை தீட்சையும் அருள்செய்தருளினார். அப்போது வாதவூரர் ஆனந்தபரவசராய் ஸ்ரீசிவபெருமானைத் தோத்திரம் பண்ணினார்.

> "பழுதிலாச் சொன்மணியினைப் பதிசெய்தன்பு
> முழுதுமாகிய வடிவினை முறைதொடுத்தலங்க
> லெழுதுசாத்திடப் பெயர்ப் பருக்கச்சுமிழ்ந்தையா
> வழுவிலாதபோ மாணிக்கவாசகனென்றார்"

இப்படியாக இவர் செய்யுந் தோத்திரப் பாக்களின் சொல்லழகைக் கண்டு பெருமான் வியந்து அடிகளை "மாணிக்கவாசக" என்றார். அதுமுதலாகவே இவருக்கு மாணிக்கவாசக சுவாமிகள் என்று பெயராயிற்றென்ப. பின் பெருமான் இவரது திருப்பதிகங்களை யின்னுஞ் சிலவுள திருச்செவி மடுக்கவும்,

இவ்வாக்கைச் செம்பொன்னைக் கொண்டு இவர்மூலமாய்ப் பாண்டியனைப் புறக்கிச் செலுத்தவும் திருவுளங்கொண்டவராய் அவரை நோக்கி 'நீ சிறிது கருமமுளாய் நீ இங்கு இருந்தி' என்றுசொல்லி அந்தர்த்தானமாயினார். இதைக்கண்ட வாதவூரடிகள் ஆபத்துயர்கொண்டு திகைத்துத் துதித்துப் பின்னர் ஆலயப்புறத்தே காத்திருக்கிற பரிவாரத்தினரைப் பார்த்து "நீவிர்போய் அசுவங்கள் ஆடித்திங்களில் வரும் என்று அரசனுக்குச் சொல்லுமின்' என்று கட்டளையிட்டு அவர்களைப் போக்கிவிட்டு மீண்டும் ஆலயத்துட்சென்று தங்கையிலிருந்த பொருள்களையெல்லாம் சிவார்ப்பணம் பண்ணிவிட்டு நாள்கழித்திருந்தார். ஆடித்திங்களாகத்து, குதிரைகள் வந்தில்லை, இஃது என்னென்' றோர்க்கு அரசன் திருமுகம்போக்கினான். வாதவூரரும் திருப்பெருந்துறைப் பெருமானிடத்தில் இச்செய்தியை முறையிட "பரியெல்லாம் வருமென்று ஓலைவிடு' என்று ஓர் அசரீரி வாக்கு உண்டாயிற்று. வாதவூரரும் அங்ஙனே செய்தார். பின் [illegible] அவ்வகை [illegible] [illegible]

[illegible]

இவ்வாக்கைச் [illegible] சிவபிரானைமனக்கு அவரே [illegible] அன்புடையார் [illegible] கூடப்பிரார்த்தனைக [illegible] கணக்கைக் [illegible] கணை பெருக்கெடுப்பாயாக' என்று கட்டளையிட்ட [illegible] கெடுத்து மதுரையூரரை [illegible] ஆசன [illegible] யார் திருமுன் சென்று விண்ணப்பிக்க அவரும் யாவர் விருப்பம், இனிச்செயவேண்டும் [illegible] அமைச்சர்க்கு [illegible] [illegible] அரசனும் [illegible] அவரை யழைத்து க்ஷமிக்கும்படி பிரார்த்திக்கத் வாதவூரரும் விருப்பு வெறுப்பில்லாதவராய் தம்மின் அங்ஙனேயாக வென்று க்ஷமித்தார்.

பின்னர் வாதவூரர் திருப்பெருந்துறையையடைந்து ஆங்கு [illegible] நிஷ்டையிலிருந்து பின் குருபரனருளியபடியே சிதம்பரஞ்சென்று புத்தரை வென்று, திருவாசகத்தைப் பாடியருளினர். இப்படியிருக்கவேண்டிய சிறப்பெலாமுடையார் அத்தனை வேடம்பூண்ட மாணிக்கவாசகப்பிரான் திருமுன்னை யருக்கும் அவர்க்குமேனேடிய மரியாதைசெய்து எழுந்தருளப்பண்ணி

ணி, 'தேவரீர் அடியேனை மாட்டனுப்பியகாரணமென்' என்ன அவரும உமமுடைய ஆசாரியர் [illegible] மனையில் [illegible] நீரும் யாமும் வந்தோம் நீவிர் பாடிய திருவாசகத்தை [illegible] முடையேம் என்று குறிப்பிக்க, [illegible] முடிவு [illegible] யருளினார் வந்த அந்தணரும் [illegible] [illegible]

திருவாசகம்.

[illegible]

'தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியும் - கோவை
திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர் [illegible]

குயிற்பத்து - ஒரு நாயகி தன் கணவனைப் பிரிந்திருக்கும் பிரிவாற்றாமையாலே தூதுபோய்ச் சொல்லி யழைக்கும்படி ஒரு குயிலை நோக்கிச் சொல்லியதுபோலச் சிவபெருமானை நாயகனாகவும் பாடின திருவாதவூரரான ஸ்ரீ மாணிக்கவாசகர் தம்மை நாயகியாகவும் திருவருளைக் குயிலாகவும் வைத்துப் பாடியது. இங்ஙனம் கடவுளை நாயகனாகவும் பக்திமான்கள் தம்மை நாயகியாகவும் வைத்துப் பாடுவது தமிழ் மரபே யென்க. இந்தப் பிரகாரம் வைணவத்திலும் நாலாயிரப் பிரபந்தத்தில் சூடிக்கொடுத்த நாச்சியார் ஸ்ரீ ரங்கநாதனைப்பற்றிக் குயிற்பத்துக் கூறியிருக்கிறார். மன்மதனுடைய காளமாகிற குயிலையே தூதாக அனுப்பினால் நாயகர் காலந்தாழ்க்காது வருவரென்று குயிலைத் தூதுவிடுகிற பாவனையாகக் கொள்க. மற்ற ஆழ்வார்களும் ஓரோவிடத்து நாயக நாயகி பாவமாகப் பாசுரம் பாடியிருக்கின்றனர்.

இந்தக் குயிற்பத்தின் திருவுள்ளக்கிடை (கருத்து) என்னவென்றால் ஆத்துமவிரக்கம் அதாவது ஆத்துமா சிவபெருமானைக் கண்டிரங்குதலாம். திருப்பெருந்துறைப் புராணத்தில் திருவாசகச் சிறப்புரைத்த வத்தியாயத்தில்

> "தூயவருட்குயிலே சோதியனைக் கூடுதற்றூன்
> வாயிறைற் கூவென்றான் வாழ்த்துகுயிற் பத்தாமே"

என வருவது காண்க.

1. (இ-ள்) கீதம் இனிய குயிலே - இசைப்பாட்டு இனிதாய்ப்பாடுதலையுடைய குயில் பக்ஷியே! கேட்டியேல்-யான் (சொல்வதைக்) கேட்பாயாயின், எங்கள் பெருமான்-எங்கள் தலைவனது, பாதம் இரண்டும்-திருவடிகள் இரண்டின் தன்மையை, வினவில்-என்னவென்றுகேட்டால், பாதாளம் ஏழினுக்கு அப்பால்-பாதாளலோகங்கள் ஏழினுக்கும் அப்பாற்பட்டனவாம். சோதிமணிமுடி-ஒளிபொருந்திய இரத்தினமகுடத்தை, சொல்லின்-இன்னதென்று சொன்னால், சொல்இறந்து நின்றதொன்மை-(அது) சொல்லைக்கடந்து நின்ற பழமையான தன்மையுடையதாம். ஆதி குணம் ஒன்றும் இல்லான்-(இன்னும் அவன்) முதலும் குணவிசேஷமும் என்னுமிவற்றில் ஒன்றுமில்லாதவன்; அந்தம் இல்லான்-இறுதியில்லாதவன். வரக் கூவாய்-(அந்தப் பெருமானை) வரும்படி அழைப்பாயாக.

O Kuyil sweet of song! if You seek to know our Lord, both his feet or planted beneath the seven nether worlds : to speak of His bright jewelled crown, it is glory old that surpasses speech : Neither beginning nor qualities, nor end has He : call him to come.

(க-து) இனிய கீதம்பாடும் குயிலே! கீழேழு லோகத்துக் கப்பாற்பட்ட திருவடியையும் வார்த்தையால் இன்னதென்று சொல்ல முடியாத திருமுடியையும் உடையவராய் ஆதியந்தமும் குணவிசேஷமும் இல்லாதவரான எம்பெருமான் என்பால் வருவாராகச் சென்றழையாய் என்பதாம்.

கீதம் - Music, melody. குயில்-The Indian cuckoo. தான் தூதனுப்புகிற குயிலுக்குத் தன் நாயகனுடைய அடிமுடி முதலான அடையாளங்களைச் சொல்லுவதாக பகவானுடைய ஸ்வரூப ரூபகுணங்களைச் சொல்லுகிறார் இந்தப் பாசுரங்கள்பத்திலும். கேட்டி-கேள் + த் + இ: த்-எழுத்துப்பேறு, இ-முன்னிலை யொருமைவிகுதி. ஆசிரியர் தம் இனத்தார் முதலாயினாரை உடன்தழுவி **எங்கள் பெருமான்** என்றதாக அறிக. பெருமான் என்பதில் மான் விகுதி சிறப்புணர்த்துவது: சேரமான், கோமான் என்பன முதலியவற்றிற்போல. தாயினுடைய பல அவயவங்களும் இருக்கச் சிசுவானது பாலுண்ணும் ஸ்தனத்திலே வாய் வைக்குமாறுபோலே, ஆசிரியர் தாம் உய்தற்கு உபாயமான திரு

வடிகளை கருத்தாய் அவற்றின் ஸ்வரூபத்தை முதலில் எடுத்துப் பேசுகிறார். பாதமிரண்டு - பண்புத்தொகை: உம் - முற்று. பாதமிரண்டும் - எழுவாய், அப்பால்-பெயர்ப் பயனிலையாகக் கொள்க. பாதம்-பாதாளம்-சோதி (ஜோதி)-ஆதி-குணம்-அந்தம் என்பன வடசொற்கள். கூவாய்-கூ+வ்+ஆய். சொல் இறந்து நின்ற தொன்மை - இத்தனை காலத்துக்குமுற்பட்ட பழமையுடைய தென்று சொற்களால் சொல்லலாகாதது.

இந்தப் பாசுரத்தில் சிவபெருமானுடைய வரம்பிலாத விசுவரூபம் உரைத்திருக்கிறது. (சொல்லிறந்துநின்ற) தொன்மையாதி குணமொன்றுமில்லாதவன் என்பதை ஒரு தொடராகக்கொண்டு தொன்மை முதலிய குணம் சிறிதுமில்லாதவன் எனப் பொருள்கூறலும் பொருந்தும்.

2. (இ-ள்) குயிலே - குயில் பக்ஷியே! ஏர்தரும் - அழகைச்செய்யும், ஏழ் உலகு - ஏழுலகத்தவரும், ஏத்த - துதிக்க, எ உருவும்-எல்லாவுருவமும், தன் உருவாய் - தன் உருவமாகி; ஆர்கலி - கடல், சூழ் - சூழ்ந்த, தென் - அழகுபொருந்திய, இலங்கை-இலங்கைத்தீவிலுள்ள, அழகு அமர்-அழகமைந்த, வண்டோதரிக்கு - (இராவணன் மனைவியான) வண்டோதரிக்கு, பேரருள் - தன் பெருங்கருணையால், இன்பம் அளித்த - இன்பத்தைக்கொடுத்த, பெருந்துறை - திருப்பெருந்துறையிலே, மேய - எழுந்தருளியிருக்கின்ற, பிரானை - பெருமானை: தென் - அழகிய, பாண்டிநாடனை - பாண்டிநாட்டையுடையவனை; சீரிய-சிறந்த, வாயால் - உன் வாயால், கூவாய் - அழைப்பாயாக.

O Kuyil! call hither with your excellent voice the southern Pandi-chief, the Lord dwelling in Perun-turai who blessed with abounding grace the beautiful Vandothari of the southern sea-girt Lanka, the Lord who assumes all forms so as to be extolled by the fair seven worlds.

(க-து) ஏழுலகமுந் துதிக்ும்படி, உலகில் உருவெல்லாம் தன்னுருவமேயாய், இலங்கைமன்னனுன இராவணனுடைய மனைவி வண்டோதரிக்குத் தன் பெருங் கருணையால் இன்பங்கொடுத்துத் திருப்பெருந்துறையில் எழுந்தருளிப் பாண்டிவளநாட்டுக் குடையவனுன எம்பெருமானை என்பால் வரும்படி அழையாய் ஓ குயிற்பக்ஷியே என்பதாம்.

திருப்பெருந்துறை என்பது ஆவுடையார்க்கோவில் என வழங்குகின்றது. சிவபெருமான் குருமூர்த்தமாக எழுந்தருளி ஸ்ரீ மாணிக்கவாசகரை அடிமை கொண்டு தீக்ஷை செய்த திருப்பதி. சோழநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ளது. வண்டோதரி-வடமொழியில் மண்டோதரி என வழங்கும்; மந்தோதரி என்றும் வழங்குவதாகத் தெரிகிறது. ஏழுலகு-ஏழுலகும் என்ற முற்றும்மை தொகுத்தலாய் வந்தது. உலகு - ஆகு பெயராய் உயிர்களைக் குறிக்கின்றது. ஆர்கலி - நிறைவாகிய ஓசையுடையது; பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. தென்னிலங்கை-தெற்கிலுள்ளதான இலங்கையென்று கூறினும் பொருந்தும்: தென்பாண்டி என்பதற்கும் அங்ஙனமே. இலங்கை-லங்கா என்கிற வடசொல், மேய-மேவிய என்பதன் மரூஉ. பிரான் fem-பிராட்டி. சீரிய=சீர்+இ+ய்+அ: இ-சாரியை; குறிப்புப் பெயரெச்சம். நாடனை-நாடன் - இ-டியாகப் பிறந்த பெயர்.

இந்தப் பாசுரத்தில் வண்டோதரிக் கருளின படியைக் கூறினார்.

சிவபெருமானைத் தென்பாண்டி நாடன் என்றது.

உமாதேவியார் தடாதகைப்பிராட்டியாரென்னும் திருநாமம் பூண்டு மதுராபுரியிலவதரித்து பாண்டிநாட்டை அரசபுரியுங் காலத்தில், இறைவ மணப்

பருவத்தைத் தாயாகிய காஞ்சனமாலை கண்டு "இன்னும் நமது திருமகளுக்கு மணப்பேறு வாய்க்கவில்லையே" யென்று இரங்க பிராட்டியார் "தாயே! நிறை வேறுங்காலம் வந்தால்முடியும், நீ மனம் வருந்தேல் நான் உலகெங்கும்போய் திக்குவிஜயஞ்செய்து வெற்றியடைந்து வருகின்றேனெ"ன்று சொல்லிப்புறப் பட்டு, யாவரையும் வென்று திறைபெற்றுக் கைலையைச் சூழ்ந்து ஆரவாரிக்க, அதை நந்திதேவரறிந்து கணங்களோடு வந்து போர்புரிந்து வெல்லமாட்டா து, நாணிச் சிவபெருமானுக்கறிவிக்க அவர் போர்க்களத்தில் நிற்கும் பிராட்டி யாரைக்கண்டனர். பிராட்டியும்சிவனை நோக்கினர், உடனே நாணங்கொண்டு நின்றனள்." இதைக்கண்டசுமதியென்னும்மந்திரிபிராட்டியைநோக்கி'இவரேநி ன் மணவாளர் என்றுசொல்ல சிவபிரானும்பிராட்டியைநோக்கி,பெண்ணே'நீ திக்கு விஜயஞ்செய்யப்புறப்பட்டது முதல் நாம் நின்னைவிடாதுபின்பற்றிவந் தோம்;சோமவாரத்தில் நின்னை மணஞ்செய்யவருவோம்; நீ நின்நகர்க்குப்போ தி"என்றுகட்டளையிட,பிராட்டியும் அங்ஙனேசென்றனள். சிவபிரான் கூறியரு ளியவாறேசோமவாரம்வந்துபிராட்டியாரைமணம்புரிந்து சோமசுந்தரபாண் டியனென்னும் திருநாமம்பூண்டு பாண்டிநாட்டை அரசு புரிந்தனர் என்பதாம்.

3. (இ-ள்) நீல உருவின்-நீலநிறமான உருவத்தையுடைய, குயிலே-குயிற் பறவையே! நீள் - நீண்ட, மணி - இரத்தினமயமான, மாடம் - மாளிகைகள், நிலாவும் - நிலைபெற்றிருக்கும், கோலம் - ஒப்பனை யழகுடனே, அழகின் - சுவபாவமான அழகினுளும், திகழும் - விளங்கும், கொடிமங்கை - பூங்கொடி போலும் உமாதேவியார், உள் உறை - உள்ளே நித்தியவாசம் செய்வதான, கோயில் - திருவாலயத்தையுடையதாய்; பெரிதும் சாலம் இனிய - குணவிசே ஷத்தால் ரமணீயமான, திருவுத்தரகோசமங்கை - திருவுத்தரகோச மங்கை யென்னும் திவ்யக்ஷேத்திரத்தில், ஞாலம் விளங்க - உலகம் திருந்தும்படி யாக, இருந்த - எழுந்தருளியிருந்த, நாயகனை - தலைவனை, வர - (என்பால்) வரும்படி, கூவாய் - அழைப்பாயாக.

O Kuyil with form of azure hue! call hither the Lord, by whom the world grows bright, who dwells in the most sacred Tiru Uthara Kosa mangai having large mansions decked with gems and a temple, the perpetual abode of the beautiful creeper-like Parvati.

(க-து) நீனிறக்குயிலே! திருவுத்தரகோசமங்கை யென்னும் திவ்யக்ஷேத் திரம் பெரிய மாளிகைகளையுடையது, அழகால் விளங்கும் பூங்கொடிபோன்ற உமாதேவியார் நித்திய வாசம் பண்ணும்படியான திருவாலயத்தையுடையது, குணவிசேஷத்தால் இன்பந்தருவது: உலகம் உய்யும்பொருட்டு அப்பதியில் வீற்றிருக்கும் எம்பெருமானை என்பால் வர அழைப்பாய் என்பதாம்.

திருஉத்தரகோசமங்கை - பாண்டிநாட்டில் இராமநாதபுரத்துக்குச் சமீ பத்தில் உள்ளது. மாணிக்கவாசகருக்கு இங்கே சிவபெருமான் திருமேனி தரிசனை காட்டி அவரால் திருவாசகத்தில் நீத்தல் விண்ணப்பமுதலிய பல பாடல்களைப் பெற்றருளிய தலம்.

நிலாவும் - நிலா + வ் + உம்: நிலா - பகுதி. திருவிருத்தத்தில் "........ நிலாகின்றதே" என வருதலுங்காண்க. கோலவழகு - மீமிசையாக மிக்க அழகு என்றனுமாம். கொடிமங்கை - பூங்கொடிபோலு மங்கையர் என்றும் திருமகள் என்றும் கொள்வதும் பொருந்தும். மாடநிலாவும உத்தரகோச மங்கையின் சாலம் இனிய கோயிலில் கொடிமங்கையான உமாதேவியின் உள் ளுறை (மனத்தில்எழுந்தருளியிருக்கும்) நாயகனை வரக்கூவாய் எனப் பொ ருள் கொள்வதும் அமையும். கோயில் - கோ + இல்: கோயில எனப் புண

கும்: இதில் வகரத்துக்கு யகரம்போலி: இங்ஙனமே பொதுவில் என்பது பொதியில் என மருவி வருவதுகாண்க. கோயில் என்பது முதலில் அரசன் இருக்கும் வீடு என்று பொருளாய்ப் பின் தேவாலயத்தை உணர்த்துவதாயிற்று. சீலம் - ஸ்ரீலம் வடமொழி.

4. (இ-ள்) தேன் பழம் சோலை-(கனிவாலே தேன் (சொரியும்) கனிகளை உடைய சோலைகளில், பயிலும் - வர்த்திக்கிற, சிறு குயிலே - சிறிய கோகிலமே! நீ - நீ, இது - இவ்வார்த்தையை, கேள் - கேட்பாயாக. வான் பழித்து - விண்ணுலகத்தை வெறுத்து, இ மண் புகுந்து-இந்த நிலவுலகிலே எழுந்தருளி, மனிதரை - (உய்யும் வகையறியாத) மனிதரை, ஆட்கொண்ட - (உய்யும்படி) அடிமைகொண்ட, வள்ளல் - மகோபகாரனாய்; ஊன் - (மாம்சஸம்பந்தமான) தேகத்தை, பழித்து - வெறுத்து, உள்ளம் - மனத்தில், புகுந்து - பிரவேசித்து, என் உணர்வது ஆய - என் அறிவினுருவமாகிய, ஒருத்தன் - ஏக (ஒப்பில்லாதவ)னாய்; மான் பழித்து ஆண்ட - மானின் நோக்கத்தைப் பழிகண்டு அடிமைகொண்ட, மெல்நோக்கி - மெல்லிய நோக்கத்தையுடையவளான உமாதேவியின், மணாளனை - மணவாளனான எம்பெருமானை, வர - (என்பால்) வரும்படி, நீ கூவாய் - நீ சென்று அழைப்பாயாக.

Hear this, O Young Kuyil frequenting the groves yeilding fruits dripping honey! The Gracious one who leaving the heavens, entered this earth and made men His own! The One who, despising flesh, entered my soul and fills my thoughts; the Bridegroom of Her whose soft eyes gained victory over the fawn;—go hither call

(க-து) சிறியகுயிலே! உய்யலாமுபாயமறியாத மனிதரை உய்விக்குமாறு விண்ணுலகைவிட்டுப் பூவுலகிற் புகுந்தவனும், என்மனத்துட் பிரவேசித்து அறிவுருவான ஏகனும்; பார்வதி தேவியின் மணவாளனுமான பெருமானை என்பால் அழையாய் என்பதாம்.

தம்மைப் பெருமான் வலியவந்து ஆட்கொண்ட படியை உரைக்கின்றனர் இப்பாசுரத்தில். தேன் பழச்சோலை - தேனும் பழமும் சொரிகின்ற சோலை என்றுஞ் சொல்லலாம். பயிலுதல் - சஞ்சரித்தல். இது - இனி யுரைப்பதைச் சுட்டுகின்றது. (Like the anticipative use of it in English). தன் அருள்வானில் பயன்படுதலில்லையாதலால் "வான்பழித்து" என்றார். வள்ளல்- உதாரகுணமுள்ளவன். ஊன் என்பதில் ன் சாரியை: இதனை ஊந என்கிற வடசொல் என்பாருமுளர். என் உணர்வாய - உணர்வோடு ஒன்றுபட்டவனாய், அறிவோடு அபேதமான. உணர்வது என்பதில் அது - அசை. ஒருத்தன் (ஒப்பற்றவன்)- பெண்பால் ஒருத்தி: ஒருவன் என்பது மரபன்று. மான் கண்ணின் மருட்சியைக்காட்டிலும் மிக்க மருண்ட கண்ணையுடையாள் என்பார் "மான் பழித்தாண்ட மென்னோக்கி" என்றார். மணாளன்-மணவாளன் என்பது. மணவாட்டி - மணாட்டி எனப் பெண்பாலில் வரும்.

5. (இ-ள்) சுந்தரத்து இன்பம் குயிலே-அழகினால் ஆனந்தந்தர வல்லதான குயிலே! அந்தரத்தேநின்று - பரமாகாசத்திலே இருந்து, இங்கு இழிந்து - இவ்வுலகின்கண் அருள் வடிவமாய் இறங்கி, சுடர்சூழ் ஞாயிறுபோல - (ஆகாயத்திலிருந்தபடியே தன் கிரணங்களால் உலகில் இருளைப்போக்கும்) பிரகாசஞ்சூழ்ந்த சூரியனைப்போலே, அடியவர் ஆசை - தன் அடியார்களது ஆசையாகிய அந்தகாரத்தை, அறுப்பான் - நீக்குபவனாய், முந்து நடுவும் முடிவும் - முதலும் இடையும் இறுதியும், ஆகிய மூவர் - ஆன திரிமூர்த்திகளும், அறியா-

அறியாத, சிந்துரச் சேவடியானை - சிவந்த அழகிய திருவடிகளையுடையவனை; சேவகனை - ஐயனை, வர - என்னிடம் வருமாறு, கூவாய் - சென்றழைப்பாயாக.

Kuyil, whose beauty is delight! The Lord who, like the sun enshrouded in radiant beams, coming down from heaven cuts off the worldly ties of his votaries, the Lord whose bright feet of crimson even the Three know not—the Great Lord call to come.

(கு-து) சூரியன் ஆகாசத்திலிருந்தவாறே தன்கிரணங்களால் பூமியில் அந்தகாரத்தை அகற்றுமாறுபோலே, பரமாகாசத்திலே இருந்துகொண்டே தன் அருளால் அடியார்களது பந்தமாகிய அந்தகாரத்தை ஒழிப்பவனாய், திரிமூர்த்திகளுங் கண்டறியாத திருவடிகளையுடையவனை ஐயனை ஓ குயிலே! சென்றழையாய் எனபதாம்.

சூழ் சுடர் ஞாயிறுபோல என்றதனால் இப்பெருமானும் அருட்சுடர் சூழ்ந்தவன் என்பது தோன்றும். இழிந்து - இழி - ப. ஆசை - மண்ணாசை - பெண்ணாசை - பொன்னாசை; வீடுவாயில் கன்று காலி மனை மக்கள் என்றாற்போன்ற பற்றுமாம். ஆகவே பாசபந்தம் என்பதாம். ஞாயிறு உவமானமாதலால், ஆசையை ஆசையாகிய அந்தகாரம் என்க. சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரத்தின் பொருட்டுத் தானே உண்டாக்கின பிரமா, விஷ்ணு, ருத்ரன் என்பவரும் அறியாத திருவடியென்பார் "மூந்து...சேவடி" என்றார். முந்து - முதனிலைத் தொழிலாகு பெயர் முதலிடத்தை உணர்த்துகின்றது; இது ஐகாரச்சாரியை பெற்று இப்பெயராய்க் காலத்தை உணர்த்திவருவதை 'முந்தைநாள்' என்பதனாலறிக. முந்து என்னும் பகுதி ஐகாரச்சாரியை பெற்றுப் பலர்பாற் பெயராய் முந்தையோர் என வருதலுங்காண்க; முந்து (opp) பிந்து;— (உ-ம்) "முந்தி வந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைத்ததாம்"; "பந்திக்கு முந்த வேண்டும் படைக்குப் பிந்தவேண்டும்". மூவர் என்பது மூவரும் என வரவேண்டுவதான முற்றும்மை தொகுத்தலாய் வந்தது; அது முற்றும்மை பெற்றுவரத்தக்க நியதியை "இனைத்தென்றறிபொருள் உலகினிலாப் பொருள், வினைப்படுத்துரைப்பின் உம்மை வேண்டும்" (ந - சூ - 399) என்பதனாலறிக. சிந்துரச் சேவடி - உவமைத்தொகை.

சேவடி - செம்மை + "அடி: ஈறுபோதல்" என்பதனால்மைகெட்டது. செம் + அடி: "ஆதிநீடல்" என்பதனால் முதலில் செ நீண்டது - சேம் + அடி: முன்னின்ற மெய்திரிதல் என்பதனால் ம்-வ் ஆயிற்று - சேவ் + அடி: "உடன்மேலுயிர் வந்தொன்றுவ தியல்பே" என்பதனால் வகரத்தின்மேல் வருமொழி அகரவுயிரேறிற்று சேவடி. பகவானை சேவகன் என்றது தலைவன் - வீரன் என்றபொருள்பற்றி. கம்பரும் இங்ஙனமே ஸ்ரீராமனை "மூவெழு முறைமையெங்குலங்கள் முற்றுற, பூவெழுமழுவினாற் பொருந்து போக்கிய, சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற், காவிவ்வுலகமீ தறைவனன்றோரோ" எனவும், "ஏறு சேவகனிரணடிநெடிரண்டு கணையால், வேறுவேறு துணி செய்து விழுத்து விசையால்" என்றும் பலவிடங்களிற் சேவகன் எனவழங்கியதைக் காண்க.

6. குயிலே! கோகழிநாதனைக் கூவாய் உனக்கு இன்பந்தருவன் என்றனுவயித்துக்கொள்க.

(இ-ள்) குயிலே - குயிலே! ஏழுலகும் - சப்தலோகங்களையும், முழுதாளி - முற்றும் ஆள்பவன்; அன்பன் - எல்லாவுயிர்களிடத்தும் அன்புடையவன்; அமுது அளித்து ஊறும் ஆனந்தன் - அமுதந்தந்து ஊறுவதான ஆனந்

தமயமானவன் : வான வந்த தேவன் - விண்ணினின்றும் எழுந்தருளிவந்த தேவன் : நன் பொன்மணி - நல்ல பொன்னும் மணியும் என்பவற்றின், சுவடு ஒத்த - தழும்புபோன்ற புள்ளிகள் உள்ள, நற்பரிமேல் - உத்தமசாதிக்குதிரையின்மேல், வருவானை - (ராவுத்தனாக) ஏறிவருபவனை, கோகழி நாதனை - கோகழி என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் தலைவனை, கொம்பில் - மரக்கிளையிலிருந்து, மிழற்றும் - இசைபாடுகின்ற, குயிலே - குயிலே! கூவாய் - அழையாய். இன்பம் தருவன் - உனக்கு நான் களிப்புத்தருவதான காரியஞ் செய்வேன்.

Kuyil! I will please you, the Lord who rules all the seven worlds, the Loving one, the Supreme Being who ever affords ambrosia, the God who came from heaven, the Lord who came riding on a horse impressed with golden and jemlike spots, the Lord of Gokali, O Kuyil twittering on the branches of trees! call him to come.

(கு-து) எல்லா உலகுக்கும் இறைவனாய் ஆனந்த சுவரூபனாய் வான் வந்த தேவனாய் இராவுத்தன்போலே உத்தமலக்ஷணமுள்ள அசுவத்தின்மேல் ஏறிவந்தவனை கோகழிநாதனை என்பால்வரச் சென்றழையாய், ஒகுயிலே! நான் உனக்கு இன்பமான பரிசளிப்பேன் என்பதாம்.

கோகழிநாதன் எனக்கு இன்பம் தருவன் குயிலே அவனைச்சென்றழையாய் என்றும் பொருள் கொள்ளலாம். கோகழிநாதனைக்கூவாய், அங்ஙனம் நீசெய்த உபகாரத்துக்கு அவன் உனக்கு இன்ப[illegible]தருவதான பரிசளிப்பன், அல்லது உனக்குப் பேரின்பந்தருவான் என்றும் [illegible]ள்ளலாம்.

கோகழி - ஓர் சிவஸ்தலம் - திருஆவடுதுறை [illegible] திருப்பெருந்துறை கோமுத்தி என்றும் வழங்கும். சமயாசாரியர்கள் மூவராலும் [illegible] பெற்றதலம்.

பரிமேல் சிவபெருமான் வந்தவாலாற்றை முன்னுரைத்த ஆசிரியர் சரித்திரத்தில் காண்க.

ஆளி.—என்பதில் இகரம் ஆண்பால் விகுதி; வில்லாளி-வில்லி; கூனி என்பதல் பெண்பாலாயும், செவிலி, அறிவிலி என்பவற்றில் பொதுவாயும் வருவதறிக. வடமொழிக்கும் பொதுவாக பாவி (பாவஞ்செய்தவன் - மானி (மானம் உடையவன்) என இவ்விகுதிபெற்றுத் தமிழில் வழங்குவதறிக. அமுது - அம்ருதம் என்னும் வடமொழி அமிர்தம் - அமுதம் - அமுது எனத்தமிழில் சிதைந்துவழங்கும். இப்படி வழங்குவன வடமொழித்தற்பவம் எனப்படும். கமலம் என்றற்போல வடமொழியில் வழங்குமாறே தமிழில் வழங்கிவருவன வடமொழித் தற்சமம் எனப்படும். ஆனந்தன் - ஆநந்தம் என்னும் வடசொல்லடியாகப் பிறந்த ஆண்பாற்பெயர். வான்வந்த - ஐந்தாம் வேற்றுமை நீங்கற்பொருள். தேவன் - தேவ: என்ற வடசொல். நற்பரி - சுழிசுத்தம் முதலான நல்ல இலக்ஷணங்களுடைய குதிரை. கொம்பின் மிழற்றும் எனக்குயிலை விசேஷித்தது அதன் சாதுர்த்தன்மையைக் குறிக்க. மிழற்றும் - மிழற்று - பகுதி: 'இழு மென்மொழி (திருந்தமில்லாமல் பேசுதல்) என்னும் வடமொழிச்சிதை யென்பர். நாதன் - நாத: என்னும் வடசொல்.

7. குயிலே அழகனை...சீர்ப்புயங்கன் வரக்கூவாய், உன்னை உகப்பன், உன்துணைத்தோழியு மாவன் என்றனுவயித்துக் கொள்க.

(இ-ள்) குயிலே - குயிலே! பொன்னை அழித்த - பொன்னை வென்ற, நன்மேனி - நல்லதிருமேனியானும், புகழின் - கீர்த்தியானும், திகழும் - விளங்

காகின்ற, அழகன் - அழகன்; மன்னன் - எவ்வுலகுக்குமிறைவன்; பரிமிசை - குதிரைமேல், வந்த - ஏறிவந்த, வள்ளல் - வள்ளல்; பெருந்துறை - திருப்பெருந்துறையில், மேய - எழுந்தருளிய, தென்னவன் - பாண்டியன்; சேரலன் - சேரன்; சோழன் - சோழன் ஆன, சீர் - சிறப்பமைந்த, புயங்கன் - புயங்கமென்னுங் கூத்தையுடையவன், வர - என்பால்வர, கூவாய் - அழையாய். (இந்த உபகாரத்தால்), உன்னை உகப்பன் - உன்னை உகந்துகொண்டாடுவேன். உன் துணை தோழியும் ஆவன் - உனக்கு (உசாத்) துணையான தோழியுமாவேன்.

Kuyil! I will joy in you, I will be your comrade by your side: the Lord whose complexion derides gold, who shines in glory bright, king who came riding on a horse, the Pandiyan who dwells in Peruntarai the Seran, Solan, the great Buyangan, call to come.

(க-து) ஓ குயிலே! உன்னை உகந்துகொண்டாடுவேன், உனக்குத்தோழியாய்த் துணையுமாவேன்: நீ எனக்கு ஒரு உபகாரம் பண்ணவேண்டும். என்ன வெனின் அழகனும் மன்னனும் பெருந்துறைப் பெருமானுமான இறைவனை அழைப்பாய் என்பதாம்.

உகப்பன் - தன்மையொருமை எதிர்காலவினைமுற்று; ஆவன் என்பதும் அம்முற்று. உன் துணைத் தோழியுமாவன் - பறவைச்சாதி என்றிகழாமல் உனக்கு நான் உயிர்த்துணையான தோழியாவேன், உசாத்துணையான தோழியாவேன்; உம் - குயிலை உயர்த்துவதாகக் கொள்ளின் இழிவுசிறப்பும்மாம். பொன்னையழித்த மேனி என்பது பொன்னைக்காட்டிலும் மிக்க ஒளியுள்ள மேனி என்பதாம். இராசாக்களெல்லாம் பரம சிவாம்சமாகக் கருதுவது இந்துமதக்கொள்கை யாதலால் தமிழ்நாட்டு மூவேந்தரையும் சிவாம்சமாகக் கூறினார். சிவபெருமான் சோமசுந்தர பாண்டியனாக அவதரித்தவராதலால் பாண்டியனை முன்வைத்துக்கூறினார். சேரலன் என்பது சேரன் - சேரமண்டலத்தரசன். சிலப்பதிகாரமுதலிய பழங்காப்பியங்களிலும் சேரலன் - சேரன் என இவ்விரண்டு சொல்லும் வழங்கியிருக்கிறது. தமிழ்நாட்டுக்குத் தலைவனுடைமையை இப்பாசுரத்தில் உரைத்தார். புயங்கன் (புயங்கம் - பாம்பு) புயங்கவிருத்தம் செய்பவன்; அரவாபரணன் எனினும் பொருந்தும்.

8. (இ-ள்) குயில் பிள்ளாய் - குயிற் பிள்ளையே! நீ இங்கே வா - நீ இவ்விடம் வருவாயாக: மாலொடு - திருமாலும், நான்முகன் - பிரமனும், தேடி - (முறையே அடியையும் முடியையும்) தேடிப்பார்த்தும் (அவற்றைக் காணப் பெருமையாலே), ஓவி - அதேசகிக்கொழிலை விட்டு நீங்கி, அவர் - அவ்விருவரும், உன்னி நிற்ப - தியானித்து நின்றனராக, ஒள் தழல் - ஒளிய அக்கினி, விண்பிளந்து ஓங்கி - ஆகாயத்தைப் பிளந்து மேலோங்கி, மேவி - பொருந்தி, அன்று - அக்காலத்தில், சொல் கடந்து - சொல்லெல்லாம் கடந்து, விரிசடை ஆய - விரிந்த சடையையுடையவராய், நின்ற - நின்றருளிய, மெய்யன் - திருமேனியுடையவனும், தாவிய சீர் - தாவுதலையுடைய, பரிப்பாகன் - குதிரைக்குப் பாகனுமானவனும், தாழ்சடையோன் - நீண்ட சடாபாரத்தையுடைய பெருமான், வர - என்பால்வர, கூவாய் - அழைப்பாய்.

O Young Kuyil! come here: the Lord who assumed the form of blazing fire which, splitting the heavens, rose beyond all words while Vishnu and Brahma first sought and then ceased to seek, and at last stood pondering before him: the Groom who came riding on the prancing steed, the Lord with flowing lock, call him to come.

(க-து) குயிற் பிள்ளாய்! இப்படி வா-பிரமவிஷ்ணுக்கள் முடியுமடியுமாகத்தேடியுங்காணாது சோர்ந்து நின்றனராக, அவர்களெதிரிலே தழல் தம்பம்போலே சோதிமயமாய் நின்றவனும் உமைப்பாகனுமான ஜடாதரனைச் சென்றழையாய் என்பதாம்.

குயிற்பிள்ளை-கிளிப்பிள்ளை என்பதுபோலப் பண்புத்தொகை. பிள்ளைகள் என்பது இளமை யுணர்த்தும் மரபுப்பெயர்களிலொன்று. இது பறப்பன வற்றுள்ளும் தவழ்வனவற்றுள்ளும் இளமைப் பெயர்க்கு உரியது. (உ-ம்) அணிற்பிள்ளை, கிளிப்பிள்ளை. பிள்ளை என்பது விளியேற்றலால் பிள்ளாய் என ஈறு திரிந்தது.

"மாலோடு நான்முகன்...மெய்யன்" சரித்திரம் - பிரமாவும் விஷ்ணுவும் தங்களில் எவர் சிறந்தவர் என்பதைக் குறித்து விவாதப்பட்டுப் பெருஞ் சமர் செய்திருக்கையில், சிவபெருமான் அண்டாண்டங்களெல்லாம் அளாவிய அக்கினி ஸ்தம்பாகாரமாக அவர்கள் எதிரில் தோன்றினர். பிரமா அன்னப்பறவை உருவங்கொண்டு அவ்வக்கினி ஸ்தம்பத்தின் முடியைத் தேடிப் போக, விஷ்ணு வராகவடிவத்துடன் அத்தம்பத்தின் அடியைத் தேடிச் சென்று பலகாலமாகியும் இருவரும் தாம் தாம் தேடிச்சென்றதைக் காணமல் வந்து சிவபெருமானை வணங்கிப் பேறுபெற்றனர் என்பதாம். இதனை அருணாசல புராணத்தில் விரிவாகக் கண்டுகொள்க. ஒவி - ஒவு - பகு இதனடியாக உடன்பாட்டில் ஒவுதல் என்றும், எதிர்மறையில் ஒவாமை என்றும் தொழிற் பெயர்கள் வழங்கும். விரிசடை - வினைத்தொகை.

௯. (இ-ள்) கடிபொழில் - பரிமளம் வீசுகின்ற சோலையிலே, வாழும் - வாழ்வதான, கார் உடை பொன் - கருநிறத்தையுடைய பொன்போல், திகழ் - விளங்கும், மேனி - நிறத்தையுடைய, குயிலே - குயிலே! சீர் உடை - சிறப்பினையுடைய, செங்கமலத்தின் - செந்தாமரை மலர்போல, திகழ் - விளங்கா நின்ற, உரு ஆகிய - திருமேனியையுடைய, செல்வன் - செல்வனை; பார் இடை - நிலவுலகத்தில், பாதங்கள் காட்டி - தன் திருவடிகளைக் காட்டி, பாசம் - பாசபந்தத்தை, அறுத்து - நீக்கி, என்னை ஆண்ட - என்னை ஆட்கொண்ட, ஆர் உடை - ஆத்திமாலையையுடைய, அம்பொனின் மேனி - அழகிய பொன்போலு நிறத்தையுடைய, அமுதினை - அமுதம்போல்வானை, நீ - நீ, வர - என்பால் வரும்படி, கூவாய் - அழையாய்

Kuyil living in fragrant groves with dark form gleaming with gold! the Blest whose form is bright as the splendour of the red lotus, the Ambrosial one of golden from wearing Tiruvathi garlands who made me his man setting me free from all bonds by showing his feet on earth, go call to come.

(க-து) கருநிறப்பொன்போற் காணும் மேனியையுடைய குயிலே! செந்தாமரைபோன்று சிவந்த மேனியுடைய செல்வனும், தன் திருவடியைக் காட்டி என்னைப் பாசபந்த மறுத்து ஆண்டருளின பொன் மேனியனுமான பெருமானை என்பால் வரும்படி அழையாய் என்பதாம்.

காருடைப் பொன் - உலகிலில்லாத பொருளை உவமானங் காட்டுதலால் இல்பொருளுவமை. கார் - கருமை என்பதன் திரிபு. கடி - பலபொருள் சொல்லாகிய உரிச்சொல்: "கடி யென்கிளவி காப்பே கூர்மை, விரைவே விளக்க மச்சஞ் சிறப்பே, விரைவே மிகுதி புதுமை யார்த்தல், வரைவே மன்றல் கரி

ப்பிணும்'' (ந-சூ-457). இங்கே வினை (- வாசனை - பரியளம்) என்னும் பொருளில் வந்தது. கடிபொழில் வாழுங் குயிலே என்பது சாதித்தன்மை. வெண்டாமரையை நீக்கச் செங்கமலம் என்றார். பார் - பூமி: பருமையையுடையது எனக்காரணப்பெயர் என்பர். ஆருடை என்பதற்கு (ஆர் - அருமை) அருமையுடைய என்றுமாம். அமுதினை - அமுது - உவமையாகு பெயர்.

10. (இ-ள்) கொந்து - பூங்கொத்துகள், அணவும் - பொருந்திய, பொழில் - பெருமைபொருந்திய, சோலை - சோலையில், கூவும் குயிலே - கூவிப்பாடுகின்ற குயிலே! நீ இது கேள் - நீ இந்த வார்த்தையைக் கேட்பாயாக:— இங்கே அந்தணனாகி வந்து - இவ்வுலகில் பிராமண உருவத்துடன் வந்து, அழகியசேவடி - தனது அழகிய திருவடிகளை, காட்டி - காண்பித்து, எம்தமராம் இவன் - நமது அன்பரில் ஒருவனாவன் இவன், என்று - என்று திருவுளம் பற்றி, இங்கு - இவ்விடத்தில், என்னையும் - என்னையும், ஆட்கொண்டருளும் - அடிமை கொண்டருளின, செந்தழல்போல் திருமேனி - செந்தீயைப்போன்ற திருமேனியையுடைய, தேவர்பிரான் - தேவர் பெருமான், வர - என்பால் வரும்படி, கூவாய் - அழையாய்.

Hear this O Kuyil twittering in the great flowery groves! the Lord of God of sacred form red as fire, who with the words 'this man is one of ours' made me his own, showing his beauteous holy feet in the form of a Brahman go bid him come.

(கு-து) சோலையிலிருந்து கீதம் பாடுங்குயிலே! அந்தண வேடமாய் இங்கு வந்து அழகிய சேவடியைக் காட்டி என்னையும் ஆட்கொண்ட அழல்போலுந் திருமேனியுடைய தேவர்பிரான் என்பால் வர அழையாய் என்பதாம்.

கொந்து - a cluster of flowers (பூங்) கொத்து. அணவும் (அணவு - சேர்) சேரும், பொருந்தும். பொழில் - பெருமையை உணர்த்தும் உரிச்சொல். கூடீம் - கூவும் என்பதில் வகரவுகரம் கெட்டு நின்றது. (ந-சூ-341). கேணீ=கேள்+நீ. "ணளமுன்டணவும்" என்பதனால் வருமொழி நகரம் ணகரமாயிற்று. "குறில் செறியா...ஈரிடத்தும் வருநத் திரிந்தபின் மாய்வும்" என்பதனால் நிலைமொழியீற்றுளகரம் கெட்டது. அந்தணன்=அம்+தண்+அன் =அழகிய தட்பத்தை உடையவன். "அந்தணரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்" என்றார் திருக்குறளில். தமர் - தம்மவர் - உறவினர். (தமன் - singular). எம்தமர் - எமது உறவினர்; எமது கூட்டத்தார்; எமது அன்பினர். என்னையும் - உம் இழிவு சிறப்பு.

இவன் என்பது ஒருமையாகவும், தமர் என்பது பன்மையாகவும் வருதலின் இவன் எம்தமரில் ஒருவன் ஆம் என விரித்து உரைத்துக்கொள்க. அங்ஙனம் விரித்துக்கொள்ளாவிடின் இலக்கணம் பொருந்தவில்லை

கோவிந்தசதகம்.

இந்நூலாசிரியர் பெயர் நாராயண பாரதியார் என்பதாம். இவர் பிறப்பிடம் தொண்டை நாட்டிலே வெண்மணி என்னும் ஊர். அதனால் இவர் வெண்மணி நாராயண பாரதியார் எனப்படுவர். பாரதி என்பது சரஸ்வதியின்பெயர்களில் ஒன்று. பாடவல்லவராய் சரஸ்வதி யமிசமுள்ள வித்துவான்களுக்கு ப் பாரதியென பட்டப்பெயராக அல்லது சிறப்புப்பெயராக வழங்குவதுண்டு. இவருக்கு ஆதரவாயிருந்த மணவாள நாராயணர் நிமித்தமாகத் திருவேங்கடத்தானை முன்னிலைப்படுத்தித் திருவேங்கடசதகம் பாடினவரும் இவ்வாசிரியரே. அங்ஙனம் பாடினதற்கு நிமித்தமென்னையெனின்:—அந்தப்பிரபுவினிடத்தில் இவர் நூறுபொன் கடன்வாங்கியிருந்தனரென்றும் அந்தக்கடனைத்தீர்க்கச் சக்தியில்லாமையால் திருவேங்கட சதகம் பாடிக்கொண்டுபோய் வாசித்துக்காட்டினரென்றும் அதுகண்டு சந்தோஷித்த அவ்வள்ளல் அந்தக்கடனைத்தள்ளிவிட்டதுமல்லாமல் நூறுபொன் பரிசளித்தாரென்றும் புலவர் கர்ணபரம்பரையில்வழங்கிவருகிறது. இந்தக் கோவிந்தசதகம் பாடினாரும் இவரே என்பது.

"மாவேழுங் கூப்பிடவந்தாயுலகவழக்கச் சொல்லில்
பாவேறவே யுனக்கோர் சதகஞ்சொலப்பாரதியேன்
நாவேற வாழ்த்துகின்றே னென்னைக் காத்தருளுன்முகற்குங்
கோவே சக்ராயுதனே யச்சுதானந்த கோவிந்தனே.

என்னுமிந்நூலின் தலைச்செய்யுளில் பாரதியேன் என்பதனால் விளங்கும். திருவேங்கட சதகத்தில்.--

"ஒருமலை யெடுத்துமழை காத்தவா மனதேவ ருபயபத சேவைதனையே உளங்கொண்டு வெண்மணியில் வாழுமுத்தாரைய னுதவுநா ராணபாரதி" என்றும்,

"தேங்குநீர் வயல்சூழும் வெண்மணியில்வாழுமுயர் செல்வன் முத்தாரையனுர், செழுந்த வுமுதித்த நாராயணபாரதித் திருவேங்கட சதகமே" என்றும் வருகின்ற அடிகளாலும் இவருடைய பிறப்பிடம்பெயர் தந்தைபெயர் என்பவைகள் விளங்குகின்றன.

இந்நூல் முன்னோர் கணக்காயர்கள் ஓதுவித்துவந்த நூல்களில் ஒன்று; செம்பாகமாய்ப் பொருளமைதியுடையதாய் ஒவ்வொருபாட்டிலும் ஒவ்வொரு பழமொழியைப் பொருத்தமாக அமைத்துப்பாடியது. இது கோவிந்தராசப்பெருமாளை முன்னிலைப்படுத்தி உரைத்தலால் கோவிந்த சதகம் என வழங்குவதாயிற்று. சதகமாவது:—

"வினையுமொருபொருண்மே லொருநூறு
தனையுட வுரைத்தல் சதகமென்ப"

என்றபடி கற்றுவல்லோரால் விரும்பும் அகப்பொருளொன்றின் மேலாவது புறப்பொருளொன்றின் மேலாவது கற்பித்து நூறு கவிபாடுதலாம். இதில் அறமும் பொருளுமாகிய புறப்பொருளையே மிகுவாய்க்கற்பித்துக் கூறுதலால், இது புறப்பொருளின்மேற் கற்பித்துப்பாடியதாகக் கொள்க. இதுபோல சைவத்தில் சாந்த லிங்கக்கவிராயர் என்பவர் பழமொழிகளை யமைத்துப்பாடிய சதகம் தண்டலையார் சதகமென்றும் பழமொழி விளக்கமென்றும் சொ

1. வேங்கை - புலி. காடெனா - காடுபோல. ஐ-உவமவுருபு. அடிக்கொரு தீங்குசெய்வார் - ஒவ்வொரு அடியளவிடத்திலும் ஒவ்வொருவராக இருந்து கெடுதிசெய்பவர். துரந்து - துரத்தி; அகற்றி, remove. ஒருமன்னர் - ஒப்பற்ற அரசர். படி - பூமி. உழுது - உழு-பகுதி; இதனடியாக உழுதால் உழுத, உழுதான், உழுவேன், உழவு என வினைவிகற்பங்கள்வரும்: (உழைப்பு என்பதில் - உழை -பகுதி. உழத்தல் என்பதில் உழ-வருத்து என்பது பகுதி). உழுதுபயிரிடும்குடி-farmer. சேதம்-நஷ்டம். அச்சுதம்-கெடுதலின்மை-அழிவின்மை; indestructibleness. ஆனந்தம்-பேரின்பம்: Supremedelight, bliss கோவிந்தன்-(கோ-மோக்ஷம், விந்-பெறுதல்) விஷ்ணு. அச்சுதானந்தகோவிந்தன் - அழியாதபேரின்பத்துக்குரியவனான கோவிந்தன் - Govinda of imperishable bliss.

செடிக்கொன்று விழுக்காடு புலிகள் குடிகொண்ட காடுபோலே அடியளவிடத்தில் ஒருவர் விழுக்காடு தீங்குசெய்யும் துஷ்டர்களையுடைய தேசமாக இருப்பின், அவர்களைத் துரத்திவிட்டு அரசாட்சிசெய்ய இந்தப் பூமியில் ஒப்பற்ற அரசர்கள் ஏற்பட்டால் உழுது பயிரிடுகின்ற குடிகளுக்கு யாதொரு நஷ்டமும் இல்லையாகும். அச்சுதானந்த கோவிந்தனே!

O Govinda of imperishable bliss! If there be great kings on this earth to rule, who would weed away mischief makers who swarm at the rate of one to every foot like a forest swelled with tigers—one to every plant, then there will be no loss to the farmers who cultivate the land.

“படிக்கரசனிருந்தால் குடிக்குச் சேதமில்லை” என்கிற பழமொழியை இந்தப்பாட்டில் ஏற்றபடி அமைத்திருக்கிறார். துஷ்டநிக்ரகம் சிஷ்டபரிபாலனம் பண்ண எந்தநாட்டிலும் அரசன்வேண்டும். ஆகவே அரசனிருந்தால் குடிகள் அச்சமில்லாமல் பயிர்த்தொழில் செய்து சீவிப்பர். “அரசன் அன்றறுக்கும்” ஆகையால் துஷ்டர்கள் பெருகாமல் அப்போதைக்கப்போது களைகட்டப்படுவார்கள். அதனால் பயிரிடுங் குடிகளுக்குச் சேதம்வராது. ஆயிரங்காக்கைக்கு ஒருகல்போலே, எத்தனை துஷ்டர்களையும் நீக்க ஒரு அரசன்போதும். குடிகளுடைய க்ஷேமத்துக்கு அரசன் இன்றியமையாதவன். அரசனில்லாத ஊரிலே குடியிருக்கமுடியாது என்பதைச் சொல்லிற்று இந்தப்பாட்டு.

இச்செய்யுளின் கருத்து “What watch the king keeps to maintain the peace, whose hours the peasant enjoys” என்னும் ஷேக்ஸ்பியர் வாக்கிலும் நன்குவிளங்கும்.

2. கட்டாண்மை - (கட்டு - மிகுதி: ஆண்மை - வீரம்)-பேராண்மை-Bravery, superior heroism. இதுபோலவே கட்டு என்பது மிகுதிப்பொருளாய் கட்டழகு - கட்டிளமை, கட்டபூல் என்பனவற்றில் வருகிறதைக்காண்க. கட்டாண்மைவேந்தர் - பேராண்மையுடைய அரசர். கன்னத்தடி - கன்னத்தில் அடிக்கும் அடி: கன்னம் - cheeks. விடமுள் -விடம்+முள்=விஷமுள்ளகொடுக்கு, பிள்ளைப்பூச்சி - உழுவான் என்று வழங்கப்படும் ஒரு பூச்சி முள்-முள்போன்றகொடுக்கு-the sting (of a scorpion). சுருக்கென-கடுப்பின் குறிப்பு.

இந்தப்பாட்டில் அமைத்த பழமொழியாவது “கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி” என்பதாம். அதிகாரஸ்தானத்தில் இருப்பவர்கள் தங்கள் சுவரூபத்தைக் காட்டினால்தான் கீழிருப்பவர்கள் அதிகாரத்துக்கு அஞ்சி நடப்பர், இல்லாவிட்டால் வைப்பர் என்பது இந்தப் பழமொழியின் கருத்து.

O Govinda of imperishable bliss! those who do not consider the greatness of brave kings would not obey until they are beaten on their cheeks: if it sting severely, it is a scorpion; if not it is only a harmless gryllus. (We call things good or bad according to their effect on us)

கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி என்பது பழமொழி. வீரரான அரசர் பெருமையைப் பெரிதாக எண்ணாதவர்கள் கன்னத்தில் அடிபட்டாலல்லாமல் வணங்கமாட்டார்கள். முன்பாட்டில் அரசருடைய இன்றியமையாமையைச் சொல்லினார். இங்கே அவ்வரசர் பெருமையைச்சொல்லுகின்றார். குடிகள் இராச விசுவாசமுடையவர்களாய் அமைந்து நடக்க வேண்டும். அப்படி அமைந்து நடவாதவரைச் சிக்ஷிக்கவேண்டும். அரசனானவன் அடங்காத குடிகளைத் தயை தாக்ஷணியமில்லாமல் தண்டிக்கவேண்டும். "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்,களைகட்டதனொடு நேர்" கொட்டாததேளைப் பிள்ளைப்பூச்சி என்றிகழ்வதுபோல, தண்டனைவிதிக்காத அரசனைக் கேவலர்கள் அஞ்சார் என்பதாம். இந்தப் பழமொழியின் கருத்து இங்கிலீஷில் "Of small account is a fly, till it gets into your eye" என்னும் பழமொழியோடு ஒத்திருக்கிறது.

3. கேணி - கிணறு: ஆவு. மணற்கேணி - மணலான பூமியில் எடுத்த கிணறு. ஊறும்-சுரக்கும். அடுத்தாரை வாழ்விக்கும் செல்வம்-தான்சென்று சேர்ந்தவர்களுக்கு நல்ல வாழ்வைத்தருவதான செல்வம்.

அச்சுதானந்த கோவிந்தனே! மணற்கேணியை (மேன்மேலும் தோண்டி) எடுத்தாலும் தண்ணீர் ஊறும், (அதனை) இறைத்தாலும் தண்ணீர் (மேன்மேலும்) ஊறும், (அது சுரந்துகொண்டிருக்கும்போது) இடைநடுவே தடுத்தால் (தண்ணீர் வருவது) தடைபடுமோ. அதுபோல் அடுத்தாரை வாழ்விக்கும் செல்வமுண்டானவர் செம்பொன்னை (ஏழைகளுக்கு) அள்ளிக்கொடுத்தால் குறைவருமோ.

Though a well sunk in a sandy soil be sunk deeper, water flows; though the water in it be drawn out, water flows never the less! if it be prevented in the middle of its flow, would it stop. Similary, those, who have obtained wealth which increases one's prosperity,-will not be ruined by lavishing their gold on the indigent, O Govinda of imperishable bliss!

கொடுத்தால் குறைவருமோ என்னும் பழமொழியின் கருத்து "இட்டதில் ஒன்றுங்குறையாது" என்னும் "இட்டாருக்கு இட்டபலன்" என்னும் தமிழிலும், "Give and it shall be given unto you" என்னும் "Give and spend and god will send" என்னும் "Alms giving never made anyman poor" என்னும் The charitable give out at the door, and god puts in-at the window" என்னும் இங்கிலீஷிலும் வழங்குவது காண்க.

"தொட்டனைத்தூறு மணற்கேணி" எவ்வளவு தோண்டுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மணற்கேணி நன்றாகத் தண்ணீர் சுரந்துகொடுக்கும். நாம் ஏழைகளுக்கு எவ்வளவு கொடுக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமது செல்வம் பெருகும். ஏழைகளுக்குக் கொடுப்பதனால் நமக்கு ஒருகாலத்திலும் குறைவு வராது.

"Cast bread upon the waters: for thou shalt find it after many days" எனச்சுவிசேஷத்தில் உரைத்திருப்பதுங் காண்க.

4. (இ-ள்) அச்சுதானந்த கோவிந்தனே! எந்தாய் எனச்சென்று இரப்பவர்க்கு - என அப்பனே என்றுசொல்லிப்போய் யாசிக்கின்றவர்களுக்கு, ஈபவர்-கொடுப்போர், எ அளவுதந்தாலும்-எவ்வளவு கொஞ்சமாகக் கொடுத்தாலும், நல்லது - (கெடுதியில்லை) நன்மையேயாகும்: இகழ ஒண்ணாது- (கொஞ்சமாகக் கொடுத்தார்களே யென்று) இகழ்ச்சி செய்தலாகாது: எங்கும் சஞ்சரித்து வந்தால்-பல இடங்களிலும் திரிந்து வந்தால், பெருகும் - (அவரவர் கொடுக்கும் பொருளெல்லாம் சேர்ந்து) பெரிய அளவினதாகும்.

குந்தாணி - பெருவுரல். குளத்துக்கு...பெய்யுமோ = குளத்திலே பெய்கிற மழை துளி துளியாகப் பெய்துதானே குளம் நிறைகிறது: குந்தாணி(பெருவுரல்) போல் பெய்தாநிறைகிறது.

O Govinda of imperishable bliss! It is good that those who give whatever they can spare to beggars: the beggars must not despise them (for giving little)· if they but go round all places, their hoard increases (Drops of water make an ocean). The rain drops falling in to atank do not fall down like large great mortars.

பிச்சை யெடுக்கிற ஏழைகள், கொடுக்கிற செல்வர்கள் கொஞ்சங் கொடுத்தாரென்றிகழலாகாது: வீட்டுக்குக் கொஞ்சங் கொடுத்தாலும் பிச்சைக்காரனுக்கு விசேஷ பொருள்சேரும்; குந்தாணி குந்தாணியா) பெய்தாகுளம் நிறைகிறது, துளிதுளியாகப் பெய்து தானே நிறைகிறது.

பலதுளி பெருவெள்ளம்: ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை: வீட்டுக்கு ப்பிடியரிசி போட்டாலும் பிக்ஷாபாத்திரம் சீக்கிரத்தில் நிறைந்துபோகும்; ஆகையால் நிரம்பப் பொருள் கொடுக்கவில்லையென்று ஈவோரை இரப்போர் நிந்திக்கலாகாது. எந்தாய் - Vocative of எந்தை. எவ்வளவு- எள்ளளவு என்றும் பாடம். ஒண்ணாது - ஒன்றாது என்பதன் மரூஉ. ஒ - எதிர்மறை.

5. அச்சுதானந்த கோவிந்தனே! கோடாலிக்காம்பு தாடாண்மையாளர் கைக்கு உள்ளாய்த் தருக்குலத்தைச் சாயவெட்டும் அல்லவோ? பீடார்...... பெற்றெடுத்தால், (அக்) குலம் வாடாதும் வாடி மாறுபட நாசமாய்விடும் என்றனுவயம்.

பீடு - பெருமை. வாடாதும் - வாடாததும் என்பது தொகுத்தலாய் வந்தது. தாடாண்மை - தாளாண்மை என்பது உலகவழக்கில் தாடாண்மை என வந்தது. தாடாண்மையாளர் - முயற்சியுடையோர். தரு - மரம்; தருக்குலம்- மரமாகிய தன் இனம். கோடாலி - கோடரி(கோடு - கொம்பை, அரி - வெட்டுவது) என்பதன் மரூஉ.

கோடாலிக்காம்பானது (தான் ஒரு மரக்கிளையாக இருந்தும்) வேலைசெய்கின்ற ஆள்களின் கையின் உட்பட்டால் மரமாகிய தன் இனத்தை இனமென்று எண்ணாமல் வெட்டிச்சாய்ப்பதற்குக் காரணமாகுமன்றோ: அதுபோல நல்லகுலத்தில் துஷ்டபிள்ளைகள் பிறந்தால் அதுவரையில் பசுமையாகவந்த குலமும் அவர்களால் வாடுவதாய் முன்னிருந்த நிலைமையில் மாறுவதாகி நாசமாய்விடும் என்பதாம்.

O Govinda of imperishable bliss! If a bad son is born in a noble family, the family will fade away and become ruined by him. The handle of the axe getting into the hands of the energetic labourer cuts down even its own race of trees.

இந்தப்பாட்டில் வழங்கிய பழமொழி "குலத்தைக்கெடுப்பது கோடாலிக்காம்பு" அல்லது "குலத்துக்கீனம் கோடாலிக்காம்பு" ("spoken of a person who brings disgrace and ruin to his family"). இந்தக் கருத்துடைய இங்கிலீஷ் பழமொழி "She is a foul bird that defiles her own nest." "It is an ill bird that bewrays its own nest".

6. அச்சுதானந்த கோவிந்தனே! உன்னை நத்த நல்லமருந்தாலே பிணி (-நோய்) போமென்று உலகிலுள்ளோர் (நல்லமருந்தைப்) பணைத்துக்கொண்டு (நோயைப்) பரிகரிப்பார். விஷம் பாய்ந்து செத்தபிணைத்துக்கும் (அதை எழுப்பப்) பச்சிலையுண்டு. புல்லோர்க்கு - அற்பர்களுக்குப் பிறக்கும் (-உண்டாகும்) அவகுணத்துக்கு (-கெட்டகுணத்துக்கு) மருந்து ஏது சொல்.

O Govinda of imperishable bliss! People purchase medicines for money, because they cure Maladies. Certain leaves restore persons who have died of poison. Please say if there is any medicine to eradicate the evil nature of the base.

பிணி - ஒருவனை ஒன்றுஞ் செய்யவொட்டாமல் பிணிப்பது (கட்டுவது) எனப் பொருள்படுதலால் காரணப்பெயர். பச்சிலை=பசுமை+இலை: மூலிகை, ஔஷதி. குணம் opp அவகுணம். "பொல்லாக் குணத்துக்கு நல்ல மருந்துண்டோ" என்பது இப்பாட்டில் வழங்கிய பழமொழி. "குணத்தை மாற்றக் குருவில்லை" என்று வழங்கும் பழமொழியும் இக்கருத்தேகொண்டது. இங்கிலீஷிலும் "What is bred in the bone wont out of the flesh".

7. முதல்வரியில் இரத்தம் என்பதை இரத்நம் எனத்திருத்துக.

ஒருவன் தலைக்குள் இரத்நங் கிளைத்ததென்றால் (அவனைக்) கிட்டி (அவன் தலையை) வெட்டி (இரத்நத்தை) வெளிசெய்ய வேண்டுமென்று பெரியோர் விரும்பாரே. என் மாத்திரம் தினைமாத்திரமும் புத்தியில்லார் எருது ஈன்றது என்றால் (அதைக்) கொட்டிலுள் கட்டும் என்பார்.

என் மாத்திரம்-எள்ளளவு. தினைமாத்திரம்-தினை அளவு, சிறுமையைக்குறிக்கும் அளவு.

உலகில் நடக்கலாகாத ஒருகாரியத்தை ஒருவர் சொன்னால் அதைக்கேட்டு அதில் நம்பிக்கை கொண்டு பெரியோர் யாதொருகாரியஞ் செய்வரோ? ஒருவன் தலையில் மாணிக்கமிருக்கிறது என்றால் அவன் தலையை வெட்டுவார்களோ. யாராகிலும் எருது ஈன்றதென்றால் அதைக் கொட்டாயில் கட்டும் என்பார் எள்ளளவும் தினையளவும் புத்தியில்லாதவர்கள்: எருது ஈனுமா என்பதை யோசிக்கமாட்டார்.

O Govinda of imperishable bliss! When it is said that the ox calved those who have not a grain of sense say tie it up in the stall. The great, when they hear it said that there is a ruby in a certain man's head, would not desire to take it out by cutting off his head.

யாராகிலும் ஒன்றைச்சொன்னால் பெரியோர் முன்பின்யோசித்து நடப்பர். அறிவிலார் அதை நம்பி மூடத்தனமான காரியஞ்செய்வர்.

ஈன்றது-ஈன்-பகுதி. கட்டும்-கட்டு+உம்: உம்-ஏவற்பன்மைவிகுதி.

ஒருவன் தலையில் மாணிக்கமிருக்கிறதென்று அவன் தலையைவெட்டலாமா என்பதற்கு நேராக "He that would hang his dog gives out first that he is mad." என்பதைக் காட்டுகின்றனர்.

8. சடம் - உடம்பு. பூடணம் - பூஷணம் - ஆபரணம். புடம் - புடமிடும் நெருப்பு.

ஒருவனை கற்ற கல்வியே அவன் உடலுக்கு அழகு என்பர். அங்ஙனமின்றி (காதிலாவது கையிலாவது) அணியத்தக்க ஆபரணத்தை அணியாவிட்டால் எவராகிலும் ஏசுவார்களோ. புடத்தீயில் வைத்துருக்கிய தங்கக்கட்டியினால் செய்தபொன் குடத்துக்குப் பொட்டிட்டு அழகு பார்க்கவேண்டுமா.

A man's learning adorns his body. Would any reproach him for not wearing suitable ornaments. Is a spot of sandal necessary to adorn a pot made of a mass of gold melted and refined? O Govinda of imperishable bliss.

பொன்குடத்துக்குப் பொட்டிடவேண்டுமா. கற்றோர்க்குக் கல்விநலமே கலனல்லால் மற்றோர் அணிகலம் வேண்டாவாம்.

பொன்னின் குடத்துக்குப் பொட்டுவேண்டுமோ - A good face needs no paint. Good coral needs no colouring. Handsome is that handsome does.

9. பா - பாட்டு. (பொருள் பாவி நடத்தலின் பாவெனப்பெயர் பெற்றது.) பொருட்சுவை - sweetness of the matter in a work. சொற்சுவை - choice selection of words. கா - சோலை. கமலம்பூ - தாமரைமலர். கண்டால் - முன்னிலையசை. திரு - இலக்ஷ்மி. புவி - பூமி. புரக்கும் - காக்கும், பரிபாலிக்கும். கோ - அரசன். செங்கோல் - நீதிமுறை. The right administration of justice: நீதிமுறையானது ஒரு பக்ஷமுங் கோணாமல் செவ்வியகோலைப்போல இருத்தலால் செங்கோல் எனப் பெயர்பெற்றது.

சொற்சுவையும் பொருட்சுவையும் பாட்டுக்கழகு: மயிலும் குயிலும் சஞ்சரிப்பது மலர்களையுடையசோலைக்கழகு: நல்ல பரிமளமும் இலக்ஷ்மி வீற்றிருப்பதும் செந்தாமரைப் புஷ்பத்துக்கழகு: பூமியைப் பரிபாலிக்கிற அரசனுக்கு நீதிமுறையே அழகாம்.

O Govinda of imperishable bliss! Sweetness of matter and choice of words add grace to a verse: the pea-cock and the cuckoo add grace to a flower grove: its sweet smell and Lakshmi add grace to the lotus: the right administratien of justice adds grace to a king ruling the earth.

10. துர்க்குணம் (opp) குணம். மந்த்ரம் - A mystical verse. உபதேசமந்த்ரம் - மந்திரோபதேசம் - imparting illumination. புல்லர் - அற்பர், the base. களித்து - சந்தோஷித்து.

ஒருவன் கூடியவரையில் மறைத்தாலும் அவனுடைய துர்க்குணம் மறைபடாது. குருவானவர்மந்திரோபதேசம் பண்ணினாலும் அற்பர்நல்லவராகார். காகங்கள் கங்காநதியில் சென்று வீழ்ந்து களித்து அடுத்தடுத்து ஆயிரந்தரம் குளித்தாலும் அவை அன்னப்பறவைக்கு ஒப்பாவதில்லை.

O Govinda of imperishable bliss! One's evil nature will not disappear by hiding it: Notwithstanding the instruction of their preceptors the base never turn out to be good: the crows can never resemble the swan though they should alight on the Ganges and wash themselves gladly a thousand times.

"முக்காலுங்காகம் முழுகிக் குளித்தாலுங் கொக்காகுமோ" என்றும் "கங்காநதியில் முழுகினுங் காக்கை அன்னமாகுமா" என்றும் "கங்காநதியில் முழுகிக்காக்கை சிங்கார அன்னமாய்ச் செல்லமாட்டுமோ" என்றும் பழமொழிகள் வழங்குவது காண்க. "Crows are never the whites for washing themselves"; "You cannot wash a blackamoor white." என இங்கிலீஷிலும் இக்கருத்தமைந்த பழமொழிகள் வழங்குவது காண்க.

11. (வ-ம்) வல் இரும்பு ஒடிந்ததென்றால் இணைக்கார்; வில் நிமிர்ந்ததென்றால் இருதலையும் வைத்து வணைக்கார்; புல்லர் மாறுபடும் பிணக்கைத்தவிர்ப்பவர் ஆர்? நாய்வாலைப் பிடித்து நீள இழுத்துக் குணக்கெடுக்க வல்லார் ஆர்?

(இ-ள்) வல் இரும்பு - வலிய இரும்பாலான ஒரு பொருள், ஒடிந்தது என்றால் - ஒடிந்தால், இணைக்காது இரார் - ஒடிந்ததை (பற்றவைத்து) ஒன்றுகச்சேர்க்காமல் இருக்கமாட்டார்கள்; வில் - வில்லானது, நிமிர்ந்தது என்றால் - நாண் அறுந்து நிமிர்ந்தால், இருதலையும்வைத்து - (விற்கோலின்) இருதலையையும் வைத்து (நாண் பூட்டியிழுத்து), வணக்காது இரார் - வளைக்காமலி

ருக்கமாட்டார்கள் புல்லர்-அற்பர்கள், மாறுபாடு-சண்டைகளுள்ள போதுண்டாகும், பிணக்கு - விரோதத்தை, தவிர்ப்பவர்-நீக்கவல்லவர், ஆர்-எவருளர். நாய்வாலை - நாயின்வாலை, பிடித்து - இறுகப்பிடித்து, நீள இழுத்து - நீளும்படியாக இழுத்து, குணக்கு - அதன் வளைவை, எடுக்கவல்லார் - நீக்கவல்லவர், ஆர் - எவருளர்.

இரும்பு துண்டுதுண்டாக ஒடிந்தாலும் அதைப் பற்றவைத்து முன்போலவே உருவாக்கலாம்: அற்பர்களுக்குள் பிணக்குவந்தால் அந்தப் பிணக்கை நீக்கி அவர்களை முன்போலச் சேர்க்கமுடியாது. மிகவும் வேகமுடைய வில் நாணறுந்து நிமிர்ந்தாலும் மறுபடியும் விற்கோலின் இரண்டு தலையையும் நாணால் இழுத்துவைத்து இறுகக்கட்டி முன்போல வளைத்துவிடலாம். அற்பமான நாயின்வாலைக் குணக்கெடுக்க முடியாது. அனேக கஷ்டமான காரியங்களை சாத்தியமாக முடிக்கலாம்: அற்பருடைய சுபாவத்தை மாற்றுவது அசாத்தியம் என்பதாம்.

O Govinda of imperishable bliss! Iron when it breaks can be re-united: When there is a dis-agreement among the base, they cannot be re-united. The bow, when it unbends, can be bent again by drawing near both its ends: but it is impossible to extend and straighten the tail of a dog.

"Crooked by nature is never made straight by education" என்பது இதற்கு நேரான ஆங்கிலப்பழமொழி. இணங்கு என்னும் தன்வினை வலித்தா விகாரம்பெற்று இணக்கு எனப் பிறவினையாயிற்று. வணங்கு என்பதும் அன்படியே வணக்கு எனப் பிறவினையாயிற்று. நாய்வால் - சினைத் தற்கிழமைப்பொருளதாகிய ஆறும்வேற்றுமை.

12. (இ-ள்) நள்ளிருள் போதில் - நடு இராவில், விளக்கு இட்டதாம் - விளக்கேற்றினதற் போன்ற, நல்லவர் - நல்லவர், இருந்தால் - (வீட்டில்குடி) இருந்தால், தெள்ளிய சீர்பெறு - தெளிந்த சிறப்பைப்பெற்ற, வீட்டுக்கு - வீட்டினுக்கு, அழகு என்பர் - அழகென்று சொல்வார்கள். தீங்கர் - தீங்குசெயும் துஷ்டர், வந்தால் (குடியிருக்க) வந்தால், தள்ளிவிடாமல் - அவர்களை நீக்கிவிடாமல், குடிவைத்துக்கொள்ளத்தகாது - அவர்களை வீட்டிலே குடியாக இருக்கும்படி வைத்துக்கொள்வது தகுதியாகமாட்டாது. இறப்பில் - வீட்டிறப்பிலே, கொள்ளி - கொள்ளிக்கட்டையை, வைத்துக்கொள்வரோ - யாராகிலும் தாங்களே எடுத்துவைத்துக்கொள்வார்களோ.

A good tenant in a noble house adorns it and is like lighting a lamp at midnight. It is improper to have an ill tenant without refusing him admission. Is there any body who will keep a fire-brand in the eaves? O Govinda of imperishable bliss.

நல்லவர்களை வீட்டிலே குடிவைப்பது நடு இராவில் விளக்கேற்றிவைத்ததுபோல வீட்டுக்கழகாகும். துஷ்டர்களை வீட்டிலே குடிவைப்பது வீட்டிறப்பிலே கொள்ளிக்கட்டையை வைப்பதற்கு ஒப்பாகும்.

குடியிருக்கிற வீட்டிலே கொள்ளிவைத்துக் கொண்டாற்போல என்பது இங்கே அமைத்த பழமொழி. இந்தச் செய்யுளின் கருத்தை "Better an empty house than an ill-tenant" என்னும் ஆங்கிலப் பழமொழி நன்குவிளக்கும்.

இறப்பு - The inside or under part of a sloping roof, the eaves. கொள்ளி-(நெருப்பைக் கொள்வது, கொண்டிருப்பது)- இ - வினைமுதற் பொருண்மைவிகுதி.

அறப்பளீசுர சதகம்.

இந்நூல் இயற்றிய ஆசிரியர் அம்பலவாணக் கவிராயர் என்பவர். இவர் சாற்றி அருணாசலக் கவிராயருடைய குமாரர் மூவரில் மூத்தவர். அருணாசலக் கவிராயர் கி-பி 1712-ல் பிறந்து 1779-ல் இறந்தவர். தருமபுர ஆதீனத்திற் கல்வி பயின்றவர்; சீகாழிக்கோவை-சீகாழிப்புராணம்-அநுமார் பிள்ளைத் தமிழ்-இராமநாடகம் என்னும் பிரபந்தங்களை இயற்றினவர். இவர் இராமநாடகத்தைப் பாடிப் பிரசங்கித்துத் துனியகாராஜா பிரம்பை ஆனந்தரங்கப்பிள்ளை முதலான பிரபுக்களிடத்தில் பரிசு பெற்றவர். "மகனறிவு தந்தையறிவு" என்றபடி இவர் புதல்வராகிய அம்பலவாணக் கவிராயரும் சிறந்த வித்துவான் என்பதற்கு அறப்பளீசுர சதகமே சாக்ஷி பகர்கின்றது. இவரை ஆதரித்தவர் மதவேள் என்னும் ஒரு பிரபு. அந்தப் பிரபுவுக்குச் சதுரகிரியில் எழுந்தருளியிருக்கும் அறப்பளீசுரர் உபாசனாமூர்த்தமாகும். மதவேள் என்னும் பிரபு வேளாண்மரபினர். இதையெல்லாம் நூலில் "மதவேள் அநுதினமுமனதினிலே துதிசதுரகிரிவளர் அறப்பளீசுர தேவனே" எனப் பாட்டுதோறும் அவ்வீசுரரை முன்னிலைப்படுத்தி உரைத்திருப்பதனாலும், ஓரோவிடத்து "மொழிபுகழ் பெற்ற வழியினைக தருமை மதவேள்" என்றும் "கிளிசேரசம்பிரம தருமைமதவேள்" என்றும் "சங்கர குலத்தலைவன் மொழிதரு மழகினை தருமைமதவேள்" என்றும் "மழபுடைக்குமுதலகில் வேளாளர்குலதிலக அருமை தருமைமதவேள்" என்றும், "அருள்சுற்ற துரைவென்ன கொங்கிரம் ஞானநூல யாருமில்லை தருமைமதவேள்" என்றும் "தலைவருக்கோர்க்குங் கவியம்பலவாண கவிராயனுக்குமன் புன்கவியையுங்கூடியே மனமகிழ்ந்திடுமன் கடவுகத்" என்றும் வருவனவற்றால் தெளியலாகும்.

சதுரகிரியென்பது The Chatagherry mountains, near Trivandrum. அங்கே எழுந்தருளியிருக்கும் சுவாமி அறப்பளீசுரர்.

அறப்பளீசுரரை முன்னிலையாகவைத்துச் சொல்லிய சதகம் என விரிதலால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. சதகம் வகுத்தனம் கோவிந்த சதகவுரையில் உரைக்கப்பட்டது. அங்கே கண்டு கொள்க.

நன் மாணாக்க ரியல்பு.

1. நன்மாணாக்கரியல்பு - நல்ல மாணாக்கருடைய இலக்கணம். மாணாக்கன்-(மாணவகன் என்பதன் மரூஉ: எட்டு வயதுக்குமேல் பதினாறு வயதுக்கு உட்பட்டவன்; சிறுவன்) கற்போன், a scholar, pupil, student, disciple.

(வ-ம்) ஐயா! (இனி) புகழ் பொருந்தச் செய்த செம்மலே! அண்ணலே தருமை...தேவனே! சற்சீடர் (ஆனவர் குருவானவர் தம்மை) வணங்குதலுமே, ஓர் தொண்டு செய்தலுமே, மிகமகிழ்ந்து இருத்தலுமே, சற்றுநிலும் மனது கோணாது, நாணாது, "நீ (யே) பொய்யாமல் எனக்கு மாதா பிதா" என்று கனிவொடும் பணிவிடை புரிந்து, "புனித! (என்று) பொருள் உடல் ஆவியும் உன்னதே" எனத் தத்தஞ் செய்து, இருவர் பதம் போற்றி, மலரடியில் வீழ்ந்து, மெய்யாகவே பாவி, உபதேசம் பெற விரும்புவோராம். (இப்படிப்பட்ட சீடர்) வினை வேர் அறும்படி அவர்க்கு அருள்செய்வதே மிக்க தேசிகர் கடனாம்.

வைதால் - திட்டினால்: வை - பகுதி, த் - எழுத்துப்பேறு, ஆல் - எதிர்கால வினையெச்ச விகுதி. மாறு-மாறுதலில்லாமல், ஒரே நியதியாக. நாணாது-

வெட்கங்கொள்ளாமல். கனிவு-மனவுருக்கம். போற்றுஉ...செய்தூஉ-புனித-பரிசுத்தமானவரே! பொருள் உடல் ஆவியும் - அடியேனுடைய பொருளும் சரீரமும் உயிரும், "உன்றனது - உம்முடையதே, என-என்று சொல்லி, தத்தம் செய்து-அர்ப்பணம் பண்ணி. இங்ஙனம் செய்வது இந்துமதக் கொள்கை. பரவி-புகழ்ந்து. சற்சீடர்-சச்சீடர்-நல்ல சிஷ்யர். வினைவேரறும்படி-தீவினையானது வேரறும்படியாக; தீவினை நிர்மூலமாகும்படியாக-தீவினை பரிஷ்காரமாக விட்டு நீங்கும்படி. அருள் செய்வது - கிருபைசெய்வது, நன்மை செய்வது. மிக்க - குருலக்ஷணங்களில் மிக்க. தேசிகர் - குரு - ஆசாரியர். புரம் பொடிபடச்செய்த செம்மல் - திரிபுரம் பொடியாகுமாறு அழித்த இறைவனே! அண்ணல்...தேவனே: - அண்ணல் - பெருமையிற் சிறந்தோனே, எமது - எங்கள், அருமை - அருமைவாய்ந்த, மதவேள் - மதவேள் எனும் பிரபு, அநுதினமும் - தினந்தோறும், மனதில் நினைதரு - தியானிக்கின்ற, சதுரகிரி - சதுரகிரியிலே, ஊர்-ஓங்கிவீற்றிருக்கும், அறப்பளீசுரதேவனே - அறப்பளீசுரதேவனே!

புரம் பொடிபடச்செய்த வரலாறு — தாரகாசுரன் என்பவனுக்கு மூன்று புத்திரர்கள் உண்டு. அம்மூவரும் தவம் பண்ணிப் பசும்பொன் வெண்பொன் கரும்பொன்னால் மதில்கள் வைக்கப்பட்ட மூன்று நகரங்களைப் பெற்றனர். இவர்கள் பல அசுரர்களுடனே தாம் நினைத்த இடங்களுக்கு அந்நகரங்களோடு பறந்து சென்று பல இடங்களைப் பாழ்செய்து வருகையில், தேவர் முதலானவர்கள் சிவபெருமானிடத்தில் முறையிட்டுக்கொண்டனர். சிவபெருமான் மகாமேருவை வில்லாகவும், ஆதிசேஷனை நாணாகவும் விஷ்ணுவை அம்பாகவும், பிரமனைச் சாரதியாகவும் அமைத்துக்கொண்டு போய்ப் புன்னகை செய்து அசுரர்களை மேற்கூறிய மூன்று பட்டணங்களுடனே எரித்துவிட்டனர். (வைணவர்களில் விஷ்ணு அறுபுரம் எரித்ததாக ஒரு ஐதிஹ்ய முண்டு.)

தேசிகனை "மாதாபிதா வெனக்கு" என்றதுபோலப் பிறரும் "குருவே யன்னை தந்தை குருவே தெய்வமற்றும்" எனக் கூறியிருப்பது காண்க. நன்மாணாக்கர் ஆசாரியனுக்குச் செய்யும் பணிவிடை முதலியவற்றைப்பற்றி "அழலினீங்கா னணுகானஞ்சி, நிழலினீங்கா னிறைந்த நெஞ்சமோ, டெத்திறத்தாசானுவக்குமத்திறம், அறத்திற்றிரியாப் படர்ச்சி வழிபாடே" என்று நன்னூலிலும், "கொள்வோன் கொள்வகை கூறுங்காலைக், கடையாமத்திடையெழுந்து கடன்கழித், தாரியன்மாளிகை வாயில்சென்றெய்திக், காலமுமிடனுங் கருதுபுநின்றுங், கேவனவநோக்கி னவருளுருகி, வணக்கமு மொடுக்கமும் வாய்த்தயனிற்ப, வருகவென் றழைத்தலு மருகுசென் றிறைஞ்சலும், அவன்றிறத், தோவாதுசெவ்வ தொல்லும்வகையா, னேவாதியற்றிய வின்பமெய்தியபின், பகலினு மிரவினும் பயின்றபின்முன்னா, ரகலா துகிய வன்பினொதலுந், துயில்வுழித் தைவருந் துணைத்தாளினைத்துறந், தொல்லையிற் றுயின்றெழுந் தொழுகுதலன்றே" என மாறனலங்காரத்திலும் உரைத்திருப்பது காண்க.

பொழிப்பு:—ஐயா! திரிபுராந்தகரே! எமதருமையான மதவேளாகிய அண்ணல் அநுதினமும் தியானிக்கும் சதுரகிரியிலே ஓங்கி வீற்றிருக்கும் அறப்பளீசுர தேவனே! ஆசாரியன் திட்டினாலும் சரி, ஒரு கொடுமையைச் செய்தாலும் சரி, கோபித்துக் கோபமாறாமல் ஒரே ரீதியாக இகழ்ச்சி செய்தாலும் சரி, கொஞ்சமாகிலும் மனங்கோணாமலும் வெட்கங் கொள்ளாமலும், "ஐயா, நீரே எனக்கு உள்ளபடி தாயுந் தந்தையும் ஆகிறீர்" என மனவுருக்கத் தோடு வழிபாடுசெய்து "பரிசுத்தமான ஐயனே! என்னுடைய உடல்பொருளாவியை உமக்கே அர்ப்பணம் பண்ணிவிட்டேன்" என்று சொல்லி அகோராத்தி

ரம் துதித்து, மலர்போன்ற திருவடியில் விழுந்து நமஸ்கரித்து, உண்மையான மனத்துடன் புகழ்ந்து, உபதேசம் பெற விரும்புகின்ற சீடரே சற்சீடராம்: அப்படிப்பட்ட சீடருடைய தீவினையை வேரறக்களைந்து அவர்களுக்குத் திருவருள் பாலிப்பதே நல்லாசிரியருடைய கடமையாகும்.

Sir, O Lord who reduced to ashes the three cities of the Asuras! O God Arappaleswara reigning supreme in Chattagherry and daily adored by our great Matha Vel! They only are true scholars, who do not in the least become displeased or ashamed though (the preceptor) abuses them or does any harm to them or despises then peevishly; who do service to him with a melting heart, stating "You are truly to me a mother and a father"! who give away their property, their body and their life, saying "O holy thou! they are yours"! who prostrate before his flower-like feet and adore him with a full heart, and who thus desire to receive precepts of him. It is the duty of the preceptor to root up the evil found in them and be gracious to them.

ஒன்றுந்தோன்றுமறுதசெய்வன.

2 **தூயதவம்**-பரிசுத்தமான தவம்: தவத்துக்குப் பரிசுத்தமாவது திரிகரண சுத்தி, அதாவது மனோவாக்குக் காயங்களின் சுத்தி. **விரதம்** - Fasting or voluntary religious observances. **சொல்லரிய பெரியோர்கள்** - இப்படிப்பட்ட பெருமையுடையவர்களென்று சொல்லமுடியாத பெரியோர்கள். **சீலம்**- நல்லொழுக்கம். **சாற்றும்** - சொல்லும். **சௌரி** - திருமால். **மலரோன்** - தாமரை மலரிலிருப்போனாகிய பிரமன். **அமரர்** - தேவர். **முனிவர்** - ரிஷிகள். **முச்சுடர்கள்** - சூரியன், சந்திரன், அக்கினி. **சரண்** - தஞ்சம், refuge. **எனவே** - என்று வேண்டவே. **ஆழ்கடல்** - வினைத்தொகை. **கண்டன்** - (திருநீல) கண்டன்: விடமுண்டு கழுத்தில் நின்றதனால் திருநீலகண்டன் என்க.

ஆழ்கடலதித்து வருவிடமுண்டகண்டன் - திருப்பாற்கடலைக் கடைந்த காலத்து அதினின்றும் பயங்கரமான விஷம் எழுந்தது. அந்த விஷத்தின் வெப்பத்தைப் பொறுக்கமுடியாமல் அஞ்சியோடலான தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட, உடனே அவர் அந்த விஷத்தை உட்கொள்வாராயினர். அப்போது அவ்விஷம் உள்ளிறங்காதபடி பார்வதிதேவியார் பெருமானுடைய கழுத்தை இறுக்கிப்பிடித்தனர். அவ்விஷம் கழுத்தில்தானே நின்றுவிட்டதென்பது புராண வரலாறு.

பொழிப்பு:— ஒருவர் வாழ்கின்ற வீட்டுக்கு அழகாவது கலியாணஞ் செய்துகொண்ட குலஸ்திரீ. குலஸ்திரீயானவள் வாழ்கின்ற இல்வாழ்க்கைக் கழகு பிள்ளைப்பேறு. பிறந்து வளர்கின்ற பிள்ளைகளுக் கழகு கல்வி கற்றல். கல்விக் கழகு பெரிய பூமியிலுள்ளார் துதிக்கின்ற நற்குணம் பொருந்தியிருத்தல். ஆராய்ந்து சொல்லப்பட்ட குணமுடைத்தாயிருப்பதற் கழகு பேரறிவுடைமையாம். பேரறிவுண்டானால் அதற்கழகு பரிசுத்தமான தவம் - மேன்மை - உபகாரம் - விரதம் - பொறுமை - இப்படிப்பட்ட குணவிசேஷமுடையவரென்று சொல்லுதற்கரிய பெரியோர்களை வணங்குதல் - அவர்களுக்குப் பணிவிடை செய்தல் - நல்லொழுக்கம் - யாவரிடத்தும் நேசம் - கருணை என்று சொல்லப்பட்ட இவைகளாம் என்று பெரியோர் சொல்வர். விஷ்ணுவும் பிரமனும் தேவரும் முனிவரும் முச்சுடர்களும் "ஐயா இந்தப் பாற்கடலில் உண்டாகும் விஷத்தின் வெப்பத்தைப் பொறுக்க முடியவில்லை: நீயே சரணம்; எங்களைக் காக்கவேண்டும்" என்று வேண்டிக்கொள்ளவே அவ்விஷத்தை உண்டு அவர்களை ரக்ஷித்த திருநீலகண்டப் பெருமானே! அன்னல்... தேவனே!

O God who swallowed the poison which sprang from the deep sea when Vishnu, Brahma, the devas, and the rishis and the three luminaries applied to you for help saying 'You are our refuge, please save us!' O Arappaleswara! Our elders say:—a house wife of noble birth is the ornament of the house we live in; children are the ornament of her household; learning is the ornament of growing children; the ornament of learning is the possession of a good nature praised by the world; the ornament of good nature is the possession of great wisdom; the ornaments of great wisdom are—holy penance, honor, benevolence, religious observance, patience, obeying elders whose good nature is indescribable, doing service to them, good behaviour, friendship and mercy.

3 முடி நாராசுபமியாட் - தாரதம்பியம் [illegible] affixes of the comparative and superlative degrees) A Sanskrit comp. and superl. [illegible] more or less, greater or smaller, longer or shorter, superior or inferior. உயர்வு தாழ்வு - பலவுள் [illegible]

[illegible]

அன்பு [illegible]

[illegible]

பொழிப்பு — [illegible]

குடிப்பிறப்புப் பலரும் பழிக்கலான இழிதொழிலைச் செய்யும் மூடரும், நம்பிக்கையில்லாதவர்களுக்காக முன்னே பிணைநின்று பின்பு அவர்களால் துன்பமடைகிற மூடரும், குருட்டுமாடுபோல பிச்சைக்காரர்மேல் கோபித்து விழுகின்ற மூடரும், மூடர் பாதியும், கற்றும் அறிவில்லாத மூடரைப்போல முழுமூடராகார் இவர்களெல்லாம் கற்றறிவோர்களுக்கு முன் அவரவர் தராதரத்தின்படி அரைமூடர் கான்மூடருமாவார்.

பலநூல்களைக் கற்றிருந்தும் நல்லறிவில்லாத மூடரே முழுமூடர்; ஏனை மூடரெல்லாம் இவர்களைக் காட்டிலும் குறைந்தவரே யாவர் என்பதாம்.

O Lord who acted the part of a messenger on behalf of the great poet Sundarar who was forbidden to approach his wife! O Arappalesvara! the fools who act on the advice of females, the fools who expose the faults of their parents, the great fools who get on the speaker's platform in an assembly of learned persons and utter nonsense, the fools who do blamable base acts to the daughters of worthy relations, the fools who first stand security for the faithless and then suffer distress, the fool who go down upon beggars with great fury like a blind ox, all these are only half fools and quarter fools in comparison with learned fools.

4. (செயற்கருஞ் செயல்) செயற்கு முடியாத செய்கை. A deed hard of accomplishment. [illegible] ஆரணம் [illegible] அலங்குதல் [illegible] arrow குண்டு bullet cannon ball [illegible] காடி - vinegar வெண்ணெய் - butter [illegible] ரம் சுரர் தேவர் (opp அசுரர்)

பொழிப்பு.—மேருமலை [illegible] மலைகளெல்லாம், [illegible] எடுத்துக்கொண்டு [illegible] திரியலாம், கொதிக்கும் நெருப்பை [illegible] செய்யலாம், (பகிறடி) பெரிய வேங்கையையும் [illegible] செய்து அதைக் கட்டிக் கருவிக்கொள்ளலாம், விஷமுள்ள பெரிய சர்ப்பத்தையும் கடிக்கவொட்டாமல் [illegible] பூமியின்மேல் நெருப்பு இல்லாமல் [illegible] சோறு சமைத்து அச்சோற்றைப் பலரும் விருப்பத்துடன் உண்ணலாம், [illegible] பாயவருகின்ற யானை [illegible] முதலானவைகளை மந்திரத்தால் [illegible] செய்யலாம் [illegible] போலச் செய்யலாம், அழகுபொருந்திய [illegible] தானும் [illegible] போல நடந்து அக்கினியும் வெண்ணெய்போல் குளிர்ச்சிகொடுக்கலாம் இப்படி அசாத்தியமான காரியங்களைச் சாதிப்பதற்கு [illegible] ஒரு சிறிதும் புத்தியில்லாத மூடனுடைய மனத்தை நல்வழியில் திருப்புவதொன்றுமாத்திரம் எவருக்கும் சாத்தியமாகிற காரியமன்று. ஆகாயகங்கை பொருந்திய கொன்றைமலையையணிந்த சடையையுடையவனே! தேவர்கள் புகழும் [illegible] மானவனே! அருமை தேவனே!

இதனால் ஒவ்வொருவரும் தங்கள் மனதை விஷயாதிகளிலே பிரவேசிக்கவொட்டாமல் அடக்கி ஒருவழிப்படுத்திச் சுயமாயிருத்தல் அசாத்தியமான காரியமென்றிறைந்த தாயுமானவர்,

கந்துகமதக்கரியை வசமா நடத்தலாம் கரடி வெம்புலி வாயையுங்
கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம் கட்செவி யெடுத்தாட்டலாம்
வெஞ்சழலி னிரதம்வைத் தைந்துலோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாம லுலகத்துலாவலாம் விண்ணவரை யேவல்கொளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலாம் மற்றொரு சரீரத்தினும் புகுதலாம்
சலமே னடக்கலாம் கனன்மேலிருக்கலாம் தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது சத்தாகியென்
சித்தமிசைக் குடிகொண்ட வறிவான தெய்வமே தேசோமயானந்தமே என
விளக்கியிருப்பது காண்க.

O God wearing Kounai garlands interspersed with Atti flowers in the dishevelled locks! O thou pure adored by the gods! O Arappalesvara! We may walk on water; we may eat even the bitter etti fruit; we may make fire as cold as water; we may embrace the large tiger; we may put on long serpents; we may cook sand on the earth and eat it will moly; we may make arrows and bullets recede from us; we may make a wooden doll to speak; we may churn the beautiful vinegar and extract even butter from it; but it is impossible for any body to set right the mind of those who have not the least sense.

5. யாக்கை நிலையாமை முதலியவை. (யாக்கை — சரீரம்) சரீரத்தின் நிலையில்லாத்தன்மை முதலிய விஷயங்கள் the transitoriness of body &c.

காயமொரு புற்புதம் — புற்புதம் நீர்க்குமிழி; உடலென்ற மனிதருடைய சரீரமானது நீர்க்குமிழிக்குச் சமானமாக இருக்கிறது. நீர்க்குமிழியானது தோன்றியவுடனே அழிந்ததுபோல மனித சரீரமும் பிறந்தவுடனே இறக்கத்தக்கதாக இருக்கின்றது. 'நீர்மேற் குமிழிபோல நிலையில்லாத காயம்' என்ப பழமொழி வழங்குவது காண்க. Our body is a water bubble ஆங்கிலத்தில் Life is a running shade. Life is short. Our life is frail and we may die today என வருவதுங் காண்க.

வாழ்வு மலைசூழ்தருங் காட்டி லாற்றின் பெருக்காம் — வாழ்வு நம்முடைய வாழ்க்கையானது; மலைசூழ்தரும் மலையைச் சூழ்ந்திருக்கின்ற, காட்டிலாற்றின் காட்டாற்றில் காணப்படுகிற, பெருக்காம் - பிரவாகம்போலாம். காட்டாற்றி லுண்டாகிற பிரவாகமானது வெகு சீக்கிரத்தில் தணிந்துபோகிறது. அதுபோல நம்முடைய வாழ்க்கையானது மிகவும் க்ஷேமமாய் முடையதுபோல காணப்பட்டு சீக்கிரத்தில் சீரழிந்துபோகிறது. 'ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்' என்றதும் இக்கருத்தே.

One's prosperity is but a flood in a sylvan river encircling a mountain.

கருணைதரு புதல்வராகிய பின்னை மனைவி யிவையெலாம் கானல் காட்டும் பிரவாகம் — இரக்கத்துக்குக் காரணமான பிள்ளைகள் சுற்றத்தார் வீடு பெண்டாட்டி முதலியவெல்லாம் கானல் தோற்றுவிக்கும் பிரவாகம்போலே பொய்யாம். கருணைதரு கடவுள் கிருபை கொடுக்கின்ற, கடவுள் அருளாலுண்டாகின்ற புதல்வர் எனினுமாம். கானல் பேய்த்தேர் the mirage or waving vapour at midday which in some places is mistaken by the thirsty traveller, beasts, birds, &c. for a sheet of water. வெண்டேர். Our sons the offsprings of divine grace, our relations, our houses, our wives, all these are as delusive as the flood appearing in a mirage.

மேய விருபுய வலிமை யிளமை யழகு இவையெலாம் வெயின் மஞ்சள்- இரண்டு புஜத்திலும் பொருந்திய வலிமையும் இளமையும் அழகும் ஆகிய இவையெல்லாம் மாலை வெய்யிலிற் காணப்படும் மஞ்சள்போல் நிலையற்றவை யாம் (நீடித்திருப்பனவல்ல). The strength of both the shoulders, Youth, beauty, all these are as shortlived as the yellow of the sunshing (Just be fore sun-set) "நீரிற்குமிழி யிளமை" என்றார் நீதிநெறிவிளக்கத்தில்.

உயிர் தானுமே வெட்டவெளிதனில் வைத்த தீபம்-உயிர்தானும் வெட்ட வெளியில் ஏற்றிவைத்த விளக்கைப்போன்றதாம். அடைப்பில்லாது மிகவும் வெளியான இடத்தில் ஏற்றிவைத்த விளக்கு ஒரு காற்றடித்தால் அவியும்; அதுபோல உயிரும் ஒரு நோய் முதலியவற்றால் பொட்டென மாயும். Eenv our life is only a lamp lit it an open plain. எனவே கருதி - என்றிங்ஙன மாக நினைத்து, வீண் பொழுது போக்காமல் நேயமுடனே தெளிந் துன்பொ டின் பாதத்தி னினைவுடைத் திருபோதிலும் நீர் கொண்டு மலர் கொண்டு பரிவுகொண்டர்ச்சிக்க நிமலனே அருள் புரிகுவாய் - ஓ நிர்மலமானவனே! நான் இவையெல்லாம் இங்ஙனம் நிலையற்றவையென்று தெளிந்து, வீண காலம்போக்காமல் மனநேயமும் அன்புங்கொண்டு உன் பாதத்தில் புத்தி பண்ணிக் காலை மாலையில் ஜலமும் புஷ்பமுங்கொண்டு விருப்பத்துடனே உன்னை அர்ச்சனை செய்யும்படி திருவருள் செய்வாயாக.

ஆயும் அறிவாளர் பணிநாதனே - O Lord worshipped by the wise who are of a thinking turn of mind! ஆயும் அறிவாளர் - தத்துவங்களை ஆராயும் அறிவாளிகள். போதனே-O thou of knowledge, (போதம்-ஞானம்) ஞானமே ரூப. மானவனே.

O Spotless one! grant me grace so that I may clearly understand what have been said above, and then without whiling away my time think with willingness and affection of your feet, and make obeisance to them both in the mornings and evenings with water, flowers and fondness.

6. தறிபட்ட சந்தனக்கட்டை பழுதாயினும் சார்மணம் பழுதாகுமோ தறிபட்ட - வெட்டப்பட்ட. பழுது - சிதைவு சேதம். Would the smell a sandal block be damayed though the black is damaged by being cut "அரைக்கினுஞ் சந்தனம் தன்மணமறாது" (நறுந்தொகை).

தக்கபால் சுவறிடக்காய்ச்சினுந் தித்தித்த சாரமதுரங்குறையுமோ - சுவறிட - வற்றும்படியாக. மதுரம் - இனியசுவை. தக்கபால் என்பது "பாலெல்லா நல்லாவின்பாலாமோ "என்றபடி பசுவின்பால் என்க.
Though the milk of the cow be boiled so as to be dried up would it lose its sweet taste "அடினுமாவின் பால் தன் சுவை குன்றாது" (நறுந்தொகை).

நிறைபட்ட கதிர்மணி அழுக்கடைந்தாலும் அதின்நீள்குணம்மழுங்கிவிடு மோ - பிரகாசம் நிறைந்த இரத்தினம் மாசுபட்டாலும் அதன் சிறந்தகுணம் கெட்டுபோகுமோ: அழுக்கைத்துடைத்துவிட்டால் முன்போலவே பிரகாசி க்கும். would a shining ruby lose its lustre if it grows dirty. மாசுபடினும்மணி தன்சீர் குன்றாவாம்" (நான்மணிக்கடிகை).

நெருப்பிடை உருக்கினும் அடிக்கினும் தங்கத்தின் நிறையுமாற்றுங்குறையு மோ. . . தங்கத்தை நெருப்பில் புடமிட்டு உருக்கினாலும் தகடாகத்தட்டினாலும

தனுடைய நிறைவாவது மாற்று குறைவாகுமோ. Will gold lose its fineness if it is melted or beaten? "சுடினுஞ் செம்பொன் தன்னொளி கெடாது" என்கிறபடி சுத்தப்பொன்னை உருக்கினாலும் அடித்தாலும் நிறையுங் குறையாது மாற்றுங் குறையாது என்றபடி. Will pure gold lose its fineness or weight if it is melted or beaten. முதல் அடிக்கு நிறை மாற்றுக் குறையுமோ என்றும் இரண்டாவது அடிக்கு நிறையும் மாற்றுங் குறையுமோ என்றும் பாடங்கொண்டு உரைகள் புத்தகங்களில் காணப்படுகிறது.

கறைபட்ட மையைப் போன்றதாலும் கார் (கருமை) மேகம் மறைத்தாலும் பட்டப்பகல் போல் ஒளிவிடும் கலைமதி உள்ள பூரண சந்திரன் பெருமை குறையுமோ. Would the shining moon lose her greatness when covered over by the spotted dark clouds? கறையினையுடைய கரிய மேகம் மறைத்துக்கொண்டாலும் சந்திரனுடைய பூரணப் பிரகாசம் குறையுமோ.

காமர் பேதைகளால் பெரியோர் மகிமை அற்பமாமோ - கல்வியறிவில்லாத மூடர்கள் அறியாவிட்டால் அதனால் பெரியோர் பெருமை குறையுமோ. Would the honor of the learned vanish on this earth if it is not understood by the mean.

அறிந்தோரைவிட்டகலாத மூர்த்தியே - தன்னுடைய பெருமையை அறிந்தவர்களை விட்டு நீங்காதவனே - O god who does not get away from those who know you.

7 (ம்) அறைகின்ற வேதங்களுடனே சம்பந்தப்பட்ட, கூறப்படும் பொருளான பொருளே - பெருமானே! அண்ணலே - பெரியோனே! அருமை தேவனே!

வெறிகொண்ட மரக்கிளைகளில் வாழும் குரங்குகள் பேயைப் போல் பேய்பிடித்தாற் போல் - மதுபானமும் பண்ணி, மொகாரச் சத்தம் பூண்டு கழுத்தில் கொடுமையான கருவிலிருந்து விழுந்த, தேள் கொட்டிய (அதனோடு) சேர்ந்த கொடுமையுள்ள வாயும் - நிறைந்திருக்கும், சலமாக மனம் நலமுற்றிருக்குமோ? அதைப்போல - அப்படிப்பட்ட பாக்கியசாலிகளின் பெரும் தன்மையோர்,

குறைகின்ற (கல்வி கேள்வி) குறைவாயிருக்கின்ற, அற்பர்களுக்கு - மக்களுக்கு மனைவி இழிசாதியாய மனைவியாலென்ன தாழ்ந்த குலத்தினளுடன், கூடவே நீணைமை உண்டாய - அவனோடு கூட இளம்பிராயமாய, கொஞ்ச காம அதிகாரமும் கிடைத்தால் சகல அதிகாரமுங் கிடைத்துவிட்டால் மிக வல்லவராகினில் இச்சை பெரிய பூமியிலே, அவர்களுக்கு அப்படிப்பட்ட போதனையில், நிறைகின்ற புத்தியும், தீக்கமான புத்தியும், சீலமும் நல்லொழுக்கமும், பொறுமையும் - கௌரவமும், ஞானமும் - நேர்மையும், பெரியோர்களிடத்தில் நேசமும் - பெரியோர்களிடத்தில் விசுவாசமும், ஈகையும் - தானமும், இவை எல்லாம் - ஆகிய இந்த சுபாவங்களெல்லாம், கனவிலும் நினைவிலும் கனவிலாவது நினைவிலாவது, வராது - உண்டாகமாட்டா

O Great one who is the subject matter of the Vedas! O Lord! Can you expect any the least propriety of conduct in a monkey confused of mind, which is already possessed by a devil, and intoxicated, which has fallen down on a nettle, and in addition stung by a scorpion? Oh no Even so, You cannot find on this great earth, either in dream or in reality complete wisdom, good conduct, honor, honesty, kindness to elders giving in mean persons who have married women of low birth who are young besides if it happens that they are placed in a position of some authority

மர்க்கடம் வடசொல் காஞ்சொறி - மேலே பட்டால் மிகவும் தினவுதருவதான ஒருவகைச்செடி a kind of mettle புதவு பூடு, பூண்டு புதலிலே என்றும்பாடம்

ஜன்மசுபாவத்தாலே பொல்லாத சேஷ்டைகளையுடைய குரங்கானது, வெறிகொண்டு, பேய்பிடித்து கள்ளுண்டு, அதுவுமன்றிக் காஞ்சொறிப் பூண்டின்மேல் விழுந்து, அதன்றியுந் தேளுங் கொட்டிவிட்டால், பின்னும் எவ்வளவு அதிகமான சேஷ்டை உடையதாயிருக்கும்? அது நல்லபடியே நடப்பதென்பது எள்ளளவும் இல்லையல்லவோ? அதுபோலவே, சுபாவத்திலே அற்பபுத்தியுடையவர்களுக்குப் பெண்டாட்டி இழிகுலத்தாளாகவும், தாங்கள் சற்று யௌவனமாகவும் இருக்கக் கொஞ்சம் அதிகாரமாத்திரம் உண்டானால், அவனிடத்தில் தீர்க்கபுத்தி-சுசீலம் மேன்மை நிதானம் பெரியோரைவிரும்பல் முதலான குணங்கள் கனவிலாவது நனவிலாவது உண்டாகுமா? உண்டாகமாட்டாது.

8 தளசேகரம் (தளம் சேனை, படை, army சேகரம் சேகரிப்பு, கூட்டம்) சேனைக்கூட்டம் நத்தல் நச்சல் நச்சுதல் - விரும்புதல் - சினேகங்கொள்ளல் ஆவலோடு பின்செல்லல் காசினியை ஒரு குடையிலாண்டாலும் பூமிமுழுவதையும் தமது குடைநிழலிலிருந்தபடி அரசு செய்தாலும், தாங்களே ஏக சக்ராதிபதியாய் ஆண்டாலும் குடையானது நிழல் செய்து வெயிலைத் தணிப்பதுபோல, அரசர்கள் பகைவர் மிருகம் முதலியவற்றால் உண்டாகுங் கொடுமைகளை நீக்கிக் குடிகளுக்கு ரக்ஷணைசெய்பவராகையால் அரசாட்சியைக் குடைநிழலாக வர்ணிப்பது தமிழ் மரபு மேதாவி என்னும் வடசொல் சங்கீதசாமர்த்யர் - சங்கீதத்தில் திறமையுடையவன், an expert in music சுதிகூட்டல் (சுதி சுருதி வடசொல்) ஆலாபிக்க - to pitch the key note தூண்டுகோல் snuffer அனற்கண்ணன் - நெருப்பு வீசும் கண்ணையுடையவன்; சிவபெருமானுடைய நெற்றிக்கண் நெருப்பு வீசி மன்மதன் முதலானவர்களை எரித்ததாலால், சிவனை அனற்கண்ணன் என்று படிகசங்கம் படிகம் ஸ்படிகம் என்கிற வடசொல், கண்ணாடி, பளிங்கு) பளிங்குபோல் துல்லியமான சங்கம் சங்கு conch

A man should take advice of another, though he be very wise Though one be a great hero it is essential that he should collect around him a large army Though one be a promising scholar, yet he should seek help from those better learned than he Though one is the sole Monarch of the whole world it is essential that he should have at his door a well meaning minister Though a man may be an expert in Music, he

requires one to pitch the key note A lamp though bright requires a snuffer to trim it up O Thou of fiery eyes! O Thou whose complexion resembles the crystalline couch ?

9 பேரானை—பேரானே ஃ ஈதற்கொருத்திய பேணம் - நுரை, foam தோடம் தோஷம் வெண்மதி - மதிக்கு இனமான களங்கம் செம்மதி வேறு இல்லாமையால் இயற்கையில் வெண்மையுள்ள மதியை வெண்மதி யென்பது வழுவமைதி ஆகவே இங்கே வெண்மை யென்பது இனஞ்சுட்டல்லாத அடையாம்; இது தன்னோடியைய பின்மையை நீக்கிய விசேடணமாதலறிக இங்கனமே வரும் "பொருண்முத லாறுமை ஞ்சா மொழியினம், உள்ளவு மில்லவுமா மிருவழக்கினும்" (ந சூ-401) என்பதிலக் கண்டு போர்த்துவர தவத்தையுடைய தன்மாகவுடைய சவசிரேஷ்டர் சிறந்த கோபர் கருப்பஞ்சாறு கரும்புச்சாறு (அம்-சாரியை) "பெருமொழி மொழியுடன் சில வேற்றுமையில் தமமின வன்றொடராகா மாேனே" (ந சூ 184 தாலம் - நாக்கு நான்மறை- சதுர்வேதம் இருக்கு - எஜுர் - சாமம் அதர்வணம் ஆராயுமொருநான் மறை உன்னுடைய ஸ்வரூபலக்ஷணங்களை ஆராய்ந்து உன்னை விளக்க ஆராய நின்று மறைக்குமெட்டாதொளிருமண்ணலென நேத்திரம் இப்படிப்பட்டவ னென்று சொல்ல முடியாமல் அப்பாற்பட்ட அண்ணலே

9 O Lord shining beyond the reach even of the four Vedas which seek to explain you! O ! The blemish of the great Ganges is the foam coming over it. The great defect of the waxing moon is the spot in itself The fault of the famous is etc s is to harbour resentment on others It would be wrong in unimpeachable kings to do things without due enquiry It is the sin of the l . us that those who were giving freely do not do so It is the fault of the tongue that the sweet juice of the sugar cane should taste bitter

10 பாவங்களுக்கெல்லாந் தாய் தந்தை வஞ்சரோக்கு உர் திலைசா னம், பிறப்பிட கூடிநரவெட்டோர் ... செய்ய ... பொல்லாது டெல் (பொறாமை)+ ஆ+ச் ஆசாரிய ... விகுதி: குறிப்புவினைமுற்று ... நீக்கும் கறுத்தசாலை விரோதப்படு ... உவரையும் கூடாமல் ஒருவருக்கும் ஒருவரையும் ... கசாயல தனனை ... இம்மா

O Lord who makes me your man by relieving me from all distress! Anger is the parent of all sin ... Anger ruins a family! Anger turns everything to disadvantage! Anger produces evil Anger is vicious Anger creates disorder Anger cuts off relationship! Anger commits blamable acts Anger is an enemy Anger removes mercy! Anger ... baseness! Anger makes a man all alone preventing others from befriending him! Anger takes a man to Death and throws him into the pit of horrible hell



கம்பராமாயணம் தொடர்ச்சி.

பல்வளஞ்செறிந்த பரதகண்டத்திலே கோசலநாட்டிலே அயோத்திமாநகரத்திலே மன்னர்மன்னனாய்ச் செங்கோல் செலுத்திய தசரதமகாராஜன் கௌசலை கைகேசி சுமித்திரை என்னும் மூவரை மணம்புரிந்தும் பன்னெடுநாள் மகப்பேறின்றி மனநொந்திருக்கையில் குலகுருவாகிய வசிட்டமாமுனிவருடைய சூழ்ச்சியால் கலைக்கோட்டுமாமுனிவரை வரித்துப், புத்திரகாமேஷ்டியாகஞ்செய்து ஸ்ரீராமன், இலக்ஷ்மணன், பரதன், சத்துருக்கனனென்னும் நான்குபுத்திரரைப் பெற்றெடுத்தனன். அம்மைந்தராகிய மறைநான்கு மனையார்கள்—"தலையாயபொருளுணர்வில் கலைமகட்குத் தலைவராய், நிலையாயுந்தரு வேதம் தெய்வங்களைப்போற்றப் பணிசெய்யக், கலையாழிக்குத் திங்களுதயத்திற் கலித்தோங்கும், அலையாழியென வளர்வார்" வளருநாளில் ஓர்நாள் விசுவாமித்திரமுனிவர் அரசவைக்குற்று "அரச! தருவனத்துள் யான் இயற்றும் தகைவேள்விக்கு இடையூறாத் தவஞ்செய்வோர்கள் வெருவரச் சென்று அடை காமவெகுளியென நிருதர் இடைவிலக்காவண்ணம், செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர் நால்வரினும் கரியசெம்மல், ஒருவனைத் தந்திடுதியென உயிர்இரக்கும் கொடுங்கூற்றின் உளையச்சொன்னான்" அம்மொழி செவியிற்புகுதலும், மன்னன் கண்ணிலான் கண்பெற்றிழந்தானெனக் கடுந்துயருற்றுப் "பெரியோய்! இவன் சிறுவன்; படைப்பயிற்சியிலன்; உமது பெருவேள்வியை யான் காப்பேன்; புறப்படுங்கள்" என்று கூறலும், முனிவர் மூவுலகும் நடுங்குமாறு கோபித்தெழுந்தனர். அந்நிலையில் வசிட்டமாமுனிவர் அம்முனிவரை நோக்கிப் 'பொறுத்தி' என்று சொல்லி, அரசனைப்பார்த்து "உன் மகற்கு உறுதி உண்டாவதை மறுத்தியோ?" என்றார். என்றவுடனே அரசன் இயைந்து ஸ்ரீராமபிரானோடு இலக்ஷ்மணனையும் முனிவருடன் கூட்டியனுப்பினன். அனுப்ப, அம்மூவருமாகச் சென்று காட்டையடைந்து காமனாச்சிரமஞ்சேர்ந்தனர். சேர்தலும் முனிவர் வேண்டுகோளின்படியே ஸ்ரீராமமூர்த்தி ஆண்டு வதியும் தாடகையென்பாளோர் அரக்கியை வதைத்தனர். வதைத்தபின்னர் அம்முனிவர் அவ்வரசிளங்குமரரைக் காவல்வைத்து வேள்வியைச் செய்துமுடித்தார். முடித்தலும் மூவரும் அங்குநின்றும் புறப்பட்டுக் கங்கையுங் கானமுங் கடந்து, கௌதமமுனிவருடைய சாபத்தாற் கல்லுருவெய்தியிருந்த அகலிகை பண்டையுருப்பெறப் பணித்தருளி, மிதிலைமாநகருஞ் சென்றடைந்தனர்.

மிதிலைக்காட்சி

மிதிலைக் காட்சி - மிதிலா நகரச்சிறப்பினைக்காணுதல். மிதியென்னுமரசனால் ஆளப்பட்டமையால் மிதிலை.

ஸ்ரீராமர் - ராமர் யாவரையும் ரமிப்பிப்பவர் அதாவது மகிழ்விப்பவர். (ரமு - தாது.) ஸ்ரீ - மகிமை; அல்லது சம்பத்கரம் என்பதுமாம்.

இலக்குமணர் - லக்ஷணமுடையவர் கைங்கரியமாகிய செல்வமுடையவர் என்பதுமாம்.

விசுவாமித்திரர் - கௌசிகமுனி (S விஸ்வ - all, மித்ர - friend) A sage the son of Gadhi, originally of military order but who became by long and painful austerities, a Brahmarishi, in which character he appears in the Ramayana as the early preceptor and counsellor of Rama and all.

சீதா - (படைச்சால்) - சனகராசன் யாகத்தின் பொருட்டு உழுதபொழுது அவ்வுழுபடைச் சாலினின்றும் தோன்றியவள்

பிராட்டி - பெருமை யுடையாள். (Mas பிரான்)

லெக்ஷ்மி - திருமகள் S லக்ஷ் - to see, hence, beautiful to be looked at) the wife of Vishnu and goddess of wealth and prosperity

சகிதம் - ஆச்சரியத்தோடேபார்த்தல்

நடன சாலை - நடிக்கு மிடம், கூத் தாடு மிடம்.

அபிநயம் - நான்கு புறத்து முள்ளோ ர்க்கு நயப்பு (இன்பம்) உண்டாம் படி அவயவாதிகளால் விப்பது கூத்து.

கருவிச் சூதாடல் - கருவிகளால் சூதாடல்

மதிள்புறம் - மதிலின் பக்கம்.

அகழி - அகழப்பட்டது- தோண்டப் பட்டது இ - செயப்படு பொரு ண்மை விகுதி.

ராஜமாளிகை - இராஜாக்கள் வதி யும் அரண்மனை

பாங்கிமார் - தோழிமார் மார் - பலர் பால் விகுதி

சாளரம் ஜன்னல்.

ஜானகி - ஜனக ராஜன் புத்திரி தத் திதாந்த நாமபதம் சீதை

அஸ்தமயம் - அஸ்தமித்தல் மறை தல்.

செக்கர் வானம் - செவ்வானம்.

சந்திரோதயம் - (சந்திர + உதயம்) குணசந்தி

அன்றில் - ஓர் பறவை இது பனை மரத்தில் வசிப்பது

துன்பநோய் - துன்பமாகிய நோய் - துன்பந்தருநோய் என்பதுமாம்- காமநோய்

அயர்ந்து - சோர்ந்து

விடுதி - தங்குமிடம்.

சுவர்ண கசிதமான - பொன் மய மான - பொன்னிறம் போன்ற.

மாடம் - உப்பரிகை

அகலிகை - பஞ்ச கன்னிகைகளிலொ ருத்தி: கவுதமர் மனைவி

சதானந்தர் - எப்போதும் ஆனந்த முடையவர்.

முனிவர் - இருவகைப்பற்றும் முனிந் தவர்: தமிழ்மொழி. முனி - என்கிற கொள்கின் வடமொழி, மனன சீலர் என்பது பொருள்

ஆசீர்வதித்தல் - வாழ்த்தல்: blessing, benediction.

கௌசிகர் - குசன் வம்சத்திற்பிறந்த வர் தத்திதாந்த நாமபதம்.

மாதவர் - மகத்தான தவத்தையுடைய வர் மா-மஹா என்னும் வடமொழி உரிச்சொல்லின் திரிபு

Page - 40.

எத்தவம் என்னதவம்

ராகவனார் - இரகுவம்சத்தில் பிறந்த வர் ஸ்ரீராமர் உயர்வுபற்றி, ஆர் - என்னும் பன்மைவிகுதி பெற்றுவந் தது

ராட்சசி - ராக்ஷஸி என்னும் வடமொ ழித்திரிபு

ஆகம் உடல்

யாகம் - வேள்வி.

‘ ஸ்ரீராகவனார் ராக்ஷசியாகிய தாடகை ஆகத்தையும், விசுவாமித்திரர் யாகத்தையு முடித்தது ’

விசுவாமித்திரமுனிவர் தசரதரிடஞ் சென்று “யான் இயற்றும் தவவே ள்விக்கு இடையூறு செய்யும் நிருத ர்களை அழிக்கும்வண்ணம் ஸ்ரீராம ரைத் தந்தருக” என வேண்டிப் பெற்றுக்கொண்டு ஸ்ரீராம லக்ஷ்ம ணருடன் செல்லுகையில், விசுவாமி த்திரர் “ஆயிரம் யானைப்பலமுடை யாள் ஆடவரெல்லாம் அஞ்சும்ப டியான ஆண்மையுடையாள் உயி ர்களையெல்லாங்கொன்று தன் வயி ற்றிற்பெய்யுங்கொடுஞ்செயலுடை யாள் தாடகை என்னும் அரக்கி ஒருத்தி இம்மலையிலிருக்கின்றனள்” என்று எடுத்துரைத்து அவளையழி க்கும்படி சொல்லிக் கொண்டிருக் கும்போது, அவள் நீலமலை நெருப் பெரிய வந்தாற்போல கண்களில் தீப்பொறியுண்டாக மழுவுக்கிரத் துடன்வந்து கைச்சூலத்தை ஸ்ரீரா மன்மேல் வீசினதுமன்றி அநேகம் மலைகளையும் எறிந்தனள். அம்மலைகளை

யெல்லாம் ஸ்ரீராமபிரான் அழித்து அவ்வரக்கியையு மழித்தார்

பின்பு ஸ்ரீராம லக்ஷ்மணர் இருவரும் விசுவாமித்திரர் செய்யத்தொடங்கிய யாகத்தை யாதொரு இடையூறும் நேராதபடி காக்கும்போது, இடையூறு செய்யவந்த நிருதர்களை யெல்லாமழித்து அவ்வியாகத்தையும் பூர்த்திபடுத்திவைத்தார் என்பதாம்

"உம்முடைய தாயார் சாபத்தை முடித்தது"— சதாநந்தருடைய தாயாகிய அகலிகையின் சாபநிவாரணம்

தேவேந்திரன் கௌதமமுனிவருடைய மனைவியான அகலிகையோடு அவளைத் தழுவ விரும்பிக் கோழிபோல் கூவவே அம்முனிவர் விடியற்காலமாய்விட்டதென்று கருதி நித்தியகருமமுடிக்கச் சென்றனராக, அத்தருவாயில் அவ்விந்திரன் அவருருவத்துடனே சென்று அவளைத் தழுவினன் அஃதறிந்த முனிவர் அவனை "ஆயிர மாதர்க்குள்ள அறிகுறி யுனக்குண்டாக" என்றும், அவ்வகலிகையை "விலைமகளனைய நீயும் கல்லுருவடைக" என்றும் சபித்தார் பின்னர் அவர்கள் வேண்டிக்கொள்ளல் அத்தேவேந்திரனுக்கு 'அவை கண்களாகக் காணப்போகக் காணக' என்றும் அவ்வகலிகைக்கு "தசரதராமன் ஸ்ரீ பாததூளிபட்டுக் கல்லுரு தவிர்வை" என்றும் அநுக்கிரகஞ் செய்து அங்ஙனமே சாபநிவாரணமாயிற்று என்பதாம்

மனோவியாகுலம் - மனவருத்தம்

கிருபை - Sans க்ருபா Mercy

அரிய காரியம் - செய்தற்கு அருமையான செய்கை

பூர்வம் - முற்காலம் In times of year

வசிட்டர் - வசிஷ்டர்; ஞானமுடையவர் ஏழுமுனிவரி லொருவர் S வஸ To abise (in the practive of religious austerities) a celebrated muni

உபசரித்து - மரியாதை செய்து

விருந்து - புதுமை புதுமையுணர்த்தும் பண்புப்பெயர்; புதிதாய் வந்தோர்க்குச் செய்யும் உணவு.

காமதேனு - தெய்வப்பசு நினைத்தவருக்கு வேண்டியபடி கொடுப்பது, S காம what is desired; தேனு

அன்னம் படை - அன்னம் இடு

சமஸ்தம் - எல்லாம்.

நீதி சாஸ்திரம் - நியாயநூல்

சுரபி - பசு

கொடுக்கிலேன் கொடுக்கவில்லை; என் தன்மையொருமை விகுதி

ரோமமயிர் - உடம்பின்கணுள்ள உரோமம்

சிலிர்க்க உரோமம்) பொடிக்க

குரூரம் கொடுமை

வலி - வலிமை

நூற்றுவரும் நூறுபேரும்

தொடுக்க - எய்ய

தண்டம் யோகதண்டம்

தைவீகப்படை தெய்வீகப்படை தெய்வத்தன்மையுடைய ஆயுதம்

கவளீகரித்தல் விழுங்குதல்

அஸ்திரம் கைவிடும் ஆயுதம் Missile and protectile weapon

பிரகாசித்தனர் - விளங்கினார்

தேஜசு விளக்கம்

Page 41

தவவேடம் தபசுசெய்தற்குரிய வேஷம்

தேவேந்திரன் - தேவ + இந்திரன் தேவர்களின் தலைவன், தேவராசன்

ஜனித்தல் பிறத்தல்

யாதிக்கு - யமனிருக்குமிடம்; தெற்கு திசை

பொழில் - சோலை

அயோத்தி [யுத்தத்தில் ஜயிக்கப்படாதநகரம்] சூரியவம்சத்துச் சக்கரவர்த்திகளின் பிரதான நகரம் சத்தபுரியிலொன்று

திரிசங்கு அரிச்சந்திரன் பிதா (S திரி Three சங்கு a dart) The name of a king of the solar race, famous for attempting to go to heaven in his mortal frame (by the help of விசுவாமித்திரர்

குலகுரு வம்சகுரு; குரு - அஞ்ஞானத்தை நீக்குபவன்.

அருள்க - கிருபை செய்க
ஈசன் - இறைத்தன்மையுடையான்
ராஜவர்ச்சஸ் - இராஜதேசசு தேசக்கா ந்தி
வேள்வி - யாகம், a sacrifice, any ceremony in which offerings and oblations are presented
கிரது - வேட்டு.
கோசிகன் - கௌசிகன் - விசுவாமித்திரன்
விமானம் - வாகனம்
கச்சுரவிடல் - கூச்சலிடுதல் - கதறுதல்
தபோநிதி - தபோதனன், தபசுசெல்வம் தபமாகிய செல்வமுடையான்
சரணம் - அடைக்கலம்.
பிரமவுலகம் - வேறுலோகம்
ராஜரிஷி - ராஜாவாயிருந்து ரிஷியானவர்
ஐந்து நக்ஷத்திரம் - அனுஷம் - கேட்டை - மூலம் - பூராடம் - உத்திராடம் இவ்வைந்தும் இப்போதும் தெற்கே உள்ளன
ஒளியிடுக - பிரகாசிக்க

Page 42

நரமேதம் - மனிதரைக் கொன்று செய்யும் யாகம் மேதம் யாகம்
மைந்தன் - பெற்றோருக்கு வலிமையாயுள்ளவன்; மைந்து வலிமை
பானசாலை - தழைகளால் வேய்ந்த வீடு பானம் தழை
பத்தினி - மனைவி, (S பதி husband) hence she who has husband
கௌசிகி - விசுவாமித்திரருடைய உடன்பிறந்தாள்
ஜ்யேஷ்டன் - முன்னோன்; முன் பிறந்தான்; பெரியபிள்ளை
கனிஷ்டன் - பின்னோன்; பின்பிறந்தான் இளையபிள்ளை.
நித்திய கருமம் - நித்தியம் செய்யத்தக்க வைதிககாரியம் சந்தியாவந்தனம் performance of daily rites
உபதேசித்து - போதித்து
யூபம் - வேள்விக்கம்பம்
ஸ்நானஞ்செய் - உச்சரி
விடுவிப்பார் - இக்கட்டினின்றும் நீக்குவார்

பிராணாயாமம் - பிராணவாயுவை இரேசக பூரக கும்பகஞ்செய்தல்.
பிரணவம் - ஓங்காரம்.
கபாலம் - மண்டை.
இருட்படலம் - இருள்கூட்டம்.
தாவி - பரவி
அழுந்தியது - கவிந்தது
திக்குப்பாலகர் - கிழக்காதி - 8 திசைகளைப் பாதுகாப்பவர் இந்திரன் - அக்கினி - யமன் - நிருதி - வருணன் வாயு - குபேரன் - ஈசானன்.
அஷ்டநாகங்கள் - வாசுகி - அனந்தன் - தக்ஷன் - சங்கபாலன் - குளிகன் - பதுமன் மகாபதுமன் - கார்க்கோடகன் என்னும் - 8 - பாம்புகள்
சலனம் - சஞ்சலம் வருத்தம்.
மும்மூர்த்தி பிரமன் - திருமால் - பரமசிவன்
வேதபாரகர் - பாரப்பார பாரகர் - (பாரம் - கடத்தல்) நதிமுதலியன கடக்க வல்லவர் என்பது சொற்பொருள் வேதமாகிய கடலைக் கடக்க வல்லவர் என்பது வேதத்தை நன்குணர்ந்தவர் என்பது முடிவான பொருள்
அஞ்சலியஸ்தர் - கூப்பிய கையையுடையவர்.
தவப்பயன் - தபோபலன்.
சித்தித்தது - கைகூடியது
தத்தம் - தங்கள் தங்களுடைய
பதவிகள் - இருப்பிடங்கள்

Page-43

இராம இலக்குமணர் "உயர்திணையும்மைத்தொகை பலரீற்றே" என்னும் விதிகாண்க
சயனித்திருக்கையில் - நித்திரை செய்கையில்.
சந்தியாவந்தனம் - தினந்தோறுஞ் செய்யுங் கிரியை.
அரண்மனை - இராஜமாளிகை
வீற்றிருந்தார் - பெருமையோடிருந்தார் என்பது சொல்லின்படி பொருள். வீறு - பெருமை
ஒருங்கே பார்ப்பார் - சமமாய்ப் பார்ப்பார்

தசரதன் - பத்து இரதங்களை யுடையான்; அல்லது - 10 - திக்கிலும் ரதத்தைச் செலுத்துவோன்.
சக்கரவர்த்தி - மற்றொருவரைப் பணியாது தனியாள்வோன்
பிரபாவம் - மகிமை.

குலமுறை கிளர்ந்தல்.

குலமுறை - வம்சக்கிரமம்.
கிளர்த்தல் - சொல்லல்.
சூரியவம்சம் - சூரியன் மரபு opp சந்திர வம்சம்.

'உயிர்கள் பசிநீங்க வளஞ்சுரக்கச் செய்தவர்''

அங்கராஜன் மைந்தன் வேனன் என்பான் எக்கியங்களை யெல்லாமழித்து மிகவுங் கொடுமை செய்துவரவே முனிவர்கள் சாபத்தால் கொல்லப்பட்டான் இவனுடலை இவன் தாயார் சுநீதா பாதுகாத்து வைத்திருந்தனள் இராஜ்யம் நாயகற்று இராஜாவின்மையால் முனிவர்கள் அவ்வேனனுடைய உயிர் நீங்கிய உடலின் வலக்கையை மந்திரஞ்சொல்லிக் கடைந்தனர் அவ்வலக்கையினிடமாகப் பிருது சக்ரவர்த்தி தோன்றினர் அவருக்கு அரசளித்தனர் வேனனிழைத்த கொடுமையால் பூமியில் ஒரு புல்பூண்டேனும் முளையாது ஜனங்களெல்லாம் பசியால் மெலிந்து வருந்துவாராயினர் பிருது சக்கரவர்த்தியினிடம் முறையிட்டனர் அது போது சக்கரவர்த்தி வில்லைக் கையிலேந்திப் புறப்பட்டனர் பூமியானது ஓர் பசுவின் உருவங்கொண்டு ஓடியது சக்கரவர்த்தி அதனை விடாது பின் தொடர்ந்து செல்லவே அப்பசுவானது மடைக்கலந்தாப் பொருத்தாய் மீண்டு சக்கரவர்த்தியை அடைக்கலம் புகுந்தது. பின்பு தேவர் முதலியவர்களிற் சிறந்தவர்கள் கன்றுருவங்கொண்டு வந்து வேண்டிய பொருள்களை யெல்லாம் அப்பசுபால் சுரக்கப்பெற்றார்கள் அங்ஙனமே பூலோக உயிர்களும் பயிர் பச்சை முதலியவெல்லாம் பெற்றன இங்ஙனமாகப் பிருது சக்கரவர்த்தி வளஞ்சுரக்கச் செய்தார், என்பதாம்.

"பெருத்த வுயிரனைத்தும் பெரும் பசியால் வருந்தாமல், சோதித்தன் வரிசிலையால் நிலமடந்தை முலைசுரப்பச், சாதித்த பெருந்தகையு மிவர் குலத்தராபதி" என்பது காண்க.

வளஞ்சுரக்க - செழிப்புடைய.

"பிரமனிடத்திலிருந்து...பிரதிஷ்டை பண்ணினவர்'

இக்ஷ்வாகுசக்கரவர்த்தி சத்திய லோகத்தில் பிரமனுக்கு திருவாராதனமாயிருந்த ஸ்ரீரங்கநாதனைப் பூலோகத்திற்கு எழுந்தருளச்செய்ய வேண்டுமென்று கருதிப் பெருந்தவஞ்செய்து கொண்டிருந்தனர் சூரியகுலத்திற்குக் குலதெய்வமாகிய அத்திருமாலை வீபீஷணன் இலங்கைக்குக் கொண்டுபோக வேண்டி ஸ்ரீராமபிரானு லளிக்கப் பெற்றுக்கொண்டு போகும் போது அப்பகவான் ஸ்ரீரங்கமென்னும் திருப்பதியை உகப்பாகத் திருவுளம்பற்றி அவ்விடத்தே எழுந்தருளினரென்பதாம்

"பிணியரங்க வினையகலப் பெருங்காவந் தமப்பேணி, மணியரங்க நெடுமுடியாய் மலராளை வழிபட்டு, பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண அணியரங்கந் தந்தானை யறியதாரறியாதார்" என்பது காண்க

திருமால் - ஸ்ரீ அரங்கநாதர்.
பெற்றுக்கொண்டு - வாங்கிக்கொண்டுவந்து கொண்டார்த்து-கொண்டு-பகுதி.
ஸ்ரீரங்கம் - இருநதிகள் கூடுமிடத்திற்கு ரங்கம் என்று பெயர். இங்கே கொள்ளிடம்-காவிரி
பிரதிஷ்டை - ஸ்தாபனம்.

'இந்திரன் இடபமாய்த் தாங்கப்பெற்றவர்''.

இந்திரன் முதலிய தேவர்கள் அசுரர்களாலடையும் இடுக்கண்களைச் சகிக்க ஆற்றாராய் புரஞ்சய சக்கரவர்த்தியிடஞ்சென்று, அசுரர்களைத் தணித்து எங்கள் கற்பகநாட்டையளிக்கக் கூடுமோ, என வேண்டினராக,

புரஞ்சயசக்கரவர்த்தி "இந்திரன் எமக்கு வாகனமாகவரின் யாம் வந்து வெல்வோம்" என்ன, இந்திரன் அங்ஙனேயாக, என்று இடபவடிவமாய் நிற்க அதன்மேல் சக்கரவர்த்தி ஏறிக்கொண்டு அவ்வசுரர்களைப் பொருது வென்று தேவர்களிடுக்கண்களை நீக்கி அவர்களுக்கு ...... மேல் ஏறினதினால் அன்று தொடங்கி ககுஸ்து சக்கரவர்த்தி என்று பெயர். இதனை —

"தீன்றனக்கு வெல்ல அரியதானவரோத் தலைதுமித்து, வானரகக் கிற திகி கொலென்று குறையிரப்ப வரகெர்த்தாய, சேஉ றெடுத்த சிலையினறு யிகலபுரிநத வி ... தோர, தோனறலெ பணைடிநதிரனகாணவிடையேறுய்ச சுமநதாமை' எனபது காண்க.

இடபம - எருது, ரிஷபம

சமுத்திர மதனம - சமுத்திரத்தைக் கடைதல்.

அமுதம - அமாதம எனபதன மருஉ (அ+மிரத மரணம) - மரணத்தை நீக்குவது ambrosia

தேவர்களுக்கு சமுத்திர மதனஞ்செய்து அமுதங் கொடுத்தவர்.

இருதவீரியன குமாரனுகிய கார்த்தவீரியார்ச்சுனன எனபான தததாத்திரேயனையடைந்து அநேகவேளவிகளையியற்றி, மாஹிஷமதிபுரத்தை இராசதானியாகககொண்டு சபத தீவங்களையும் ஏகசக்கராதிபதியாய் ஆட்சிசெய்தவன். இக்கார்த்த விரியார்ச்சுனனை ஒருமுறை தனனுடைய ஆயிரங் கைகளாலும் கடலகலக்கி வானவர்க்கு அமுதங்கொடுத்தனன எனபதாம.

இவர் குலத்தோ ரொருவனகாண, கரைநிரை மூப்பினை மாறறி யிரகிறனு நதாமல, குரைகடலைநெடுவரையாற் கடைந்தமுது கொடுத்தானும' எனபதனுமறிக.

புலியுமானும்.. நீருண்ண. செலுத்தினவர்.

மாந்தாதா சக்கரவர்த்தி மனுநீதி தவருது புலியுமமானும்ஒரு துறையில் நீருண்ணவும் பைங்கிளியும் ஆட்பருந்துமொருகூட்டில்வாழவும் அதாவது வலியபிராணிகள்எளியபிராணிகளை வருத்தாதபடி உலகாண்டாரென்பதாம்

"புலிப்போத்தும் புல்வாயும் ஒருதுறையில் நீருண்ண வுலகாண்டோனுளனொருவன்" என்றும், புலியுடனே புல்வாய் ஒருதுறைநீர், மார்த்தவுலகாண்டமாந்தாதா" என்றுங்கூறியுள்ளமைகாண்க.

துறை-இறங்கு துறை-இறங்குமிடம்.

'சுராசுரர்கள் . அமராபதியைக் காத்தவர்'

முசுகுந்த சக்கரவர்த்தி என்பார் செங்கோல் நடத்தி வருகையில் தேவலோகத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும்போர் விளைந்தது அப்போரில் இந்திரன் முதலிய தேவர்கள் அசுரர்களுக்குத் தோற்றுத் ... சக்கரவர்த்தியை வேண்ட அவர் தேவலோகஞ் சென்று அவ்வசுரரை வென்று அவ்வுலகத்தைக் காத்தனர் எனபதாம இதனை—

"வானவர் ... வரும பொருமொருநாள இவர் குலக்கோன வில்பிடித்த அறமெனன வொருதனியேயிருந்தமராபதிகாத்தோன எனப தினுலுமறிக

சுராசுரர்கள - (சுர+அசுரர்கள) திரிசசாதி சுரா - சு செவவையாக, ரா - பிரகாசிப்பவர், opp அசுரர்.

அமராபதி - தெயவலோகம, இந்திரலோகம.

"அடைக்கலமென்று வந்த புறவினுக்கு தம்முயிரைக் கொடுத்தவர்"

சிபிச்சக்கரவர்த்தி:- பூர்வம ஒரு வேடன் ஒருபுறவை அம்பால் எய்தானாக அப்புறவு அம்புதப்பிச்சென்று சிபிச்சக்கரவர்த்திபாலசரணமடைந்தது அவவேடன் அதனைத் தொடர்ந்து வந்து அதனைத் தருமபடி வேண்ட சக்கரவர்த்தி, அடைக்கலம் புகுந்ததைத் தரேன், வேறு என்ன வேண்டினும் தருவேனென்ன, வேடனும்தற்குச் சம்மதியாது நெடுநேரம் வாதித்து, பின்"இந்த அப்பப்பிராணியின

மேலிவ்வளவு காருண்ணிய முடையது மெய்யானால், உம்முடைய சரீரத்தினின்றும் இப்புறவின் எடையளவு மாமிசம் அரிந்து கொடுப்பின் சம்மதிப்பேன்" என்றான். சிபியும் அதற்குச் சம்மதித்துத் துலாக்கோட்டிப்புறவை ஓர் தட்டில் வைத்து மற்றொன்றில் தன் தொடைத் தசையை அரிந்து வைத்தார். புறவுள்ள தட்டே தாழ்வது கண்டு பின்னும் மற்ற உறுப்புகளின் தசையை அரிந்து வைத்தார். எவ்விதத்திலும் புறவின்தட்டே தாழ்வது கண்டு, தாமே அத்தட்டில் ஏறினார். பின்னர் தாமிருந்த தட்டு தாழ, வேடன் 'புறவுள்ளதசையை வேண்டினேன்' என்ன, பின்னர் சிபி இறங்கி தசையை எடுத்துக் கொண்டேவர, ஏறித் தசையே புறவின் எடைக்குச் சரியாயிற்று. இவ்வளவிருக்கும் மன்னன் சலியாமையைக் கண்டு, புறவுருக்கொண்ட அக்கினியும், வேடவுருக்கொண்ட இந்திரனும் மெய்யுருவோடு தோன்றி வியப்படைந்து பலவரங்களை ஈந்து சென்றனர் என்பதாம்.

"இவர்குலத்தோன் மேற்பறவை, முன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்கினோனால்" என்பதுங் காண்க.

வதிலாக - பதிலாக.

சமுத்திரம் ..பூமியிலே கொணர்ந்தவர்

